பாரவி

மிருணாள் காந்தி கங்கோபாத்தியாயா

சாகித்திய அக்காதெமி

பாரவி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன் மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. படஉதவி : நேஷனல் மியூசியம், புதுதில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

பாரவி

ஆங்கில மூலம் :
மிருணாள் காந்தி கங்கோபாத்தியாயா

தமிழில் :
ம.ந. ராமசாமி

சாகித்திய அக்காதெமி

Bharavi — Tamil translation by M.N. Ramasamy of Mrinal Kanti Gangopadhyay's monograph in English. Sahitya Akademi, 1994.
Rs. 15

முதல் வெளியீடு 1994
ISBN 81-7201-752-9

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி-110 001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை புது தில்லி-110 001.

'குணா பில்டிங்', 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.
ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா-700 053.
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய்-400 014.
109, ஜே.ஸி. சாலை, பெங்களூர்-560 002.

விலை ரூ. 15

அச்சிட்டோர் : Udayam Offsets
44 Singanna Chetty Street,
Chintadripet, Madras 600 002.

மொழிபெயர்ப்பாளர் கருத்து

மிருணாள் காந்தி கங்கோபாத்தியாயா அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல் பாரவி என்னும் மகாகவி பற்றியது என்றாலும், கவிஞரின் ஒரே காவியமான 'கிராதார்ஜுனீயம்' குறித்தும் சுருக்கமாக எடுத்துரைப்பதாக உள்ளது. சுருக்கமாக இருந்தாலும் விளக்கமாக இருக்கிறது. சம்ஸ்கிருத மொழியில் உள்ள அந்த மகாகாவியம் பதினெட்டு சர்க்கங்களை (அதிகாரங்களை)க் கொண்டு, கவிதைப்பாக்கள் உள்ளார்ந்த பொருள் உடையனவாக இருக்கின்றன.

ஆங்கில நூலைக் காணும்போது, நூலாசிரியர் வெகு பாடுபட்டு, பல முந்நூல்களுடன் உதவியுடன் கூடிய மட்டும் காவியத்தின் கருத்தை, நடையை, அலங்கார அணிகளை ஆங்கில மொழியில் கொண்டுவர முயற்சித்திருக்கிறார். இருந்தாலும், கருத்துக்களைச் சொல்ல முடிந்த அளவுக்கு நடை அழகை, சம்ஸ்கிருத மொழிக்கே உரிய அலங்கார அணிகளை முழுதுமாக, அதுவும் முற்றிலும் வித்தியாசமான ஆங்கிலத்தில் கொடுத்துவிட முடியாது. மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை.

இப்போது ஆங்கில மொழியிலிருந்து நூல் தமிழாக்கம் செய்யப்படும்போது, மேலும் மாற்றங்கள் நேர நிச்சயமான வாய்ப்புகள் இருக்கின்றன. சம்ஸ்கிருத மொழிக்கும், தமிழ் மொழிக்கும் சொற்கள், வெளிப்பாடு, சொற்றொடர்களைப் பின்னுதல், நடை, அலங்காரம் ஆகியவற்றில் வெகுவாக ஒற்றுமை உண்டு. சில சம்ஸ்கிருதச் சொற்களை மூலத்திலிருந்து எடுத்தாண்டாலும், தமிழ் வாசகர்கள் புரிந்து கொள்ள முடியும். ஆனால், சம்ஸ்கிருத மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, பின்பு ஆங்கில மொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும்போது, சம்ஸ்கிருத மூலத்துக்கும், தமிழ்மொழி பெயர்ப்புக்கும் வேறுபாடு வெகுவாக இருந்துவிடும் அபாயம் உண்டு. அடிப்படையான சம்ஸ்கிருத ஞானம் இருந்த காரணத்தால், விவரங்களைப் புரிந்துகொண்டு மொழிபெயர்க்க முயற்சித்திருக்கிறேன்.

ஆகவே, கிராதார்ஜுனீயம் என்னும் காவிய மூலத்துக்கும், இந் நூலிலுள்ள தமிழாக்கச் சுருக்கத்துக்கும் மன்னிக்கத்தக்கதான வேறுபாடு இருப்பதாக கற்ற அறிஞர்கள் கருத நேரிடுவதும் தவிர்க்க முடியாதது. பாரவி என்னும் கவிஞனைப் பற்றிச் சொல்லி, அவர் ஆக்கிய காவியத்தைக் கூடிய மட்டும் தமிழ் உருவில் தந்து, கவியை அறிமுகம் செய்வதே இந்நூலில் சிறந்த நோக்கமாக இருக்கமுடியும்.

மைசூர்,
17-7-'93

ம.ந. ராமசாமி

பொருளடக்கம்

1.	*வாழ்க்கை*	*1*
2.	*மகா காவியம்*	*11*
3.	*கிராதர், அர்ஜுனன் கதை*	*14*
4.	*பாரவியின் கவிதை நயம்*	*108*
	உதவிய நூல்கள் அட்டவணை	*120*

1
வாழ்க்கை

பெரும்பாலான சம்ஸ்கிருத மொழிக் கவிஞர்களின், நூலாசிரியர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து அதிகமாக அறிய முடிவதில்லை. கவி பாரவியின் நிலையும் அதேதான். திரட்டுவதற்கான, நம்பக்கூடிய வரலாற்றுச் சான்றுகள் கிட்டவில்லை என்றே சொல்லலாம். பாரவியும் தன் ஒரே நூலில் தன்னைப் பற்றி ஏதும் தெரிவிக்கவில்லை. கவிஞர்களில் அவர் மேதை. ஒரே ஒரு கவிதைப் படைப்பை அவர் ஆக்கி இருந்தாலும், ஆழ்ந்து படித்துணரும் வாசகர் நெஞ்சத்தில் அவருக்கு என்றைக்கும் ஒரு உயர்ந்த இடம் உண்டு. பதினெட்டு அதிகாரங்கள் கொண்ட ஒரு **மாபெரும் காவியமான கிராதார்ஜுனீயம்** என்னும் நூலையும், அதை எழுதியவர் அவர் என்பதான விவரங்களை மட்டுமே நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. நூலினுள் எங்கும் அவர் தன் வாழ்க்கைக் குறிப்பு எதையும் தரவில்லை. ஆகவே, பாரவி பற்றி அறிய கர்ண பரம்பரையாக வரும் செய்திகளையும், அவரைப் பற்றிய கதைகளையும் மட்டுமே ஆதாரமாகக் கொள்ள வேண்டி உள்ளது. அச் செய்திகளும், கதைகளும் நம்பத் தக்கவையாகவும் இல்லை.

மேதைகளின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும்போது, தொடக்ககாலத்தில் அவர்கள் வறுமையாலும், பலவித இன்னல் களாலும், துன்புறுவதை சாதாரணமாகக் காண்கிறோம். பிற்காலத்தில் மட்டுமே அவர்களிடம் செல்வம் வந்து சேர்கிறது. சமூகத்தில் மதிப்பும், புகழும் கிட்டுகின்றன. அதுபோன்று பாரவியும் வறுமையால் வெகுவாக வாடி இருந்திருந்தாலும், அதுபற்றிக் கவலை ஏதும் கொள்ளாமல் கவிதை வானில் சஞ்சரிப்பதில் ஈடுபட்டிருந்தார். ஒவ்வொரு நாளையும் துடுப்பு கொண்டு தள்ள அவருடைய மனைவி இடர்பாடு கொண்டு, வறுமையைத் தாங்கமாட்டாது கடுமையான சொற்களால் அவரைச் சுட்டெரிப்பது போலத் திட்டுவதில் காலம்

சென்றது. முடிவில் கவியின் பொறுமை கரைகடந்தது. தன் பிரச்னைகளைத் தீர்க்க ஆயத்தமானார். வீட்டைவிட்டு வெளியேறினார். கல்விக்கு அதிபதியான கலைவாணியின் அருள்பெற்ற இந்தக் கவிஞன் பேரில் செல்வத்தை அள்ளி வழங்கும் திருமகள் கடைகண் காட்டுவாள் என்று எண்ணியவராக அரசவை நோக்கித் தன் வினைப் பயனை சோதித்துப் பார்க்கப் புறப்பட்டார். சிறிதுதொலைவு பயணம் செய்த பிறகு சோர்வு கண்டது. ஓர் ஏரியின் அருகில் தங்கி இளைப்பாறினார்.

நேரம் சென்றது. ஒரு தாமரை இலையைப் பறித்து அதன்மீது கவிதை ஒன்றை எழுதினார்:

> *எந்த ஒரு செயலிலும் அவசரம் கொள்ளாதே. எவன் ஒருவன் நிதானம் இன்றி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறானோ, அவன் அனைத்து வகையான இன்னல்களுக்கும் உறைவிடமளிக்கிறான். செல்வம் என்பது தன்போக்கில் செயல்படும் சாதனம். சில தகுதிகளைக் கொண்டுதான் அதை வசப்படுத்த முடியும். அத்தகைய தகுதிகள் வெளிப்பட்டால்தான் செல்வம் ஒருவனை அணுகும்.*

இவ்விதம் பாரவி ஏரிக்கரையில் அமர்ந்து கவிதை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில், தற்செயலாக அந்நாட்டு மன்னன் அங்கு வர நேர்ந்தது. தலைநகரை விட்டு விலங்குகளை வேட்டையாட அவன் காட்டுக்கு வந்த தருணம் அது. மன்னன் கவிதையைப் படித்துப் பார்த்தான். அதன் லயத்தில் மகிழ்ந்தவன் தன்னை அரண்மனையில் வந்து சந்திக்கும்படி கவியிடம் கூறிவிட்டு, குதிரை மீது ஏறிச் சென்றான்.

கவிஞரும் மகிழ்ச்சி அடைந்தார். உள்ளம் பூரித்தது. மன்னர் கூறியபடி அரண்மனை நோக்கிச் சென்றார். வாயிலில் நின்று தான் மன்னனைக் காண வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

காவலன் இவரை லட்சியம் செய்யவில்லை. ஏற இறங்கப் பார்த்தான். கவியின் பூஞ்சை உடலும், கந்தல் ஆடைகளுமே அவனுடைய கண்களுக்குத் தெரிந்தன. அவருடைய பேச்சு காதுகளில் ஏறவில்லை. மன்னன் முன் நிற்பதற்குக்கூட அவர் அருகதை அற்றவர் என்று முடிவு செய்தான். பலாத்காரமாக அவரை அவன் வெளியேறச் செய்தான். அவமானம் தாளாது கவி சோர்ந்து போய் தள்ளாடி நடந்தார்.

இதன் நடுவில், தலைநகருக்குத் திரும்பிய மன்னன் கவியின் பாவில் மனதைப் பறிகொடுத்தவனாக, அதற்குத் தக்க மதிப்பு அளிக்க

எண்ணி, கவிதையை பொன் எழுத்துக்களில் வடித்துத் தன் படுக்கை அறைச் சுவர்மீது மாட்டுவித்தான்.

நாட்கள் சென்றன. மீண்டும் மன்னன் விலங்கு வேட்டைக்குப் புறப்பட்டான். இம்முறை தலைநகரை விட்டு விலகிச் சென்று வேட்டையாட வேண்டும் என்பது அவனுடைய விருப்பம். ஆனால் புறப்பட்ட இரண்டாம் நாள் எதனாலோ திரும்பிவிட்ட மன்னன் தன் படுக்கை அறை நாடிச் சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி அதிர்ச்சி ஊட்டத்தக்கதாகவும், எல்லை இல்லா சினம் கொள்ளச் செய்வதாகவும் இருந்தது. கட்டிலில் அவனுடைய பட்டத்து அரசி உறங்க, அவள் அருகில் ஓர் இளைஞனும் உறங்கியவாறு கிடந்தான். மன்னன் தன் இடையிலிருந்து வாளை உருவினான். துரோகம் இழைத்த மனைவியையும், கள்ளக் காதலனையும் ஒருங்கே உயிரை வாங்கிவிடுவது அவனுடைய நோக்கம்.

அதே சமயம் அவனுடைய நேர்பார்வை சுவர்மீது தொங்கி இருந்த பொற்கவிதை மீது விழுந்தது. நிதானம் பெற்றான்.

அவ்விருவரையும் உறக்கத்திலிருந்து விழிப்புறச் செய்து, அவர்களுடைய செய்கை எத்தகைய இழிவானது என்பதை உணர்த்தி, அக்குற்றத்துக்கு தகுந்த தண்டனை தர நினைத்தான். எழச் செய்தான். விழித்துக் கொண்டதும் பட்டத்து அரசி குதூகலத்துடன் மன்னனிடம் அந்த இளைஞன் அவர்களுடைய சொந்த மகன் என்றும், அவன் மகவாகப் பிறந்த சமயத்தில் மருத்துவத்துக்கு அமர்த்தப்பட்ட தாதியால் கவர்ந்து செல்லப்பட்டவன் என்றும், அன்றுதான் அவன் திரும்பக் கிடைத்ததாகவும் தெரிவித்தாள்.

உணர்ச்சி வசப்பட்டான் மன்னன். எத்தகைய கொடூரச் செயல்புரிய இருந்தான்! நல்ல காலமாக அவனுடைய அரசியும், மகனும் வாளுக்கு இரையாகாமல் தப்பினர். மன்னன் பரமானந்தம் அடைந்தான். தனக்குப் பிறகு அரியணை ஏற ஒரு வாரிசைப் பெற்றுவிட்டான்.

ஆகா, அந்தக் கவிதையல்லவா தக்க நேரத்தில் அவனுடைய செயலைத் தடுத்து நிறுத்தியது! கவியிடம் நன்றி உணர்வு மிகுந்தவனாக, அவரைத் தேடி அழைத்து வரச் செய்தான். செல்வத்தை வாரி வழங்கினான். மன்னனுடைய இந்த வள்ளல் குணத்தால் கவியினுடைய வறுமை நீங்கி, நலன் சேர்ந்தது.

இக்கதை நம்பத்தக்கதாக இல்லை. இதுபோன்ற நம்பத்தகாத, பயனற்ற இன்னொரு கதையும் இருக்கிறது. அக்கதையில் காளிதாசர், பாரவி, தண்டி மூவருமே வருகிறார்கள். இந்த மூன்று கவிஞர்களும்

சமகாலத்தவர்கள் என்றும், காஞ்சி மாநகரிலிருந்து ஆட்சி செய்த மன்னன் விக்கிரமன் தயவில் வாழ்ந்தவர்கள் என்பதாகவும் இக்கதை செல்கிறது.

ஒருநாள் மன்னன் நகரின் வழியே உலாவப் புறப்பட்டான். அவனுடன் இம்மூன்று கவிஞர்களும் நடந்தனர். அப்போது அழகான பெண் ஒருத்தி பந்து ஆடுவதை அவர்கள் கண்டனர். கவிஞர்கள் ஒவ்வொருவரும் அவளைக் குறித்துக் கவிதை புனையத் தயாரானார்கள்.

காளிதாசன் சொன்னார்: ''அப்பந்து அவளுடைய ஸ்தனத்தைப் போன்ற உருவம் உடையதாக இருக்கிறது. ஆகவே கோபம் கொண்டவளாக அவள் பந்தை மீண்டும் மீண்டும் தரையில் அடிக்கிறாள். அவளுடைய கோபத்தைத் தணிக்க நினைத்த அவள் காதில் அணிந்திருந்த தாமரை அவளுடைய காலடியில் விழுந்தது.''

பாரவி சொன்னார்: ''பந்து ஒன்றுதான். ஆனால் அது மூன்றாகப் பார்வையில் படுகிறது. முதலாவது, எழில் மிகுந்த அப்பெண்ணின் உள்ளங்கை போலச் சிவந்துசிவந்து காண்கிறது. இரண்டாவது, அவளுடைய கால்விரல் நகங்களைப் போல வெள்ளைவெளேர் என்று வெண்மையாகத் தரையில் கிடக்கிறது. மூன்றாவது அவளுடைய கண்களிலிருந்து பெருகும் நீலநிறக் கதிர்களின் ஒளியில் நீலமாகத் தேங்கி நிற்கிறது.''

தண்டி சொன்னார்:''ஏ பந்தே! உன் இதயம் பேராசை கொண்டு அந்த இளம் மங்கையின் மலர் உதடுகளைத் தொட்டு மகிழ முயல்கிறது. அவள் உன்னை அடித்து அடித்துத் தன் தாமரை மலர் போன்ற கையால் தள்ளத் தள்ள, நீ மீண்டும் மீண்டும் குதித்துஎழுந்து முயன்று முயன்று பார்க்கிறாய்.''

மக்களிடையே வெகுவாகப் பரவியுள்ள இந்தக் கதையும் இருக்க, சுவடிகள் மூலமாக, வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, ஒப்புக் கொள்ளத்தக்க விவரங்கள் கிடைக்கின்றன. இந்த விவரங்களை நம்பிக்கையுடன் தீவிரமாக அணுகலாம். **காவியதர்சம், தசகுமார சரிதம்** ஆகிய நூல்களை எழுதிய புகழ்பெற்ற ஆசிரியரான தண்டி அவந்தி சுந்தரி கதையை எழுதி, அந்நூலுக்கு அவரே **அவந்தி சுந்தரி கதாசாரம்** என்று அணி இலக்கணத்துடன் உரையும் படைத்திருக்கிறார். இந்த இரண்டிலும் பாரவி குறித்து விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த விவரங்களின்படி நாட்டின் வடகிழக்குப் பகுதியில் ஆனந்தபுரம் என்றொரு உயர்ந்த பண்பாடு உடைய மக்களைக் கொண்ட நகரம் ஒன்று இருந்து இருக்கிறது. **கௌசிக கோத்திரத்தைச்**

சேர்ந்த பிராமணர்கள் அங்கே வாழ்ந்தார்கள். அங்கிருந்து அவர்கள் நாசிக்ய நாட்டின் அசலபுர நகரத்துக்குக் குடிபெயர்ந்தனர். அவர்களில் ஒருவர் நாராயணசுவாமி. அவருடைய மகன்தான் பாரவி. தாமோதரன் என்ற பெயராலும் அழைக்கப்படுபவன். நன்கு கற்றுத் தேர்ந்து, புகழ் பெற்று, அரசியல் அறிவும் திறன்படப் பெற்றிருந்தான். கவிதைகள் எழுதுவதில் அவனுக்கு வெகுவாக ஆர்வம் இருந்தது.

விஷ்ணுவர்த்தனன் என்னும் அந்நாட்டு இளவரசனுடன் பாரவிக்கு நட்பு ஏற்பட்டது. ஒருசமயம் இந்த இளவரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்ற சமயம் இவனும் உடன் சென்றான். காட்டில் அவனுக்கு உணவு கிடைக்க வழியில்லை. பட்டினி கிடந்து அவதியுறக் கூடாது என்பதன் பொருட்டு நண்பனால் அவனுடைய குடும்பத்தினர் உண்ணத் தடுக்கப்பட்டனவற்றை உண்ணும்படி வற்புறுத்தப்பட்டான். அப்படி உண்டதால் உண்டான பாவத்தைப் போக்கிட, பாரவி புண்ணியப் பயணத்தை மேற்கொள்ள நேர்ந்தது. அவ்விதம் நடந்து சென்றபோது, துர்விநீதன் என்னும் பிராமணகுல இளவரசனைச் சந்திக்க நேரிட்டது. அவ்விளவரசனுடைய நட்பு பூண்டு, அவனுடைய அரண்மனை சென்று வாழ்ந்தான்.

பின் ஒரு சமயம் (காஞ்சி நகர்) சிம்மவிஷ்ணு என்னும் மன்னன் அவனுடைய பெருமை குறித்து ஒரு கந்தர்வன் பாடக் கேட்க நேர்ந்தது. உடனேயே சம்பந்தப்பட்ட கவியைத் தேடிக் கண்டுபிடித்து அழைத்து வரச்செய்து, அவனுக்குத் தக்க மரியாதை செலுத்தினான். அக்கவிஞன் பாரவி. அச்சமயம் அவன் வயது இருபது.

பாரவியைத் தன் மகன் போல சீராட்டி அரண்மனையில் தங்க வைத்தான் மன்னன். கவி அதன்பின் தன் வாழ்நாள் முழுதும் அரசவையில் கழித்தார். இளவரசனான மகேந்திர விக்கிரமனின் நட்பும் கிட்டியது. இவருக்கு மூன்று மக்கள். இரண்டாவது மகன் மனோரதன். மனோரதனுக்கு நான்கு மக்கள். அவர்களில் இளையவன் விராதத்தன். விராதத்தனின் மனைவி கௌரி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். பெயர் தண்டி. இப்பெயர்கள் அனைத்தும் வரலாற்றுச் சான்றுடன் இருந்து அடையாளம் காணும்படியாக உள்ளன.

பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு. இவன் கி.பி. ஆறாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் காஞ்சியிலிருந்து அரசாட்சி செய்திருக் கிறான். இவனுடைய மகன் மகேந்திர வர்மன். மகேந்திர விக்கிரவர்மன் (கி.பி. 600 — 625) என்றும் இவன் அழைக்கப்படுவது உண்டு. இந்த மன்னன் இலக்கியத்தில் ஆர்வம் உடையவன் என்பது ஒரே காட்சி கொண்ட (பிராஹாசனம்) மத்தவிலாசம் என்னும்

இவருடைய நகைச்சுவை நாடகத்திலிருந்து தெரிய வருகிறது. இந்த நாடகத்தை அவன் எழுதினான் என்பது இதில் காணும் அவனுடைய நான்கு பட்டப்பெயர்களிலிருந்து அறிய முடிகிறது.

கீழைச் சாளுக்கிய வம்சத்தை ஏற்படுத்திய தன்னுடைய மூத்த சகோதரனிடமிருந்து பிரிந்து தன்னாட்சியை நிறுவிய இரண்டாம் புலிகேசியின் இளைய சகோதரன் விஷ்ணுவர்த்தனன். அதே காலகட்டத்தில் அவன் ஆட்சியும் செய்திருக்கலாம்.

துர்விநீதன் சுங்கவம்ச இளவரசன். இவன் கி.பி. 7-ம் நூற்றாண்டில் துவக்கத்தில் ஆட்சி செலுத்தி இருக்கலாம். கொங்கணத்தை ஆண்ட மன்னன் அவநீதனின் மகன் இவன். தந்தையால் நிராகரிக்கப்பட்ட இந்த அரசகுமாரன் தொலைதூர இடங்களில் அலைந்து திரிந்திருக்கிறான். (அப்படித் திரிந்த காலத்தில், புண்ணியஸ்தலப் பயணத்தை மேற்கொண்டிருந்த பாரவியை அவன் சந்தித்தான் என்ற தகவல் வலுவடைகிறது.) பாரவி சம்ஸ்கிருதத்தில் ஆக்கிய **பிருகத் கதை**யின் பதினைந்தாவது காண்டத்துக்கு உரை எழுதிய துர்விநீதன் உயர்ந்த அறிஞனாக இருக்க வேண்டும். மேலும் **சப்தாவதாரம்** என்னும் நூலையும் அவனே எழுதியுள்ளான்.

இவ்விதமாக தண்டியின் நூல்களில் சொல்லப்படும் மன்னர்களின் காலம் வரலாற்று விவரங்களுடன் சுமாராகப் பொருந்துகிறது. அம்மன்னர்களும் ஒருவருக்கொருவர் அருகாமையிலிருந்த நாடுகளை ஆண்டதாகவும் அறிய முடிகிறது. எக்காலத்தும் மன்னர்களின் அரவணைப்பில் கவிஞர்கள் செல்வாக்குடன் இருந்திருக்கின்றனர்; மன்னர்களும் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டிருந்தனர். இவற்றைக் கொண்டு நோக்கும்போது, மேலே சொன்ன விவரங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

இருந்தாலும், இவ்விதம் முடிவுக்கு வருவதில் தீவிரமான இடர்ப்பாடுகளும் உள்ளன. தாமோதரன், பாரவி ஆகிய பெயர்களைக் கொண்டவர் ஒருவர்தானா என்பதைக் கணிப்பதும் இந்த இடர்பாடுகளில் ஒன்று. எந்த ஒரு நூலும் இதுபற்றி ஒரு முடிவு எடுக்க உதவுவதாக இல்லை. நமது ஐயம் தொடர்ந்து நீடிக்கிறது.

இந்த நூல்களில் அவந்தி சுந்தரி கதை என்பது மூலநூல். இது **உரைநடையில் உள்ளது. அவந்தி சுந்தரி கதாசாரம்** அதனின்று **பெயர்ந்த கவிதை நூல். முன்னது சிதறலாகக் காணப்படுகிறது; பிளவுகளை எச்சரிக்கை யுடனும், நிதானத்துடனும் இட்டு நிரப்பினால்தான் நம் ஆய்வுக்குப் பயன்படும். எடுத்துக்காட்டாக, இதனைப் பதட்டமின்றி அணுகிய ஹரிஹர சாஸ்திரி கூறுகிறார்: ''உரைநடை, கவிதையாக்கம் ஆகிய இரண்டிலிருந்தும் நாம் அறிவது**

என்னவென்றால், பாரவி ஒரு சைவ சமயத்தவர் **(மகாசைவர்).** உயர்ந்த கவிஞர் **(ஜிரம் பிரபாவர்)** என்பதுடன் இளவரசன் விஷ்ணுவர்த்தனனுடன் நேசமும் கொண்டிருந்தார். கவித்துவத்துக்கான மேதாவிலாசம் கொண்ட தாமோதரன் பாரவி மூலமாக இளவரசனின் நட்பைப் பெற்றிருந்தார்.

அதேபோல **தசகுமார சரிதம், அவந்தி சுந்தரி கதை** ஆகியவற்றின் நூலாசிரியர்கள் குறித்து சரியான அடையாளம் காண்பதும் பிரச்னையாக உள்ளது. 'உட்சான்று' இரண்டு நூல்களையும் பிரித்து அடையாளம் காண வசதியாக இருப்பதாகவும் சிலர் வாதிடுகின்றனர். ஏனெனில் இரண்டும் வெவ்வேறு வகையான இயல்பு கொண்டுள்ளன. முன்னது சிறப்பாக 'யதார்த்த முக்கியத்துடனும்' பின்னது 'லட்சியப் பண்புகளை இயம்புவதாகவும்' உள்ளன.

மேலும் **அவந்திசுந்தரி கதை**யிலேயே இன்னொரு சான்றும் இருக்கிறது. பாரவியையும், தாமோதரனையும் வெவ்வேறு நபர்களாகக் காட்டுவதாக அச்சான்று அமைந்துள்ளது. ''மன்னனின் ஆதரவில் அவனுடைய மகனாகச் சீராட்டப்பட்ட தாமோதரன் **கந்தமதனா** என்னும் நூலையும், சம்ஸ்கிருத, பிராகிருத கவிதைகள் குறித்து விளக்கமும் எழுதி இருக்கிறார்'' — என்பதாக அவரைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. ஆனால் **'கிராதார்ஜுனீயம்'** என்ற ஒரு நூலை மட்டுமே பாரவி படைத்துள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மை.

பாரவியின் காலம் குறித்து அறிவதில் நற்பேறு பெற்றவர்களாக இருக்கிறோம். கற்றோர்கள் இதுபற்றி ஒரே கருத்து கொண்டிராவிடினும், அவர் வாழ்ந்த காலம் ஒரு வரையறைக்குள் நிர்ணயிக்கப்படக் கூடியதாக உள்ளது.

மேலைச் சாளுக்கிய வம்சத்தை ஏற்படுத்திய இரண்டாம் புலிகேசியின் அய்ஹோலே (கி.பி. 634-ம் ஆண்டு — சகம் 556) கல்வெட்டில் பாரவி குறித்து காளிதாசரையும் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

> *''பகுத்தறியும் திறமை கொண்டவனும், கருங்கற்களால் கட்டப்பட்ட ஜீனரின் வாசஸ்தலத்தை பயன்படுத்தியபடி அவருடைய கோட்பாட்டுக்குப் புதிய பொருளைத் தருபவனும், தன்னுடைய கவிதா விலாசத்தால் காளிதாசன், பாரவி போன்றவர்களுக்கு இணையான புகழை அடைந்தவனுமான ரவிகீர்த்தி மேன்மேலும் வெற்றி பெறுவாறாக.''*

பாணினியின் **அஷ்டாத்யாயியை** (கி.பி.650 — ஏறக்குறைய) புகழ்பெற்ற **காசிகாவிருத்தியில்** குறிப்பிடும்போது, பாரவியின் கவிதைகளில் ஒன்றின் ஒரு பகுதி எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே, அவர் இந்த காலகட்டத்துக்கு முன்னவராகக் கருதப்பட வேண்டும் என்பது தெளிவு. மேலும் கணிசமான காலத்துக்குப் பிறகுதான் அவருடைய பிராபல்யம் பரவி பெயரும் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின் வெகுகாலம் கடந்த பின்னர் காளிதாசருக்கு இணையாக அவர் கருதப்பட்டு, அல்லது அதிகாரபூர்வமாக விவரங்களில் மேற்கோள் காட்டப்பட்டு அங்கீகாரம் பெறுகிறார். ஆனால் காளிதாசருக்கு (ஏறக்குறைய கி.பி.400) பிற்பட்டவர் அவர் என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. இருவருக்கும் இடைப்பட்ட காலம் பல ஆண்டுகள்.

நமது கவி குறித்து பாணன் (கி.பி. 7-வது நூற்றாண்டு முற்பகுதி) ஏதும் சொல்லக் காணோம் என்பதும் ஓர் உண்மை. அப்படி ஏதும் கூறாதது திகைக்க வைப்பதாகவும் உள்ளது. அவருடைய **ஹர்ஷ சரிதத்தின்** முன்னுரைக் கவிதைகளில் தனக்கு முன் இருந்த கவிஞர்கள், தேர்ந்த நாடகாசிரியர்கள் ஆகியோருக்குப் புகழாரம் சூட்டுகிறார். ஆனால் பாரவி குறித்து ஏதும் சொல்லக் காணோம். ''பாணபட்டனுக்கு சிலகாலம் முன்பாகத்தான் அவர் வாழ்ந்திருக்கக் கூடும். ஆகவே வலுவான அங்கீகாரம் பெறும் அளவுக்கு அவர் அச்சமயம் புகழ் பெற்றிருக்க முடியாது'' என்பது சிலர் சொல்லும் காரணம். ''பாணன் ஏதும் சொல்லாததாலேயே அவர் காலத்தவரோ அல்லது அருகாமை காலத்தவரோ என்றும் ஏற்றுக் கொண்டுவிட முடியாது'' என்பதாகச் சிலர் சொல்கின்றனர்.

எப்படி இருந்தாலும் பாரவியின் காலத்தை கி.பி. 500 முதல் 550-ம் ஆண்டுக்குள் நிர்ணயிப்பதுதான் நியாயமாக இருக்கும் எனத் தோன்றுகிறது.

அடுத்து பாரவியின் பிறந்த நாடு எது என்பதான கேள்வி எழுகிறது. இங்கும் நாம் முற்றிலும் தீர்ந்த முடிவாக எதையும் ஏற்க இயலாமல் இருக்கிறோம். இதுதான் என்று தீர்மானமாக ஏற்காமல் ஆராய்வதோடு நிற்பது நலன்.

முதன்முதலில் ஆர்.ஆர். பாகவத் சாஸ்திரி என்பவர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர் பாரவி எனக் கூறினார். பெரும்பாலோர் இக் கருத்துக்கு ஆதரவு தருகின்றனர். காவியத்தின் முடிவான பதினெட்டாவது காண்டத்தை எடுத்துக் கொண்டால், அதனில் மாறுவேடத்தில் வந்திருக்கும் சிவனின் பரந்தகன்ற மார்பில் அர்ஜுனன் அறையும் அடிகளை விவரிக்கும் முகமாக கவியின்

ஒப்புநோக்குவதான வரிகள், — ''சாஹ்யா மலைச்சரிவுகளில் மோதும் சமுத்திரத்தின் அந்தப் பயங்கர பேரெழுச்சி அலைகள்'' என்பவை உதவுவதாக இருக்கின்றன. ''முற்றும் முடிந்த தீர்ப்பாக இல்லாவிடினும், தென்னிந்தியாவில் உதித்த கவி என்பதற்கு இந்த சாஹ்யா மலையை விவரிக்கும் ஒப்பு உவமைக் காட்சி உதவுகிறது'' என்பதை ஏற்கலாம்.

சாஹ்யா மலை குறித்து 'தீவிர ஒப்புவமை' தரும் இந்த ஒரே ஒரு விவரத்தைத் தவிர, வேறு எதுவும் இல்லாத நேரத்தில், இமயமலை பற்றி ஐந்தாவது காண்டம் முழுதும் (ஏறக்குறைய ஐம்பத்திரண்டு கவிதைகள்) வர்ணிப்பதாக உள்ளன. ஆனால் இந்த மறுப்பு ஏற்கக்கூடியதாக இல்லை. ''இமயமலை குறித்து கவியின் வர்ணனைகள் கற்பனையாகக் காணப்படுகின்றன. காளிதாசர் **மேகதூதத்தில்** விவரிப்பதுபோல யதார்த்தமாக இல்லை. அவருடைய கதாநாயகன் இந்திரலோகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்பொழுது எதிர்ப்படும் இடங்கள் சொல்லப்படுவதாகக் காணோம். அவர் வடபகுதி நிலப்பாகங்கள் குறித்து அறிந்து வைத்திருந்தாராகில், அவருடைய கதாநாயகன் செல்லும் சமயம் துவைதவனம், இந்திரகீலமலை ஆகியவற்றுக்கு இடையே உள்ள பிரதேசங்களை விவரிக்க வாய்ப்பு வெகுவாக அவருக்குக் கிடைத்திருக்கும். அவ்வாய்ப்புகளை கவி தவறவிட்டிருக்க மாட்டார்.'' மேலும் பாரவி பற்றிய கல்வெட்டு விவரங்கள் அனைத்தும் மேற்கத்திய தக்காணத்தைச் சேர்ந்தவையாகவே இருக்கின்றன.

இருந்தாலும் இந்தக் கருத்துக்கு மறுப்பு இல்லாமல் இல்லை. மகாமகோபாத்யாய துர்கா பிரசாத் இவ்வாறு சொல்கிறார்: 'சாஹ்ய பற்றிய ஒரே விவரம் தென்னிந்தியக் கவிஞர் பாரவி என்பதற்குச் சான்று என்றால், மலையம், சாஹ்யம், சுவேலம் ஆகிய மலைகள், காவிரி, கோதாவரி, தாமிரபரணி ஆகிய ஆறுகள் குறித்து **ஹரவிஜயம்** என்னும் நூலின் ஆசிரியர் ரத்னாகரர் விவரிப்பது அவரையும் தென்னிந்தியராகக் காட்டுவதாக அமையும். ஆனால் உண்மையில் அவர் காஷ்மீர் பகுதியைச் சேர்ந்தவர். அதேபோல அவருடைய **காதம்பரியில்** விந்தியமலை பற்றி விவரமாக வர்ணிப்பதாலேயே மலைவாழ் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர் பாணர் என்ற முடிவுக்கு வர நேரிடும்.'

ஆனால் சாஹ்ய மலை குறித்து பாரவியின் தீவிர ஒப்புமை இன்னொரு வகை விளக்கத்துக்கு இடமளிக்கிறது. தென்னிந்தியராக அவர் இல்லாவிடினும் நாட்டின் தென்பகுதிக்கு அவர் ஏதோ வேலை நிமித்தம் சென்றிருக்கலாம்; அங்கு அப்பெரிய மலை மீது கடலலைகள்

மோதுவதைக் கண்டிருக்கலாம். அக்காட்சி அவருடைய மனதில் ஆழமாகப் பதிய, காவியம் படைக்கப்பட்ட போது, அக்காட்சியைப் பயன்படுத்தி இருக்கலாம்.

அக்காலத்தில் பயணம் செய்வது என்பது இடர்ப்பாடு உடையதாக இருந்திருக்கும். இருந்தாலும் செல்பவர்கள் சென்று கொண்டுதான் இருந்திருக்கின்றனர். கவியின் இமயமலை குறித்த வர்ணனைகள் வெகுவாக ஆழமாக இல்லாததாகக் குறை கூறுவதாக இருந்தாலும், காவியத்தின் உள்ளடக்கத்தை அது பாதிப்பதாக இல்லை. இதை மனதில் கொள்வது நலம். ஒரு பொருளை எப்படி விவரிப்பது, எதை வைத்துக் கொள்வது, எதை விடுவது என்பனவற்றைத் தீர்மானிப்பது கவியின் ஏகபோக உரிமை. ஆகவே கிடைத்துள்ள விவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு அவர் பிறந்த நிலப்பகுதியை நிர்ணயிப்பது கடினமான செயல்.

பாரவியின் பிறப்பிடம் வடநாடுதான்; மேலும் இமயமலைக்கு அருகாமைதான் எனக் கூறுபவர்கள், அந்த உயர்ந்த வானளாவும் மலை பற்றிக் கூறும் விவரங்களே போதுமான சான்று என்பதாக நினைக்கின்றனர். சிக்கிம் என அழைக்கப்படும் வடகோடி மாநிலத்தில் இன்றும் இந்திரகீலா என்னும் இடம் உள்ளது. இந்த விவரம் சான்றாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. கிராதர் என்னும் ஆரிய இனத்தைச் சேராத மக்கள் இன்றும் அப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பாரவியின் காவியப் போக்கில் இந்திரகீலம் என்னும் இடத்தில் சிவனுக்கும் அர்ஜுனனுக்கும் போர் நடைபெற்றது; கிராதன் உருவில் சிவனும் இருந்திருக்கிறார். மலைவாழ் மக்களான கிராதர் படை அவருக்கு உதவி இருக்கிறது.

2
மகாகாவியம்

காவியத்தினுள் நாம் புகுவதற்கு முன்பாக எந்தவகையான கவிதா ,மரபைச் சார்ந்து பாரவியின் படைப்புத் திறன் மலர்ந்து தனக்கென சிறப்பான சுயஉருக் கொண்டு வெளிப்பட்டிருக்கிறது என்பதைக் காண்போம்.

கவிதைப் படைப்புகள் வகைப்படுத்தப்படும் பொழுது, எவை எவை காணப்பட வேண்டும் **(திருஸ்யம்)**, எவை கேட்கப்பட வேண்டும் **(ஸ்ரவ்யம்)** என்பதாகப் பிரிக்கப்படுகின்றன. **மகாகாவியம்** அல்லது 'பெருங்காப்பியம்' என்பது செவிப்புலனால் உணர்ந்து கேட்கப்படக் கூடியது. இவ்விதம் கேட்பதற்கான வகையில் நயத்துடன் படைக்கப்பட்ட காவியங்களில் முன்மாதிரியாக இருப்பது பாரவியின் *கிராதார்ஜுனீயம்*.

எஸ்.கே. டே சொல்வது போல, முதன்மையான கதாநாயகப் பாத்திரங்களை, அவர்களுடைய செயல்பாடுகளைக் கொண்டு கவிதை உருவில் விவரித்துச் செல்வது **மகாகாவியம்** அல்லது பெருங்காப்பியம். ஆனால் அது மகாபாரதம் அல்லது ராமாயணம் போன்று மிக உயர்ந்த கதை உருவம், பண்பு கொண்டது அல்ல. இதிகாசம் என்பதான வகையைச் சேர்ந்தவை அவை இரண்டும். புராணகாலத்துக் காவியங்களைக் குறிப்பிடுவதற்காகவோ, கதாநாயகர்களின் வீரதீர சாகசம் பற்றிக் கூறுவதாலோ, சொல்ல வந்த விவரங்களை நேரிடையாகச் சொல்வதாலோ மகாகாவியம் என்பதிலுள்ள 'மகா' என்னும் அடைமொழியின் கருத்து அமையவில்லை. மிகப் பெரிய படைப்பு, படைப்பை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு கவி வாழ்ந்ததற்கான அடையாளம், உயர்தரமான இலக்கிய வகை ஆகியவை மகாகாவியங்களை மேன்படுத்திக் காட்டுவதாக அமைகின்றன. எடுத்துக்காட்டாகச்

சொல்வதானால், மகாகாவியங்களுக்கும் இதிகாசங்களுக்கும் உள்ள உறவு மில்டன், ஹோமர் ஆகிய இருவரின் படைப்புக்களுக்கு இடையே உள்ள உறவுடன் ஒப்பிடலாம்.

மகாகாவியங்களின் படைப்புத்தரம் குறித்துப் பலர் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்து இருப்பினும், அவற்றின் இயல்பு பற்றி **காவியதர்சம்** எழுதிய தண்டியின் எண்ணம் குறிப்பிடப்படும்படியாக இருக்கிறது.

உயர்ந்த குறிக்கோள், இறைவழிபாடு அல்லது கூறவரும் பொருள் குறித்து முன் அறிவிப்பு ஏதோ ஒன்றுடன் தொடங்கப்பட வேண்டும்.

பழங்கதை ஒன்றைச் சுற்றிச் சுழன்று அடித்தளம் அமைக்கப்படலாம். சிருங்கார ரஸத்துடன் இருக்கலாம். அல்லது வரலாற்று உண்மைகளைக் கொண்டு புனையப்பட்டுள்ள நான்கு வழிமுறைகள் பற்றி, கதாநாயகனின் சாகசம், விவேகம், பெருங்குணம் ஆகியவை பெருக்கெடுக்கப் படைக்கப்பட வேண்டும்.

மேலும் ஒரு காவியம் என்பது நகரம், கடல், மலை, தட்பவெப்பப் பருவகாலங்கள், சந்திர சூரியோதங்கள், பூங்கா அல்லது குளத்து நீரில் நடைபெறும் விளையாட்டுக்கள், மதுவுடன் கூடிய கேளிக்கைகள், காதல்காட்சிகள், பலவகை உணவு விருந்துகள், திருமணங்கள், ஆண்மகவுப் பிறப்பு, கூடி விவாதித்தல், ரகசியத்தூது, போருக்கான அணிவகுப்பு, சண்டை நிகழ்ச்சிகள், முற்றுகை, நாட்டைக் கவர்தல் முதலான நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளதாக இருக்க வேண்டும்.

அலங்காரச் சொற்கள், சொற்றொடர்கள் மட்டுமின்றி ஒரு காவியம் பரந்து விரிந்தும் இருந்தாக வேண்டும். வசீகரிக்கும் மனநிலையை (ரஸம்), உணர்ச்சிப் பெருக்குடன் (பாவம்) எடுத்துச் சொல்வதாக இருப்பது சிறப்பு.

ஓசை மிகுந்த இனிமையான பாக்களுடன், அதிக நீட்டலற்ற பல அதிகாரங்களைக் (சர்க்கம்) கொண்டுள்ளதாக இருந்தாக வேண்டும்.

இவை எல்லாம் இலக்கியம் சம்பந்தப்பட்டவை தான். ஐயத்துக்கு இடமில்லை. ஆனால் மிகத் தேவையானவை அல்ல. தேர்ந்த படைப்பாளர்களால் இவை ஏற்கச் சொல்லப்படவும் இல்லை.

அவர்கள் தாங்களாகக் கண்டு சொன்னவையும் அல்ல. மற்ற கவிகளின் படைப்புக்களில் தாங்கள் அனுபவபூர்வமாகக் கண்டு உணர்ந்த ரஸானுபாவங்களைக் கோர்வையாகக் கூறுகின்றனர். இருந்தாலும், இவை அனைவராலும் பொதுப்படையாக ஏற்கப்பட்டு, படைப்பாளர்கள் ஏற்ற விதிகளாகிவிட்டன. பிற்காலக் கவிகள் இவற்றைக் கோட்பாடுகளாக ஏற்று, யந்திரகதியில் தங்கள் படைப்புகளில் நுழைத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

பொருத்தமாக இருக்கின்றனவோ, அல்லவோ, மேற்சொன்ன விவரணங்கள் உரத்த பழக்கமாகி, அலங்காரச் சொற்களை அள்ளித் தெளிக்கும் வழக்கத்துக்குக் கொண்டு சென்று விட்டன. முக்கிய நிகழ்ச்சியின் இழையைப் பிற்பாடு கவிபற்றி எடுத்தாண்டாலும், இந்த வழக்கம் கதை நடுவில் குறுக்கிட்டு இடையூறாகக் கதையின் ஓட்டத்தைப் பாதிப்பதாகவும் இருக்க நேரலாம்.

படைப்பதற்கான இந்த அறிவுரைகளின் அவசியம் தெளிவாகத் தெரிகிறது. வெகுவான அலங்காரச் சொற்கள், அணி அழகுகளைக் கொண்டு விவரிக்கவும், தன்னுடைய முழுத்திறனை வெளியிடும் பொருட்டும், தான் கற்றவற்றைப் பிறர் அறியச் செய்யப்படும் ஆர்வத்தாலும், கவி வரம்பற்ற சுதந்திரத்துடன் செயல்பட இவை வழிவகுகின்றன.

இவ்வித முன்னுரைகளுடன் நாம் காவியத்துக்குள் நுழைவோம்.

3
கிராதர், அர்ஜுனன் கதை

ஒற்றன் திரும்பி வருகிறான்

துவைத வனத்தில் பாண்டவர்களும் அவர்களுடைய மனைவியான திரௌபதியும் ஒப்பந்தப்படி பன்னிரெண்டு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையைக் கழிக்கும் நிமித்தமாக வசித்து வருகின்றனர்.

துரியோதனன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை அறிந்துவர, யுதிஷ்டிரர் ஒற்றன் ஒருவனை அனுப்புவித்தார். எவ்விதம் ஆட்சி நடத்துகிறான், குடிமக்களிடம் எவ்வாறு நடந்து கொள்கிறான் ஆகியவற்றை அறிவது அவருடைய நோக்கம். அவ்வொற்றன் ஒரு காட்டுவாசி பிரம்மச்சாரி போல வேடம் தரித்துத் தேவையான விவரங்களை அறிந்து வந்திருந்தான்.

ஒற்றனிடம் இவர்கள் எதிர்பார்த்த தகவல்கள் இல்லை. ஏனெனில் துரியோதனன் நாட்டுமக்கள் உள்ளங்களைக் கவர்ந்து வெற்றிக் கொண்டிருந்தான். பாண்டவர்களில் மூத்தவரோடு உரையாடுகையில் ஒற்றன் குழப்பம் ஏதும் அடையவில்லை. உண்மையாக உழைப்பவன் மகிழ்விப்பதற்காக மட்டும் உண்மையற்றவற்றில் ஈடுபட்டுவிடக் கூடாது. அவனுடைய அச்சத்தைப் போக்கிய நாடு கடத்தப்பட்ட மன்னர், தடையின்றி பேசும்படி பணித்தார்.

ஒற்றன் தகவல் தருகிறான்

மரியாதையுடன் பணிவுடனும் ஒற்றன் கூறினான்:

''ஒற்றர்கள் என்போர் ஒரு மன்னனின் விழிகளுக்கு ஒப்பானவர்கள். உண்மையை அறிந்து வர அவர்கள் அமர்த்தப்பட்டிருக்கும் போது, அந்தப் பணியாட்களால் தலைவன் ஏமாற்றப்பட்டுவிடக் கூடாது. என் சொற்கள் மனதுக்கு இனிமை அளிப்பதாக இல்லாவிடில்,

என்னை மன்னிக்க வேண்டுகிறேன். ஏனெனில் தாங்கள் விரும்பும் இனிமை பயப்பதான, முழுதும் தேவையான தகவல் என்னிடம் அரிது. தலைவனுக்கு ஒழுங்காக அறிவுறுத்தாத ஒருவன் அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க முடியாதல்லவா? பணியாளர்களின் நற்சொற்களுக்கு செவிசாய்க்காத ஒருவன் தேர்ந்த தலைவனாகவும் இருக்க முடியாதல்லவா? மெய்யாக, மன்னனுக்கும் அவனுடைய உதவியாளர்களுக்கும் இடையே நம்பிக்கையும் ஒத்த மனமும் இருக்கும்போது தான் அதிர்ஷ்டம் என்பது அவ்னை நோக்கிப் புன்னகை பூக்கிறது. இயல்பாக மன்னர்களின் செயல்கள் புரிந்துகொள்ள முடியாதவையாக இருக்கின்றன. அதே நேரத்தில் எங்களைப் போன்ற மக்களின் அறிவாற்றல் வியப்பூட்டும் வகையில் மூடத்தனமாகவும் உள்ளது. தங்களுடைய ஊக்கமளிப்பாலும், அருளாலும் தான் என்னால் தங்களுடைய எதிரியின் குழப்பமான நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

துரியோதனன் அரியணையில் அமர்ந்திருக்க, தாங்கள் காட்டில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள். இருந்தாலும், தங்களிடம் தோல்வியுறும் அச்சம் அவனைப் பீடித்திருக்கிறது. ஆகவே சூழ்ச்சியாக, நேர்மையற்ற வழியில் கைப்பற்றப்பட்ட நாட்டை எப்பாடு பட்டாவது நிலைநிறுத்திக்கொள்ள முற்படுகிறான். தங்களைவிட மேம்பட்டவனாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் பொருட்டுத் தன் புகழைக் கரையற்றதாகவும், தான் பண்பு பல நிறைந்தவன் என்றும் சுற்றிலும் தொலைதூரம் பரப்புவதில் ஈடுபட்டிருக்கிறான். உயர்ந்தவர்களை எதிரிகளாகக் கொண்டு நமது மேன்மையை உயர்த்திக் காட்டும் இயல்பு, தாழ்ந்தவர்களோடு நட்புக் கொள்வதைவிட மேலானது. ஆறு புலன்களையும் அடக்கி ஆளும் அவன் பின்பற்றக் கடினமான மனு தர்மத்தைக் கடைப்பிடிப்பதில் ஈடுபட்டிருக்கிறான். விவேகத்தைக் கொண்டு சாதுர்யமான வழிகளில் இரவும் பகலுமாக தன்னுடைய மேதா விலாசத்தை பரப்புவதில் ஈடுபட்டிருக்கிறான். தன் கீழ் பணிபுரிபவர்களை அவன் நண்பர்களாகக் கருதுகிறான்; நண்பர்களை உறவினர்களாக நடத்துகிறான். செருக்கை விட்டொழித்துள்ளான். அரசு அதிகாரம் அனைத்தும் தன் உற்றாரிடம் ஒப்படைத்து விட்டதாக நடந்து கொள்கிறான். தமக்கிடையே இணக்கம் கொண்டவைகளாக மூன்று புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பாரபட்சம் காட்டாது அனுசரிப்பதனால், அவை அவனுடைய முன்னேற்றத்துக்கு வழிவகுக்கின்றன. மனிதர்களின் தராதரம் பார்த்து உதவுகிறான். தகுதி ஒன்றையே கணக்கில் எடுத்துக் கொண்டு அவனுடைய கருணை உள்ளம் வள்ளலாக வழங்குகிறது. நடுநிலமையுடன், எதிரியாக இருந்தாலும், உற்றவர்களாக இருந்தாலும் நேர்மை பிறழ்பவர்களை அவன் தண்டிக்கிறான். இது

குறித்து பேராசை அல்லது சினம் போன்ற அவலகுணங்கள் தன்னை வழிநடத்த அவன் அனுமதிப்பதில்லை. அரசியலுக்கு ஆதாரமான சாம, தான, பேத, தண்ட யுக்திகளை திறமையுடன் அறிவு கொண்டு பயன்படுத்துவதால், அந்த ஒவ்வோர் உக்தியும் முன்வந்து அவன்மீது செல்வச் செழுமையை மிதமிஞ்சிக்கொண்டு வந்து கொட்டுகின்றன.

கப்பம் கட்டும் பல சிற்றரசர்களின் தேர்களும் புரவிகளும் சூழ்ந்துள்ள அவனுடைய அரண்மனையைச் சுற்றி நட்பார்ந்த மன்னர்கள் அனுப்பித்தந்த யானைகளின் மத்தகத்தின் மணம் நிறைந்து நிலத்தை நனைக்கிறது. உழவர்களின் உழைப்பின்றி தானாக வளர்ந்துள்ள பயிர்களால் கௌரவர்களின் நிலங்கள் செழித்து அறுவடைக்குக் காத்திருக்கின்றன.

குபேரன் அள்ளி வழங்குகிறான் என்பது போல கழனிகள் எங்கும் நீர். அமைதியையும், நிறைவையும் உள்ளடக்கமாகக் கொண்ட கௌரவ மன்னனது சட்டங்கள் நகரங்களையும், வயல்புறங்களையும் காக்கின்றன.

அவனுடைய செல்வத்தை சூல்கொண்ட நிலமங்கை ஏராளமாக விளைவிக்கின்றாள். நகரங்களின், கோட்டை களின் தலைமைக் காவலர்கள், உழைப்பாலும், தீரத்தாலும் உயர்ந்த படைவீரர்கள் தங்கள் மன்னனைக் காக்கக் காத்திருக்கின்றனர். கலகம் விளைவிப்பதாக அவர்கள் இல்லை.

வில்லை வளைக்க வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை, சினத்தால் அவன் முகம் சுளிப்பது கிடையாது. அவனுடைய நற்பண்புகளில் மனம் பறிகொடுத்த சிற்றரசர்கள் வண்ணமலர்களால் ஆன சரங்களைத் தலைமீது சூட்டிக் கொள்வது போல, அவனது கட்டளைகளை சிரமேற்கொள்கின்றனர். இளமையின் துடிப்பால் கிளர்ந்து எழுந்து, அடக்குவதற்கு அடங்காதவனான தன் இளைய சகோதரன் துச்சாதனனை பட்டத்து இளவரசனாக ஆக்கி இருக்கிறான். அவனும் தன்னிடமிருந்து அருவியாகப் பெருக்கெடுக்கும் புனிதமந்திரங்களைக் கொண்டு நித்திய ஆராதனை செய்வதில் ஈடுபடுகிறான். அனைத்து விரோத மன்னர்களையும் வெற்றி கண்டிருக்கிறான். கடல்களை எட்டும் அளவுக்கு பாதுகாப்பான சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆள்கிறான். ஆனால் தங்களைக் குறித்து அவ்ன் இன்னமும் கவலையடைந்துள்ளதாகத் தெரிகிறது.

வல்லமை படைத்தோரிடம் விரோதம் கொள்வது மெய்யாகவே விபரீதமான முடிவுகளுக்கு இட்டுச்செல்லும். எப்போதாவது தங்கள்

பெயர் அவன் எதிரில் உச்சரிக்கப்பட்டால், அவனுக்கு உடனடியாக அர்ஜுனனின் வீரதீர சாகசங்களும், ஆண்மையுடன் கூடிய கம்பீரமும் கவனத்துக்கு வந்து மந்திரத்தால் கட்டுண்டு சுருண்ட பாம்பாக, தலையைத் தாழ்த்திக் கொள்கிறான்.

இனி மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது தங்களால் தீர்மானிக்க வேண்டிய விவகாரம். நாங்கள் தகவல்கள், சேகரித்துத் தருகிறோம். அத்தோடு எங்களால் தொடங்கப்பட்ட பணி முடிவடைகிறது. செய்திகள் தருவோம்; அறிவுரை கூற எங்களால் இயலாது.''

திரௌபதி மறுதளிக்கிறாள்

யுதிஷ்டிரா ஒற்றனுக்கு வெகுமதியளித்தபின் அவனும் விடைபெற்றுச் சென்றான். மன்னர் தன் இளைய சகோதரர்களையும், திரௌபதியையும் அழைத்து, அனைத்தையும் அவர்களிடம் தெரிவித்தார்.

உடனேயே திரௌபதி சிலிர்த்து எழுந்தாள். தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவளாக, அவள் பெருஞ்சினத்துடன் மடைதிறந்தாற்போல கூறலானாள்.

''தங்களைப் போன்றவர்களுக்கு ஒரு மாது அறிவுரை கூறுவது என்பது வெகுவாக அவமானப்படுத்துவது ஆகும். இருந்தாலும் பெரும் துயருற்ற இந்த நாட்களில் ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மிகுந்த மனவேதனையுடன் பேசுவதற்கான கட்டாயம் நேர்ந்திருக்கிறது. திறமையிலும், வீரதீர சாகசங்களிலும் தங்களது மூதாதையர் இந்திரனுக்கு இணையாக இருந்தனர். பூமி முழுதையும் பாரம்பரியமாகத் தங்கள் பிடிப்பில் வைத்திருந்தனர். ஆனால் தன்னை அலங்கரித்த மலர்மாலையைப் பற்றி எடுத்து ஒரு யானை தொலைவில் வீசி எறிவது போல, நாட்டைக் காத்து ஆட்சிசெய்வதற்கு மாறாக, தொலைத்துவிட்டு நிற்கிறீர்கள். ஏமாற்றுபவர்களை ஏமாற்றத் தெரியாத முட்டாள்கள் தோல்வியைத் தழுவுகிறார்கள். ஆயுதம் தாங்கியவனாக அல்லாத ஒருவன் எதிரியின் அம்புகளால் துளைக்கப்படுவது போல, அவர்கள் அறியாதவகையில் விரோதிகளால் அப்போதே அழிக்கப்படுகிறார்கள். மிக்க எழிலுடன் விசுவாசம் உள்ள மனைவி ஒருத்தி தன் கணவனை அவனுடைய உயர்ந்த பண்புகளைக் கண்டு வழிபடுவது போல, தங்களுடைய மாசற்ற அரசியல் நடவடிக்கைகளினால், 'அரசு மகிமை' இதுகாறும் தங்களிடமிருந்து பிரியாது அணைத்தபடி இருக்கிறாள். ஆனால் தாங்கள் இப்போது செயலற்று இருப்பதால், அவளை எதிரியிடம் எளிதாகப் பறிகொடுக்க இருக்கிறீர்கள்.

அவமானப்படுத்தப்பட்டும், வீழ்த்தப்பட்டும் கிடக்கும் இந்த நிலையிலும், சினத்தால் கிளர்ந்து பொங்கிஎழ முடியாத தங்களுடைய நிலை வருந்தத்தக்கதாக இருக்கிறது. எவனுடைய கோபம் வீணாகாது என்பது தெரிந்திருக்கிறதோ, அவன் அனைவராலும் உடனடியாக மதிக்கப்படுகிறான். ஆனால் எவன் ஒருவன் மன்னிக்கும் இயல்பு படைத்திருக்கிறானோ, அவனைக் கண்டு எதிரிகள் நடுக்கம் அடைவதில்லை; நண்பர்களும் நேசமுடன் இருப்பதில்லை. தாங்கள் தங்களை மட்டுமே தாழ்த்திக் கொள்ளவில்லை. தங்களுடைய வலிமைமிக்க சகோதரர்களின் தத்தளிப்பைச் சற்றே எண்ணிப்பாருங்கள்.

> *சந்தனம் பூசியதால் மணக்கும் அரச குமாரன் பீமன் உடல் முழுதும் புழுதிபடிந்து குன்றுகளின் மீது அலைந்து திரிகிறார். ஆனால், ஓ அறத்தின் ஆன்மாவே, அவர் நிலையைக் கண்டு தங்கள் இதயம் பதறித் துடிக்கவில்லை என்பதை நான் அறிவேன். வடக்கத்திய நாடுகளை வெற்றிகொண்டு இறைந்து கிடக்கும் செல்வத்தாலும் பொன்னாலும் சூழ்ந்திருந்த அர்ஜுனன், ஓ முற்றும் துறந்த முனியே, அடையாளம் காண்பீராக, மரவுரி தரித்துக் கட்டாந்தரையில் அவர் படுத்து உறங்குகிறார். இளைய சகோதரர்களான் இரட்டையர்கள் இளவரசர்களாகப் பிரிந்து உயர்ந்து நன்மதிப்புப் பெற்றவர்கள். குறித்துக் கொள்வீர்களாக. வனங்களில் அவர்கள் காட்டு யானைகளாகத் திரிந்து அலைகின்றனர்.*

உண்மைதான்; தங்களுடைய சிந்தனை வழியில் என்னால் தொடர்ந்து வரமுடியவில்லை. ஏனெனில் சிந்திக்கும் உள்ளங்களின் திறன் விசித்திரமானது, மாறுபட்டது. ஆனாலும் தங்களுக்கு நேர்ந்துள்ள சீரழிவை நினைத்துப் பார்க்கும் போது, என் நெஞ்சம் வேதனையால் சுக்குநூறாகச் சிதறிவிடுவதாக உணர்கிறேன்.

முன்பெல்லாம் இரவுகளில் தாங்கள் மதிப்புமிக்கப் பட்டுப் பஞ்சணைகளில் சொகுசாகப் படுத்து உறங்குவது வழக்கம். அதிகாலையில் தங்களைக்குறித்து பெருமையுடன் பாடும் பாணர்களின் இசையைக் கேட்டபடி தாங்கள் விழித்து எழுவீர்கள். ஆனால் இப்போது குசப்புல் அடர்ந்து மண்டிய வறண்ட நிலத்தில் தங்கள் உடல் ஓய்வு கொள்கிறது; விழித்து எழும்போது நரிகளின் ஊளைக்குரல்களே தங்களை வாழ்த்துவதாக இருக்கின்றன.

முன்பெல்லாம், பிராமணர்கள் உணவு கொண்டு சென்ற பிறகு, மிஞ்சிய பதார்த்தங்களைத் தாங்கள் உட்கொண்டு இருந்த காலத்தில்

தங்களுடைய காத்திரம் மேன்மேலும் கவர்ச்சிகரமாகக் காணப்பட்டது. ஆனால் இப்போது சதைப்பற்றுள்ள காட்டுப் பழங்களே தங்கள் உணவு ஆக, தங்கள் புகழ், பெருமையுடன் கூட தங்கள் உடலும் நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது.

முன்பெல்லாம், சிற்றரசர்கள் தலைதாழ்த்தி வணங்கும்போது, அவர்கள் தலையில் அணிந்திருந்த மலர் சரங்களிலிருந்து விழும் மகரந்தத் தூள்கள் பொன்னாலும் மணிகளாலும் ஆன மிதியடிகளின்மீது நிலைத்த தங்கள் பாதங்களில் படிய, அப்பாதங்கள் சிவந்து காணப்படும். ஆனால் தற்சமயம் தாங்கள் வனப்பகுதிகளில் திரியும் போது, முனிவர்களும், விலங்குகளும் பறித்தது போக மிஞ்சிய கூர்மையான குசப்புற்களால் அவதியுற தங்கள் பாதங்கள் ரத்தச் சிவப்பாகின்றன.ஆகையால் தாங்கள் இந்த அமைதி, மன்னிப்புகளைக் கொண்ட மனப்பான்மையை உதறித்தள்ளி விரோதியை எதிர்க்க முயற்சி மேற்கொண்டாக வேண்டும். மனதை அடக்கி வெற்றி காண்பது என்பது சரிதான்; ஆனால் அது முனிவர்களுக்கானது; மன்னர்களுக்கானது அல்ல. தங்களைப் போன்ற உயர்ந்த ஆத்மாக்கள் அவமானத்தை முழுமனதோடு ஏற்பது என்றால், ஆண்மையின் பண்பு எங்கு புகலிடம் தேடும்?

அல்லது போரே கூடாது, பொறுமையும் மன்னித்து அருளும் குணமும் தான் நன்மை தரும் என்று நினைத்திருக்கிறீர்களா? அப்படியாயின் வில்லைத் தொலைவில் வீசிவிட்டு, சடைமுடியோடு வேள்வி ஆற்றிக் கொண்டிருக்கலாமே? ஒப்பந்தத்தை மீறக்கூடாது என்பதன் காரணமாக நிலத்தில் காலூன்றித் தயங்கி நிற்பதில் பயனில்லை; எதிரி தந்திரத்தை மேற்கொள்ளும்போது, தந்திரத்தால்தான் சந்திக்க வேண்டும். எந்நடத்தையும் போரில் கூடாது என்பதல்ல, மன்னர்களுக்கு இதனில் ஒழுக்கம் தேவையில்லை. எதிரியின் மீது ஏதாவது காரணம் காட்டி, பழிசுமத்தி அவர்கள் படை எடுத்துச் செல்கின்றனர். ஆகையால் —

> *பிரமாணத்தால் கட்டுண்டு புகழ் சரிந்து, நிறம் மாறி, வலிமை இழந்து, இன்னல் கடலில் தத்தளித்துக் கிடக்கும் என் அரசே, விழித்திடுக! எழும் கதிரவன் இரவின் கருமையை விரட்டுவதுபோல தாங்கள் எதிரிகளை அழித்து ஒழிப்பீர்களாக.''*

திரௌபதியின் சார்பாக பீமன் பேசுகிறான்

போர், எதிர்தாக்குதல் ஆகியவற்றுக்கான திரௌபதியின் கூக்குரலை பீமன் வரவேற்றான். உடனடியாக நடவடிக்கை

எடுக்கும்படி யுதிஷ்டிரரை வற்புறுத்தும் காரணமாக எழுந்து பேசலானான். அவன் சொன்னதாவது:

''கண்ணியத்துடன் கூடிய, அனைத்து விவரங்களையும் கணித்து இப்போது மாதரசி பேசியவை மெய்யாகவே பாராட்டப்படக் கூடியன. சொல்லாற்றலுக்கு அதிபதியான பிரகஸ்பதியால்கூட விவரத்தை இவ்வளவு நேர்த்தியாக வெளியிட்டிருக்க முடியாது என நினைக்கிறேன். அகண்ட ஏரியின் ஆழத்தைப் போன்று அரசாங்க அலுவல்களுக்கான அறிவியல் எளிதில் அடைந்துவிட முடியாது; வழிகாட்டியின் உதவியினால்தான் அதைக் கற்றுத் தேர்ந்து செயலாற்ற முடியும்; ஆனால் அத்தகைய வழிகாட்டி கிட்டுவது அரிது. ஆகவே நமது அன்புக்கினிய மனைவி பெரிய வல்லுநர்போலப் பேசியது வியப்பால் திகைக்க வைப்பதாக உள்ளது. அவளுடைய சொற்கள் சுருக்கமாக இருக்கலாம்; ஆனால் தரத்தில் மிக உயர்ந்தவை. உணர்ச்சியைப் பறிகொடுத்த ஒருவரால் மட்டுமே அவை வரவேற்கப்படாமல் இருக்கும்; ஆனால் அச்சொற்கள் ஏற்கவேண்டிய வகையில் உட்சான்றுகளை சூல்கொண்டு முடிவில் நன்மை நல்குவதாக அமைந்துள்ளன. வலிமையை இழந்தவருக்கு அவை மனவருத்தம் தருவதாக இருந்தாலும், நீண்டகால நோக்கில் அவை அனுகூலமானவை; மருந்து போல சிறுசிறு அளவில் கொடுக்கப்பட, அவை வீர்யம் மிகுந்து செயல்படும். இந்த வசீகரமான சொற்களைத் தாங்கள் தள்ள மாட்டீர்கள் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். ஏனெனில் பேசியவரின் அந்தஸ்தைப் பாராமல் பேசியவற்றின் கருத்தை உணர்ந்து அறிவுள்ளவன் முடிவுக்கு வருகிறான்.

நான்கு வகையான படிப்பில் தேர்ந்தவரான தாங்கள் தரம்பார்த்துப் பிரித்து அறிந்து ஏற்கும் சிறந்த இயல்பைப் பெற்றிருக்கிறீர்கள். ஆனால் புதைசேற்றில் அகப்பட்ட ஒரு யானைபோல தங்களிடம் உள்ள சூட்சம அறிவாற்றல் ஏன் தனது சக்தியை இழந்துள்ளது? தங்களுடைய ஊக்கம். தீரசாகசம் ஆகியவை தேவர்களிடம் கூட வியப்புடன் கூடிய பாராட்டுகளைப் பெற்றுள்ளன. ஆனால் எதிரி தங்களை வருந்தத் தக்க நிலைக்கு வீழ்த்தி இருக்கிறான். இதைவிடக் கவலைப்படத்தக்கதாக வேறு எது இருக்க முடியும்?

செல்வச் செழிப்பு எதிரியை வீழ்ச்சி பெறச் செய்வதாக இருந்தால், அதைப் பொறுத்திருந்து பார்க்கலாம். ஆனால் பெருந்துயரம் எதிரியின் நிலையை உயர்த்திவிடும் என்றால், பார்த்துக் கொண்டு வாளா இருக்கக்கூடாது. தனது செழுமை, துயரம் ஆகியவற்றால் எதிரி உயர்கிறான் என்றால், அந்த முன்னேற்றத்தை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

மக்களின் கண்டனத்துக்குப் பயந்து எதிரியின் சக்தி ஓங்குவதைக் கண்டும் காணாதும் இருக்கும் ஒரு மன்னனை நற்பேறு அரசி மனஉறுதி அற்ற மன்னனுடன் வாழ்வதாக எண்ணி மறுகி, வெகுவிரைவில் அவனைவிட்டு விலகுகிறாள். விரைவில் முழுவீச்சுடன் ஒளிபெற்று எழும் என்ற நம்பிக்கையுடன் வளர்பிறையின் முதல் நாள் அன்று பிறை நிலவை மக்கள் ஆராதிப்பது போல, தான் இழந்த பெருமைகளை மீண்டும் பெற முயற்சிக்கும் ஒரு மன்னனை அவனுடைய குடிமக்கள் மதித்து மரியாதை செலுத்துகிறார்கள். ஐம்பெரும் பிரிவுக் கொள்கைதான் ஒரு மன்னனின் கருவூலத்துக்கும் பாதுகாப்புப் படைக்கும் உறுதியான ஆணிவேர், ஆனால் அக்கொள்கைகளும் உடனடியான தேர்ந்த வலுவுடன் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தான் உதவுகின்றன.

ஒப்பற்ற வலிமை மட்டுமே ஓர் ஊக்கமுள்ள மனிதனை வீழ்ச்சி அடையவிடாமல் தடுக்கிறது. தைரியமற்ற ஒருவனை அழிவுச் சூழல் வெற்றி கொள்கிறது. அழிவால் பாதிக்கப்பட்ட ஒருவனை எதிர்காலம் நிராகரிக்கிறது. எதிர்காலம் அற்றவன் மதிப்பவர் அற்று வீழ்ச்சி அடைகிறான்; வீழ்ச்சியடைந்தவன் மீண்டும் அரசுப்பேறு பெற இயலாது. ஆகவே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுக.

ஒப்புக்கொண்ட காலம் வரை நாம் காத்திருக்க வேண்டும் என்ற வாதம் எழலாம்; உண்மைதான். ஆனால் அது சரியான வாதமாக எனக்குப்படவில்லை. திருதராஷ்டிரரின் மக்களுடைய கபடம் ஐயத்துக்கு அப்பாற்பட்டு நிரூபணம் ஆகியுள்ளது. இத்தனை காலம் ஆண்டு அனுபவித்த பிறகு அவர்கள் நேர்மையாக நாட்டைத் திருப்பித் தருவார்கள் என்பது என்ன நிச்சயம்? சரி, நாட்டை அவர்கள் தங்களிடம் திரும்பத் தருகிறார்கள் என்பதை நம்புவோம். ஆனால் எதிரியிடமிருந்து வெகுமதி போல நாட்டைப் பெறுவது தங்களுக்குக் கௌரவம் அளிக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். அச்செயல் தைரியத்துக்கும், சாகசங்களுக்கும் பெயர்போன தங்களுடைய சகோதரர்களுக்கு எத்தகைய அவமானத்தை உண்டாக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்.

ஓர் உயர்ந்த மனிதன் தன் வலிமையால் மட்டுமே உலகைத் தன்கீழ் கொண்டுவர முயல்கிறான். சிங்கம் தன்னால் கொல்லப்பட்ட பெரிய யானைகளையே புசிக்கிறது. அழிய இருக்கும் இந்த உயிரை அழியாத புகழுக்காக விடுவதில் தன்மானமுள்ள ஒரு மனிதன் தயங்குவதில்லை. புகழ் என்பது சிறப்பான குறிகோள்; செல்வம் என்று ஒன்று கிடையாது; இரண்டாம் பட்சமாகப் பெற வேண்டிய பொருள்

அது. சாம்பல் குவியல் மீது மக்கள் நடமாட முடியும்; ஆனால் தழலுடன் எரியும் நெருப்பின்மீது நடக்கமுடியாது. மானம் போன பிறகு உயிரை சுலபமாக விட்டுவிட ஒரு தன்மானமுள்ள மனிதன் முயற்சி செய்வானே தவிர, தன் கௌரவத்தை எந்தச் சூழ்நிலையிலும் விட்டுவிடச் சம்மதிக்கமாட்டான். இடியோசையுடன் கூடிய மேகக் கூட்டங்களை நோக்கி சிங்கம் கர்ஜிக்கிறது. ஏன்? இன்னொருவர் உயர்வை ஏற்கமுடியாத பெரிய மனிதர்களின் இயல்பு அது.

தங்கள் நெஞ்சத்தைத் தாங்கள் நிலைப்படுத்திக் கொள்ளுங்கள், முயற்சியை மேற்கொள்க. எதிரிமீது பாய அழிவு சக்திகள் காத்திருக்கின்றன; ஆனால் தங்களின் உற்சாகமின்மையால் அவை தயங்குகின்றன. நான்கு திக்குகளையும் பாதுகாத்து நிற்கும் பேராற்றல் படைத்த நான்கு யானைகள் போன்ற அல்லது நான்கு சமுத்திரங்களை போன்ற தங்களுடைய நான்கு உடன்பிறந்தார்களும் தாக்கும்போது எதிர்த்து நிற்க எவரிடம் வலிமையும், மனத்திட்பமும் இருக்க முடியும்?

ஓ, மன்ன! தாமதம் இன்றி மோதுக. எதிரியால் மூட்டப்பட்ட தங்கள் உள்ளத்தை எரித்துக் கொண்டிருக்கும் அவமானத் தீ, தொடர்ந்து நிற்காமல் பெருகும் எதிரிகளின் மனைவிமார் கண்ணீர் பெருக்கால் அணைக்கப்படட்டும்.''

யுதிஷ்டிரர் விடையளிக்கிறார்

பீமனின் கிளர்ச்சியூட்டும் பேச்சைக் கேட்டபிறகு, பாண்டவர்களில் மூத்தவர் மதம் கொண்டு ஓடித்திரியும் யானையை சமாதானப்படுத்துவது போலக் கூறலாயினர்.

''பிரகாசமான, நன்கு துடைக்கப்பட்ட தூசு அற்ற முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரியும் ஒரு பொருளைப் போல, உன்னுடைய இந்தச் சொற்கள் தூய்மையாக, கவர்ச்சிகரமாக, முறையுள்ள வாதமாக இருந்து, உன்னுடைய நேர்மையான எண்ணத்தைத் தெளிவாகப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. இச்சொற்கள் தெளிந்து விளங்குகின்றன; பொருள் ஆழ்ந்து அணி செய்விக்கிறது; கூறியது கூறலாக இல்லை. கோவையாக இசைந்து உணர்த்துவதாக இருக்கின்றன. வலுவான வாதங்களைக் கொண்டவையாகவும், மேற்கோள்களுடன் முரண்படாதவையாகவும் உள்ளன. இத்தகைய உயர்தரப் பேச்சாளர்களைக் காண்பது அரிது.

ஆனாலும், மனநிறைவை முழுவதுமாக நான் பெறாத நிலையில், ஒரு முற்றான முடிவை நான் இன்னமும் எட்டவில்லை. ஒரு மன்னனுடைய விவகாரங்கள் எண்ணிறந்தவை. ஆகவே எந்தவித

நடவடிக்கை மேற்கொள்வது என்று முடிவு செய்வது கடினமானது. எவரும் அவசர நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது. விழிப்பற்று இருப்பவன் அழிவு அனைத்துக்கிடமான நிலையை அடைகிறான். பண்பாடுதான் செல்வத்தை வசீகரித்துத் தருகிறது. நிலைத்து நிதானமாகச் செயலாற்றுபவரை அது ஏற்றுத் தழுவிக் கொள்கிறது. பொறுமையை மேற்கொண்டு பணியில் ஈடுபட்டு, நீர் பாய்ச்சி விதைகளைத் தூவியபிறகு ஒரு தேர்ந்த விவசாயி இலையுதிர்காலத்தில் நிறைவான அறுவடையைக் காண்பது போல, ஒருவர் தன் பண்பாட்டைக் கொண்டு வெற்றியை அடைகிறார். தேர்ந்த நூலறிவு ஒரு வர்க்க அணியாக அமைகிறது. தன்னடக்கம் மேலும் பெருமைக்கு ஆளாக்குகிறது. தக்க காலத்தில் வெளிக்காட்டுவதற்கான வீரம் தன்னடக்கத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறது. நேர்மையான கொள்கையைக் கடைப்பிடித்தால், வலிமை ஓங்கி வெற்றியைத் தேடித் தருகிறது. சூழ்ந்துள்ள இருளில் இருக்கும் விளக்கு போல, கடினமான முயற்சியை மேற்கொள்வதன் பொருட்டு தக்க கடமையை ஆற்றுவதற்கான ஆகமங்கள் சரியான வழிமுறைகளைத் தெரிவிக்கின்றன.

வெற்றியை நாடும் மன்னன் சினத்தை அடக்க வேண்டும். தனக்குச் சாதகமான சூழ்நிலைகள் அனைத்தையும் ஏற்று விவேகமான மன்னன் நினைத்த செயலை முடித்துக் கொள்கிறான். இரவின் காரிருளை தன் கதிர்களால் விலக்கி மேலெழும் கதிரவன் போல, சினத்தைத் தன் விவேகத்தால் அடக்கி ஒருவர் வெற்றி காண வேண்டும். நிலவின் ஒளியைத் தேய்பிறை ஒவ்வொரு நாளும் அபகரிப்பதுபோல, சினத்தால் ஏற்படும் பேதமை ஒருவருடைய செல்வத்தையும், சக்தியையும் கவர்ந்து விடுகிறது. பருவ காலங்களை நிர்ணயிக்கும் கதிரவன் போல, அதிமென்மையாக இல்லாமலும், மிகக் கொடுமைப்படுத்தாதவனாகவும் இருந்து, அதே நேரத்தில் மென்மை, கடுமை ஆகியவற்றைச் சந்தர்ப்பத்துக்குத் தக்கவாறு பயன்படுத்துகிற மன்னனே உலகம் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வருகிறான். இலையுதிர்காலத்து அடர்த்தியற்ற மேகம் போன்றது அதிர்ஷ்டம். முரட்டுத்தனம் மிகுந்த புரவிகளான உணர்வுகள் பழக்கப்படுத்தக் கடினமாக உள்ளன. உண்மையில், பொறுமையற்ற ஒருவரால் ராஜரீகப் பெருமையை வெகுகாலத்துக்கு கைக் கொண்டிருக்க முடியாது.

புலனடக்கம் என்பது வெகுவாகத் தேவை. புலனடக்கமற்ற ஒருவர், கற்றவராக இருந்தாலும், தன் பெருமையையும், சக்தியையும் விரைவில் இழக்கிறார். நிதானித்துச் செயல்படும் சக்தியை சினம் அழித்து விடுகிறது; நேரத்தைப் பயன்படுத்தி, சூழ்நிலையைப்

பயன்படுத்திச் செயலாற்றும் திறமை தேய்கிறது; சிறந்த கோட்பாடு கொண்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பை இழக்கச் செய்கிறது. மன்னித்தல் போன்று பயனளிக்கக்கூடிய செயல் வேறு எதுவும் இல்லை; வருங்கால முன்னேற்றத்துக்கு உதவுகிறது; அனைத்து வகையான குறிக்கோள்களையும் அடைய வழி வகுக்கிறது; எதிரிகளை ஒழிக்க உதவும் ஒரே ஆயுதம் உயர்ந்த பண்பான மன்னித்தல்தான்.

உயர்ந்த யாதவ குலத்தினர் துரியோதனன் பக்கம் சாயமாட்டார்கள். ஏனெனில் நம்மிடம் அவர்களுக்கு இயல்பான அபிமானம் உண்டு. தற்சமயம் அவர்கள் அவனோடு தங்களுடைய தன்னலம் காரணமாக நட்புறவு பூண்டு இருக்கிறார்கள். காலம் தவறிய — ஒப்பந்த காலத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்படும் தாக்குதல் யாதவகுல மன்னர்களை எதிரிகளோடு இணைப்பதாக அமையும். மேலும், பொறுமை தன் விருப்பப்படி வெகுமதி தருவதாக இருக்கிறது. துரியோதனனுக்கு உதவும் மன்னர்களிடையே வேற்றுமையை விளைவிக்க நம்மால் இயலும். ஏனெனில் ஊதிப்பருத்த செருக்குடைய துரியோதனன் அவர்கள் மனதை நிச்சயமாகப் புண்படுத்தி இருப்பான். தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால்தான் அவன் தன்னை எளியவனாகக் காட்டிக் கொள்கிறான். அந்த அளவு தற்காலிக எளிமை அவனுடைய இயல்பான அகந்தையை மேலும் ஊக்குவிப்பதில்தான் முடியும். அகம்பாவம் கொண்ட மன்னனை அறியாமை அணைத்துக் கொள்கிறது; அத்தகைய முட்டாள் மன்னன் நல்வழியை விட்டு விலகிச் செல்கிறான்; அவனை மக்கள் பொதுவாகப் புறக்கணிக்கிறார்கள். புயல் காற்றினால் பெரிய மரங்கள் வேரோடு சாய்வதைப் போல, உள்நாட்டு விவகாரங்களால் பலவீனமடைந்த எதிரியை பொறுமை கொண்டவன் வெற்றிகண்டு விட முடியும். சிறு தீப்பொறி ஒரு மலையையே எரித்துவிடுவதுபோல, நாட்டில் பொறுப்புள்ள துறைகளைக் கண்காணித்து வருபவர்களின் மனதில் ஏற்படும் அதிருப்தியால் உண்டாகும் சிறு கலகம் ஒரு மன்னனை வீழ்த்திவிடும். எளிமையைக் கைவிட்ட எதிரியின் செல்வாக்கைக் கண்டு அறிவாளியான ஒரு மனிதன் பதட்டம் அடைவதில்லை. ஏனெனில், கர்வம் வெற்றிகொள்ள, அவனுடைய செல்வமும், வலிமையும் அவனை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன. மணற்பாங்கான கரைகளை ஆற்றுப்பெருக்கு உள்ளும்புறமும் உடைத்துச் செல்வதைப் போல, காத்திருக்கும் பக்கத்து நாட்டு மன்னன், உள்நாட்டுக் கலவரத்தாலும் அதிருப்தியாலும் சிதைந்து கிடக்கும் நாட்டைக் கைப்பற்றிக் கொள்கிறான்.''

வேத வியாசர் வருகிறார்: யுதிஷ்டிரர் தன் வணக்கத்தைத் தெரிவிக்கிறார்

இவ்விதமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, பார்த்த மாத்திரத்திலேயே பறவைகள், விலங்குகளிடையிலும் அமைதியை வருவிப்பவரும், விழிகளுக்கு இனியதான பொலிவு சூழ்ந்தவரும், பாவங்களைப் போக்குபவரும், நலன் அனைத்துக்கும் காரணமானவரும், நற்செயல்களையே தமதாகக் கொண்டவருமான முனிபுங்கவர் வியாசர் எதிர்பாராத நேரத்தில் யுதிஷ்டிரரின் விருப்பத்துக்கு இணங்கியவர் போல அங்கு வந்தார். யுதிஷ்டிரர் மரியாதை நிமித்தம் எழுந்து அவரை கௌரவித்தார்; அனுமதி பெற்று மீண்டும் அமர்ந்தார். மன்னரின் உதடுகள் புன்னகையால் பிரகாசித்தன; ரிஷிஸ்ரேஷ்டரின் முன் அமர்ந்திருந்தவர் தன்னைச்சுற்றி காந்தியைப் பரப்பியவராக, ஒளிமிக்க வியாழன் முன் முழுநிலவாகக் காணப்பட்டார்.

பெருமைக்குரிய முனிவர் அமர்ந்தார். ஒளிக்கதிர்கள் அவருடைய உடலிலிருந்து மேலாகப் பெருக்கெடுத்தன. அவருடைய கருத்த உடல், மஞ்சள் நிற சடைத்த முடியால் பிரகாசமாக மேகத்திலிருந்து எழும் மின்னல் ஒளிபோலத் தெரிந்தது. அருள்கொண்ட அமைதியான முகம் உள்ளத்தின் தூய்மையை எடுத்துக்காட்டி, முன்பின் தெரியாதவர் நெஞ்சத்திலும் அன்பைப் பேணும்படியான வகையில் தெளிவுடன் இருந்தது. மென்மையான, நம்பிக்கையூட்டத்தக்கதான அவருடைய விழிகள் எவரையும் வருக, வருக என வரவேற்பதாக இருந்தன.

பிறகு, அவருடைய வருகைக்கான நோக்கத்தை அறியும் பொருட்டு யுதிஷ்டிரர் கூறினார்.

''மேகங்களற்ற வானிலிருந்து மழை பொழிவது போல, தங்களுடைய இந்த எதிர்பாராத வருகை ஏதோ நல்லதொரு அலுவலை நடத்திவைப்பதற்கு அனுகூலமாக இருக்கும் எனத் தெரிகிறது. நான் இதுகாறும் செய்த ஆராதனை, நிவேதனங்கள் இன்று பலன் அளிக்கத் தொடங்கி இருப்பதாகப்படுகிறது; பிராமணர்களின் ஆசிகள், நிஜமாகின்றன. இந்த தங்களுடைய வருகையால் நான் உலகின் மிக உயர்ந்த கௌரவத்தைப் பெற்றவனாகிறேன். தங்களைக் கண்ட மாத்திரத்தில் செல்வங்கள் பொழிவதாக உணர்கிறேன்; பாவங்கள் அகலுகின்றன; வாழ்க்கை முழுமை அடைகிறது; புகழ் பரவுகிறது. தேவையானவை எது இல்லை? அமிர்தத்தைப் பொழியும் நிலவின் கிரணங்கள்கூட இந்த அளவுக்கு என் கண்களுக்கு இதம் அளிப்பதாக இல்லை. ஆனால் தங்களைக் காணும் போது, அவை

சாந்தி பெறுகின்றன. நாட்டுமக்களைப் பிரிந்த என்னால் இப்போது மன அமைதிபெற்று, கட்டு அவிழ்த்து விட்டாற்போல, சுவாசம் விடமுடிகிறது. தங்கள் வருகைக்கான நோக்கத்தை வினவுவது தகாது. உலக இச்சைகள் அனைத்தையும் துறந்த தங்களுக்கு நாங்கள் எந்தவிதத்தில் உதவமுடியும்? இருந்தும், தங்களுடைய உதடுகளிலிருந்து பிரிந்துவரும் மங்களகரமான சொற்களைச் செவி மடுக்கும் காரணமாகப் பேசப் புகுந்த நான் தங்கள் உத்திரவுக்குக் காத்திருக்கிறேன்.

வேதவியாசரின் அறிவுரையும், வாழ்த்துக்களும்

வியாசர் சொன்னார்:

''இந்த உலகில் ஒருவர் புகழுக்கு ஆசைப்படுகிறார்; இன்னொருவர் தன் நண்பரிடம் வேறுபாடு இன்றி நடந்து கொள்கிறார். இவற்றில் ஐயத்துக்கு இடமில்லை. என்னைப் போன்ற துறவிகளுக்கு இவை அனைத்தும் உண்மை. இவ்விதம் இருக்க, சிறப்பாக உன்னுடைய நடவடிக்கைகள் என்னை வசீகரிக்கின்றன. பந்தபாசங்களிலிருந்து விடுபட்டவர்கள், ஆசைகளைத் துறந்தவர்கள் ஆகியோரும் நற்பண்புகளிலிருந்து பிறழ்ந்து விடுவதைப் பார்க்கிறோம். மன்னன் திருதராஷ்டிரனுக்கு நீங்களும் மக்கள் போன்றவர்கள்தானே? அவனுடைய மக்களைவிட பண்பில் உயர்ந்தவர்களாக இருக்கிறீர்கள் அல்லவா? அவ்விதம் இருக்க, உங்களைக் குறித்து அவன் கவலைப்படாமல் இருப்பது ஏன்? உலக இன்பங்களைத் துய்க்க வேண்டும் என்ற எண்ணம் அவனுடைய அறிவைத் திரையிட்டு இருக்கிறது. நிச்சயமாக அவன் துயரத்துக்கு உள்ளாக இருக்கிறான். ஏனெனில் தீயவர்களின் தொடர்பு அவனுக்கு இருக்கிறது. கர்ணன் போன்றவர்களின் யோசனை கேட்டு செயல்படுகிறான்.

எதிரிகளின் கூட்டம் நல்வழியிலிருந்து வழுவியுள்ளது. (திரௌபதி பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டபோது) நீ சலனப்படாமல் அமைதியாக இருந்தாய். துயரம் மிகுந்த நேரங்களிலும் இவ்விதம் நற்பண்புகளிலிருந்து வழுவாத உன் நடத்தை **தர்மத்தை நீ** எந்த அளவு உயர்வாக மதிக்கிறாய் என்பதைக் காட்டுகிறது. விவேகமான அடக்கம் உன் செய்கைகளுக்கு முதுகெலும்பாக உள்ளது. உனக்குத் துன்பம் அளிக்க வேண்டும் என்று எண்ணும் எதிரி தனக்குத் துன்பம் தேடுபவனாக ஆகிறான். மறைமுகமாக உனது நண்பர்கள்போல நடித்தும், அவர்கள் உன்னுடைய அறிவுத் திறனையும் வலுவுள்ள பண்பாட்டையுமே

வெளிக்கொணர உதவியுள்ளனர். இருந்தாலும், போர் தடுக்க முடியாதது; வல்லமையால்தான் நீ இழந்த நாட்டைத் திரும்பப் பெற இயலும். உன் எதிரியானவன் படைவலிமையிலும், ஆயுத பலத்தாலும் மிக உயர்ந்தவன். இவற்றில் நீ அவனைவிட உயர வழிமுறை காணவேண்டும். வெற்றித் தேவதை எப்போதும் வலிமையுள்ளவனை நோக்கிப் புன்னகை புரிகிறாள்.

யமன் வெட்கித் தலைகுனியும்படியான வலிமை கொண்ட பீஷ்மனின் கைகளில் எழும் வில்லைக் கண்டு ஓடாமல் எதிர்த்து நிற்கும் தைரியம் (உன் அருகில் உள்ளவர்களில்) எவருக்காவது இருக்கிறதா, என்ன? சினத்தால் கொதித்தெழுந்து உலகத்தையே எரித்துவிடும்படியான தழல் அம்புகளைக் கொண்டு தீ மழையைப் போரில் பொழியும் போது, யார்தான் துரோணனை எதிர்த்து நிற்க முடியும்? எவருடைய கோபம் மற்றவர்களை அச்சுறுத்தி, இதுகாறும் உணராத நடுக்கத்தை யமனுடைய நெஞ்சத்திலும் உண்டாக்கும் வலிமை படைத்ததோ, அந்த ஜமதக்னியிடம் பயின்று அஸ்திரங்களின் சக்தியை அறிந்த கர்ணனைக் கண்டதும் எவரால் எது செய்ய இயலும்?

மன்ன, மெய்யாக நீ ஒரு வரத்தைப் பெற உகந்தவன். வெற்றியின் பொருட்டு தேவர்களாலும் விரும்பப்படும் உயர்ந்த **வித்யையை** அர்ஜுனன் பெற உதவுவதற்கு நான் வந்துள்ளேன். கடும்தவம் செய்து பகவான் பசுபதியிடமிருந்து பாசுபதாஸ்திரத்தைப் பெறுவானாகில், வல்லமையுள்ள எதிரிகளை அவனால் வெல்லமுடியும்.''

அர்ஜுனனை யுதிஷ்டிரர் அருகில் அழைத்தார். வியாசரின் அறிவுரைப்படி நடவடிக்கை மேற்கொள்ளும்படி கூறினார். அவனும் முனிவரைப் பணிவுடன் அணுகினான். அருணோதயத்தில் மடல் அவிழ்க்கும் தாமரை மலரின் மீது கதிரவனின் ஒளிக்கதிர்கள் புகுவதுபோல, பெருமைமிக்க முனிவரின் உதடுகளிலிருந்து பெருக்கெடுத்து வரும் **வித்யை** தீப்பிழம்பாக அர்ஜுனனின் வாயினுள் சென்று உச்சாடனம் செய்விக்க வைத்தது. மேலும் முனிவர் சொல்லலானார்: ''என்னால் உபதேசிக்கப்படும் இந்த **யோகம்** உனக்கு மேலும் வலிமையை அளிப்பதாக அமையட்டும். உன் பாதையில் குறுக்கிடும் எவர் பொருட்டும் ஆயுதங்களைக் கொண்டு எதிர்க்கும் இயல்பு கொண்ட நீ, இப்போது துறவறத்தைமேற்கொண்டாக வேண்டும். இந்திரனை மகிழ்விக்க வேண்டியதன் காரணமாக இந்திர கீலமலைக்குச் சென்று நீ கடுமையான தவத்தை மேற்கொள்ள வேண்டும்; ஓர் யக்ஷன் உன்னை உடனடியாக அங்கு அழைத்துச் செல்வான்.''

அர்ஜுனன் புறப்பாடு குறித்து பாண்டவர் வீட்டாரிடை சோர்வு

முனிவர் மறைந்த அதே நேரத்தில், அதே இடத்தில் யக்ஷன் ஒருவன் தோன்றி அர்ஜுனன் முன் மண்டியிட்டு வணங்கினான்.

அர்ஜுனன் புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காலை நேரத்தில் சுமேரு மலையைப் பிரகாசிக்கச் செய்த கதிரவன் மெள்ள தன் கதிர்களைச் சுருக்கிக்கொள்ள, காரிருள் விரிவடைவது போல, பாண்டவர்களின் நெஞ்சங்களில் சோர்வு புகுந்து கொண்டது. ஆனால் அவர்களுடைய இயல்பான மனவுறுதியாலும், விரோதியிடம் கொண்ட கடுஞ்சினத்தாலும், செல்லும் பணிக்கான அவசியத்தை உணர்ந்த காரணத்தாலும், அச் சோர்விலிருந்து விரைவில் அவர்கள் மீண்டனர்.

இருந்தாலும், திரௌபதி வெகுவாக வருத்தமுற்றுக் காணப்பட்டாள். தன் துயரத்தை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை. மனம் நிறையும் மட்டும் அர்ஜுனனை ஆர்வத்துடன் காணும் விருப்பம் கொண்டு அவள் இருந்தாலும், பனித்திவலைகளால் மூடப்பட்ட தாமரை மலர் போன்ற அவளுடைய கண்களில் கண்ணீர் மல்கி இருக்க, அக்கண்ணீர் பெருக்கெடுத்தால், அவனுக்கு அது கேட்டை விளைவிக்கும் என்பதால், இமைகளை முழுதும் திறக்க மாட்டாமல் இருந்தாள். ஆகையால் ஆவல் நிரம்பிய ஆசைப் பார்வையைப் பெற்ற அர்ஜுனன் அதைப் பயணத்துக்கான அனுமதி என்பதாக ஏற்றுக்கொண்டான். மனதை அடக்க மாட்டாதவளாக, கண்ணீரை மட்டும் கட்டுப்படுத்தியவளாக திரௌபதி குரல் அடைக்கக் கூறினாள்:

''தாங்கள்தான் எங்கள் ரட்சகர்; எதிரிகளால் பறிக்கப்பட்ட பெருமையைத் திரும்பப் பெற்று வர இருக்கிறீர்கள். தவம் செய்து வெற்றியை ஈட்டாதவரை தங்கள் மனதைத் தளரவிட்டுத் தாங்கள் எங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. ஏனென்றால், எந்தவொரு பணியை மேற்கொள்ளும் பொழுதும் மனவுறுதி முன் நிபந்தனையாகக் கருதப்படுகிறது. சபை நடுவே நான் பட்ட அவமானம் மூத்தோர்களாலும், மன்னர்களாலும் குடும்பத் தகராறு என்று கருதப்பட்டாலும், இம் மாநிலத்தை போர்த்தி மறைத்திருந்தது போன்ற தங்களுடைய புகழை இறக்குவதில் அது வெற்றி கண்டது. தங்களுடைய கீர்த்தி இருந்த இடம் தெரியாமல் அத்தகைய காட்டுமிராண்டிச் செயலால் அழிக்கப்பட்டு விட்டது. இப்போது நினைத்துப் பார்த்தாலும் மனவேதனை தருவதாக இருக்கிறது: அவ்வனுபவம் குறித்துச் சொல்வதைக் காட்டிலும் சொல்லாமல்

இருப்பது சிறந்தது. இன்று அது கடந்தகாலச் செயல். ஆனால் தவிர்க்க முடியாத தங்களுடைய இந்தப் பிரிவானது அதே போன்ற வேதனையை மீண்டும் தருவதாக உள்ளது.

தங்கள் பேராண்மை புண்படுத்தப்பட்டிருக்கிறது. முறிந்த தந்தங்களைக் கொண்ட யானை போன்று இருக்கின்றீர்கள். விரோதியின் செயலால் தங்கள் வீரம் திரையிடப்பட்டுள்ளது. மழை காலத்து விடியல்வேளை மேகங்களால் வானம் கருத்திருப்பதைப் போன்று காணப்படுகிறீர்கள். தங்களுடைய பெருமை அனைத்தும் மறைந்து தாங்கள் வாழ்க்கையை தலைகுனிந்து மேற் கொண்டுள்ளீர்கள். நினைத்துப் பாருங்கள். துச்சாதனனால் என் தலைமுடி மாசுபடுத்தப்பட்டிருக்கிறது. என்னைக் காப்பவர் யாருமில்லை. விதியை நோவதைத் தவிர, என்னால் வேறு ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். இவை அனைத்தும் தங்கள் புகழையும், தீரத்தையும் களங்கப்படுத்துகிறது அல்லவா? தாங்கள் அதே அர்ஜுனன்தானே?

உண்மையான **க்ஷத்திரியன்** எனப்படுபவன் ஆபத்துக் காலங்களில் நல்லனவற்றைக் காப்பவன்; உண்மையில் **கார்முகா** (வில்) என்பது போரின் போது பயனுள்ளதாக இருப்பதுதான். ஆனால் இவற்றின் சிறப்பை உணராது இவ்விரண்டையும் பொருளற்றுச் சுமப்பவன் நடத்தை தவறியவனாகிறான். சிங்கத்தின் பிடரிமுடிகளைத் தடவிக் கொடுக்கும் யானைகள் எதிர்பாராத நேரங்களில் அதனால் தாக்கப்படுவது போல, எச்சரிக்கை இன்மையால் தாங்கள் தோல்வி அடைகிறீர்கள். (வலிமை இன்மையால் அல்ல.) ஆனால் நாள் என்பது சூரியனை அடைந்து பகல் என்னும் பெருமையைப் பெறுவதுபோல, தகுந்த நபர் என்று தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த உன்னதப் பணி தங்களிடம் தரப்பட்டிருக்கிறது. தங்களுடைய திறமையால் மட்டுமே இப்பணி சிறப்பாக, வெற்றிகரமாக முடிக்கப்படுமாகில், அரசவைகள் அனைத்திலும் தங்களுடைய பெயர் ஆண்மைக்கும், ஊக்கத்துக்கும் போற்றுதலுக்கும் இலக்காகி, முன்னும்பின்னும் எக்காலத்திலும் இவ்வித நிகழ்ச்சி நடந்தது இல்லை எனக் கருதப்படும். இயல்பாகத் தாங்கள் தங்களிடம் அன்பு கொண்டவர்களிடத்திலும், உறவினர் களிடத்திலும் கவலை கொண்டவராக இருக்கிறீர்கள். ஆனால் அத்தகைய கவலை தங்களுக்குத் தேவையில்லை. தேவர்களின் தலைவரான இந்திரன் தடைகள் அனைத்தையும் நீக்கித் தங்களுடைய வெற்றிக்கு நிச்சயமாக வழிகாட்டுவார். ஆகையால் முனிவரின் அறிவுரைப்படி நடந்து கொள்ளுக; தாமதமின்றிச் செயலாற்றுக. நம் நம்பிக்கைகள் அனைத்தையும் நிதர்சனமாக்குக. தங்களுடைய

லட்சியம் நிறைவேற்றப்பட்டு, தாங்கள் வெற்றிவாகை சூடித் திரும்பும் வேளையை எதிர்பார்த்து நான் ஆவலுடன் காத்திருப்பேன். வந்ததும் தங்களை மார்புடன் இறுகத் தழுவி அணைத்து என் மகிழ்ச்சியைத் தெரிவிப்பேன்.''

அர்ஜுனன் புறப்படுகிறான்

திரௌபதியின் சொற்களைக் கருத்துடன் காது கொடுத்துக் கேட்ட அர்ஜுனன் மனதில் பழைய அவமானங்கள் நினைவுக்கு வரவும், கோபத்தால் முகம் சிவக்க, வடபகுதியில் பிரகாசிக்கும் கதிரவன் போலக் காணப்பட்டான். விரோதிகள் தன் எதிரே இருப்பதாக எண்ணிக் கொண்டான் போலும். சாதாரணமாக அருள்கொண்ட முகத்தினனாக இருப்பவன் அப்போது அச்சமுறுத்துபவனாகவும், எவரும் எதிரே நிற்க முடியாதவனாகவும் இருந்த அந்நேரத்தில் குலப்புரோகிதரான தௌம்யர் அர்ஜுனனிடம் அவனுடைய அஸ்திரங்களை மந்தரித்துக் கொடுத்தார். (காண்டவ வனத்தை எரித்த காலத்தில்) இந்திரனின் வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்டுக் காயமடைந்த அவனுடைய உடல் தழும்புகள் இப்போதைய தேஜஸால் மறைக்கப்பட்டதாக ஆயிற்று. பொன்னாலும் மணிகளாலும் பதிக்கப்பட்ட அவனுடைய அம்புறாத் தூணி நட்சத்திரங்கள் துலங்கும் விண்வெளியாகக் காணப்பட்டது.

யக்ஷன் காட்டிய பாதுகாப்பான வழியில் அர்ஜுனன் நடந்தான். அதேபோதில் துவைத வனத்தின் துறவிகள் கண்ணீர் பெருக்கினர். அச்சமயம் துந்துபிகள் முழங்கின. வானவர்கள் மலர் பொழிந்தனர். அனைத்துக் கேடுகளிடமிருந்து தான் விடுதலை பெறுவோம் என்பதை உரக்கத் தெரிவிப்பதாக, சமுத்திரமானது பெருமகிழ்ச்சியுடன் புரளும் அலைகளால் பூமியைத் தழுவியது.

இலையுதிர்காலத்தின் வனப்பு

குடிலை விட்டு வெளிவந்ததும், இலையுதிர் காலத்தின் முழுவனப்பும் தன்னைச் சூழ்ந்துள்ளதை அர்ஜுனன் கண்டான். முதிர்ந்த தானியங்கள் நிரம்பி மஞ்சள் பூத்துக் காணப்பட்ட நிலமங்கை கூவும் அன்னப்பறவை கூட்டத்தால் சூழப்பட்ட குமரியாகச் சிரித்து மயக்கினாள். பழங்களின் பாரம் தாங்காது சாய்ந்த ஏராளமான சாலிச் செடிகள் கிராமப்புற நிலங்களில் காணப்பட்டன. சேற்றைக் காணோம்; மாறாக, நீர் கண்ட இடங்களில் எல்லாம் தாமரைகள் மலர்ந்திருந்தன. இலையுதிர்காலம் தனது பொலிவு அனைத்தையும் அவனுக்குக் காட்டுவதாக எண்ணி அர்ஜுனன் மகிழ்ந்தான். அவற்றினிடையே

உள்ள தாமரை மலர்களைக் கண்களாகக் கொண்டு வியப்புடன் நோக்குவதாகக் காணப்பட்ட குளங்களில் வெள்ளிபோலப் பளிச்சிடும் சஃபாரி மீன்கள் துள்ளி ஓடிக் குதித்தன. காதலி கடைக்கண் கொண்டு நோக்குவதைவிட இந்த மீன்களின் மினுமினுப்பான ஓட்டம் அர்ஜுனனை வெகுவாகக் கவர்ந்தது. வயல்வெளிகளிலும் நீர்நிலைகளிலும் காணப்பட்ட கல்மாச் செடிகளின் அழகு தாமரை மலர்களின் எழிலால் மிகைப்படுத்தப்பட்டதாகத் தோன்றியது. இவ்விதமான குவியல் சிறப்புகள் யாவராலும் வரவேற்கப் படுவனவாதலால், அர்ஜுனனையும் இவை பரவசப்படுத்தின. நீர்நிலைகள் சிலவற்றில் நுரைத்தட்டுக்கள்; சிலவற்றில் மகரந்தங்களின் மிதப்பு; ஆகவே நீரைக் காணமுடியவில்லை. நிலத்தில் தாமரை பூக்குமோ என்று அதிசயப்பட்ட அர்ஜுனனிடம் துள்ளிக் குதித்த சிறு மீன் ஒன்று நீர் இருப்பதான உண்மையை நிரூபித்தது.

வளர்ந்த பயிரைப் பேணும் அதோ ஒரு வனிதை. புருவங்களுக்கு நடுவே அவள் சிறு பந்துகா மலரைத் திலகமாக வைத்திருக்கிறாள். அம்மலர் மகரந்தத் தூள்களால் பிரகாசிக்கிறது. சிவந்த அந்த மலரும், அரக்கு மெழுகினால் மேலும் சிவப்பாக்கப்பட்ட அவளுடைய மெல்லிய உதடுகளும் நிறத்தில் போட்டியிடுகின்றன. காலைநேரக் கதிரவனின் வர்ணம்போல அவளுடைய பருத்த ஸ்தனங்களில் தாமரை மலர்களின் மகரந்தத் தூள்கள் பரவிக் கிடந்தன. பெருகிய வியர்வைத் துளிகள் மேலும் அவளிடம் அழகு ஊட்டின. தவிர, நெற்றிக்கு மேலாகத் தலையில் அவள் சூட்டியிருந்த தாமரைப்பூ அவளுடைய விழிகளின் ஒளியுடன் கூடி அவளை வெகு வசீகரமாகச் செய்தன. இந்த இலையுதிர் காலம் மிகக் கோலாகலத்துடன் முடிசூடிக் கொண்டிருப்பதாக அர்ஜுனனுக்குப் பட்டது.

மாடு மேய்க்கும் பெண்களில் சிலர் பால் கறப்பதை அர்ஜுனன் கண்டான். அவர்களுடைய தலையிலிருந்து நழுவி முகத்தில் தவழும் தலைமுடிகள் தேனீக்களாகத் தோன்றின. புன்னகை காட்டும்போது சற்றே வெளித்தெரியும் அவர்களுடைய பற்களின் ஒளி காதுகளில் ஆடும் அணிகலன்களின் ஒளியுடன் கலந்து மலர்களின் இதழ்களாகத் தெரிந்தன. காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்களால் தீண்டப்பட்ட அவர்களுடைய முகங்கள் தாமரை மலர்கள் போலக் காணப்பட்டன. மூச்சு விடுவதை அவர்கள் சற்றுநேரம் நிறுத்தியபோது, அவர்களுடைய உதடுகள் துடித்தன. கொடிகளில் ஓரிரு இலைகளின் நடுக்கத்தைப்போல அவர்கள் அச்சமயம் வெகு எழிலுடன் காணப்பட்டனர்.

மேய்ந்த பசுக்கள் இருட்டத் தொடங்கியதும் திரும்பத் தொடங்கின. ஆனால் அவற்றால் விரைவாக நடக்க முடியவில்லை. தங்கள் கன்றுகளைக் காணவேண்டும் என்ற விருப்பத்தால், அவற்றின் மடிகளிலிருந்து தானாகவே பால் தாரையில் பெருகிற்று. தன்னை நிகர்த்த எதிரியான மற்றொரு காளையை வென்று விரட்டிய ஒரு காளைமாடு உரத்துக் கத்தியபடி ஆற்றின் கரையைத் தன் கொம்புகளால் குந்தித் தகர்த்து, தனது பருத்த உடலின் பெருமை கொண்டதாகத் தறிகெட்டு ஓடியது. மத்துகளைக் கொண்டு கடையும் பால் மேன்மேலும் பொங்கி எழுந்து முரசின் ஓசைகளை எழுப்பின. அவ்வோசைகளைக் கேட்ட மயில்கள் மருண்டன.

இக்காட்சிகளைக் கண்ட அர்ஜுனன் மெள்ள மகிழ்ச்சியுடன் நடந்தான்.

யக்ஷனின் பாராட்டு

அந்நேரத்திய சூழ்நிலை யக்ஷனைப் பேசவைத்தது. பேசச் சொல்லி அர்ஜுனன் கேட்கவில்லை. இருந்தாலும் விவரங்கள் அறிந்த ஒருவன் அந்நேரத்தில் பேசாமல் இருக்க முடியாது. இப்போது அவன் சொன்னான்:

''தெளிந்த நீராலும், நீரை இறக்கி வைத்த மேகக்கூட்டங்களின் நற்பேறாலும், விளைந்துள்ள தானியங்களைக் கொண்ட நிலத்தாலும் உனக்கு இந்த இலையுதிர்காலம் வெற்றியுடன் கூடிய பெருமையை சேர்ப்பதாக இருக்கட்டும். பறந்து திரியாத வெண் அன்னப் பறவைகளின் வரிசை; வண்ண வண்ண வானவில்களைக் கொண்ட சமீபத்திய கருத்த மேகக் கூட்டங்களின் அசைவற்ற காட்சி; இந்த நிலைகளில் இலையுதிர் காலத்தில் இந்த ஆகாயம் வசீகரிப்பதாக உள்ளது. உண்மையில் இயல்பாகவே அழகுள்ள ஒரு பொருளுக்கு ஆபரணங்களால் அணி செய்வது பொருத்தமில்லை. மயில்களின் கத்தல் கவர்ச்சியை இழந்துள்ளன; அவை காதுகளைத் துன்புறுத்துகின்றன. ஆகவே அன்னப்பறவைகளின் காட்டுத்தனமான கூவலுக்குக் காதுகள் திரும்புகின்றன. நிகரற்ற திறமைக்கு மதிப்புத் தரப்படுகிறதே தவிர, பரிச்சயமானவை ஒதுக்கப்படுகின்றன. வயல் ஓரங்களில் மலர்ந்திருக்கும் தாமரைப் பூக்களின் நறுமணத்தை முகருவதுபோல தானியக் கதிர்கள் முதிர்ந்த நிலையில் தலைகுனிந்து காணப்படுகின்றன. தாமரைக் கொடிகளின் பசுமை, தாமரை மலர்களின் சிவப்பு, கல்மாவின் முன்நுனி மஞ்சள் இந்த வண்ணங்கள் அனைத்தையும் கொண்ட நீர்நிலை வானவில்லாகக் காட்சி அளிக்கிறது. என்னே எழில்! பனித்துளிகளால் ஆகாயவெளி நிரம்பி

குளுமை தருகிறது. கண்களைப் பறிக்கும் மின்னல் வீச்சுக்களைக் காணோம். மேகங்களின் வெண்பகுதி வெப்பத்தைத் தடுக்கிறது. தாமரை மலர்களின் நறுமணத்தைக் கொண்டு வரும் காற்று மேலும் இன்பம் ஊட்டுவதாக உள்ளது. ஆனந்தமாகக் கூவிக்கொண்டு அன்னங்கள் எல்லாத் திசைகளிலும் பறக்கின்றன. இங்குள்ள ஒவ்வொரு பகுதியும் இதனால் தங்களுக்குள் ஏதோ பேசி மகிழ்வதாகப்படுகிறது.

குயில்களின் கூவலைவிட மாடுகளை மேய்க்கும் சிறுமியரின் பாடல்கள் வெகு இனிமையாக உள்ளன. இப்பாடல்களின் மயக்கத்தில் மான்கள் மேய்வதை மறந்து நிற்கின்றன. தானியக் கதிர்கள் நிறைந்த வயல்களின் பக்கம் அவை செல்வதாகக் காணோம். கல்மா கதிர் எனப்படுபவன் தாமரை மலரின் மீதாகத் தன் தலையைச் சாய்க்கிறான். அது அவனை அலட்சியப்படுத்துகிறது. ஆகவே, அவன் மஞ்சள் நிறத்தினனாக வெளிறி, காதலியைப் பிரிந்த சோகத்தோடு காணப்படுகிறான். காவலர்களால் விரட்டப்படும் விஷமிகளின் கும்பல் சிதறி ஓடுவதுபோல, தாமரை மலர்களின் மகரந்தங்களாலும், குளுமையான பனித்துளிகளாலும் கனத்துக் கிடக்கும் தேனீக்களின் கூட்டம் வீசும் காற்றினால் அலைக்கழிக்கப்படுகின்றன. சிரீஸா மலர்களின் மென்மையைத் தம் உடல்களில் கொண்ட கிளிகள் மஞ்சள் வர்ண கல்மா கதிர்களைத் தங்கள் பவளம்போலச் சிவந்த அலகுகளில் தாங்கிப் பறப்பது, வானவில்லின் அழகை அவை திருடிச் செல்வதாக எண்ணச் செய்கின்றன.

பெரியமலை எதிர்ப்படுகிறது

மாபெரும் ராட்சஸத்தனமான வெண்மேகம் போல கதிரவனின் ஒளிக்கதிர்களையும் தடுத்து நிறுத்தும்படியான மிகப் பெரிய இமயமலையைத் தன் எதிரே அர்ஜுனன் கண்டான். காட்டு மரங்கள் அடர்ந்த பள்ளத்தாக்குகள் மலையின் அடிவாரத்தில் கறுத்துக் காணப்பட்டன. முடியில் காலம் காலமாகக் கூடிக்கொண்டே செல்லும் வெண்பவனிக் குவியல். நீலநிற ஆடையுடன், ஆனால் கையில் வெளிர் சிவப்புநிற மதுக்கிண்ணம் இன்றி, ஹலாயுதனாக அது அர்ஜுனனுக்குத் தோன்றியது. "எதற்காக இது இத்தனை உயரம் வளர்ந்திருக்கிறது? மேருமலையை விட உயரவேண்டும் என்ற எண்ணத்தாலா? அல்லது உலகத்தின் தொலைவில் உள்ள நான்கு பக்கங்களையும் பார்த்துவிட வேண்டும் என்ற விருப்பமா? இல்லை, வானை அளாவ வேண்டும் என்ற பேராசையா?" என்பதாக வெல்லாம் அர்ஜுனன் அம்மலையைக் கண்டு அதிசயித்தான்.

மலையின் ஒருபுறத்தில் சூரியனின் ஒளிக்கதிர்கள் பிரகாசித்தன; மறுபக்கம் எப்போதும் ஆழ்ந்த இருளில் இருப்பதாகக் காணப்பட்டது. ஆகவே, யானைத் தோலை இடையில் அணிந்து தன்னுடைய உரத்த சிவப்பினால் முன்னுள்ள இருளை அகற்றும் பரமசிவனைப் போல மலை காட்சி அளித்தது. மானிடர், கந்தர்வர், யக்ஷர், தேவர் அனைவரும் அங்கிருந்தனர். ஆனால் ஒருவர் பாதையில் மற்றவர் குறுக்கிடுவதாக இல்லை. தன்னுடைய பராக்கிரமத்தை வெளியே காட்டும் பொருட்டு பரமசிவன் அங்கு ஒரு சிறு உலகத்தை சிருஷ்டி செய்திருந்தார். ஆதிசேஷனின் வெண்ணிறம் போன்ற அதன் சிகரங்கள் விண்ணைத் தொட்டன. மலை விளிம்புகளில் பொன்வரிகள் தோன்றின. ஆகவே பார்ப்பதற்கு அந்த மேக விளிம்புகள் இலையுதிர்காலத்து மேகங்கள் மின்னல் கீற்றுக்களுடன் விளங்குவன போலக் காணப்பட்டன. மழை கொட்டித் தீர்ந்ததும், மேகங்கள் வெண்ணிறமாக மாறின. இப்போது மின்னல்களும் இல்லை; இடிகளின் கர்ஜனையையும் காணோம். அம்மேகங்கள் மலை விளிம்புகளில் தேங்கி நின்ற இந்த வேளையில் புதிதாக முளைத்த இறக்கைகளாகத் தோன்றின.

அப்போதுதான் பூத்த ஜப மலர்கள் கெம்புக் கற்களைப் போல சிவந்து பிரகாசிக்கத் தொடங்கின; அவற்றின் ஒளிக்கதிர்கள் பொன்னிறப் பள்ளத்தாக்குகளில் பிரதிபலிக்க, அங்கே தீப்பிழம்பான அந்திநேர மயக்கத்தைத் தோற்றுவித்தன. கதம்ப மலர்களின் செண்டுகள் நிறைந்து அந்த பிரம்மாண்டமான இமயமலைப் பகுதி விளங்கியது. சோலைகளாக அடர்ந்து சொட்டுச் சொட்டாகக் குளிர்ந்த பனிநீரைப் பொழியும் தமழும் மரங்கள் அங்கிருந்தன. சோலைகளிடையே யானை மந்தைகள் சுற்றித் திரிந்தன. ரத்தினக்கற்கள் பிரகாசிக்கும் சிகரங்கள்; மலர்க் கொடிகள் விதானமாக வளர்ந்துள்ள மலை குகைகள்; தாமரை மலர்கள் நிறைந்த ஓடைகள்; மலர்கள் பூத்துக் குலுங்கும் மரங்கள். தேவ கன்னிகையர் குளிக்கும்போது, அவர்களுடைய பின்னழகின் தழுவலில் ஓடைகள் கிளர்ச்சி அடைந்தன. கொடிகளிடையிலும், பகுள மலர்கள் மீதும் படுத்திருக்கும் பாம்புகள் எங்கும் நெளிந்து திரிந்தன.

என்றென்றும் தூய்மையாக, மலர்ந்த தாமரைகள், அன்னப்பறவை கூட்டங்களுடன் காணப்படுகின்றன. மானசரோவர் ஏரி; இறைவனார் பரமசிவனின் பணியாளர்களான பிரமதர்களின் இடம்; அவ்வப்போது ஏதாவது ஒரு காரணம் கொண்டு பார்வதியுடன் தகராறு செய்துகொள்ளும் பரமசிவன் ஆகியோருக்கும், அனைத்துக்கும் வாசஸ்தலமாக உள்ளது இந்த மாமலை. பலவிதமான மூலிகைகளாலும், செடி கொடிகளாலும் நிரம்பிய இந்த மலை

தன்னுடைய இயல்பான தேஜஸ்ஸால் தொலைவிலுள்ள கிரகங்கள் மட்டுமல்லாது, தேவதேவதைகள் உலாவரும் ரதங்கள் மீதும் ஒளி பாய்ச்சிப் பிரகாசப்படுத்துவதாக இருக்கிறது. இப்படி பிரகாசப் படுத்துவதானது, சிவன் திரிபுரம் எரித்ததை ஒவ்வொரு இரவும் பிரமாதர்களுக்குக் கவனப்படுத்துவதாக உள்ளது. மலைமுகடுகளைக் கடந்து செல்லும்போது, கங்கையாறு கற்பாறைகள் மீது மோத, அதனால் எழும் நீர்த்திவலைகள் யாரோ ஒருவர் வெண்ணிறமான **'சாமரம்'** விசிறியைப் பிடித்திருப்பதாக மயக்கம் ஏற்படுத்துகிறது.

மாமலை குறித்து யக்ஷன் விவரிக்கிறான்

வியப்பினால் அர்ஜுனன் பேச்சற்றவன் ஆனான். ஆனால் மகிழ்ச்சி கொண்ட யக்ஷன் பேசத் தொடங்கினான். இவ்விதமான ஆனந்த நேரங்களில் பேச்சு வரவேற்கக் கூடியதாக இருக்கிறது. (யக்ஷன் கூறலானான்:)

''வெண்பனி மிகுந்த இமயமலையின் எண்ணற்ற சிகரங்கள் விண்வெளியை பல கூறாகப் பிரிப்பதாக உள்ளன. மக்கள் சேர்த்துள்ள பாபச் செயல்கள் மலையைப் பார்த்த மாத்திரத்திலேயே அகல்கின்றன. இயற்கையின சத்திய ஆற்றல் மிகுதியால் புகுந்து நெருங்க முடியாத மலையின் உட்பகுதிகள் எவராலும் கண்டு உணரப்படாதவை. குபேரனால்கூடப் பெற முடியாததும், நல்லோர், நற்பேறு பெற்றோர் ஆகியவர் மட்டுமே அணுகக்கூடியதுமான செல்வங்களைக் கொண்டுள்ள இந்த மலையைத் தன்னிடம் வைத்திருக்கும் பூமியானது வானுலகம், மற்றும் பாதாள லோகம் ஆகியவற்றையும் மீறி பெருமைக்கு உள்ளாகிறது. ஏன், இந்த மூன்று உலகங்கள் சேர்ந்தாலும் இந்த மலைக்கு ஈடாகா. ஏனெனில், அறிவுக்கு எட்டாத, நினைத்துப் பார்க்க முடியாத மாட்சிமை கொண்ட இறைவனார் சிவபெருமானின் நிரந்தர வாசஸ்தலமாக இது இருக்கிறது. பந்தபாசங்களிலிருந்து விடுபட்டு, மானிடத்தின் பேரின்ப விடுதலைக்குப் பாடுபடும் பெரியோர் தங்கள் லட்சியத்தை அடையவும், மெய்யறிவைப் பெறவும் இம்மலை தகுந்த இடம்.

செம்பஞ்சுக் குழம்பால் எழுதப்பட்ட பாதங்கள் பட்டு சிவப்பாகியதும், காதல் களியாட்டத்தால் கலைந்து நசுங்கிய மலர்கள் கொண்ட தேவமகளிரின் பஞ்சணைகள் இதோ காணப்படுகின்றன. செங்கோல் ஓச்சும் மன்னனிடம் அனைத்துச் செல்வங்களும் சென்று அடைவதுபோல, உலகமே போற்றும் இந்த மலையிடம் பலவகை மூலிகைகளும் வளர்கின்றன. இந்திரலோகத்து ஐராவதம் போன்ற யானைகள் தங்களுடைய நெற்றிகளைப் பருத்த அடிமரங்களில்

தேய்ப்பதால், பெருகும் மத்தக நீரின் நறுமணத்தை உணர்ந்த தேனீக்கள் கூட்டம் இங்கு படையெடுக்கிறது. வசந்தகாலம் இல்லாவிடினும், மாம்பூக்களின் மணத்தைத் தருவதான அந்த மத்தக நீர் குயில்களை மயக்கிக் கூவச் செய்கிறது. இங்கே கொடிகளின் விதானமே வீடுகள்; ஒளிதரும் மூலிகைகளே விளக்குகள்; ஹரிச்சந்தனத் தழைகளின் குவியல்களே பஞ்சணைகள்; காதல் லீலைகளில் ஈடுபட்டதனால் நேரும் சோர்வை தாமரை மலர்களைத் தடவிவரும் மென்காற்று போக்குகிறது; ஆகவே தேவகன்னிகையர் வானுலகம் திரும்ப விரும்புவதில்லை.

அன்னை பவானியின் திருக்கரத்தை இந்த மலைமீது இருந்து கொண்டுதான் வியர்வை பெருகும் தன் கையால் பவன் (சிவன்) பற்றினார். சூரியனின் ஒளிக்கதிர்களால் பிரதிபலித்து, நீலோற்பல ரத்தினக் கற்களின் நீல ஒளி கலந்து நடுப்பகலில் ஏது இந்த நீல ஒளி என மயங்கச் செய்து, அன்னப் பறவைகளுடைய வெண்ணிறத்துடன், ஸ்படிகங்களாலும், வெள்ளியாலும் ஆனவை போன்ற தோற்றத்தை மலைச்சரிவுகள் தருகின்றன. வகை வகையான ஸ்படிகங்களிலிருந்து விதவிதமான ஒளிக்கற்றைகள் மேலெழுந்து ஆகாயத்தில் சூரிய ஒளிக்கதிர்களுடன் கலக்கின்றன. இதனால், சூரியன் ஆயிரம் ஒளிக்கதிர்களைக் கொண்டது என்கிற மக்களிடையே உள்ள தவறான நம்பிக்கை ஆட்டம் காண்கிறது.

இந்த மலையில் சூரியனின் பாதையை மறைப்பதான, மாலைப் பொழுதை விரைவில் வரவழைப்பதான, உயர்ந்த கதவுகளையும் சுவர்களையும் கொண்டு குபேரனால் பரமசிவனின் மகிழ்ச்சிக்கான கைலாயம் என்னும் நகரம் நிறுவப்பட்டிருக்கிறது. ரத்தினக் கற்களிலிருந்து பெருகிவரும் ஒளிக்கதிர்கள் உயர்ந்த சுவர்போல எழுந்து நிற்க, காற்று அதனிடையே புகுந்து செல்லும்போது, அது சுவரல்ல என்ற உண்மை வெளிப்படுகிறது. என்றைக்குமே வாடிக் கருகாத புதுப் புல் வகைகளால் எழில்மிகுந்த இந்தப் பிரதேசம் போர்த்தப்படுகிறது. தாமரை மலர்க்கொடிகள் தங்கள் பசுமையை இழப்பது இல்லை. வண்ண வண்ண மலர்களைக் கொண்ட மரங்களின் இலைகள் வாடுவதில்லை. அப்போதுதான் பிறந்த கிளிக்குஞ்சின் பச்சை நிறத்தை நினைவூட்டும் மரகதக் கற்களின் ஒளிக்கற்றைகளை புற்கள் என்று எண்ணி நெருங்கும் மான்கள் ஏமாந்து திரும்புகின்றன. இப்போது அந்த பச்சைநிற ஒளிக்கற்றைகள் சூரிய ஒளிக்கதிர்களுடன் கலந்து மேலும் அகண்டு பெருகுகின்றன. மலரும் தாமரைப் பூக்களிலிருந்து குவியலாக எழும் மகரந்தத் தூள்கள் விண்வெளி எங்கும் காற்றால் பரப்பப்பட்டு, வட்டவடிவம் கொண்டு, அழகிய பொன்னிறக் குடையாகக் கவிழ்கிறது. வெண்ணிறமான வளைவு

கொண்ட உடல் பிரகாசிக்க, சிவபெருமானின் வாகனமான நந்தி வேடிக்கையாகக் கரையை முட்டித் தள்ளி தகர்த்தபடி ஒரு மலைச் சிகரத்திலிருந்து மற்றதற்குச் செல்கிறது; அப்படிச் செல்கையில் கன்னியருக்கு அது நிலவு போல காட்சி தருகிறது. இப்போதைய இலையுதிர் காலத்திய மேகங்கள் நீர் அற்று, சிறுசிறு பஞ்சுப் பொதிகளாகக் காண, வானவில்கள் வண்ணங்கள் கொண்டு முழுத்தோற்றம் பெற முடியாதவையாக இருக்கின்றன. ஆனால், இந்தக் குறைபாடு சிகரங்களில் காணும் ரத்தினக் கற்களின் ஒளிக்கதிர்களால் சமன் செய்யப்படுகின்றது. காரிருள் இந்த மலையில் கவிழ இயலாது; ஏனெனில் சிவபிரானின் சடையை அலங்கரிக்கும் பிறை நிலவு வெளேர் என்று தேய்பிறை நாட்களிலும் காடுகளில் ஒளி கொடுக்கிறது. பொன்னிறமான குகைகள் கொண்ட, பொன்னிற ஆடைகள் அணிந்தாற்போன்ற மரங்கள் உள்ள இம்மலை உன் தந்தையான இந்திரனுக்கு உகந்தது.

இயல்பாக நீ சாதுவானவனாக இருந்தாலும், மாமுனிவர் வியாசர் அறிவுறுத்தியபடி நீ க்ஷத்திரியரின் வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். சோர்வற்று தவத்தை மேற்கொள்ளும் அதே நேரத்தில் உன் கையில் ஆயுதங்கள் இருக்கட்டும். ஏனெனில் உயர்ந்த பணிகளில் ஈடுபட்டிருப்போரையும் எதிரிகள் துன்புறுத்தத் தயங்குவதில்லை. உன் உணர்வுகள் பழக்கப்படாத புரவிகள் போல தெறிகெட்டு அலையாது இருக்கட்டும். துயரம் சூழும் வேளைகளில் பரமசிவன் உனக்கு ஊக்கம் அளிப்பவராக இருக்கட்டும். உலகங்களை ரட்சிக்கும் தேவர்கள் உன் தவ வலிமை, உயர வழிவகுத்து உன் உன்னதப் பணி வெற்றிபெற உதவுவார்களாக.''

தனித்து விடப்பட்ட இந்திரன் இந்திரகீல மலையை நோக்கிச் செல்கிறான்

இவ்விதமான இனிய சொற்களைக் கூறிய யக்ஷன் அதே போதில் மறையவும், என்ன செய்வது என்பது புரியாதவனான அர்ஜுனன் சிந்தனையில் மூழ்கினான். ஏனெனில் ஒரு நண்பனுடைய பிரிவு எப்போதுமே துயர் அளிக்கக்கூடியது.

கடைசியாக அர்ஜுனன் இந்திரகீலமான பகுதியிலேயே தங்குவது என முடிவு எடுத்தான். கருடன் மீது விஷ்ணு ஆரோகணிப்பது போல, இந்திரகீலத்தின் பொன்னிற முகடுக்குச் சென்றான். அவனுடைய விழிகள் கங்கை நதியை நோக்கின. அரசவைப் பாணர்களின் பாடல்களைப் போன்ற மரங்களின் சலசலப்பு ஒலியும், தேனீக்களின் ரீங்காரமும், அவனை வரவேற்ற அதே சமயத்தில் காற்றில் ஆடும்

கிளைகளின் நுனிகளிலிருந்து மலர்கள் அவன்மீது பொழிந்தன. கங்கை நீரின் அலைகள் மீது தவழ்ந்து வந்த காற்று தாமரை மலர்களின் மகரந்தங்களுடன் கூடி, குளுமையாக வீசி அவனை அன்புக்கினிய நண்பனைப் போலத் தழுவியது. உயர்ந்த கரையில் உள்ள கற்பாறைகள் மீது ஆற்றுநீர் மோதுவதால் எழும் கர்ஜனை கேட்பதற்கு விருப்பமுள்ளதாக இருந்தது. அக் கர்ஜனையோடு இணைந்த நீர்ப்பறவைகளின் கூச்சல் முரசு அறைவதுபோல ஓசையைக் கிளப்பியது. துயரமான வேளைகளில் பலவீனமானவர் வலிமை கொண்டவர் எதிரே தலை தாழ்த்தி நிற்பதைப் போல, கரையிலுள்ள நாணல் புற்கள் நீரினுள் அமிழ்ந்து வெளியே உயர்ந்திருக்கும் தேவதாரு மரங்கள் முன் தலை தாழ்த்தி இருந்தன. இக்காட்சி அர்ஜுனனுக்கு ரம்மியமாக இருந்தது. தாமரை மலர்களின் மகரந்தத் தூள்களால் சிவந்தனவையும், நீர் அலைகள் மீது மிதப்பவையும், இடைவெளி அற்று நீரில் நெருங்கிப் பரந்து கிடப்பவையும், கங்காதேவியின் ஸ்தனங்களை மறைப்பதுபோலக் காணப்பட்டவை யுமான எண்ணற்ற அன்னப்பறவைகள் அவனுடைய கண்களுக்கு விருந்தாக அமைந்தன. நீண்ட தந்தங்களைக் கொண்ட பெரிய யானைகளால் உடைக்கப்பட்ட கரைப் பகுதிகள் மத்தக நீர் பெருக்கினால் கவரப்பட்ட தேனீக்கள் சூழ்ந்து இருப்பதைக் கண்ட அர்ஜுனன் கரைமீது தனி அக்கரை கொண்டான். ஏனெனில் துன்பம் நேரும் காலங்களிலும் பெரியோர் பெரியோர்களாகவே இருக்கின்றனர். பொன்னிறப் பள்ளத்தாக்குகளின் அருகே எழுந்த உயர்ந்த நீர் அலைகளும் பொன்னிறமாக மாறின; பள்ளத்தாக்குகளில் ஆண் துணையை இழந்த சக்கரவாகிப் பறவை வருந்தி துயர்கொண்டு அழுவதான கூவல் அர்ஜுனனுடைய இதயத்தைத் தொட்டது; உண்மையில் மெய்க்காதல் அனைவராலும் போற்றப்படுகிறது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல, எண்ணற்ற விதவிதமான வர்ணங்கள் கொண்ட ஜ்வாலை நீரினுள் என்னென்ன வகையான நவரத்தினக் கற்கள் மறைந்து குவிந்திருக்கின்றன என்பதை உணர்த்துவதாக அர்ஜுனன் அறிந்தான். காற்றினால் உயர வீசி எழும் கேதக் கொடிகளில் நுனிமுனைகள் போன்று வெண்மையானதும், கற்பாறைகள் மீது மோதியதால் நேர்ந்த அலைகளின் நுரைகளோடு கூடிய ஓசை அந்த தெய்வீக நதி நகைப்பதாக எண்ணச் செய்தது. மயிலின் இறகுகளில் உள்ள நீலவர்ணத் திட்டுகள் போன்று மத்தக நீரின் திவலைகள் மிதந்து, நீரில் இறங்கும் யானையைக் காணும் பொருட்டு நதி ஆயிரம் கண்களைத் திறந்து கொண்டதாக தோன்றியது. மணற்பாங்கான ஆற்றின் கரையில் பெண்ணின் இதழ்கள் போன்ற சிப்பி ஒன்றை அர்ஜுனன் பார்த்தான். உறக்கத்திலிருந்து

அப்போதுதான் விழித்து சற்றே உதடுகளை விரித்த விதமாக இருந்த அந்தச் சிப்பியுள் கண்ணீர் துளிபோல ஒளிமிகுந்த முத்து ஒன்று காணப்பட்டது. நீரின் அடிப்பாகத்திலிருந்த பவளக்கொடிகளின் மீது படிந்திருந்த நுரைக் கொத்துக்கள் காதலி ஒருத்தியின் உதடுகளுக்கு இடையே காணப்படும் பிரகாசமான பற்களைக் கவனப்படுத்தின. நீரிலிருந்து சீறி விண்வெளி நோக்கிக் கிளம்பிய பாம்பு ஒன்றை அர்ஜுனன் மிக்க அதிசயத்துடன் பார்த்தான். இலையுதிர் காலத்து மேகங்கள் விரிவடைவதைப் போல, அதன் சீறல் ஓசை எதிரொலித்துப் பரவியது. அழகிய கண்களை நினைவுபடுத்தும் மீன்கள் துள்ளிவரும் சிற்றோடைகளை அர்ஜுனன் கடந்தான். நேசம் கொண்ட, பருத்த இடை உடைய தோழியர் கங்காதேவியை சந்திக்கச் செல்வதுபோல அவ்வோடைகள் மெள்ள நகர்ந்தன.

மலைமீது ஏறி உச்சியை அடைந்த அர்ஜுனன் மரங்கள் சூழ்ந்த திடலைக் கண்டான். அம் மரங்களின் கிளைகள் மலர்கள் நிறைந்து, தரைநோக்கி வளைந்திருந்தன. அவற்றைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய மனம் அமைதி அடைந்தது. மலர்கள் பூத்துக் குலுங்கும் கொடிகள் பள்ளத்தாக்குகள் முழுதும் பரவிக் காணப்பட்டன. காடுகள் அனைத்தும் ரம்மியமாகத் தனிமை பூண்டு இருந்தன. அவனுடைய தவத்தை அங்கு தொடங்கும்படியாக இந்திரகீலமலை வருந்திக் கேட்டுக் கொள்வதாக அவனுக்குப் பட்டது. யோகாசனப் பயிற்சிகளைச் செய்து, மனதைக் கட்டுப்படுத்தி, தவத்தை மேற்கொண்டான். இவை சாதாரணமாக சாத்தியம் இல்லை எனினும், அவன் களைப்பையோ, உடல் வருத்தத்தையோ பெறவில்லை. ஏனெனில் மனதை வசப்படுத்திய ஒருவருக்கு எதுவும் கடினமானது அல்ல. அர்ஜுனன் புலன் அனைத்தையும் தன் வழிக்குக் கொண்டு வந்தான். இன்பங்கள் துய்க்கும் விருப்பத்திலிருந்து புலன்களை ஒதுக்கி வைத்தான். மெய்யறிவு பெற்று உள்ளத்தை ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடுத்தினான். உள்ளார்ந்த தியானத்தில் இருந்து கொண்டு, மந்திரங்களை பக்தி சிரத்தையுடன் உச்சரித்து, ஆகம விதிகளின்படி தலைதாழ்த்தி மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் ஆராதனைகள் செய்வித்து, தேவாதி தேவர்களின் மன்னனான இந்திரனை நெருங்க முயன்றான். இவ்விதம் தீரம், சாந்தம் இரண்டு உணர்வுகளும் அவனுள் குடி கொண்டன. அவனுடைய உடல் மரகதப் பச்சை நிறம் அடைந்தது. நித்திய விதிமுறைகளின்படி செய்த குளியலால் அவனுடைய சடையாகிப் போன தலைமுடி மஞ்சள் நிறமாக மாறியது. கதிரவனின் ஒளிக்கதிர்கள் உச்சிமீது படுவதான தமழ மரம்போல் அவன் காணப்பட்டான். அவனிடம் ஆயுதங்கள் இருந்தன; ஆனால் அவை துன்புறுத்துவதற்காக இல்லை. ஏனெனில்

அவனுடைய உள்ளம் விடுதலை பெற்ற உணர்வுடன் கள்ளம், கபடு அற்று இருந்தது. தன்னுடைய பக்தி சிரத்தையுடன் கூடிய பணியால் அவன் முனிவர்களைக்கூட வெட்கித் தலைகுனியும்படி வைத்தான். விலங்குகளும் அவனுடைய உன்னதத்தைப் புரிந்து கொண்டிருந்தன. இயற்கை அனைத்து வகையிலும் அவனுக்கு உதவியது. சாதகமாக, மெலிதாக, நறுமணம் கொண்டு காற்று வீசியது. சூரியனின் ஒளிக்கதிர்கள் தகிப்பதாக இல்லை. அவை பிரகாசமாக இருந்தாலும், உடலில் படும்போது, பரவசம் அளிப்பதாக இருந்தது. உயர்ந்த மரங்கள் தலைதாழ்த்தி கை நிறைய கனிகளை வழங்கின. படுக்கும் தரையிலுள்ள புழுதியை வானத்திலிருந்து பொழியும் நீர் அப்புறப்படுத்தியது. மெத்தென்ற பசும்புற்கள் அங்கு முளை விட்டன. உடல் இளைத்தாலும் அர்ஜுனன் மகிழ்ச்சியுடன் இருந்தான். தவத்தால் வெற்றி பெறுவதற்கான, நிச்சயமான, அனுகூல அறிகுறிகள் மலர் விரிவதுபோலத் தெரிந்தாலும் அது குறித்து அவன் ஆர்வம் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் உணர்வுகளைக் கட்டுப்படுத்திய ஒருவர் தன்நிலை இழப்பதில்லை.

இந்திரனிடம் காட்டுவாசிகள் அறிவிப்பு

குறைந்த காலத்தில், அனுஷ்டானங்களைத் தீவிரமாகக் கடைப்பிடித்ததன் காரணமாக, அர்ஜுனன் கம்பீரமும், வலிமையும் பெருக, அவனை உன்னிப்பாகக் கவனித்துவந்த காட்டுவாசிகள் அவனைப் பற்றிய கவலையால் இந்திரனிடம் தெரிவிக்கச் சென்றனர். அவர்கள் சொல்லினர்:

''மரவுரி தரித்த ஒரு மனிதன் தன்னைச் சுற்றிய இருளை விலக்கும் சூரியன் போல இருந்து கொண்டு தங்களுடைய மலையில் தவம் இயற்றுகிறான். இதனால் உலகு எங்கும் வெப்பம் உயர்கிறது. அவனுடைய இரு கைகளும் நீண்ட பாம்புகள் போல உள்ளன. மேலும், அவனுடைய வில்லானது எதிரிகள் மனதில் கிலியை உண்டுபண்ணும்படியாக இருக்கிறது. அவனுடைய தூய்மையான நன்னடத்தை முனிவர்களையும் தலைகுனியச் செய்வதாக உள்ளது. தரை புதியதான வளர்ச்சி பெற்ற புற்களுடன் கூடியதாகக் காணப்படுகிறது. விண்வெளியில் ஒரு சுத்தம். தூசுக்கள் மழைநீரால் அடித்துச் செல்லப்படுகின்றன. தங்களுடைய இயல்பான விரோத மனப்பான்மையை மறந்த விலங்குகள், குருவிடம் சீடர்கள் பயபக்தியுடன் நடந்து கொள்வதுபோல, அவனருகில் இசைந்து அமைதியாகத் தங்கி இருக்கின்றன. மலர்களைக் கொய்வதற்காக அவன் செல்லும்போது, மரங்கள் தாங்களாகவே தாழ்ந்து வளைந்து

கொடுக்கின்றன. மேலும் சொல்வது என்றால், இந்த மலைகூட தங்களிடம் எந்த அளவு விசுவாசமாக இருக்கிறதோ, அதேபோல அவனிடமும் பாசம் காட்டுகிறது. கடினமான உழைப்பினாலும் களைப்படையாத அவன், கேட்டறியாத வகையில் வலிமை பெற்றிருக்கிறான். கம்பீரமான உடல்வாகு வெற்றியை ஈட்டித் தருவதாக அறைகூவுகிறது. இயல்பாக அவன் சாதுபோல இருந்தாலும், அவனுடைய உள்ளார்ந்த பேராண்மையை உணர்ந்த உலகம் அவ்வியல்பை நம்ப மறுக்கிறது. அவன் துறவிகள் வழியில் உதித்தவனா, அரக்கனா அல்லது மன்னனா என்பது குறித்து எங்களால் எடைபோட முடியவில்லை. தயவுசெய்து மன்னித்து அருளுங்கள்; எங்களால் முடிந்த அளவு தங்களிடம் தெரிவிக்க முயன்றுள்ளோம்.''

தேவ கன்னிகையரிடம் இந்திரன் கூறுகிறான்

தன் அன்புக்கு உகந்த மகனின் பெருமைகளைக் கேட்டு இந்திரன் மகிழ்ந்தான் என்றாலும், அம் மகிழ்ச்சியை அவன் வெளிக் காட்டவில்லை. அர்ஜுனனின் மன உறுதி குறித்து அவன் ஏற்கெனவே அறிந்து வைத்திருந்தான். இருந்தாலும் ஒருமுனைப் படுத்துவதான அவனுடைய மன இயல்பைக் கண்டு அறிய இந்திரன் தேவகன்னிகையரை அழைத்து அவர்களிடம் சொன்னான்:

''பூலோகத்தில் ஒருவன் இருக்கிறான். அவனுடைய இதயம் வெகு மிருதுவானது. அது போன்ற இதயம் வேறு ஒருவருக்கு இருக்க முடியாது. மிக மெல்லியது. எந்தவிதமான சூழ்நிலையிலும் உங்களால் எவரையும் மயங்க வைக்க முடியும். சற்று தொலைவிலிருந்து பார்வையைச் செலுத்தினாலும் போதும், மயங்கி விடுவான். உங்களைத் தவிர அவனுடைய இதயத்தைத் தளர வைப்பவர் வேறு எவரும் இருக்க முடியாது. அழகு மிக்க ஒவ்வொரு பொருளில் இருந்தும் பிரம்மா சிறிது சிறிது எடுத்து உங்களை அக்காலத்தில் படைத்தார். சுவர்க்கத்துக்கு வரவேண்டும் என்று மானிடர் இச்சைப்படுத்துவதே உங்களைக் காணவேண்டும் என்பதற்காகத் தான். பல கலைகள் கற்ற கந்தர்வர்களை அழைத்துச் சென்று நீங்கள் அந்த அர்ஜுனனின் தவத்தைக் கலைக்க வழி தேடுங்கள். ஆசைகள் அனைத்தையும் துறந்த ஒருவனையும் உங்களால் வெற்றி காண முடியும். இவனும் உங்கள் வலையில் சிக்கி விடுவான். ஏனெனில் இவன் ஆசையை வென்றவன் இல்லை. ஒரு முதன்மையான காரியத்துக்காக அவன் தவம் மேற்கொண்டிருக்கிறான். எதிரியை ஒழிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். அவ் விருப்பமே அவனுடைய ஆசாபாசங்களை எடுத்துக் காட்டுகிறது. சாபம்

எதிலாவது சிக்க நேரிடும் என நீங்கள் அச்சமுற வேண்டாம். இவன் மற்ற முனிவர்கள் போன்றவன் அல்லன். மாபெரும் வீரன்; மாதரிடம் விரோதம் பாராட்ட மாட்டான்.''

இவ்விதமாகத் தங்கள் தலைவரால் அனைத்து தேவர்கள் முன்னிலையில் புகழ்ந்து கூறி கௌரவப்படுத்தப்பட்ட அக் கன்னிகையர் தங்கள் அழகும், பொலிவும் மேலும்கூட இந்திரலோகத்தை விட்டுப் புறப்பட்டார்கள். தாமரை மலர்களைப் போன்ற எழிலுடன், ஸ்தன பாரம் தாங்காது அவர்கள் சற்றே குனிந்து நடந்து செல்ல, தன்னுடைய ஆயிரம் கண்கள் கொண்டும் அவர்களைப் பார்த்து இந்திரனால் மனநிறைவு அடைய முடியவில்லை.

கந்தர்வர்களும் தேவகன்னிகையரும் அர்ஜுனனுடைய பர்ணசாலையை அடைகின்றனர்

கந்தர்வர்களின் பாதுகாப்புடன் தேவகன்னிகையர் நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதங்களிலும், யானைகளோடும் புறப்பட்டனர். பேரிகைகள் அதிர்ந்தன. அவ்வதிர்வு ரதங்களினுள் புகுந்து மேலும் உரத்து சுற்றுப்புறம் எங்கும் ஒலித்தது. எதிர்காற்றால் தங்களுடைய தாமரைக் கண்களை முழுதும் திறக்க முடியாத அந்த தேவ மாதர்கள் சூரிய வெப்பத்தால் முகத்தில் செம்மை படர, காதலன் முன் நாணத்தால் ஏற்படும் செம்மையோ என ஐயுறும்படியாக இருந்தனர். தேவர்களுக்கு உரிய விசேஷ சக்தியின் காரணத்தால் அந்த ரதங்கள் விண்வெளியில் தவறி கவிழாமல் ஓடின. அவற்றின் வேக ஓட்டத்தால், சக்கரங்கள் சுழல்கின்றனவா, அல்லவா என்ற ஐயம் ஏற்பட்டது. தேவர்களின் மாளிகைகள் போல அவை அந்தரத்தில் காணப்பட்டன. களைத்துப் போனதால் ஏற்பட்ட வியர்வை பெருகி ஓடித் தேவகன்னிகையரின் மார்பை நனைக்க, பூசப்பட்ட நறுமணச் சந்தனம் குழம்பியது; நெற்றித் திலகம் கலைந்தது. இருந்தாலும் அவ்வியர்வை நல்முத்துச் சரங்களாகத் தேங்கி அவர்களுடைய அழகை மிகைப்படுத்திக் காட்டியது. ரதங்களில் பறந்த இளம்சிவப்பு நிறக் கொடிகள் மேலும் தங்கள் நீளத்தை நீட்டி வீசுவனவாக ஆகாயத்தில் எரிநட்சத்திரம் போலவும், உரைகற்களில் சோதித்ததால் உண்டாகும் பொன்வரிகள் போலவும் வானில் நகர்ந்தன. கதிரவனுடைய தாங்க மாட்டாத வெப்பத்தைத் தாங்குவதற்கான வகையில் தேவ கன்னிகையரின் மெல்லிய உடலமைப்பு இருப்பதைக் கண்ட கந்தர்வர்கள், இறைவனின் ஆற்றல் வெவ்வேறு வகையான படைப்புகளை மேற்கொண்டாலும், அவற்றின் மேன்மைக்கும் உடல் உறுதிக்கும் உதவுகிறது என நினைத்து வியந்தனர்.

சிவந்த அணிகலன்கள் கொண்டு தேவருலக யானைகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. போர்த்தப்பட்டிருந்த ஆடைகளை பொற் சங்கிலிகள் பிணைத்தன. யானைகள் தங்கள் ஏழு துவாரங்கள் மூலமாகத் தலையிலிருந்து மத்தக நீரைப் பெருக்கின. அருணோதய நேரத்து செம்மைப் பூச்சு பெற்ற மேகத் துணுக்குகள் மழை பொழிந்தபடி மின்னல் கீற்றுகளைக் காட்டுவன போல அந்த யானைகள் காணப்பட்டன. சூரிய வெப்பம் தாங்காத இந்திரனின் படைவீரர்கள் இளங்கன்னியின் நீண்ட பின்னலைப் போலக் காணப்படும் மந்தாகினி ஆற்றின் கரைக்கு விரைந்தனர். மது அருந்தி மயங்கிய தேனீக்கள் தாமரை மலர்களின் மகரந்தத் தூள்களைத் தாராளமாக விண்வெளியில் பரப்பிவிட, அவை காற்று மண்டலத்தை நறுமணத்தால் நிரப்பின. தெய்வீக நதியின் அலைகள் எழுந்து அம் மகரந்தத் தூள்களைக் குளுமைப்படுத்தியது. ஆகவே மாதர்களின் களைப்பு நீங்கியது. யானைகளும், புரவிகளும் நீரில் இறங்கவும், அதனால் கிளர்ந்து கொந்தளித்த தெய்வீக நதியின் நீர் உயரே எழுந்து வானில் செல்லும் ரதங்களை எட்ட, முதன்முதலாகத் தோன்றும் இடையூறாக அது கருதப்பட்டு, ரதங்கள் திரும்பின. யானைகளின் தந்தங்களால் மேகங்கள் அவ்வப்போது குத்திக் கிழிக்கப்பட்டாலும், மேகங்கள் இப்போது மழை பொழிவித்து யானைகளை மகிழ்வித்தன. தங்களைத் துன்புறுத்தும் பகைவனுக்கும் அருள்வது உயர்ந்தோரின் பண்பு. அவ்வப்போது காற்றானது மாதர்களின் கீழாடைகளைக் கலைத்தது. ஆகவே அவ்வுடல் பகுதியை மறைப்பது ரத்தினக் கற்கள் பதித்த மேகலையின் கடமை ஆகியது. சாரல் கொண்டு மேகங்கள் அவர்களின் அலங்காரங்களை அழித்தாலும், மகளிர் அம் மேகங்களிடம் நன்றி காட்டினர்; ஏனெனில் பேருதவிகளின் முன் சிறு இடர்பாடு பாராட்டப்படக் கூடாது. அலைகள் மோதிய கடற்கரையாக நீரற்ற மேகங்கள் காணப்பட்டன. வானவில்கள் உடைந்து தோன்றின. இருந்தாலும் தேவமகளிர் அணிந்திருந்த ரத்தினக் கற்களால் ஆன ஆபரணங்களின் ஒளிக்கதிர்கள் உடைந்த அப்பகுதிகளை நிரப்பின.

வெற்றிக்கான வழிமுறைகளுடன் கூடிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டபடி, வானத்தில் வந்து கொண்டிருக்கும் ரதங்களையும் அனுசரித்துக் கூட்டிக்கொண்டு படைவீரர் அணி மேகக்கூட்டங்கள் நிரம்பிய பள்ளத்தாக்குகள் கொண்ட இந்திரகீல மலையை அடைந்தது. தாமரை மலர்கள் போல மகளிர் முகங்கள் பிரகாசித்தன. உயர்த்திப் பிடித்த வெண்குடைகள் நீர்நிலை நுரைக் குவியலாகத் தெரிந்தன. முரசுகளின் முழக்கம் நீர்வீழ்ச்சிகளின் கர்ஜனையாகத் த்வனித்தது. இந்திரகீல மலையின் சிகர உச்சியை அடைந்த படைவீரர் வரிசை நீண்ட தேவலோக நதிபோலக் காணப்பட்டது. எதிரே மேகக்

கூட்டங்கள் தடை ஏற்படுத்த, ரதங்களை நிறுத்த முயற்சித்தபொழுது, அந்த ரதங்களை இழுத்துச் செல்லும் புரவிகளின் முன்னுடல்கள் குனியவும், ரதங்களைத் தரைக்குக் கொண்டு வர வெகுவான முயற்சி தேவையாக இருந்தது. சிறுசிறு மேகங்கள் யானைகளின் இருபக்கங்களிலும் ஒட்டுதல் கொள்ள, இறக்கைகள் கட்டிக் கொண்ட மலைகள் நீரில் இறங்கின என்பதாகத் தோன்றியது. மலை மீது பாதை மேடும் பள்ளமுமாக இருந்தது. இருந்தாலும், மிக்கத் திறன் கொண்ட புரவிகள் அப்பாதையில் இடரின்றி ஓடின. மணற்பாங்கான ஆற்றின் கரையில் அப்புரவிகளின் காலடித் தடங்கள் ஒரே சீர்வரிசையாகக் காணப்பட்டன. ரதச் சக்கரங்களின் ஒலியுடன் இணைந்த நீர் வீழ்ச்சிகளின் ஓசையைக் கேட்டுணர்ந்த அழகிய மயில்கள் மேகங்களில் உருளும் இடியோசை என மயங்கி நிமிர்ந்து பார்த்துத் தங்களின் தோகைகளை விரிக்க யத்தனித்தன.

மலைச்சரிவுகளில் நீலோற்பல ரத்தினக் கற்களின் ஒளிக்கதிர்களை தம்முள் பிரதிபலித்த மலையுச்சிகளிலிருந்து வரும் நீர்வீழ்ச்சிகளின் தண்ணீர் நீலநிறமாக மாறி, வானத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டதோ என எண்ணச் செய்தது. மழை பெய்ததும் கங்கை ஆற்றின் நீர் கலங்கிச் செல்வதுபோல, ரதங்களின் சக்கரங்கள் உருண்டு சென்றதால் எழுந்த செம்மண் புழுதி படைவீரர்கள் மீது படிந்திருக்க, அவர்கள் அடர்ந்த காடு எங்கும் சுற்றித் திரிந்தனர்.

ரத்தினக் கற்களின் ஒளிக்கதிர்களால் பிரகாசமாக்கப்பட்டதும், இயல்பாகத் தரையில் விழுந்து பரந்துள்ள மலர்களைக் கொண்டதும், அடர்ந்த புற்களைக் கொண்டு பசுமையாகியதுமான கங்கையின் கரையைத் தங்கள் வசிக்குமிடமாக கந்தர்வர்கள் கொண்டனர். கந்தர்வர்களின் படைவீரர்களுடைய வருகை மலையின் வசீகரத்தை மேலும் அதிகரிப்பதாக இருந்தது. எப்படியெனில், பெரியோரின் சேர்க்கை ஒருவரின் பெருமையை மேலும் மேன்படுத்துவது போல.

நறுமணமுடைய மலர்களைக் கொண்ட மரங்கள், தனிமையான இடங்களின் கவர்ச்சி, புதிதாகத் துளிர்த்த கொடிகளின் பொலிவு, இவை அனைத்தும் தேவகன்னிகையரின் ஆனந்தப் பரவசத்தை உச்சத்துக்குக் கொண்டு சென்றன. எவ்வாறு எனில் மற்றவர் நலனுக்கு உதவுவதே மெய்யான அழகுக்கு அழகு. கன்னியர் வெகுவாகக் களைப்படைந்து இருந்தனர். கீழ்த்தரமான, கொடியவர்களால் சூழப்பட்டிருக்கும் ஒரு நல்ல மனிதனை வேறு எவரும் அணுகி நேசம் கொள்ளாதது போல, சர்ப்பங்கள் கட்டித் தழுவ, அவற்றின் மூச்சுக் காற்றினால் சிலுசிலுக்கும் துளிர்களைக் கொண்ட சந்தன மரங்களிடம் அம்மாதர்கள் செல்லவில்லை. யானைகளின் சோர்வை நீக்கும்

பொருட்டு, தேர்ந்த அவற்றின் மாவுத்தர்கள் அந்த யானைகளை அலங்கரித்திருந்த கொடிகளையும், இருக்கைகளையும், ஆயுத உறைகளையும் அப்புறப்படுத்தினர். அவ்விதம் அகற்றப்பட்டதால், புயற்காற்றினால் நாசப்படுத்தப்பட்ட ஊழிகாலத்துக் காடுகளுடன் கூடிய மலைகளைப் போல அந்த யானைகள் காணப்பட்டன. நீண்ட பயணத்தால் அலுப்புற்ற யானைகள் உறங்கி எழுந்ததும், மெள்ள நடந்தன. அப்படி நடந்ததால், யானைகளின் மத்தக நீரைச் சுற்றி மொய்த்திருந்த தேனீக்கள் சிதறி எழுந்து பறக்க, காப்புச் சங்கிலிகள் உடைப்பட்டனவாக எண்ணச் செய்தன. மத்தக நீர் பெருகி ஆறாக ஓட, அதன் சுழற்சியை மீறி ஒரு யானை அந்தக் கரைக்குச் செல்ல முயன்றபோது, அதனுடைய மாவுத்தன் அங்குசத்தை அதன் தலையில் மாட்டி இழுக்க முயன்றும், அது சட்டை செய்யவில்லை. காட்டு யானை ஒன்றின் அப்படிப்பட்ட மத்தக நீரை முகர்ந்து பார்த்து, தாகமாக இருந்தாலும், அருந்தாமல் நின்ற ஒரு யானையை இன்னொரு யானை தன்னுடைய விழிகளைச் சுழற்றிக் கோபமாகப் பார்த்தது. கங்கை ஆற்றில் மூழ்கி எழுந்த யானைகள் அந்நீரைத் தங்கள் மத்தக நீரால் மணம் ஊட்டின. இருந்தாலும், வடியும் மத்தகத்தில் தாமரை மலர்களின் மகரந்தத் தூள்கள் படிந்தன. இதனால் அந்த யானைகளின் நெற்றிகள் தாமரை மலர்களின் மணமாக நறுமணம் கொண்டதாயின. படைவீரர்களின் காலடிபட்டு எழுந்த தூசியால் கறுத்தும், யானைகள் மிதித்ததால் கலைந்த தாமரை மலர்கள் உதிர்த்த மகரந்தத் தூள்கள் நிறைந்ததுமான நீரில் யானைகள் மூழ்கி எழுந்தபோது, கரைகளைக் கடந்த நதி நீர் மஞ்சிஸ்தா (இந்திய மூலிகை) சாற்றினால் சாயம் ஏற்றிய சேலையைப் போலத் தோன்றியது. யானைகளின் பின்கால்களும், கழுத்தும் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தன. அருகு மரங்களிடையே அவை மண்டியிட்டு நகர்ந்தன. அவற்றின் தலையிலிருந்து மத்தக நீர் பெருகியது. அச்சமயம் அந்த யானைகள் பெரும் பாறைகள் போலக் காணப்பட, மத்தக நீரின் பெருக்கமானது மலையிலிருந்து பெருகிவரும் மழைநீர் பாறைகள் வழியாக இறங்குவதுபோல இருந்தது. விடாது பெருகிய மத்தக நீரால் தூசுகள் கரைய, அவற்றின் நறுமணம் மலர்களின் மணத்தையும் மிஞ்சி எழ, மிதிபட்ட ஏலக்காய் கொடிகளின் மணத்துடன் சேர்ந்து காற்று வீசியது. மேகங்களின் இடியோசை போல யானைகளின் பிளிறல் அப்பிரதேசம் முழுதிலும் ஒலித்தது. இந்த ஒலியினால் உறக்கத்திலிருந்து விழிப்புற்ற சிங்கங்கள் தலை உயர்த்தி சினத்துடன் பார்த்தன. மயில்களும், கிளிகளும் எச்சரிக்கை அடைந்தன. தேவகன்னிகையரின் பளபளக்கும் ஆடைகள் மரங்களின் கிளைகளில் ஊசலாட, சுற்றிலும் உள்ள தரைப்பகுதி சுத்தம்

செய்யப்பட்டு, பாசறை அமைக்க ஏற்பாடு ஆக, அக்காட்டுப்பகுதி அழகிய தோட்டம் போலக் காட்சி அளித்தது.

காட்டிடை உலா

ரத்தினக் கற்களைக் கொண்டு இழைத்த அணிகலன் பூண்ட தேவகன்னிகையர் தங்களுடைய கூடாரங்களிலிருந்து வெளிப்பட்டு உலவத் தொடங்கினர். தங்களுடைய தேஜஸ்ஸால் மலை மீதுள்ள மரங்களை அவர்கள் உலா வரும்போது இங்கும் அங்குமாகப் பிரகாசப்படுத்திய அவ்வனிதையர் மின்னல் கீற்றுகள் என காணப்பட்டனர். உலவும்போது அவர்கள் அவ்வப்போது அமர்ந்து ஓய்வு எடுத்துத் தங்கள் துடைகளிலிருந்தும், மார்புகளிலிருந்தும் களைப்பை நீக்க முற்பட்ட போது, அணிகலன்கள் குலுங்கி ஒலி எழுப்பின. இவ்விதமாக அவர்களுடைய பூலோகவாசம் விண்ணில் பறந்து திரிவதைவிட இன்பம் அளிப்பதாக இருந்தது. நடந்து செல்லும்போதே கைகளால் எட்டிக் கொய்யும்படியாக மலர்கள் மரங்களில் தாழ்ந்து பூத்திருப்பதைக் கண்டனர். இருந்தாலும் அம்மலர்களை சட்டை செய்யாமல் அவர்கள் நடந்தனர். அழகை ஆராதிப்பவர்கள் மிக்க மேன்மையானவற்றையே நாடுகிறார்கள். பொலிவு ஊட்டுவதற்காகப் பூசப்பட்ட நறுமண திரவியங்களால் ஈர்க்கப்பட்ட தேனீக்கள் அப்பெண்களின் கைகளைக் கொடிகள் எனவும், உள்ளங்கைகளை இலைகள் என்றும், நகங்களை மலர் மொட்டுக்களாகவும் எண்ணி அவர்களை மொய்க்கத் தொடங்கின. ஓர் அசோக மரத்தின் பூங்கொத்தில் இருந்த தேனை அருந்தி மகிழ்ந்த தேனீ ஒன்று பறந்து சென்றதும், மரத்தின் இலைகள் சிலிர்த்துக் கொண்டன. தன்னுடைய உதடுகள் சற்று அழுத்தமாகக் கடிக்கப்படுவதாக உணர்ந்த மாது ஒருத்தி கோபத்துடன் கைகளை ஆட்டுவதுபோல இருந்தது மரத்தின் அச்செயல்.

தேனீக்களால் சூழ்ந்து கொள்ளப்பட்ட ஒரு பெண்ணிடம் அவளுடைய காதலன் கூறுகிறான், 'தேனீக்களை விரட்ட முயன்று நீ தோல்வி அடைகிறாய். அவை உன்னிடம் அச்சம் அடையவில்லை. ஏனெனில் வேண்டுவனவற்றைத் தரும் தேவலோகத்துக் கற்பகக் கொடியாக உன் கரத்தை அவை பாவிக்கின்றன.' நெடிது வளர்ந்த கசப்புற்கள் வெண்மையான பட்டாடைகளாகவும், வரிசையாக நீந்திக் கூவும் அன்னப் பறவைகள் அரைக்கச்சு ஆகவும், ஆற்றின் கரைகள் இடுப்பு, பின்னழகாகவும் தோற்றம் தருவதால், ஆறுகள் வனிதையர் போன்ற தோற்றத்துடன் காணப்படுகின்றன. காதலியின் மடிபோல குளிர்ச்சி தருவதாக உள்ள மிக உயரத்திலிருந்து கொட்டும் அருவி நீர்

சிதறி, ஒளிமிக்க வெண்முத்துக்கள் என வீசப்படும் போது எழும் ஓசை காட்டு அணங்கு சிரிப்பதாக எண்ணச் செய்கிறது.

கரிய மையால் எழுதப்பட்ட பெண்ணின் கண்களைப் போன்று, தேனீக்கள் அமர்ந்த மலர்களுடன் கூடிய கொடிகள் தங்கள் தோழியரைப் பிரியமுடன் காண விருப்பப்படுவன போல, தலை தாழ்த்தின. யானைகளின் நெற்றிகள் தேய்க்கப்பட்டதால் ரத்தமாகச் சிவந்த சந்தன மரங்களில் பசுமை சேர, இந்த அனைத்து எழிலார்ந்த காட்சிகளும் இந்திரனால் அனுப்பப்பட்ட கன்னிகையரின் நெஞ்சங்களை எங்கோ இழுத்துச் சென்றன. எல்லாப் பெண்களின் கைகளிலும் நிறைய அழகான மலர்கள் ஏற்கெனவே இருந்தன. இருந்தாலும், தங்களை மகிழ்விப்பதற்காகத் தங்கள் காதலர்கள் அளித்த மலர்களையும் அவர்கள் பெற்றுக் கொண்டனர். ஒரு பெண்ணிடம் அவளுடைய காதலன் பூங்கொத்துக்களைத் தரும்போது, மெதுவாக அவளுடைய காதில் இன்னொரு பெண்ணின் பெயரைச் சொல்ல, அப்பெண் வருந்தி ஏதும் பேசாது, விழிகள் கண்ணீரைப் பெருக்க, அவளுடைய கால் பெருவிரல் நிலத்தைக் கீறியது. இன்னொரு பெண் தன் காதலனின் உரையாடலை உன்னிப்பாகக் கவனித்தாள். அவளுடைய முகம் அவனைப் பார்த்தபடி நிமிர்ந்து இருந்தது. அச்சமயம் அவளுடைய கீழாடை முடிச்சு அவிழ, ஆடை நழுவியது. மலர்களைப் பெற கைநீட்டியவள் ஆடையைப் பற்ற முயல, மலர்கள் தரையில் பொழிந்தன. விளையாட்டாக ஒரு மங்கை அவளுடைய காதலன் அளித்த துளிர்களுடன் கூடிய மலர்மாலையை அணிந்து கொள்ள, அவன் விரகதாபத்துடன் அவளுடைய ஸ்தனங்கள் தன் மார்பு மீது அழுந்தக் கட்டி அணைத்தபோது, அவளுடைய இறுக்கமான துடைகள் அவனுடன் அழுந்தின. ஒரு பெண்ணின் கண்களில் மகரந்தத் தூள்கள் பட்டுவிட்டன. அவளுடைய காதலன் அவள் அருகில் நெருங்கி, அந்த மகரந்தத் தூள்களைக் கண்களிலிருந்து விலக்குவது போன்ற பாவனையாக ஊதினான். ஆனால் அவள் அவனுடைய சூழ்ச்சியைப் புரிந்து கொண்டு அவனுடைய மார்பு மீது தனது நிமிர்ந்து பருத்த முலைகளால் மோதினாள். தங்கள் விருப்பப்படி அப்பெண்கள் மலர்களையும், இலை தழைகளையும் கொய்ததில் மரங்கள் தங்கள் பொலிவை இழந்தன. சிறு பூக்களைக் கொய்ததால், அவர்களின் மிருதுவான கைகள் சிவந்தன. பருத்த ஸ்தனங்கள் மகரந்தத் தூள்களால் வெண்மையாகின. மலர்களின் நறுமணம் அவர்களுடைய உடலை வாசமுள்ளதாகச் செய்தன. மலர்களின் அனைத்துச் சிறப்புகளையும் கவர்ந்து கொண்டவர்கள் போல ஆயினர் அப் பெண்கள். தங்களுடைய பளுவான யானையின் துதிக்கை போன்ற துடைகளுடன்

சமனான பாதையில் நடப்பதற்கே இன்னலுறும் அவர்கள் பள்ளத்தாக்குகளின் மேடு பள்ளமான பாதையில் நடக்கும்போது, மது அருந்தி மயக்கமுற்றவர்கள் போலத் தள்ளாடினர். ரத்தினக் கற்களைக் கொண்டு இழைக்கப்பட்ட அரையாடைகள் இயல்பாகவே காணப்பட்ட பின்னழகை மேலும் அழகு ஊட்டிட, புதியதாக எழுந்த மணற்பாங்கான நதிக்கரைக்கும் அழகைச் சேர்த்தனர். அப்போதே மலர்ந்த ஒரு தாமரைப் பூவின் உள்ளார்ந்த மென்மைப் பகுதி போன்று இடுப்பைச் சுற்றிய ஆடைக்கு மேலாகக் காணப்பட்ட அவர்களுடைய தொப்புள்கள் முலைகளின் பாரம் தாங்காது குனிந்த வயிற்றின் மீது உண்டான சிறு அலைகள் போன்ற மடிப்புகளை அலங்கரிப்பது போல இருந்தன. வியர்வைத் துளிகள் பெருகியதாலும், களைப்பினால் சற்றே மூடிய விழிகளைக் கொண்டும் இருந்த அவர்களுடைய முகங்கள் முழுதும் மலராத இதழ்களைக் கொண்ட, பனித்துளிகள் சூழ்ந்த தாமரை மலர்கள் போலக் காணப்பட்டன.

அப்பெண்களின் இந்த சைகைகளையும், நடத்தைகளையும் கண்டு கந்தர்வர்கள் மகிழ்ந்தனர். முதன்முதலாக இந்த இடத்தைப் பார்த்த பரவசத்தால் விளைந்த ஆனந்தம் என்பதாக எண்ணிக் கொண்டனர்.

அதனிடம் இருந்த தாமரை மலர் கும்பல் மீன்களால் அலைக்கழிக்கப்பட்டதாலும், சேறு அற்ற கரைகள் மீது அதன் அலைகள் தவழ்ந்ததாலும், அன்னப் பறவைக் கூட்டத்தின் கூவலால் எழுந்த இனிமையான ஒலியாலும் நதியானது அவ்வனிதையரை நீரில் இறங்கும்படியாக அழைத்தது. தாமரை மலர்களைத் தழுவி வந்ததும், நீர் அலைகளால் எழுந்த திவிலைகளைக் கொண்டு குளுமையானதும் ஆன காற்று வெப்பத்தால் நேர்ந்த அசௌகரியத்தை நீக்க உதவி செய்தது. அப்பெண்களின் நடை அன்னங்களை நினைவுபடுத்தின. ஆனால் அன்னங்களின் நடையில் அந்த அளவு வசீகரம் இல்லைதான். அவர்களின் பருத்த பின்னழகு நதியின் கரைகளை நினைவு படுத்துவதாக இருந்தாலும், கரைகளுக்கு அத்தனை அழுத்தம் இருக்க முடியாது. அவர்களுடைய முகங்கள் தாமரை மலர்களாகத் தோன்றினாலும், அம்மலர்களுக்கு அவ்வளவு பெரிய கண்கள் கிடையாது. ஆகவே எடுத்துக்காட்டாக எதனையும் ஏற்க முடியாத நிலை.

முதலில் கந்தர்வர்கள் நீரில் இறங்கினர். உடனேயே நீரில் மீன் மந்தைகள் சிதறி ஓடின. அதன்பின் பெண்கள் முதன்முதலாகக் குளிக்க இறங்குபவர்களைப் போல நடுங்கிக் கொண்டே நதியுள் கால்களை வைத்தனர். மிக சிரமத்துடன் தங்கள் பருத்த துடைகளை உயர்த்தியபடி

அவர்கள் நீரினுள் சென்றபோது, அலைகள் எழுந்து நீந்திக் கொண்டிருந்த அன்னப்பறவைகளைக் கரையோடு சேர்த்து ஒதுக்கின. கந்தர்வர்களின் மார்புகள் கற்பாறைபோலக் கடினமாகக் காணப்பட்டன. மகளிரின் ஸ்தனங்கள் பருத்தும் உயர்ந்தும் இருந்தன. இந்த இருவேறுவகை மோதலால் நீரின் ஓட்டம் தடைப்பட்டது. இதனால் வெறுப்புற்ற ஆறு சினம் கொண்டு அலைகளை எழுப்பிக் கரைகள் மீது பெருக, நீர் கலக்கமுடையதாக ஆயிற்று. அலைகள் அவர்களுடைய தலைமுடிகளைக் கலைத்து சிக்காக்கின; அணிந்திருந்த மலர் சரங்களைப் பிய்த்தன; பூசிய வாசனைத் திரவியங்களைக் கரைத்தன.

இவ்விதம் அப்பெண்களுக்குத் தான் அளித்த தொந்திரவின் விளைவாக என்ன நேருமோ என அச்சமுற்ற ஆறு சலசலத்து நடுங்கியது. பொறாமை கொண்ட பெண்களின் பார்வைக்கு இன்னல் தரக்கூடியனவும், காதலர்களின் நகக் கீறல்களால் ஏற்பட்டனவும் ஆன தழும்புகள் அப்பெண்களின் மார்பில் இதுகாறும் அந்த வாசனைத் திரவியங்களால் மூடப்பட்டிருந்தன. இப்போது அத் திரவியங்கள் நீரில் கரைந்ததும், தழும்புகள் வெட்டவெளிச்சமாகி வெளியே தெரிய, தங்கள் காதலர்களுடன் அவர்கள் கொண்டிருந்த நெருக்கம் புலனாயிற்று.

'இவை தேனீக்கள் சூழ்ந்திருக்கும் தாமரை மலர்கள் தானே? இவை பாவைகள் உருளும் கண்கள்தானே? இமைகள் மூடிய கண்கள் மீது படியும் தலைமுடிகள் தானே இவை? ஓசையின்றி அமர்ந்திருக்கும் தேனீக் கூட்டமோ? இவை புன்னகைகள் மூலம் தங்கள் பிரகாசமான பற்களைக் காட்டும் முகங்கள் அல்லவோ?' — இவ்விதமாகத் தங்களுள் வாதிட்ட அப்பெண்கள் வெகுநேரங் கழித்து அவை அனைத்தும் அடர்ந்த தாமரை மலர்களிடையே இருந்த தங்கள் தோழியரின் முகங்கள் எனப் புரிந்து கொண்டனர்.

பொறாமை கொண்ட பெண்களுக்கு முன்னால் காதலன் ஒருவன் தானே தொடுத்த மலர்சரத்தைத் தன் காதலியின் மார்பில் அணிவித்தான். நீரினால் மலர்சரம் நையப்பட்டிருந்தாலும், அவள் அந்த மலர்சரத்தைக் களைய விரும்பவில்லை. ஏனெனில் அன்புடன் கூடி உருவானது அது. வெறும் சாதாரண மலர்சரம் அல்ல.

செம்மை படர்வதைத் தடுப்பதற்காக அப்பெண்கள் விழிகளில் மையிட்டு இருந்தனர். ஆனாலும் அந்த மை நதி நீரில் கரைந்துவிட, செவ்வரிகள் அவர்களுடைய கண்களில் தோன்றின. வெண்மை அகன்று விட்டாலும் விழிகளின் அழகு மட்டும் அகலவில்லை. காதுகளில் வளையங்கள் அணி செய்வித்தவரை எழிலும் கூடி

இருந்தது. நீரின் வேகம் அவ்வளையங்களைக் கவர்ந்து சென்றதும், பதவியை இழந்த அமைச்சர்கள் போல, அப்பெண்கள் காணப்பட்டனர். மார்பில் பூசப்பட்டிருந்த சந்தனம் மணத்தது. கண்களில் எழுதப்பட்ட மை இப்போது இல்லை. ஆனால் கந்தர்வர்களின் எண்ணம் மாறுபட்டதாக இருந்தது. அதாவது, அப்பெண்களின் உடல் அழகால் அப்பொருட்கள் பெருமை பெற்றனவே தவிர, அவற்றால் அப்பெண்களின் அழகு அப்படி ஒன்றும் கூடிவிடவில்லை. காதலர்களை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காக அவ்வனிதையர் செய்திருந்த அணி அலங்காரங்கள் பொறாமை கொண்ட மற்றப் பெண்களைப் பாதிக்கவில்லை. ஆனால் மார்புகளில் காதலனது நகங்கள் பட்ட வடுக்கள் மட்டுமே அவர்களுடைய பார்வைகளில் எரிச்சல் ஏற்படுத்தின.

அந்த மங்கையர் நீரைத் தங்கள் கைகளால் அறைந்தனர். அப்படி அறைந்தபோது மிருதங்கத்தின் ஒலி எழுந்தது. நீர் அலைகள் அவர்களுடைய மார்புகள் மீது மோதி அவர்களைத் தள்ள முயற்சித்த போது, உடல்கள் ஆடின. அவ்விதம் அவர்கள் தள்ளாடுவது நடனமாடுவது போல இருந்தது. தாமரை மலர்கள் போல சிரிப்பனவாக இருந்த அவர்களுடைய அழகிய முகங்கள் நீரில் பிரதிபலித்து, ஆற்றின் பொலிவைக் கூட்டின. இவ்விதமான அப்பெண்களின் கேளிக்கைகள் கோலாகலமாக, அவ்வாற்றுக்கு அவர்கள் செய்யும் பிரதிபலனாக அமைந்தது. நீர் எங்கும் சுற்றித் திரிந்த மீன்கள் அவர்களுடைய துடைகளில் வால்களால் அடித்தன. இதனால் அச்சமடைந்த பெண்கள் தங்கள் கண்களை அகல விரித்து கரங்களை உயர்த்தி கொடிகள் போல அசைத்து உதவி கோரினர். இந்த அவர்களுடைய ஒய்யாரச் செயல் தோழியரையும் மயங்க வைத்தது. நிலை இப்படி இருக்க, காதலர்களைப் பற்றிக் கேட்பானேன்! ஒரு மீனால் அடிபட்ட பெண் ஒருத்தி அச்சம் காரணமாகப் பதறி தன் காதலனைக் கட்டிக் கொள்ள, அவன் இதனால் மகிழ்ச்சியுற்றான். தன்னிச்சையான செயல்களும் காதல் காரணமாகப் பரசவப் படுத்துகின்றன.

நீரில் அளைந்ததால் கலைந்த தலைமுடி வனிதையரின் முகங்களை மறைக்கவும், தேனீக்கள் மொய்த்த தாமரை மலராகத் தோன்றின. ஆழமறியாது நீரில் கால்களை வைத்துவிட்டு, முழுக இருந்த நேரத்தில் ஒரு பெண் பயத்துடன் தன் காதலனைக் கட்டி அணைத்தாள். அங்கு கூடியிருந்த அனைவர் முன்னிலையிலும் சாதாரணமாக இச்செயல் கௌரவக் குறைவாகக் கருதப்படும் என்றாலும், அச்செயலுக்கான சந்தர்ப்பம் கருதி அப்போது பாராட்டப்பட்டது. தன் இருகை நிறைய நீர் அள்ளி இன்னொரு பெண்

தன் காதலன் மீது இரைத்தாள். ஆனால் அவன் சினமுறாமல் புன்னகையுடன் அவளுடைய கரத்தைப் பற்றினான். அவ்விதம் அவன் அவளை ஸ்பர்சித்ததில், அவள் காதல்வசப்பட, அவளுடைய இடுப்பில் கட்டி இருந்த ஆடையின் முடிச்சு அவிழ்ந்தது. இருந்தாலும் அந்த ஆடை நீரில் நனைந்திருந்ததால், அது நழுவிவிடவில்லை. அப்பெண்களின் கண் மை கரைந்திருந்தாலும், கடைக்கண் பார்வைகள் கவர்ந்து இழுப்பதாக இருந்தன. இதழ்கள் தங்களுடைய செம்மையை இழந்துவிட்டன; இருந்தாலும், அவை வசீகரத்துடன் துடித்தன. திலகங்கள் அழிந்திருந்தன; ஆனாலும், நெற்றியின் சுருக்கங்கள் எழிலுடன் அமைந்திருந்தன. இவ்விதமாக அலங்கோலப் படுத்தப்பட்டிருந்தாலும், அப்பெண்கள் அழகாகவே காணப்பட்டனர்.

தங்கள் காதலர்கள் அருகில் அம்மங்கையர் சென்றனர். சற்றே இமைகளைக் கண்கள் மீது சரித்திருந்த அவர்கள் கடைக்கண்களால் நோக்கினர். அவர்களுடைய உடல்கள் நடுங்கின. சுவாசிக்கும்போது அவர்களுடைய ஸ்தனங்கள் எழுந்து தாழ்ந்தன. இவையெல்லாம் களைப்பால் நேர்ந்தவையா அல்லது சாகஸமா? இன்னொரு பெண்மீது ஒருவன் நீரை வாரி இரைத்து விளையாடியதில் ஒரு பெண் கோபம் கொண்டாள். அக்காதலன் என்னதான் சமாதானம் கூறியும் அவளுடைய கோபம் தணிவதாக இல்லை. இவ்வகை சமாதானங்கள் காதலிகளிடையே மேலும் சினத்தைத் தூண்டுவனவாகத் தான் அமைகின்றன.

இந்தக் கேளிக்கைகளுக்குப் பிறகு அக்கன்னிகையர் நீரை விட்டுக் கரை ஏறினர். இவர்களுடைய ஆர்ப்பாட்டங்களையும், சிரிப்புக் களையும் தாங்க மாட்டாத ஆறு பெரும் அலைகளோடு இவர்களைத் தொடர்ந்து கரை ஏறியது. நீரில் இவர்கள் கொட்டமடித்ததால் சக்கர வாகப் பறவைகள் இணைபிரிய இவர்கள் காரணமாயினர். தாமரை மலர்கள் பொலிவு இழந்ததன் பொறுப்பும் இவர்கள் தலையில் விழுந்தது. கைவளையல்களில் இருந்த முத்துக்கள் நீரால் கழுவப்பட்டுப் பிரகாசித்தன. ஆகவே அவர்கள் நட்சத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட இரவுக் கன்னிகள் போலத் தெரிந்தனர். அலை மிகுந்திருந்த ஆற்றுநீர் சந்தனக் குழம்பாகி, நிற மாற்றம் அடைந்து காணப்பட்டது. ஆபரணங்களிலிருந்து கழன்று விழுந்த வகை வகையான ரத்தினக் கற்கள் புதுப்புது நிறம் காட்டின. தொடக்கத்தில் ஆனந்தமாக அனுபவிக்கப்பட்டதும், பின்பு அலட்சியப்படுத்தப் பட்டதுமான நதி நீர், இரவில் பயன்படுத்தப்பட்ட பிறகு காலையில் விட்டுச் சென்ற பஞ்சணை போலக் காணப்பட்டது.

பொலிவுடன் வரும் மாலை நேரம்

நீர் விளையாட்டு முடிந்ததும், மங்கையர் அனைவரும் வண்ணச் சேலை அணிந்து, நகைகள் பூண்டு தங்கள் தங்கள் காதலர்களோடு இணைய விரும்புவதைக் கண்ட கதிரவன் கடலுக்கு மேலாகச் சற்று நிலைத்து நின்று, மறைய யத்தனித்தது. சுற்றிலும் ரத்தினக் கற்கள் பதித்த ஆபரணத்தின் நடுவில் பெரியதொரு வைரக்கல் போல சூரியன் தன் ஒளிக்கதிர்கள் கொண்டு ஜ்வலித்தபடி மெல்ல வீழவும், மறைந்தும் மறையாததுமான அப்பொழுது எழில் மிகக் கொண்டு வானத்தை முத்துச்சரங்களுடன் அலங்கரித்தது. தாங்கமாட்டாத தாகத்தால் தாமரை மலர்களின் தேனை தன் ஒளிக்கரங்களால் அள்ளி அருந்திய சூரியன் உடல் சிவந்து தரையில் விழுவது போலத் தோற்றம் அளித்தது. வெகுவாகச் சிவந்தது சூரியன்; நேரிடையாகக் கண்கள் கொண்டு அதைப் பார்க்க முடிந்தது. தகித்த வெப்பம் இப்போது நிலத்தை விட்டு எழுந்து சக்கரவாகப் பறவை ஜோடிகளிடம் சென்றது. (விரைவில் இப்பறவைகள் பிரிந்து நிற்க, விரகதாபம் இவற்றைச் சூழ இருக்கிறது.) கதிரவனின் ஒரு பாதி மறைந்தது. அதன் ஒளிக்கதிர்களும் பின்வாங்கின. கிழக்கு திக்கு கைவிடப்பட்டாலும், மேற்கு வானப்பகுதி ஒளிமயமாயிற்று. தன் பழைய தலைவன் நல்கூர்ந்து வறுமை எய்துவிட்ட காலத்தில், மேலும் தாழ்ந்த நிலையிலுள்ள வேறு ஒருவரை நாடிச் சென்றவன் தன் பெருமை அனைத்தையும் இழந்துவிடுவது போல, அவ்வொளிக் கதிர்கள் பிரகாசத்தை இழந்து காணப்பட்டன. மாலை நேரத்து சிவந்த ஒளிக்கதிர்கள் சாளரங்களின் வழியே வந்து அம் மங்கையரை ஒப்பனை செய்து கொள்ள அவசரப்படுத்தவே, அவ்வொளிக் கதிர்களை அவர்கள் தங்களுடைய காதலர்களின் தூதர்களாக வரவேற்றனர். அச்சமயம் அந்த மலைச் சரிவுகளில் இருந்த மரங்களின் உச்சியைத் தன் ஒளிக்கரங்களால் மெல்லத் தொட்டுத் தடவியவாறு சூரியன் மறைந்தது. ஆனால் எங்கு மறைந்தது என்பதை எவராலும் சொல்ல இயலாது. அடர்ந்த காட்டினுள் சென்றதோ, ஆழம் காண முடியாத சமுத்திரத்தில் இறங்கியதோ அல்லது பூமியின் அடியில் அமர்ந்ததோ?

கூடுகளுக்குத் திரும்பும் பறவைகளின் கூச்சல் எங்கும் எதிரொலித்தது. சூரியன் மறைந்த அந்திப் பொழுது. நான்கு திசைகளும் பொலிவு இழக்கத் தொடங்கின. மாலைநேரம் காலைப் பொழுதாகத் தெரிந்தது. தாழ்ந்த மேற்குப் பகுதியில் ஆகாயம் வரிசையாகக் கொண்ட மேகக் கூட்டங்களுடன் சமுத்திரத்தின் அழகைப் பிரதிபலித்துச் சற்றே சிவந்து, பவளமாலை அணிந்தாற் போலக் காணப்பட்டது. பண்பாட்டில் பழுது கொண்டு, மக்களை

மதிக்காது, தன்னலத்துடன், கைகளைச் சேர்த்துக் கூப்பியவள் போல, நண்பர்களின் சொல்லைப் பொருட்படுத்தாத ஒரு மனிதனைப் போல, அந்திநேரம் வெகுவேகமாக மறைந்தது.

விடியலுக்குப் பயந்த இராப்பொழுது ஒளிந்து கொண்டிருந்தது. கதிரவனின் ஒளிக்கதிர் அகன்றதும், மெள்ள எழுந்து நாற்புறமும் மெதுவாகச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது. அனைத்தையும் இருள் வளைத்துப் போட்ட நேரத்தில் சிறிது, பெரிது என்ற பாகுபாட்டை அது அனுசரிக்கவில்லை. ஆகவே மறையும்போது சூரியன் தான் கைப்பற்றிய அனைத்தையும் ஆதரவு அற்று விட்டுவிட்டுப் போனதாகத் தோன்றியது. சக்ரவாகன், சக்ரவாகிப் பறவைகள் தாங்கள் அறியாமலேயே பிரிந்தன. அது அவ்விதம் நேரத்தான் செய்யும். ஏனெனில் விதியை எவரால் வெல்ல முடியும்? இத்தனைக்கும் அவை இரண்டும் எதிர் எதிரேதான் இருந்தன. ஆனாலும் அவை ஒன்று சேர இயலாது. அவை ஒன்றை ஒன்று கூவி அழைத்தன. ஆகவே தாமரைக் கொடி அனுதாபத்துடன் தனது தாமரை மலர் முகத்தை மறைத்தபடி குனிந்து கொண்டது. என்ன ஆயிற்று என்பது எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை. வானமும் மரங்களும் கருப்பு வர்ணம் பூசிக்கொண்டு விட்டனவோ? வானம் நிலத்தில் இறங்கிவிட்டதோ? இருள் முழுதுமாக வானத்தைக் கவர்ந்து விட்டதோ? துவாரங்களும் பள்ளங்களும் சமதளமாகி நிரப்பப்பட்டு விட்டனவோ? நான்கு திசைகளும் இருளில் கரைந்து விட்டனவோ?

கவிந்த இருள் பொலிவற்றதாகச் செய்ததனால் அழகு தாமரை மலர்களை விட்டு விலகியது. அப்படி விலகிய அழகு வானம் சென்று அங்குள்ள பிரகாசமான விண்மீன்களுடன் சேர்ந்து கொண்டது. இவ்விதம் ஒவ்வொருவரும் பாதுகாப்புடன் வசிக்கவே விரும்புகிறார்கள்.

கை நிறைய கற்பூரத் தூளை எடுத்துக் கொண்டாற் போல, நிலவு கேதக மலர்களின் கீலங்கள் போன்று வெண்மையான தனது ஒளிக்கதிர்களை கீழ்திக்கில் வீசியபடி எழுந்தது. கிழக்கு என்னும் காதலியின் முகத்தில் நறுமணம் கொண்ட திலகத்தை நிலவுக் காதலன் இட்டு விட்டாற் போல அக்காட்சி இருந்தது. நிலவு நெருங்கியபோது கீழ்திசை பிரகாசமாகியது. புன்னகையுடன் கூடிய பெண் ஒளிக்கதிர்களுடனான அதன் முகம் ஒளிபெற்று எழுகையில், இரவு பிரிவுத் துயருடன் அகன்றது. கங்கை ஆற்றோட்டம் கடலில் கலப்பது போல, பனித்திவலை போன்ற வெண்மையான நிலவின் கதிர்கள் நீல நிறத் தாமரை வண்ணத்தில் காணும் ஆகாயம் முழுதும் பரவியது. கருமையான மேகக் கும்பல் இருட்டு பரமசிவனால் வீசியெறியப்பட்ட

யானைத் தோல் போன்று நிலவின் ஒளிக்கதிர்களால் விரட்டப்பட்டது. நிலவு மெல்ல நெருங்கவும், அதன் ஒளிக்கரங்கள் நேராக வான் விளிம்புகளைத் தொட்டன. ஆகவே இருளிலிருந்து விடுபட்ட அவ்வான் விளிம்புகள் இப்போது எளிதாக சுவாசிக்கத் தொடங்கின. வராக அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு தனது சிவந்த பொன்னிறமான கொம்பினால் பூமியை உயர்த்தி வானில் எறிந்ததுபோல, பிரகாசமான பவளம் போன்ற பிறைநிலவு இருளை வீசி எறிந்தது.

ஒரு பெண்ணின் வட்டவடிவமான முலை குங்குமத்தால் எழுதப்பட்டது போல, விண்வெளியைத் தன் ஒளிரேகைக் கற்றைகளால் பிரகாசப்படுத்தியபடி சமுத்திரத்திலிருந்து எழுந்த நிலவு கீழ்திசையில் தெரிந்தது. ஆனால் நிலவு எழுந்தும், இருள் முற்றும் விலகவில்லை. ஆகவே நாணத்துடன் குனிந்த தலை நிமிராது, ஆனால் முகம் மறைக்காது வரும் புது மணப்பெண் போல இரவானது காணப்பட்டது. முழுதுமாக இருளை விலக்க நிலவால் முடியவில்லை. மலைப்புறங்களிலிருந்தும், காடுகளிலிருந்தும் இருட்டு அகலவில்லை. திசைகளின் முடிவில் ஒளியைக் காணோம். இருந்தாலும் அணிகலன்களுடன் கூடியது போல நிலவு அழகாகவே தோன்றியது. ஊடல் காரணமாகத் தங்கள் காதலர்களைப் பிரிந்த தலைவியர் எழும் நிலவைக் கண்டு சினமுற்றனர். (ஏனெனில் அது அவர்களுடைய செருக்கைக் குலைத்து, விரகதாபத்தை உண்டுபண்ணியது). ஆகவே குற்றமுள்ள நெஞ்சுடன் பயந்தபடி நிலவு மெள்ள எழுந்தது. காதலன் காதலிகளைக் கட்டி அணைப்பதுபோல, நிலவு நட்சத்திரக் கன்னியரை தன் ஒளிக்கரங்களால் அணைத்தபடி சிவந்த நறுமணத் துகள்களை அது சுற்றுப்புறமெங்கும் வாரி இறைத்தது. மந்தரமலை கொண்டு கடைந்தபோது பாற்கடல் பொங்கி உயர்ந்து, வளர்ந்த மரங்கள், அடர்ந்த காடுகள் ஆகியவற்றை அழித்தது போல, நிலவு குவிந்த இருளைத் தன் ஒளிக்கிரணங்களால் அகற்றி அழிக்கத் தொடங்கியது.

எரிக்கும் சூரியனின் கதிர்களுடன் கூடிய பகல்பொழுதில் சக்ரவாகி என்னும் பெண்பறவை மகிழ்ச்சியுடன் இருப்பது ஏனென்றால், அது தன் காதலனுடன் அப்போது கூடி இருக்கிறது. ஆனால் இரவில் பிரிவின் வேட்கை தாளாது இருக்கும்போது, நிலவினுடைய குளுமையான கதிர்களாலும் அப்பறவையைச் சாந்தப்படுத்த முடிவதில்லை. நெஞ்சம் கனத்திருக்கும்போது, இதம் அளிப்பவைகூட வலி ஊட்டுவனவாக, தாங்க முடியாதவையாக இருக்கின்றன. மகரந்தத் துகள்களையும், இதழ் அவிழ்க்கும் அல்லி மலர்களின் நறுமணத்தையும் தாங்கி வரும் இராக்காற்று இன்பமயமான உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பறவைகள் கூடிய மரங்களை மெதுவாக அசைத்தது. ஒரு நல்ல நட்புள்ள தோழி போல

இரவானது நீர் நிரம்பிய புண்ணிய தீர்த்தத்துடன் கூடியதும், ஒளிக்கதிர்களைத் தன்னுள் கொண்டதும், அல்லி மலர்களால் ஆராதிக்கப்பட்டதும், எண்ணிறைந்த கரும்பொட்டுக்கள் கொண்டது மான வெள்ளிக்குடம் போன்ற நிலவை காமன் முன்னிலையில் அவனுடைய வெற்றிகரமானப் பயணத்தின் போது வைத்தாள். என்னதான் வலிமை பெற்றிருந்தாலும், நட்பு இன்றி ஒருவர் வெற்றிவாகை சூடுவது முடியாது. தன்னால் முடியும் என்றாலும், நிலவின் ஒளிக்கதிர்கள் என்கிற நண்பர்களின் உதவியுடவன் மன்மதன் தன் கரும்பு வில்லைக் கையில் எடுத்தான்.

காதலர் கூடினர்

காதல் விளையாட்டுக்கான நேரம் கூடிவந்தது. ஆகவே சோபன அறைகள் ஏற்கெனவே அலங்கரிக்கப்பட்டிருந்தும், அவற்றை மேலும் பெண்கள் அழகுபடுத்தினர். காதலர்கள் தாங்களாகவே வருவதாகத் தெரிவித்திருந்தும், அப்பெண்கள் தூதுவர்களை அனுப்பி இருந்தனர். இன்னும் ஒரு தடவை முகம் கழுவி, திலகமிட்டு, அலங்காரம் செய்து கொண்டனர். காதலர்களை விட்டுப் பிரிந்திருக்கும் வேளைகளில் சந்தனக் குழம்பும், மலர்சரங்களும், மதுவகைகளும் உவப்பாக இருப்பதில்லை. ஏனெனில் காதலர்களுடன் அப்பெண்கள் சேர்ந்து இருக்கும்போதுதான் அவை அனுபவிக்கத் தக்கனவாக இருக்கின்றன.

• அணங்குகள் பொறுமை இழந்தனர். தங்கள் காதலர் இருப்பிடம் நோக்கிப் புறப்பட்டனர். மகிழ்ச்சி அவர்களுடைய கன்னங்களைக் குழிவிழச் செய்ய, பூசப்பட்ட திரவியம் முகத்தில் கலைந்து காணப்பட்டது. இருந்தாலும் அவர்களுடைய எழில் முழுமதியையும் வெட்கித் தலைகுனியச் செய்வதாக இருந்தது. தங்கள் காதலர்களைச் சந்திக்கச் செல்வதன் நியாயம் குறித்துப் பெண்கள் பேசிக் கொள்வதை மறைந்திருந்து அந்த ஆண்கள் காது கொடுத்துக் கேட்க வாய்ப்பு நேரிட, அவ் ஆண்கள் மகிழ்ச்சியுற்றனர். காதலர்களைச் சந்தித்த போது உடல் சிலிர்த்தது; வியர்வை பெருகியது. வேண்டுமென்றே மாதர்கள் தங்கள் காதலர்களின் மார்புகள் மீது சாய்ந்தனர். இதனால் அவர்கள் செய்து கொண்டிருந்த அலங்காரங்கள் கலைந்தன. இருந்தாலும் அவர்கள் வசீகரமாகத் தான் காணப்பட்டனர். மது அருந்தியதால், அறிவு பிறழ்ந்த நிலையில் அம்மாதர்கள் தங்கள் செருக்கு, நாணம் அனைத்தையும் கைவிட்டுக் காதலர்களுடன் இணைந்தனர். ஆனால் அத்தகைய அவர்களுடைய நடத்தைக்கு மது காரணமா அல்லது மன்மதன் காரணமா?

தூது சென்று திரும்பிய தோழி ஒருத்தி தலைவியிடம் சொன்னாள். 'வாயிலை நோக்கியபடி உன் காதலன் உன் வரைவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். அவனுடைய தலையை உள்ளங்கை தாங்கி இருக்கிறது. சொல்வதானால் அவனுடைய உயிர் உன் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அவனுடன் உனக்கு ஏன் பிணக்கு?' ஆனால் அப்பெண் ஒவ்வொரு முறையும் இதே சமாச்சாரத்தைக் கேட்கிறேன் என்பதாக முகம் திருப்பிக் கொள்கிறாள்.

தங்கள் கடைக்கண்களால் தங்களுடைய காதலர்களை நோக்குவதான அப்பெண்களின் நாணம் அந்தக் காதலர்களைக் கண்டதும், இணைந்தவர்களாக மார்புமீது சாய்ந்து கொள்ள, அதே நாணம் ஓடி ஒளிந்து கொண்டது. அவன் தவறு இழைத்ததாகவும், தான் அவமானப்படுத்தப்பட்டதாகவும், தனக்கு வெகுவாக வருத்தம் ஏற்பட்டிருப்பதாகவும் அவள் சொல்லி அவனுடன் ஊடல் கொண்ட போது, காதலன் அவளை விட்டு விலக முயன்றான். அதே சமயம் அழகியான அவள் தன்னுடைய கண்ணீரைப் பெருக்க, உற்ற நண்பன் போல அக்கண்ணீர் அவனை சமாதானப்படுத்தித் தங்க வைத்தது. ஓர் அணங்கு கண்ணீரை ஆறாகப் பெருக்க, அவள் பாராமுகமாக இருந்தாலும், அவளுடைய உடலின் ரோமங்கள் சிலிர்த்து எழுந்ததானது, அவள் அந்த விசுவாசம் இல்லாக் காதலனிடம் எந்த அளவு அன்பு பூண்டிருக்கிறாள் என்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. ஒருத்தியின் ஈர இதழ்களில் அவளுடைய காதலன் அழுந்த முத்தமிட்டபோது, காதலி (அரையாடை முடிச்சு அவிழ) தன் கண்ணியம், நாணம் ஆகியவற்றை ஆடையுடன் இழந்தாள். நல்ல காலமாக அவ்வாடை மீது கட்டியிருந்த கச்சை ஆடை நழுவாமல் காப்பாற்றியது. காதலன் அந்த ஆடையைப் பற்றி இழுத்தபோது, அவள் வெட்கத்தோடு அவனை இறுகத் தழுவிக்கொள்ள, அவளுடைய பருத்த முலைகள் இரண்டும் அவனுடைய அகன்ற மார்பில் அழுந்தி வட்டவடிவம் பெற்றன. இந்த நெருக்கமான அணைப்பு இன்பத்தின் எல்லைக்கு அவர்களை இட்டுச் செல்ல, அவளுடைய உடலில் அவனுடைய நகங்கள் அழுந்தி ரத்தக் கசிவு ஏற்பட்டது. முத்தங்கள் அழுத்திய உதடுகளில் பற்கள் பட்டு, கடிபட்டன. மலரினும் மெல்லிது காமம் எனச் சொல்லப்பட்டாலும், காதலர்கள் இணையும்போது, நேர்மாறாக அவர்களுடைய இயல்புகள் ஆகி, வெறிகொள்ள வைத்துவிடுகிறது. விரகதாபத்தால் வனிதையரின் பேச்சு குழறியது. இன்பத்தின் உச்சகட்டத்தில் கூவினர். இவை அனைத்துமே மன்மதனின் பாணங்களின் விளைவாக நேர்ந்தவை என்பது மட்டுமல்லாது, மேலும் அவ்வின்பத்தில் திளைக்க அவர்களை ஊக்குவித்தன.

அடிக்கடி இளைஞர்கள் மதுவை ருசி பார்த்தனர். இதனால் அவர்களுடைய தாகம் அதிகரிக்கவே செய்தது. ஆகவே அவர்கள் தாமரை மலர் இதழ்கள் நனைக்கப்பட்ட மதுவை அருந்தியது மட்டுமல்லாது, தங்களுடைய காதலிமாரின் நகைக்கும் உதடுகளையும் சுவைத்தனர். காதலர்களுடன் கலந்ததால், அணங்குகளின் சினமும் கரைந்து மறைந்தது. ருசிமிக்க மதுவை அருந்தியதால், பிணக்கும் தீர்ந்தது. அமைதியும் சாந்தமும் நிலவின. ஆகவே காமன் தன் கணை எதையும் அவர்கள் பொருட்டு வில்லில் பூட்டுவதாகக் காணோம். தங்கள் காதலர்களின் கைகளிலிருந்து பெறும் மது மேலும் ருசிப்பதாக அவர்கள் உணர்ந்த காரணத்தால், அப்பெண்கள் நாணத்தை விட்டுத் தங்களையே இழந்தவர்கள் ஆயினர். இச்செய்கையால் அவர்கள் பெற்றது புது உணர்வா அல்லது புது அனுபவமா?

முதலில் அவள் மது அருந்தினாள். பிறகு அவள் குவளையைக் காதலனிடம் தந்தாள். அதன்பின் அவ்விருவருமே மாற்றி மாற்றி அதே குவளையிலிருந்து அருந்தினர். அவ்விதம் அருந்திய ஒவ்வொரு மிடறிலும் புதிய புதிய ருசிகளை அவர்கள் உணர்ந்தனர். மதுக் கிண்ணங்களில் இருந்த திரவத்தின் அலை எழுச்சிகளைத் தங்கள் இதழ்களில் பெற்றுக் கொண்ட தாமரை மலர்கள் ஆட்டமிடும் புருவங்களைக் கொண்ட அவ்வனிதையரின் வசீகரமான கண்களின் நடிப்பைக் கடனாகப் பெற்றுக் கொண்டன. சிறந்த இருப்பிடங் களிலிருந்து பெறப்படும் சிறப்பியல்பு கொண்டவை, தங்கள் சிறப்பை மேலும் சிறக்க வைக்க முயல்கின்றன. இந்தவிதமாக காதலன், காதலியர் வாயிலிருந்து பெறப்படும் மது வெகு ருசியாக இருப்பதாக உணரப்பட்டது.

மது அருந்தியதன் விளைவாக அவர்களுடைய உதடுகளில் இட்டிருந்த சிவப்புச் சாயம் கலைந்தது. அவ்விதம் கலைந்த நிலையும் ஆனந்தமானதுதான். ஏனெனில் பருகும்போதெல்லாம் அப்பெண் களின் கடிபட்ட உதடுகள் தெளிவான, பிரகாசம்மிக்க ஸ்படிகக் கிண்ணங்களுள் பிரதிபலித்தன. உதடுகளிலிருந்து பறிபோன செம்மை மதுவால் கண்களில் குடியேற்றப்பட்டது.

பெண்களின் வாயில் நறுமணத்தை மது புகுத்தினாலும், அவர்களுடைய வாய் மணத்தால் மதுவும் உயர்வு பெற்றது. இதனால், மதுவும் வாயும் மணங்களைப் பரிமாறிக் கொண்டதன் காரணமாக, எதன் மணம் எது என்பது புரியாமற் போயிற்று. அவர்கள் தங்கள் காதுகளில் அணிந்திருந்த நீலநிற அல்லிமலர்களுக்கான அவசியமும் இப்போது இல்லை. ஏனெனில் அவர்களுடைய நீலவண்ணக் கண்கள்தாம் காதுகள் வரை நீண்டிருந்தனவே! உடல் முழுதும் அது

பரவுகிறது என்றாலும், மதுவின் பொலிவும், ஒளியும் அவர்களுடைய கண்களை மேன்மேலும் வசீகரமாகச் செய்து, முகங்களையும், நெற்றிகளையும், பவளங்கள் போலச் சிவக்க வைத்தன. தொப்புளிலிருந்து விலகி நழுவும் ஆடையைக்கூட கவனியாது அவர்கள் நாணம் அனைத்தையும் விடுத்து, காரணம் ஏதுமின்றி சினமுற்ற நிலை - இந்த அனைத்துப் பிழைகளும் மதுவினால் நேர்ந்த மோசமான பண்புகள். ஆகவே அப்பெண்கள் குற்றவாளிகள் அல்லர். மது அருந்தியதால் மயங்கிய பெண்கள் தங்கள் தோழியர் முன்பாகவே காதலர்களின் மார்பில் சாய்ந்தனர். ஆகவே நாணம் என்பதற்கு அந்நேரத்தில் பொருள் ஏதும் இல்லாவிடினும், நெஞ்சில் அது நிலைத்தும் அகலாமலும் இரண்டும் கெட்டானாக இருந்தது.

மிதமிஞ்சிய குடியினால் அப்பெண்களால் தங்களுடைய விழிகளை அகலத் திறக்க முடியவில்லை. அவர்களுடைய பேச்சும் குறைந்தது. கட்டி அணைக்கப்பட்ட போது அவர்களால் தங்களுடைய கைகளை இயக்க முடியவில்லை. இவ்விதமாக போதை மிகுந்து வெட்கத்தை விலக்கியது. காதல் நடவடிக்கைகளில் மது புதியதான இனிமையை அளித்ததா அல்லது ஏற்கெனவே இருந்த இனிமையை உயர்த்தியதா என்பதை அறியக் கூடவில்லை. எப்படி இருந்தாலும், காதலர் உள்ளங்களில் குடியமர்ந்த காமனுக்கு மேன்மேலும் வாய்ப்புகள் ஏற்பட்டன. மிதமிஞ்சிக் குடித்தால் மயங்கிவிழ நேரிடும். ஆகவே, இயல்பாக விசுவாசமில்லாத காதலர்கள் இவ்விதமான மயக்கச் சூழலில் தங்களைக் கைவிட்டுப் போய்விடுவர் என்பதை உணர்ந்த சில மாதர்கள் அதிகமாக மது அருந்தவில்லை. காதலின் இயல்பு என்னவெனில், காதலுக்கு எந்த இடையூறும் எப்போது வேண்டுமானாலும் நேரலாம் என்ற எண்ணம்தான். அப்படியான ஓர் எண்ணத்துக்கு அந்நேரத்தில் அவசியம் இல்லாது இருந்தால்கூட, அவ்வெண்ணம் எழத்தான் செய்கிறது.

சமன்படுத்தப்பட்ட உணர்வுகளின் தனிமை, உள்ளத்தை மரத்துப் போகச் செய்த மதுவின் போதை, நிலவின் பேராதிக்க ஒளி, காதலன், காதலி அருகாமை இவை அனைத்தும் இதுகாறும் தெரிந்திராத, தேடிக் காணாத காமத்தை உச்சநிலைக்கு அழைத்துச் செல்கின்றன. விரகதாபம் கொண்ட நடவடிக்கைகளால், துணிச்சல் வரம்புகளைக் கடந்து செயல்படுகிறது. சிங்காரிக்கப்பட்ட தலைமுடியும், மலர்சரங்களும் சீர் கெடுகின்றன. இவ்விதம் மன்மதனும் மது அருந்தியவனாகச் செயல்புரிகிறான். அப்பெண்களின் எதிர்ப்பு உணர்வை மது செயலற்றுப் போக வைத்தது. காதலன் இழுத்த இழுப்புக்கெல்லாம் பணிய வைத்தது. இன்பத்தை முழுதுமாகத் துய்க்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தும், அவர்களால் காமக்

கேளிக்கையில் முழுதுமாக ஈடுபட முடியவில்லை. ஆனாலும் அவர்களுடைய செயல் அனைத்தும் மேன்மேலும் ஆனந்தப்படுத்து வனவாக இருந்தன.

இவ்விதமாக கந்தர்வர்களும் தேவ கன்னிகையரும் விரும்பி இணைந்து மன்மதனின் கட்டளைக்கு இணங்க நடந்துகொண்ட பொழுது, காலைப் பறவைகள் கலகலவென இசை எழுப்ப, இரவு முடிவுக்கு வந்தது. ஏனோ அவ்விரவு வெகு விரைவாக வந்தது போலத் தோன்றியது. காமத்தின் வரம்பைத் தொட்டுக் களைத்து உறக்கத்தில் ஆழ்ந்திருந்த போதிலும், பறவைகளின் இன்னிசை அவர்களை விழிக்கச் செய்ய, காதலியரிடமிருந்து பிரிவு தவிர்க்க முடியாதது எனப் புரிந்து கொண்டவர்களாகக் காதலர்கள் மீண்டும் காமலீலையில் மிகுந்த ஆர்வத்தால் ஈடுபடத் தொடங்கினர். ஒரு மென்காற்று — மலர்சரங்கள், மது, வாசனைத் திரவியங்கள் இவை அனைத்தினுடைய நறுமணத்தையும் பரப்புவதாக — அவ்வனிதை யரின் களைப்பைப் போக்கி, இதம் அளிப்பதுபோல வீசியது. மலர்ந்த புஷ்பத்தின் இதழ்கள் போன்ற பெண்களின் அதரங்கள் மதுவின் இனிய மணத்துடன் கூடியதாக வெடவெடத்தன. உறக்கத்துடன் கூடிய, சற்றே திறந்த இமைகளுடன் விழிகள் சிவந்திருந்தன. முகப்பூச்சு கலைந்து காணப்பட்டது. ஆகவே, அப்பெண்களின் அழகை மதுவின் நறுமணம் மட்டுமே தொற்றி நிலைக்கச் செய்தது. பகல் வந்ததும், காமக் களியாட்டத்தால் உடலில் ஏற்பட்ட கீறல்களும், நகக்குறிகளுமே இன்ப இரவை நினைவுக்குக் கொண்டு வருவதாக, மனதுக்கு ஆறுதல் அளிப்பனவாக இருந்தன.

மங்கையர் அர்ஜுனனை நேருக்கு நேர் காணல்

அதன்பின், அந்தக் காலை நேரத்தில் சுகிர்த அழகுடன் விளங்கிய அப்பெண்கள் கூடாரங்களைவிட்டு வெளிவந்து, தளுக்கிக் குலுக்கியபடி, தவயோகத்திலிருந்த அர்ஜுனனின் கவனத்தைக் கலைத்து ஆசைகாட்டி அழைத்துச் செல்ல நடந்தனர். வானவீதியில் எந்த அளவு எளிதாக அவர்களால் நடைபயில முடிந்ததோ, அதே போன்று நிலத்திலும் நடக்க முடியும் என்றாலும், ஸ்தனபாரமும், துடை இறுக்கமும் தடைகளாக இருந்தன. நடைபாதையை பாதங்களில் இட்டிருந்த செம்பஞ்சுக் குழம்பு அடையாளம் செய்தது. பசும் புற்கள் சிவந்தன. எண்ணற்ற இந்திர கோபப் பூச்சிகள் பாதையில் சூழ்ந்துள்ளதாகத் தோன்றியது. பாதசரங்கள் மேகலைமணிகளுடன் சேர்ந்து ஒலித்தன. அதன் எதிரொலி குகைகளுக்குள்ளும்,

மரங்களுக்கு இடையிலும் புகுந்து பரவி, அன்னப்பறவைகள், கொக்குகளின் கூட்டம் ஆகியவற்றைத் திகைக்க வைத்தது.

தின்னப்படுவதற்காகவே படைக்கப்பட்ட பிராணிகளுடன் அவற்றைத் தின்னும் பழக்கமுடைய விலங்குகள் இணைந்து திரிந்து, பழங்களையும், இலை தழைகளையும் உண்பதைக் கண்டதும், அர்ஜுனன் தவம் மேற்கொண்டிருக்கும் இடம் இதுதான் என்பது தெரியவர, அப்பெண்களின் நெஞ்சங்களை அச்சம் கௌவியது. அர்ஜுனன் தவம் இயற்றும் காட்டுப் பகுதியை அவர்கள் அடைந்தபோது, அவர்கள் தங்கள் வலிமையை இழந்தவர்கள் ஆயினர். தவத்தால் அசாதாரண சக்தி பெற்றவர்கள் சாதிக்கக் கூடாதவை ஏதுமில்லை.

அவ்வனிதையர் அர்ஜுனனைக் கண்டனர். அவனுடைய உடலுறுப்புக்கள் இளைத்திருப்பதாலும், மற்றபடி அவை உறுதியாகக் காணப்பட்டன. அவன் தன் கைகளில் அஸ்திரங்களை வைத்திருந்தான். இவ்விதமாக அவன் ஒருபக்கம் துறவுநிலையை உயர்த்திக் காட்டுபவனாகவும், மறுபுறம் ராஜ கம்பீரத்துடனும் இருந்தான். முழுநிலவைப் போலத் தன்னைச் சுற்றி பிரபையை ஏற்படுத்தி, விண்வெளியைப் பிரகாசப்படுத்துபவனாகவும், காண்பவர் வியக்கத்தக்கவனாகவும் காணப்பட்டான். ஒரே மலைமுகட்டில் அவன் அமர்ந்திருந்தாலும், சுற்றிலுமுள்ள முகடு களிலெல்லாம் அவன் உட்கார்ந்திருப்பதாகப் பட்டது. தலைமுடி நீண்டு சடைத்திருக்க கங்கைக் கரையில் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தவன் எதிரே ஹோம குண்டத்தில் வேண்டியதை வழங்கும் நெருப்பு எரிந்து கொண்டிருக்க, அவனே அந்த யாகத் தீயாக இருந்தான். உடல் இளைத்திருந்தாலும், பாறை போன்று உறுதியாகத் தெரிந்தான். ஆழ்நிலை தியானத்தில் மூழ்கி இருந்தாலும, வெல்ல முடியாதவனாக இருந்தான். தனிமையில் இருந்தாலும், பலரால் சூழப்பட்டடவன் போல காணப்பட்டான். ஏதுமற்ற ஏழ்மை நிலையை எய்தவனாகத் தோன்றினாலும், மனத்தெம்பிலும், உடல் வலுவாலும் அவன் இந்திரனைப் போல செல்வச் செருக்கோடு இருந்தான். உன்னத நிலையை அடைந்தவனாகவும், மூன்று உலகங்களையும் காக்கும் திறமை கொண்டவனாகவும், அனைத்து வீர்யம், வலிமைகளையும் மீறி உயர்ந்து எழுந்தவனாகவும் காணப்பட்ட அவனுக்கு அத்தவ முயற்சியால் மேற்கொண்டு எவ்விதப் பயனும் இருக்க வாய்ப்பு இல்லை என அப்பெண்கள் நம்பினர். ஏனெனில் தவத்தின் மூலம் அவன் இன்னும் பெற இருப்பது யாதாக இருக்கமுடியும்? மன உறுதியற்ற கீழ்த்தர மக்களை அவர்களாலும் இதுகாறும் வசீகரிக்க முடிந்தது. ஆனால் இப்போது அப்பெண்கள் தங்களால் வெல்ல

முடியாத எதிரியைச் சந்திக்க இருக்கிறார்கள். இப்படி ஒரு செயலுக்கான வாய்ப்பு தங்களுக்குக் கிட்டியுள்ளது குறித்து அவர்கள் செருக்குற்றனர். அர்ஜுனனின் கவனத்தைத் திசை திருப்ப வந்தவர்கள் அவனுடைய இளமையால் கவரப்பட்டு, அவன் மீது பதித்த பார்வையை விலக்க இயலவில்லை. இவ்விதமாக எதிர்பார்த்ததற்கு மாறான விவகாரங்கள் நடைபெறத் தொடங்கின.

பருவகாலங்கள் வருகை

பிறகு தேவகன்னிகையரின் கட்டளைகளுக்கு இணங்க, கந்தர்வர்கள் திடீரென யாழ்களையும் மத்தளங்களையும் இசைக்கத் தொடங்கினர். அதேபொழுதில் ஆறு பருவநிலைகளும் அங்கு எழுந்தன.

நீர்மிகுந்த மேகக் கூட்டங்களால் வானம் மறைந்தது. மின்னல் கொடிகள் திசைக்கு திசை பாய்ந்து கோலாகலக் காட்சியைத் தோற்றுவித்தன. எழுந்த இடி முழக்கங்கள் வானின் மூலைமுடுக்கெல்லாம் எதிரொலித்தன. அதன்பின் மழை கொட்டத் தொடங்கியது. அர்ஜுனனின் குடிலைச் சுற்றி வளர்ந்திருந்த மாலதிக் கொடிகளில் மலர்கள் இதழ் விரிக்கத் தொடங்கின. திக்குகள் அனைத்திலும் அர்ஜுன மலர்கள் புஷ்பித்தன. காற்று வெளி நறுமணம் உடையதாயிற்று. சாந்தமாக இருந்த விலங்குகள் கூட்டம் பொறுமை இழந்தன. அவை புத்துணர்வு பெற்று எழுந்தன. நன்கு பழுத்த நறுமணமுள்ள சிவந்த கோவைப் பழங்களை ருசிபார்த்த குயில்கள் எல்லையற்ற மகிழ்ச்சிக்கு உள்ளாயின. அவற்றின் கூவல் மேன்மேலும் இனிமையுடையதாக ஆயிற்று. ஆனந்தமாக இருந்தவர்களை மட்டும் அல்லாது துயரத்துடன் இருந்தவர்களின் நெஞ்சங்களையும் அக்கூவல்கள் பற்றி இழுத்தன. கதம்ப மலர்களின் வாசம் காற்றுடன் கூடி நறுமணத்தைப் பரப்பியது. மயில்களின் இனிய அழைப்பு நான்கு திக்குகளிலும் எதிரொலித்தது. பொதுவாக சாதாரண மக்களின் நெஞ்சங்கள் இச் செயல்களால் கவர்ந்து இழுப்பதாக அமையும். ஆனால், அர்ஜுனனை இவை பாதிக்கவில்லை. மாமனிதர்களின் ஒருமுகமான உள்ளத்தை அவ்வளவு எளிதில் கெடுத்துவிட முடியாது.

பொழியும் மழையின் புதுமணப் பெண்ணாக இலையுதிர்காலம் வந்தது. தாமரைக் கொடிகளின் தண்டுகளை அவள் வளைகளாக அணிந்திருந்தாள். அல்லிப் பூக்களை ஆடைகளாகப் பூண்டிருந்தாள். நாணல்களை அம்புகளாக ஏந்திக் காணப்பட்டாள்.

அழகிய மயில்களின் மதுரமான அழைப்புகள் அன்னப் பறவைகளின் கவர்ச்சிகரமான கத்தல்களுடன் கலந்து மேன்மேலும்

இனிமை பயப்பதாக இருந்தன. நீர்நிலைகளிலுள்ள அல்லிமலர் குவியல்கள் மீது கதம்பமலர் பொழிய நீர்நிலைகளின் எழில் மேலும் கூடியது. உயர்ந்தவைகள் இணைய இயல்பாகவே அவை உயர்தரமான மேன்மைக்கு வழிவகுக்கின்றன. கதம்ப மலர்களின் மகரந்தங்களைத் தங்களுள் நிரப்பிக் கொண்ட தேனீக்கள் தூசுபடிந்த கேதக மலர்களைத் தொடவில்லை. காம்புகளில் மட்டுமே கருநீலமாகக் காணப்பட்ட ஆசன மலர்கள் இப்போது முழுதும் அந்நிறம் ஆகிவிட, தேனீக்கள் அம்மலர்களை தேனுக்காக மொய்க்கத் தொடங்கின. நீர்நிலை ஓரங்களில் வளர்ந்துள்ள பசுமையான புல்வெளிகளில் பந்து ஜீவமலர்களை விட்டுவிட்டு பலாசமலர்களைத் தேர்ந்தெடுத்த கொழுத்த இந்திரகோபப் பூச்சிகள் அம்மலர்களைப் போலவே சிவந்து காணப்பட்டன.

இச்சமயம் ஹேமந்தருதுவானது காலம் கெட்டு வந்தாலும், அதன் மாட்சிமைக்குக் குறைவு ஏதுமில்லை. பிரியங்கு மலர்க் குவியல்கள் காணப்பட்டன. குந்தள மலர்களின் மணம் காற்றோடு கலந்து வந்தது. மூடுபனி அடிக்கடி எழவில்லை. லவலிக் கொடிகளில் பூக்கள் மலர்ந்தன. லோத்ர மலர்களின் நறுமணத்தைத் தாங்கிய காற்று எங்கும் பரந்து விரிந்தது. எங்கெங்கு காணினும் கோலாகலம், கொண்டாட்டம். இருந்தாலும் அர்ஜுனன் இவற்றால் பாதிக்கப்படவில்லை. வெற்றிக்காக உழைக்கும் ஒருவர் நேர்வழியிலிருந்து பிறழ்வதில்லை.

காமனின் ஒரே நண்பனான குளிர்காலம் வந்தது. ஹேமந்த ருதுவுக்கு விடைகொடுத்து அனுப்பப்பட்டது. இளவேனிற்காலம் தொலைவில் இல்லை. பூக்கும் மாமரங்கள், லேசான பனித்திரை, உறக்கத்திலிருந்து விழிப்பது போன்ற சிந்துவாரப் பூக்கள் சில ஆகியவையே குளிர்காலத்துச் செல்வங்கள். பூக்கும் மலர்களிடம் செல்வதற்காக இளவேனில் பெண் மலர்களுடன் கூடிய மாமரக் கிளை ஒன்றைக் கையில் பிடித்துக் கொண்டு, ரீங்காரமிடும் தேனீக்கள் கூட்டம் கால் சதங்கைகளாக ஓசையிட, தாமரை மலர்கள் ஒவ்வொன்றின் மீதும் கால்களை வைத்து மெள்ள நடந்து வந்தாள். மெல்லிய அதரங்களைக் கொண்ட குரவகர் மணப்பெண்கள் புன்னகைத்தனர். அவர்களுடைய அழகை ரசித்தபடி அசோக மலர்களின் மீது மன்மதன் அமர்ந்திருந்தான். மீண்டும் மீண்டும் தென்றல் தேனீக்களை விரட்டின. ஆகவே அவை ஒரு மரக்கிளையில் அடர்த்தியான பூச்செண்டாக அமர்ந்தன. வசீகரம் மிக்க முகம் போன்றிருந்த ஒரு தாமரை மலர் மீது அவை சுற்றிச் சுற்றிப் பறந்தபோது, அத் தேனீக்கள் கலைந்த தலைமுடிபோலத் தோன்றின. சிலுசிலுக்கும் இதழ்களைக் கொண்ட சாலக்கொடியின் மலர் ஒன்றை அதன் நறுமணம் நிறைந்த தேனுக்காக ஒரு தேனீ, பொறாமை கொண்ட

காதலன் முத்தமிடுவது போல நெருங்க, அம்மலர் மென்காற்றில் ஆடியதானது சினத்தோடு கைகால்களை ஆட்டுவது போலத் தோன்றியது.

ஆனால் இவை அனைத்துமே அர்ஜுனனின் கவனத்தைத் திருப்புவதாக இல்லை.

கோடைகாலம் வந்தது. வெண்மையான மல்லிகை மலர்கள் இளவேனிலைப் பார்த்துக் கோடை நகைப்பது போலப் பூத்தன. ஏனெனில், இயற்கையின் இச்செயலும் அர்ஜுனனைக் கவராது தோல்வி பெற்றது. உள்ளார்ந்த முரண்பாடு இருக்குமாகில், எந்த ஒரு பாதுகாப்புப் படையாலும் வெற்றிகொள்ள இயலாது. பருவகாலங்கள் தங்களுக்குள் முரண்பட்டு இருந்தனவாதலால், அவை இணைந்து அர்ஜுனனை திசை திருப்ப முடியவில்லை. கந்தர்வர்கள் வாசித்த குழல் இசையும், பருவகாலம் ஒவ்வொன்றின் தனிக் கவர்ச்சியும் அர்ஜுனனிடம் செயலாற்ற முடியாது போயிற்று. ஆனால் அப்பருவங்கள் தேவகன்னிகையரின் இதயங்களை எங்கோ அழைத்துச் சென்றன. ஆகவே அவர்களின் கண்கள் தாமரைப் பூக்களின் மலர்ச்சியிலோ அல்லது யூதிகா, மல்லிகை பூங்கொத்துக்களிலோ அர்ஜுனனின் ஒவ்வொரு உடல் உறுப்பிலும் காணும் இதமான வசீகரத்தைக் காண முடியவில்லை. அவ்வணிதையர் வெற்றிகொள்ள வந்தார்கள்; ஆனால் வெற்றி கொள்ளப்பட்டனர். அவர்கள் நடனமாடினர்; ஆயினும் கண்களில் பாவம் இல்லை. கைகளில் பிடித்த அபிநய முத்திரைகள் நாட்டிய சாஸ்திரத்துக்கு புறம்பாக அமைந்தன. ஜதி ஒவ்வொன்றிலும் தவறினர்.

அர்ஜுனனைக் கண்டதும் விரகதாபம்

ஆனால் அவர்களுடைய பார்வை அர்ஜுனன் மீது பட்டதும், அப்பெண்கள் அசைவற்று நின்றனர். செம்பஞ்சுக் குழம்பில் எழுதப்பட்ட அவர்களுடைய பாதங்களைக் கண்ட தேனீக்கள் அவை சிவந்த தாமரைகளோ என மயங்கி மொய்த்தன. இங்கும் அங்குமாக விழுந்து குவிந்து கிடந்த கதம்ப மலர்கள் பதியும் காலடிகளில் நசுங்கின. இதனால் பாதங்களின் செம்பஞ்சு ஒப்பனை கலைந்து கலங்கி வழிய, நடைபாதை எங்கும் செஞ்சாறு தொடர்ந்து பரந்தது. அப்பெண்களின் காமவேட்கை உருவெடுத்து வந்ததுபோல நடைபாதை தோற்றம் அளித்தது. நாணம் கொண்ட ஒருத்தி அர்ஜுனன் எதிரில் தன் தோழியின் பின்னே மறைந்து கொள்ள, அச்செய்கை அவளுடைய உள்ளக்கிடக்கையை முழுதுமாக வெளிக் காட்டிற்று. மறைக்கப் பார்க்கும்போதுதான் காம உணர்வின் முழுவீச்சும் வெளியே தெரிந்து விடுகிறது. காற்று சுழன்று ஒரு பெண்ணின்

உள்ளாடையை விலக்கி அவளுடைய துடைகளை வெளியே காட்டிவிட, அவள் வெகுவாகக் கலவரம் அடைந்தாள். பொறாமை கொண்ட அவளுடைய தோழியர் அந்த அழகை அதிசயத்தோடு பார்த்தனர். ஆனால் அர்ஜுனனிடம் இச்செய்கை சிறிதும் எடுபடவில்லை.

ஒருத்தி அர்ஜுனனிடம் தன் தோழியை தூது அனுப்பினாள். தோழி சொன்னாள்:

''காமனின் கணையால் வாடிய என் தோழி என்னிடம், 'என் அன்புக்கு உரிய அந்தத் துறவியை என்னிடம் அழைத்து வா' என்று கூறி என்னை அனுப்பி வைத்திருக்கிறாள். உண்மையில் தன் இதயம் தன்னிடம் இல்லை என்ற விவரம் அவளுக்குத் தெரியாது. அதை ஏற்கெனவே அவள் தங்களிடம் அளித்து விட்டாள். விளக்கமாகத் தங்களிடம் சொல்வதற்குத் தகவல் வைத்திருக்கிறாள். ஆனால் உணர்ச்சி வசப்பட்டிருப்பதாலும், வருத்தத்தாலும், அவளால் பேச முடியவில்லை. நறுமண மலர்களால் ஆன மஞ்சத்தைத் துறந்து, இலை தழைகள் கொண்ட தரையில் படுக்கிறாள். தரையும் அவளுக்கு ஆதரவு தருவதில்லை. ஆகவே அவள் தங்களுடைய குளிர்ச்சியான மடியில் தலை வைத்துப் படுக்க விரும்புகிறாள். புண்ணியாத்மாவே, சோர்ந்து களைத்த அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றுவீராக. இல்லாவிடில் அவள் மரிக்க நேரிடும். தவம் இயற்றுவது வெகு எளிது; ஆனால் மெய்யான நேசமும், காதலும் கொண்ட ஒருத்தி கிடைப்பது அரிது. ஆகவே, கொடுமைக்காரனாக நடந்து கொள்ளாதீர்கள். அவள் மீது கருணை காட்டுங்கள். உண்மையான முனிபுங்கவரின் மனம் மிருதுவாக, தயையுடன் கூடியதாக இருக்கும். தானே வரும் அதிர்ஷ்டத்தை மூடனே தவிர்ப்பான்.''

இன்னொருத்தி வந்தாள். கவர்ச்சிகரமான தன் பின்னழகோடு தரை பெருக்கும் தலைமுடியை ஒரு கையிலேந்தி, காமனின் மிகச் சக்திவாய்ந்த வெற்றி தரக் கூடியதான ஆயுதமான கடைக்கண் பார்வையை வீசியபடி வந்தாள்.

மற்றொருத்தி முன்வந்தாள். காமப் பார்வை கொண்டு, சற்றே மெலிந்தவளாகக் காணப்பட்டாலும் யானையின் மத்தகத்தைப் போன்று பருத்த ஸ்தனங்களின் பாரம் தாங்காது கூன் விழுந்தவளாக வந்தாள். ஆனால் அர்ஜுனன் எதிரே, மன்மதன் கையிலிருந்த வில்லில் இருந்து அம்பு புறப்பட்டுச் சென்றபிறகு அவ்வில் இயல்பான நிலைக்கு வருவதுபோல கையில் வைத்திருந்த மலர்களுடன் கூடிய மரக்கிளையுடன் நின்றாள்.

வேறு ஒருத்தி தன் அரையாடை நழுவுவதைக் கண்டு, அதை இடுப்பில் பற்றிப் பிடித்தபடி நின்றாள். அங்கிருந்து விரைவாகச்

சென்றுவிட வேண்டும் என்று அவள் நினைத்தாலும், முன்னே தொங்கும் முடிச்சு அவிழ்ந்த கயிறு அவளை அப்படி நகரவிடாமல் தடுத்து நிறுத்தியது.

''மனதை அடக்கி வசப்படுத்தும் சக்தி தங்களுக்கு இருக்குமாகில், எதற்காக வில்லை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதும் அறியாத பித்தரே, இன்பம் துய்க்கத்தான் தாங்கள் விரும்புகிறீர்கள்; வீடு பெறுவது அல்ல தங்கள் நோக்கம். வேறு எவளோ ஒருத்தி உங்கள் மனதில் இருந்து கொண்டு ஆட்டிப் படைக்கிறாள். அதனால்தான் எங்களைத் தாங்கள் ஏற்க மறுக்கிறீர்கள்'' என்று ஒருத்தி பொறாமை கொண்டவளாகத் தன் உதடுகள் துடிக்கக் கூறினாள். பிறகு பித்தம் பிடித்தவள் போன்ற பார்வையுடன் அவள் அர்ஜுனனை நோக்கியபடி தன் வெட்கத்தைவிட்டு, காதில் அணிந்திருந்த தாமரை மலரைக் கையில் எடுத்து அவனுடைய மார்பில் அடித்தாள்.

அம்மகளிரின் செய்கைகள் பரிதாபகரமாக இருந்தன. தங்களுடைய நாணம், மானம் அனைத்தையும் துறந்தனர். கண்ணீரும் விட்டனர். அந்த அளவே அவர்களால் செய்யமுடியும். மேற்கொண்டு ஏதும் செய்ய இயலாதவர்கள். இவ்விதம் தோல்வி கண்ட போதும், அந்த மாதர் தங்கள் கடைக்கண் பார்வையாலும், நாணத்தாலும், மென்நடத்தையாலும், களை இழந்த முகத்தாலும், வெறுத்துப் போன வகையாலும், உயர்ந்து காணப்பட்டனர். எந்த ஒரு சூழ்நிலையிலும் காமன் வனிதையருக்கு அழகு ஊட்டமுடியும். அன்னப்பறவை களையும் வெட்கச் செய்யும்படியான அவர்களுடைய நடையும், பருத்த துடைகளைத் தூக்கி வைத்து நடப்பதால் உண்டாகும் நலிவை உணர்த்தும் விழிகளின் சுழற்சியும், மன்மதனின் பாணங்களின் தாக்குதலால் ஏற்பட்ட குளறுபடியான பேச்சும், பார்வையில் அச்சமும், வியப்பும், காதல் நோக்கால் ஏறி இறங்கும் புருவங்களும், இவை அனைத்தும் அந்த தேவமகளிரின் எண்ணத்தைப் புரியவைத்து அவர்களை ஒதுக்க மனவலிமை தராதவை. ஆனால் அர்ஜுனனிடம் இவை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவனவாக இல்லை. அவன் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான்.

ஆகவே அப்பெண்கள் சோர்ந்து போய் தோல்வி கண்டு தலைகுனிந்தவர்களாக கந்தர்வர்களுடன் தேவலோகம் திரும்பிச் சென்றனர்.

மாறுவேடத்தில் இந்திரன் தோன்றுகிறான்

தேவலோகத்திலிருந்து வந்த கன்னிகையர் சென்றபிறகு, தேவர்களின் தலைவனான இந்திரன் அர்ஜுனனின் மனக் கட்டுப்பாட்டைக் கேட்டு மிக மகிழ்ந்தவனாக மாறுவேடத்தில்

அர்ஜுனனின் குடிலுக்கு வந்தான். நிமிர்ந்து பார்த்த அர்ஜுனன், காண்பதற்கு முனிவர் போலத் தோற்றம் அளிக்கும் ஒருவர் நெடும் பயணம் காரணமாகக் களைப்புற்றவராகத் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். சடைத்த அவருடைய முடி சாம்பல் பூத்து சுற்றிலும் ஒளிபரப்பியது. ஆகவே நிலவின் ஒளிரேகைகளுடன் கலந்த சூரியனின் சிவந்த ஒளிக்கதிர்களுடன் கூடிய மாலைநேர ஆகாயம்போல அவர் காணப்பட்டார். சாம்பல் பூத்து ஓரங்கள் சுருங்கிய இமைகள் அவருடைய விழிகளை மூடி இருந்தன. கொட்டிய பனியால் பாதிக்கப்பட்டு, பளபளப்பு இழந்த இதழ்கள் கொண்ட தாமரை மலர்களுடன் கூடிய குளம்போல அவர் இருந்தார். தன்னுடைய தேஜஸ் மிகுந்த உடல் உறுப்புகளை அசைவித்து நடமாட முடியாத நிலையில் காணப்பட்டார். கையில் தடி கொண்டு, அதன் மீது தன் உடல் பளுவைச் சாய்த்தபடி, நோயுற்றவன் மனைவியின் அணைப்போடு நடப்பதுபோல வந்தார். மாறுவேடத்தில் இருந்தாலும், உலகம் முழுமைக்கும் ஒளி அளிக்கும்படியாக இருந்த அவரது உடலிலிருந்து சிறுமேகத்தால் மறைக்கப்பட்ட கதிரவனுடையது போன்று ஒளி வெளிப்பட்டது. வயதான உடல் தளர்ந்து காணப்பட்டாலும், அவ்விதமானதொரு உடல்வாகு அரிதானது மட்டும் அல்லாது, அசாதாரணமானது. தன் வருகையால் அர்ஜுன னின் பர்ணசாலைக்கு அவர் வனப்பு ஏற்படுத்தினாலும், தன் பிரசன்னத்தால் அச்சத்தை உண்டாக்குபவராக இருந்தார். ஆனால் அர்ஜுனனின் நெஞ்சம் ஏனோ அவர்பால் பாசத்தைப் பொழிவதாகத் தோன்றியது. முன்பின் அறியாதவராக இருந்தால்கூட, நேசமுள்ள ஒருவரிடம் ஆழமான கவர்ச்சி இருக்கிறது.

அர்ஜுனனை இந்திரன் தடுக்கிறான்

பிறகு தக்கபடி வரவேற்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்ட இந்திரன் அர்ஜுனனிடம் சொன்னான்:

''இந்த இளம்வயதில் நீ தவம் இயற்றுவதில் ஈடுபட்டிருக்கிறாய். எங்களைப் போன்ற வயதானவர்கள் கூட இன்பத்தை நாடித் தவறிவிடுகின்றனர். உன்னுடைய போற்றத்தக்க உடல்வாகு தவம் செய்ததன் பயனாக மேலும் தேஜஸ் பெற்று உயர்வடைந்துள்ளது. இது மகிழ்ச்சிகரமான சமாச்சாரம். உடல் அழகுள்ளவர் அப்படி ஒன்றும் காணக் கிடைக்காதவர் அல்லர். ஆனால் பண்பாடு உள்ளவர் அப்படி அல்ல. இளமையின் துடிப்பு இலையுதிர்காலத்து மேகநிழல் போன்று சிறிது காலமே நிற்கக்கூடியது. இன்ப நுகர்ச்சி தொடக்கத்தில் ஆனந்தம் தரும். காலக்ரமத்தில் அது துயரை ஏற்படுத்தும். ஒவ்வொரு உயிரும்

அது பிறந்த நேரத்திலிருந்து துன்பத்தை விடாமல் சந்திக்க நேர்கிறது. ஆகவே உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு முக்திபெறவே ஒவ்வொரு அறிஞனும் பாடுபடுகிறான். நல்லுணர்வு கொண்ட தவநோக்கம் உன்னிடம் எழுந்துள்ளதால், உன் நெஞ்சம் தூய்மையுடன் இருந்தாக வேண்டும். ஆனால் உன்னுடைய பொருத்தமற்ற ஆயுதக் கவசம் என்னுள்ளத்தில் ஐயத்தை ஏற்படுத்துகிறது.

நீ தவம் இயற்றுகிறாய். மான்தோல் அல்லது மரவுரி தரித்திருக்க வேண்டியவன் நீ. ஆனால் போருக்கு சன்னதம் ஆகும் ஒருவனைப் போலஆயுதங்கள் தரித்துக் காணப்படுகிறாய். உடல் மீது உனக்குப் பாசம் ஏதும் இல்லை என்று தீர்மானித்தால், உன்னைப் பாதுகாப்பதற்காக நீ ஆயுதங்கள் ஏந்தவில்லை என முடிவு செய்து கொள்ளலாம். எந்த ஒரு உயிரையும் அழிக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு இருக்க முடியாது. ஆனால் இரண்டு பெரிய அம்புறாத் தூணிகள், பயங்கரமான இந்த வில், சாவின் நீண்ட கை போன்ற வாள் ஆகிய நடுங்க வைப்பதான ஆயுதங்கள் உன் தவத்தின் ஆழ்நிலை குறித்து ஏற்பதாக ஏதும் கூறுவனவாக இருக்கின்றனவா, என்ன? விரோதிகளை வெற்றி கொள்வதற்காகவே அவற்றை நீ தரித்திருக்கிறாய் என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. யதார்த்தத்தில், முக்தி பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு செய்கை வன்முறைக்காகப் பயன்படும்போது, அருந்துவதற்காக இருக்கும் தெளிந்த நீரை கலக்குவது போன்ற குற்றத்துக்கு ஒருவன் இலக்காகிறான். செல்வத்துக்கும், இன்பத்துக்கும் பேராசைப்படுவது என்பது அனைத்துக் கேடுகளுக்கும் காரணமாக அமைகிறது. உன் இதயத்தில் அப்படிப்பட்டனவற்றுக்கு இடம் இருக்கக்கூடாது. தேர்ந்த அறிவு உதிப்பதை தடுத்து நிறுத்தும் தவிர்க்க முடியாத சக்தி அது. அனைத்து ஆறுகளும் கடலை நோக்கிச் செல்வதைப் போல, உயிர்களை அழித்து, தானும் அழியும்படியான நிலைக்கு ஒருவனை ஆபத்துக்கள் இட்டுச் செல்லக் காத்திருக்கின்றன. கடினமாக, கடுமையாக உழைத்துத் தான் செல்வத்தை அடைய முற்பட வேண்டும்.

சேர்க்கப்பட்ட செல்வத்தைப் பாதுகாப்பது என்பது மேலும் கடினம். செல்வந்தன் என்றுமே அச்சத்துடன் வாழ்கிறான். இவ்விதமாக செல்வம் என்பது துயரத்துக்கு வழிவகுக்கிறது. மாறுவேடம் கொண்ட சாபம் செல்வம். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாட்டை திருமகளானவள் பார்ப்பதில்லை. எப்போதுமே ஒருவர் அவளுடைய அன்பைப் பெற்றவராக இருக்க முடியாது. ஆனால் என்ன காரணத்தினாலோ மக்கள் அவள் பின்னே ஓடிக் கொண்டிருக்கிறார்கள். தீயோர்களை விட்டு திருமகள் விலகவேண்டும் என்பது நியாயம்தான். ஆனால் நல்லவர்களைத் துறந்து,

யோக்கியமானவர்களை விட்டு அவள் விலகுவது என்பது ஏற்கக்கூடியதா, என்ன?

உனது விரோதிகளையும் நீ துன்புறுத்தக் கூடாது. உன்னைப் போன்று, உற்றார் உறவினர்களிடமிருந்து பிரிந்து இருப்பது என்பது அனைவருக்கும் துயரம் அளிப்பதுதான். உற்றாருடன் இணைவது என்பது காலியான இடத்தை நிரப்புவதாகவும், திண்டாட்டத்தைக் கொண்டாட்டம் ஆக்குவதாகவும், ஏமாற்றத்தை ஆதாயமாகச் செய்வதாகவும் அமைகிறது. ஆனால் ஒருவன் உற்றாரிடமிருந்து பிரிக்கப்படும்போது, இன்பம் துன்பமாகவும், அரிதான வாழ்க்கை துயர் கொண்டதாகவும், மக்கள் சூழ்ந்திருந்தாலும் தனிமைப்பட்டு விட்டாற்போலவும் ஆகின்றன. இவற்றை எல்லாம் நீயே உணர்வாய். ஆகவே துன்பங்களை நீயே உதறித் தள்ளுவதுபோல, மற்றவர்களுக்கு அதே துன்பங்களைத் தருபவனாக நீ இருக்கக்கூடாது.

வாழ்க்கை என்பது கொஞ்சகாலம். செல்வம் மனிதனிடம் இருப்பதுபோல அது சிறிது காலம் மட்டுமே அமைகிறது. ஆகையால் நல்வழியிலிருந்து பிறழாதே. தேர்ந்தவன் தவறுவதில்லை. ஏ முனியே! போருக்கானவற்றை அடையும் பேராசையை விட்டுவிட்டுப் புனிதமான தவத்தின் பெருமை குலைய, தீயனவற்றுக்கு அதைப் பயன்படுத்தாதே. வெற்றி பெற்றாக வேண்டும் என்று நீ விரும்புவாயாகில், பிறவிகளைக் கடந்து, புலனிச்சைகளை விட்டு இருக்க நீ ஏன் முயலக்கூடாது? அவ்விதம் செய்தால், இந்த உலகம் முழுதும் தானே உன் காலடிகளில் வந்துவிழும். இன்றைய இன்பம் நாளைய நினைவில் மட்டுமே நிற்பது. அது கனவுபோன்று மாயத் தோற்றம் கொண்டது. அப்புலனாசையை நீ ஏன் வென்று விடக்கூடாது? இன்பம் துய்ப்பது என்பது அந்நேர ஆனந்தத்தை மட்டுமே தரும். ஆனால் அத்தகைய ஆனந்தங்கள் முடிவில் துயரத்தைத் தருவனவாக இருக்கின்றன. அவை உன்னைவிட்டு எளிதில் அகன்றுவிடும். ஆனால் அந்த இன்பங்களை உதறித் தள்ளுவது என்பது நீ முயன்றாலும் முடியாத செயல். விரோதங்களில் அவை மிகக் கொடிய விரோதம் கொண்டவை. இந்தத் தனிமையான இடத்தில், தேவலோகத்து ஆறு தன் அலைகளால் அவ்வப்போது தூய்மைப்படுத்தும் இந்த நிலத்தில் உன்னால் நிச்சயமாக முக்தி பெற இயலும். ஆகவே, உன் ஆயுதங்களைத் துறப்பாயாக.''

அர்ஜுனன் விடை அளிக்கிறான்

இந்திரன் தன் பேச்சை நிறுத்திக் கொண்டதும், பணிவுடன் அர்ஜுனன் கூறலானான்.

''ஐயா, தாங்கள் வெகு உன்னதமாகப் பேசினீர்கள். தங்கள் சொற்கள் மனதுக்கு இதம் அளிப்பதாகவும், பொருள் பொதிந்தும், அறிவு சார்ந்தவையாகவும் இருந்தன. குறைபாடுகள் இன்றி, சாத்திரங்களுக்கு முரண்படாதவை அவை. உண்மையில் எல்லாராலும் இத்தகைய ஒரு சொற்பொழிவை ஆற்றி இருக்க முடியாது.

இருந்தாலும், என்னை இப்படி ஒரு தவத்தை மேற்கொள்ளும்படி எது தூண்டியது என்பதான விவரத்தைத் தாங்கள் அறிய வாய்ப்பு இல்லை. அதனால்தான் முக்தி என்னும் நன்மார்க்கத்தைப் பெறும் வழியைத் தாங்கள் எனக்கு போதனை செய்கிறீர்கள். ஒளிரும் நட்சத்திரங்களைக் கொண்ட வானத்தின் அழகை எப்படி பகல் பெற முடியாதோ, அதே போன்று, நன்மை அளிப்பதாக இருந்தபோதிலும், தங்களுடைய அறிவுரையை மெய் என்று நான் ஏற்க முடியாதவனாக இருக்கிறேன்.

பாண்டு, குந்தி ஆகியோரின் மகன் நான். சாதியில் க்ஷத்திரியன். பந்துக்களால் நியாயமற்ற வகையில் நாடு கடத்தப்பட்ட யுதிஷ்டிரரின் சகோதரன் நான். வியாச மகரிஷியின் கட்டளைப்படி இந்திரனின் ஆசிபெற இத்தவத்தை மேற்கொண்டிருக்கிறேன். சூதாட்டத்தில் ஏமாற்றப்பட்ட யுதிஷ்டிரர் தன்னையும், தன் நாட்டையும், தன் சகோதரர்களையும், மற்றும் தன் மனைவியையும் பணயம் வைத்து அனைத்தையும் இழந்தார். விதியை எவரால் மாற்ற முடியும்! தன்னுடைய சகோதரர்களுடனும், மனைவியுடனும் அவர் தற்சமயம் துன்பம் அனுபவிக்கிறார்.

எங்களை மண் கௌவ வைத்து விட்டார்கள் விரோதிகள். எங்களது மேல் அங்கிகளையும் அவர்கள் கவர்ந்து கொண்டனர். பொதுவிடத்தில் எங்களைப் பற்றிக் கடுமையான, இகழ்ச்சி மிக்க சொற்களால் தூஷணை செய்தனர். மூத்தோர்களின் நடுவில் திரௌபதியை இழுத்து வந்து அவமானப்படுத்தினர். அப்போதே அங்கேயே சாவு தன் நாட்டுக்கு அவர்களை இழுத்துச் செல்ல கங்கணம் கட்டிக்கொண்டு விட்டதாக எண்ணுகிறேன். உண்மையான கணவன்மார் அச்சமயம் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ, அவ்விதம் நடந்து கொள்ளத் தவறியவர்களான எங்களைப் பார்க்காமல் இருப்பதற்காக திரௌபதி கண்ணீரால் தன் விழிகளை மறைத்துக் கொண்டாள். கொடிய கடும் சொற்களால் அவமானப் படுத்தப்பட்ட போதும், யுதிஷ்டிரர் அமைதியாக இருந்த காரணத்தால், எங்களால் ஏதும் செய்ய இயலவில்லை. உரிய காலத்தில் விரோதிகள் தண்டிக்கப்பட இருந்தாலும், அவமானப்படுத்திய நேரத்தில் அவர்கள் கண்டிக்கப்படவில்லை. (அத்தகைய கண்டனம் ஒப்பந்தத்துக்கு

முரணாக இருந்திருக்கும்.) கடலின் நீரும், உயர்ந்தோரின் நெஞ்சங்களும் வரம்பை மீற அச்சமுறுகின்றன. கிளர்ந்து எழுந்தாலும் அவை கட்டுப்பாட்டுடன் புனிதமாக இருக்க முயல்கின்றன. திருதராஷ்டிரரின் மக்களுடன் நட்புடன் இருக்க வேண்டும் என்ற எங்களது எண்ணமே துயரம் அனைத்துக்கும் காரணம்.

ஆபத்தான ஆற்றின் உடையும் கரையைத் தஞ்சம் அடைந்தாற்போல, தீயோரின் நட்பு துன்பத்தையே தருவதாக அமைகிறது. பொதுமக்களின் பழிக்கு அஞ்சாதவனும், நல்லவை, கெட்டவை குறித்துப் பகுத்தறியாதவனுமான ஒரு வஞ்சகனின் வழிமுறைகள் ஊழ்வினை போன்று புரிய மாட்டாதவை. அவமானப்பட்ட நேரத்தில் என் நெஞ்சம் உடைந்துவிடும் என எதிர்பார்த்தேன். ஆனால் மனவுறுதி காரணமாக அப்படி ஏதும் நேரவில்லை. ஆகவே எங்களை விலங்குகள் போலக் காட்டில் வாழும்படியாக விரோதி செய்து விட்டான். எங்களுக்குள்ளாகவே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க நாங்கள் வெட்கப்படுகிறோம். விவரம் அப்படி இருக்க, எங்களால் நண்பர்கள், உறவினர்களை நோக்க எவ்வாறு இயலும்? காலடியில் நசுங்கிய புல்லைப் போல, ஆதிக்கத்தையும் மாட்சிமையையும் கைவிட்ட ஒருவன் துச்சமாக மதிக்கப்படுகிறான். கடந்து செல்ல முடியாத உயர்ந்த மலையைக் கடக்க முயற்சிப்பது போல, உன்னத மனிதர்கள் மேன்மையை மேன்மேலும் பெற முயற்சிக்கிறார்கள். கௌரவத்தையும், மதிப்பையும் கைவிடாத ஒருவனை மட்டுமே அதிர்ஷ்டம் அணைத்துக் கொள்கிறது. அவனுடைய புகழ் நிலைத்து நிற்கிறது. அவனையே சத்தியசந்தன் என கருதுகிறார்கள். அவனே முழு முதலானவன் என எண்ணும்படியாக, அவனுடைய பிறப்புக்குப் பொருள் உண்டாகிறது. காடு அடர்ந்த மலை ஒன்றை அழிக்க ஒருவன் முற்படலாம். ஆனால் உயர்ந்த பண்புள்ளவன் அப்படிச் செய்ய மாட்டான். எவன் தன்னுடைய புகழின் வெண்தழலால் முழுநிலவையும் வெட்கும்படி செய்கிறானோ, அவன் தன் பரம்பரைப் பெருமையை நிலை நாட்டுபவனாகிறான். அதனால் தான் இந்த உலகமும் ரத்தினா பரணங்கள் நிறைந்ததாக நியாயப்படுத்தப் படுகிறது. (வசந்தரம்).

எனக்கு மகிழ்ச்சி வேண்டாம்; செல்வம் வேண்டாம்; முக்தியும் தேவை இல்லை. விரோதிகளின் மனைவியர் கைம்பெண்களான நிலையில் விடும் ஆற்ற மாட்டாத கண்ணீரைக் கொண்டு இகழப்பட்ட எங்கள் மாசை.நாங்கள் கழுவிக்கொள்ள விரும்புகிறோம். இவ்விதம் நான் சொல்வதனால் பெரியோர் என்னை வெறுப்பர். என் நியாயம் தவறானதாகக் கருதப்படலாம். தவறான நபரிடம் அறிவுரை கூறியதற்காகத் தாங்கள் வெட்கமடைய நேரலாம்.

விரோதியை ஒழித்துக் கட்டி, இழந்த என் பெருமைகளை மீட்காதவரை, முக்தி பெறுவதைக்கூட என் குறிக்கோளாக நான் கொள்ள முடியாது. பெருமைகளை மீட்க மாட்டாத நான் பிறக்காமலே இருந்திருக்கலாம்; செத்திருக்கலாம்; புல்பூண்டாகிக் கிடக்கலாம். விரோதிகளை வெற்றி கொள்ளாத ஒருவன் மனிதனே அல்லன். மனிதன் என்னும் அச்சொல்லை உயர்ந்தவர்கள், கற்றோர் தங்கள் பண்பாடு காரணமாகப் பயன்படுத்தும்போது, அதன் நேர்த்தி சிறப்பாகத் தெரிகிறது. ஒருவர் மற்றவர்களால் எப்போது கௌரவிக்கப்பட்டு அவருடைய பெயர் கற்றோர் சபையில் மதிப்புடன் பேசப்படுகிறதோ, விரோதிகளும் அப்பேச்சைப் புறக்கணிக்காது ஏற்கிறார்களோ, அவர் மட்டுமே மனிதன் என்னும் சொல்லுக்குத் தகுதியானவர். மிக தாகமுள்ளவராகவும், ஒரு மிடறு நீருக்காகத் தவிப்பராகவும் உள்ளவரைப் போன்று யுதிஷ்டிரர் அத்தாகத்தைத் தணிக்கும் நீர் போன்ற என் வருகைக்காக, விரோதிகளை ஒழித்துக் கட்டும் நிமித்தம் காத்திருக்கிறார். தன்னுடைய கடமையிலிருந்து தவறிய ஒரு பணியாள் குடும்பத்தில் வேண்டத்தகாதவன் ஆகிறான். நிலவின் களங்கம் போன்றவன் அவன்.

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் படிப்படியாகக் கடக்க, மனு முதலான வாக்கேயக்காரர்கள் எழுதி வைத்திருக்கின்றனர். முக்தி என்பது நான்காவதும், வீடு பெற வேண்டியதுமான முடிவான கட்டம். முதல் கட்டமாகிய இல்லறத்தை நான் இன்னும் பேணி முடிக்கவில்லை. என் மேன்பட்ட பணியில் இன்னும் நான் வெற்றி பெறவில்லை. விரோதி ஒழிக்கப்பட்டாக வேண்டும். என் உற்றாரும், உறவினரும் துயருற்ற நிலையில் இருக்கின்றனர். ஆகவே அவர்கள் பொருட்டு அல்லாமல், என்னால் சுதந்திரமாகத் தன்னலம் கருதி ஏதும் செய்ய முடியாது. முக்தி பெற எனக்கு விருப்பம் இருந்தாலும், என் விருப்பப்படி நான் நடக்க மாட்டேன். கௌரவமும், மதிப்பும் கொண்ட ஒருவர் தன் கடமை, பொறுப்பு ஆகியவற்றை விட்டு வழுவக்கூடாது. இந்த மலைச்சிகரத்தின் உச்சியில் அமர்ந்துள்ள நான், ஒன்று சுழல்காற்றால் அலைக்கழிக்கப்பட்டு சிதறிய சிறு மேகம்போல அழிவேன், இல்லையெனில், இந்திரனை வேண்டி என் நெஞ்சில் பாய்ந்துள்ள அம்பை உருவி எடுக்க முயல்வேன்.''

இந்திரனின் ஆசிகளுடன் அர்ஜுனன் தவத்தைத் தொடர்கிறான்

அர்ஜுனன் பேசி முடித்ததும், இந்திரன் தன் சுய உருவத்தைக் காட்டி, அவனைக் கட்டி அணைத்தான். அவனுடைய காரியம்

ஈடேறும் பொருட்டு, பரமசிவனை ஆராதிக்கும்படியாகவும் அறிவுறுத்தினான். ''பரமசிவனின் ஆசிகளை நீ பெற்றாயானால், உனக்கு சக்தியையும், வலிமையையும் தந்து, மூவுலகிலும் நிகரற்றவனாக உன்னைப் போல வேறொருவர் இல்லை என்பதாகச் செய்வேன். செல்வத் திருமகள் அதன்பின் விரோதியை விட்டு உன்னை அடைய வெகுவாக விரும்புவாள்.''

இந்திரனின் அறிவுரை கேட்டு, மனம் களிப்புற்றவனாக அர்ஜுனன் பரமசிவனை ஆராதிப்பதற்காக இடைவிடாத தவத்தை மேற்கொண்டான். தன்னுடைய உள்ளும் புறமும் தூய்மையுற அவன் பட்டினி கிடந்து தழலான சூரியனைப் பார்த்தபடி வெகுநாட்கள் நின்றான். அவனுடைய உடலும் உணர்வுகளும் வெகுவாகத் துன்புற்றன. ஆனால் அவன் இமயமலை என நெடிது நின்றான். காணக் கிடைக்காத சகிப்புத்தன்மை என்பது உயர்ந்தோரின் பெருங்குணம். அருகிலேயே நன்கு பழுத்து மணம் வீசும் பழங்கள், தெளிவான குளிர்ந்த நீர் ஆகியவை இருந்தன. ஆனால் அவை அர்ஜுனனின் கவனத்தைக் கவரவில்லை. உயர்ந்த பண்பாளனுக்கு நெறிமுறையான யோக சாதனை தேவாமிர்தத்துக்கு ஒப்பானது. கடுமையான யோகப் பயிற்சியை மேற்கொள்ளும் சக்தி தனக்கு இருப்பது குறித்து அவன் வியப்படையவில்லை. சாதனையின் பலன் கிட்ட காலதாமதம் ஏற்படுவது குறித்தும் அவன் கவலைப்படவில்லை. சற்றுக்கூட செயலில் தயக்கமும் காட்டவில்லை. தாமசம், ரஜஸ் ஆகிய குணங்களை விரைவில் அவனிடம் சத்வகுணம் வெற்றி கண்டது. அவனுடைய உடல் மெலிந்தது. ஆனால் அவனுடைய உடலின் தேஜஸ் மூன்று உலகங்களையும் கடக்க வல்லதாக இருந்தது. உயர்ந்த அறிவாற்றல் பெற்றவர்களையும் அது அச்சுறுத்துவதாகக் காணப்பட்டது. ஆர்வமுள்ளோரால் அடைய முடியாதது எது? இரவுகளில் மலையில் எரியும் தீ அம்மலையை விட வனப்புடன் பொறுமையுடன் கூடி, கடல் கடந்தும் தெரிவது போல, அர்ஜுனனின் தேஜஸ் ஒளியிட்டது. அவன் திருப்பித் திருப்பி மந்திரங்களை உச்சாடனம் செய்தபோது, பற்களிலிருந்து வெளிப்பட்ட ஒளிக்கதிர்கள் அவனுடைய முகத்தைச் சுற்றி பிரபையாக ஒளி வளையத்தைத் தோற்றுவித்தன. அம்புறாத் தூணி கட்டியிருந்தான். பூணல் தரிக்க வேண்டிய உடற்பகுதியில் வில்லுடன் சேர்ந்த நாண் காணப்பட்டது. பயங்கரமான காடுகளையும், அவற்றின் மீது வானவில்களையும் கொண்ட பிரம்மாண்ட இமயமலை போல அவன் விளங்கினான். மந்திரச் சடங்குகளுடன் அவன் குளிக்கச் செல்லும்போது இமயமலை அவனுடைய கனமான காலடிகளின் கீழ் உருண்டு விழுந்திருப்பதாகத்

தோன்றியது. மிக உன்னதமான நற்பண்புகள் அத்தகைய கம்பீர நடைக் கனத்தை ஏற்படுத்துகின்றனவே தவிர, வெறும் தசைகனம் அல்ல அது.

அதன்பின் அர்ஜுனனின் தலைக்கு மேலாக எவருக்கும் கிட்டாததான பிரகாசம் பொருந்திய பேரொளி ஒன்று தோன்றியது. அவ்வொளி பூலோகத்துக்கும் வானுலகுக்கும் இருந்த வெளியை நிரப்பி, தேவர்களும் முனிவர்களும் நடந்து செல்லத் தடை ஏற்படுத்தியது. தேய்பிறை காலத்தில்கூட ராஜகுமாரனான அர்ஜுனனின் இந்த ஒளி இருட்டை விரட்டி, வானில் நிரந்தரமாக வெளிச்சத்தை உண்டாக்கியது. அவனுடைய உடலிலிருந்து பெருக்கெடுக்கும் ஒளிக்கதிர் கற்றை சூரியனின் பிரகாசத்தைவிட மேன்பட்டு இருந்ததால், நாணமடைந்த சூரியன் வெகுநேரம் விண்ணில் இருக்கவில்லை.

சிவந்தநிற ஒளி ஒன்று அர்ஜுனனின் சடைத்த தலையிலிருந்து மேலெழுந்தது. அவன் வில்லில் நாண் பூட்டிக் காத்திருந்தான். இந்த அவனுடைய நிலை கண்டு சித்தர்கள், அவ்வுருவம் அரக்கர்களின் திரிபுரம் எரித்த சிவனோ என ஐயுற்றனர். ஒரே ஒரு வேறுபாடு, அவனுக்கு நெற்றிக்கண் இல்லை. இப்படி ஒரு தவத்தில் ஈடுபட்டிருக்கும் இவன் யார்? இந்திரனோ, தகிக்கும் சூரியனோ அல்லது ஜ்வாலையுடன் கூடிய அக்னியோ? இவ்விதமாக முனிவர்கள் தங்களிடையே கேட்டுக் கொண்டனர். ஏனெனில் அர்ஜுனனை சாதாரண மனிதனாக அவர்களால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவனிடமிருந்து எழும் சுடர் நீண்டு அகண்டு பரவிக் கிடந்தாலும், அது காடுகளை எரிக்கவில்லை. நீர்நிலைகளை வரண்டு போகச் செய்யவில்லை. இருந்தாலும் அதன் தகிப்பு தாங்க முடியாததாக இருந்தது.

முனிவர்கள் பரமசிவனை அணுகுகிறார்கள்

ஆகவே முடிவாக அந்தத் துறவிகளும், முனிவர்களும் வேறு வழியின்றி மனக்கிலேசம் கொண்டவர்களாக பரமசிவனின் பாதுகாப்பை வேண்டினர். கதிரவனின் கிரணங்களைவிட மேன்பட்ட ஒளித்தழல்களால் சூழப்பட்டிருந்த பரமசிவனை முனிபுங்கவர்களால் ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. பிறகு மெல்ல அவர்கள் அவருடைய புகழைப் போற்றி இசைத்தபோது, அந்த ஒளித்தழல்கள் இடையே பொலிவுடன் கூடிய அவருடைய உருவத்தைக் கண்டனர். இறைவன் தன்னுடைய வாகனமான காளை மாட்டின் திமில்மீது கைவைத்துத் தடவியபடி, அந்த ஸ்பர்ச இன்பத்தில் லயித்திருந்தார். மலைச்சிகரத்தின் மீது அவர் அமர்ந்திருந்தாலும், அவரைச் சுற்றி

இருந்த ஜோதி பூமியையும், நீலக்கடல்களையும், மேகங்கள் செல்லும் பாதையையும் பிரகாசப்படுத்திக் காட்டியது. அவருடைய முழங்கால்களைச் சுற்றி ஒரு பெரிய பாம்பு காணப்பட்டது. சூரியனின் ஒளிக்கதிர்கள் தொலைவில் எட்ட முயற்சிக்கும் லோகாலோக மலை சூழ்ந்த பூலோகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர் போல அவர் வீற்றிருந்தார். மார்பில் பூணல் அணிந்தாற்போலக் கிடந்த சேஷ நாகம் அவருடைய பருத்த கழுத்தில் காணப்படும் நீலவண்ணத்தைப் பிரதிபலித்துக் கொண்டு இருந்தது. தலையில் இருந்த நிலவு தன் ஒளிரேகைகள் கொண்டு விளையாடி, சடைமுடியைப் பிரகாசிக்க வைத்து, ஜாதி புஷ்பம் போன்று அவருடைய நெற்றியை வெண்மையாக ஆக்கியது. நிலவின் அந்த ஒளி கங்கை ஆற்றின் நீர்த்தேக்கமாகவும் காணப்பட்டது.

பிறகு விழிகளால் சாடை காட்டி, பரமசிவன் அம்முனிவர்களைப் பேசும்படியாகச் சொன்னார். அவர்களும் தாங்கள் அர்ஜுனனின் தவத்தால் அடைந்த துன்பங்களை விவரித்தார்கள். அவர்கள் சொன்னதாவது:

''ஓ முழு முதல்வரே, ஒப்பற்றவரே! விருத்திராசுரன் போன்ற ஒருவன் சூரியனை வெட்கச் செய்யும் ஒளி ஜ்வாலையுடன் கூடிய உடல் கொண்டு இந்திரகீல மலையில் நின்று தவம் இயற்றுகிறான். இரு பெரிய அம்புறாத் தூணிகள், ஒரு வில், சடைத்த முடி, மரவுரி, மான்தோல் ஆகியவையே அவனுடைய சொத்துக்கள். இப்பொருள்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில், அவன் மாவீரனா அல்லது துறவியா என்பதை உணர்த்த முடியாது உள்ளன. ஆனாலும் அவை அவனைப் பொருத்தமட்டில் வித்தியாசமாகவும், அதே நேரத்தில் ஏற்புடையனவாகவும் இருக்கின்றன. அவன் அசைந்தால் நிலம் அசைவதாகப்படுகிறது. அவன் அமைதியுடன் இருந்தால், காற்று, கோள்கள், விண்மீன்கள் இவை அனைத்தும் நிலைபெற்று, சலனமற்றுக் காண்கின்றன. சுற்றுப்புறம் எங்கும் நிச்சலனம் சூழ்ந்துள்ளது. ஐயத்துக்கு இடமின்றி விரைவிலேயே இந்த உலகத்தைத் தன் வலிமையால் அவன் வெற்றிகொள்ள இருக்கிறான். இவ்வுலகத்திலுள்ளவர்களையும், தேவர்களையும், அரக்கர்களையும் கூட தன் ஆளுமையின் கீழ் கொண்டு வந்துவிட இருக்கிறான். காணும் அனைத்தும் பொருளற்று, ஒளி இழந்துவிடப் போகின்றன. எதன் பொருட்டு அவன் தவம் இயற்றுகிறான் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஒரே நேரத்தில் உலகங்கள் அனைத்தையும் அவன் வெற்றி கொள்ள இருக்கிறானா அல்லது அழிக்க இருக்கிறானா? இல்லை, முக்தியை நாடுகிறானா? எதுவாக இருந்தாலும் அவனுடைய

வீர்யத்தை எங்களால் தாங்க முடியவில்லை. ஹே பிரபு, அவனைக் கவனியாது ஏன் வாளாயிருக்கிறீர்கள்? தங்களுக்குத் தெரியாதது ஏதும் இல்லை. அச்சத்திலிருந்து எங்களை விடுவிப்பது தங்கள் கடமையல்லவா? எங்களைக் காக்கும் தாங்கள், எங்களை வெற்றி கொள்ள இருக்கும் அவனைத் தடுப்பீர்களாக.''

பரமசிவன் சூழ்நிலையை விளக்குகிறார்

இவ்விதம் சொல்லிவிட்டு, முனிவர்கள் மௌனமானார்கள். நான்கு திக்கிலும் எதிரொலிக்கும் த்வனியில் பரமசிவன் கூறலானார்:

''இந்த மானுடன் வேறு எவனுமல்லன். உலகைப் படைத்து அழிக்கும் வன்மை கொண்ட மகாவிஷ்ணுவின் மானுடப்பகுதி இவன். உலகம் முழுதையும் தத்தளிக்கச் செய்து கொண்டிருக்கும் அவனுடைய விரோதியை அழித்து ஒழிப்பதன் பொருட்டு என்னை ஆராதிக்கிறான். ஆனால் இவனை தேவர்களின் தோழன் என நினைத்து, மூகாசுரன் இவனைக் கொல்வதற்காகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கிறான். தன் சுய உருவத்துடன் சென்று போரிட்டு அர்ஜுனனைக் கொல்ல முடியாது என்று அறிந்திருக்கும் பாபாத்மாவான அந்த அரக்கன் பயங்கரமான காட்டுப் பன்றியின் உருவில் தடை ஏதுமின்றிச் செல்கிறான். கிராதன் போன்று உருமாறிச் சென்று நான் அரக்கனான அந்தப் பன்றியைக் கொன்று அழிக்க வேண்டும். அப்படி நான் சென்று அப்பன்றியை அம்பு எய்து கொல்லும்போது, அர்ஜுனனும் ஓர் அம்பை அதே சமயத்தில் பிரயோகிப்பான். இதனால் எவர் பன்றியை முதலில் கொன்றவர் என்ற சண்டை எங்கள் இருவரிடையே எழும். நீண்டகாலத் தவத்தில் ஈடுபட்டதால், ஐயத்துக்கு இடமின்றி அர்ஜுனன் களைத்திருக்கிறான். தன்னந்தனியனான அவனுக்கு உதவிட யாரும் இல்லை. இருந்தாலும், கடுஞ்சினம் காரணமாக, அசாதாரண வலிமையையும், சக்தியையும் அவன் கொண்டிருக்கிறான். உங்களுடைய கண்களாலேயே நடப்பனவற்றைப் பாருங்கள்.''

கிராதர் படையின் தலைவராக பரமசிவன் புறப்படுகிறார்

இவ்விதம் முனிவர்களிடம் பேசியபிறகு, கிராதர் தலைவனாக பரமசிவன் தன் உருவை மாற்றிக் கொண்டார். கருத்த மேகத்தின் கர்ஜனை போன்று ஒலிக்கும் நீண்டவில் ஒன்றைக் கைக் கொண்டு, அதனில் ஓர் அம்பைப் பூட்டினார். பரமசிவனிடம் பக்தி கொண்ட சிவகணங்களும் கிராதர்களாக மாறி, வேல்கம்புகள், கோடரிகள், வில்கள் என ஆயுதம் தரித்து பெரும்படை அணியினராக நின்றனர்.

பரமசிவனின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு வசதி பொருட்டு அந்த இடத்தைத் தங்களுக்குள் வகுத்துக் கொண்டதன் காரணமாக ஏற்பட்ட பரபரப்பு, கூச்சல்களுடன் அவர்கள் நான்கு திசைகளிலிருந்தும் வேட்டையாடப் புறப்பட்டனர். இதனால், தாங்கள் வாழும் இடங்களிலிருந்து துரத்தப்பட்டு திகிலடைந்த விலங்குகள், பறவை களின் பரிதாபமான கூச்சல் அக்காட்டையும், மலைக்குகைகளையும் நிறைத்தது. அந்த மலையே கிலியடித்து அலறுவதாகத் தோன்றியது. தங்களுக்குள் இயல்பாக விரோதம் கொண்டிருந்தாலும், அவ்விலங்குகளும் ஒன்றுக்கு ஒன்று தீங்கு விளைவிக்கவில்லை. பெருந் துயரங்கள் நேரும் காலங்களில் இயல்பான விரோதமும் மறைந்து விடுகிறது. யாக் எருதுகளுக்கு அவற்றின் அடர்ந்த வால் மிகப் பிரியமானது. ஓடும்போது அவ்வால்கள் நாணல் புதர்களில் மாட்டிக் கொள்ள, அப்பிராணிகள் தங்கள் வால்களை அறுத்துக் கொண்டு செல்ல மனமில்லாமல், பரமசிவனின் படைவீரர்களுடைய அம்புமாரிகளிடையே தயங்கி நின்றுவிட்டன. எச்சரிக்கை அடைவதற்கு முகாந்திரம் ஏதும் இல்லாவிடினும், பரமசிவனின் படைவீரர்களை நிமிர்ந்து நோக்கியபடி சிங்கங்கள் நின்றன. அவை அடித்துக் கொன்ற யானைகளின் மத்தக நீரால் பிடரிமயிர் நறுமணம் கொண்டிருக்க, உறக்கத்திலிருந்து எழுந்த அச்சிங்கங்கள் கொட்டாவி விட்டன.

ஆற்றின் கரையில் சேறு நிறைந்து, நடக்க மாட்டாதது ஆகியது. அச்சம் அடைந்து ஓடும் யானைகளால் உடைந்த சந்தனமரக் கிளைகளிலிருந்து பெருகிய சாறு ஆற்றுநீரைச் சிவப்பாக்கியது. ஆகுரு, தமளம், உசிரம் ஆகிய மரங்கள் விரைந்தோடும் காட்டு எருமைகளின் காலடிகளின் கீழ் நொறுங்க, வீசும் மென்காற்று நறுமணத்துடன் கூடியதாயிற்று. அக்காற்று கிளிப்பச்சை நிறத்துடன் கூடிய சிலா மலர்களிடையே புகுந்து புறப்பட, காடுகளில் திரியும் மனிதர்களிடம் ஏற்பட்ட சோர்வை அது நீக்குவதாக இருந்தது.

காடு முழுதும் இப்படி கிளர்ச்சி கொண்டிருக்கையில், அர்ஜுனனின் பர்ணசாலையை பரமசிவன் நெருங்கினார். அதேசமயம் மேகம் போன்று கருத்து காட்டுப்பன்றி உருவத்திலிருந்த அரக்கன் அர்ஜுனனை நோக்கி மெள்ள நெருங்குவதைக் கண்டார். தன்னுடைய பெரும்பகுதியான படைவீரர்களை விட்டுவிட்டுப் பிரிந்து வந்தார். முக்கியமான சில படைத்தலைவர்களுடன் மரங்கள், புதர்களிடையே மறைந்து அந்தக் காட்டுப்பன்றியின் காலடி அடையாளங்களைக் கண்டு தொடர்ந்தார்.

மாற்று உருவில் வந்த அரக்கனைக் கண்டு அர்ஜுனன் நடவடிக்கை

இதனிடையே தன்னை நோக்கி வரும் பன்றியை அர்ஜுனன் பார்த்துவிட்டான். அதனுடைய பயங்கரமான முகமும், அம்முகத்தில் பருத்து நீண்ட கொம்புகளும், பெருத்த உடலும், இந்த பூலோகத்தைக் குத்தி உடைத்துவிடும்படியான வலிமையை அப்பன்றி பெற்றிருப்பதாக எண்ணச் செய்தன. சற்றுத் தொலைவிலிருந்த அது அவனை நோக்கிக் குறிபார்த்துப் பதுங்கியது. அதனுடைய முதுகில் வளர்ந்திருந்த முடிகள் கோபத்தால் சிலிர்த்து எழுந்திருந்தன. அதைத் தாக்கி வீழ்த்தி வெற்றி கொள்ள வேண்டும் என்று அர்ஜுனன் நினைத்தானாயினும், சில ஐயப்பாடுகளால் தயங்கினான். அவன் எண்ணினான்:

''பெரும் மரங்களை எல்லாம் தன் உறுதியான கொம்புகளால் மோதிச் சாய்த்து, தன் தோள் வலிமையால் மலைச் சரிவுகளைத் தகர்த்துக் கொண்டு, சண்டைக்கு வருவது போன்று இந்தப் பன்றி என்னை நோக்கி வருகிறது. கேடு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணமுள்ள விலங்குகள் என் தவத்தின் பயனாக பர்ணசாலையின் சுற்றுப்புறங்களில் இருக்க முடியாது. ஆனால் இப்பன்றி என்னைத் தாக்க வேண்டும் என்பதற்காகவே வருகிறது. அப்படியாயின் என் தபத்துக்குப் பலன் இல்லை என்று பொருளாகிவிட்டதா? அல்லது எவனோ ஒரு அரக்கனுடைய தந்திரச் செயலா? அல்லது ஏதோ ஒரு முன்பிறவியில் என்னுடன் விரோதமாக இருந்துவிட்டு, இப்போதும் அந்த விரோத எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு வருகிறதா? அப்படி இல்லாவிடில் இது சாதாரணமாக உணவு தேடுவதை விட்டு விட்டு, என்னை மட்டும் நோக்கி ஏன் வரவேண்டும்? இது சாதாரணமான, மற்றவை போன்ற விலங்கு அல்ல. இதைக் குறித்து எனக்கு நல்லெண்ணம் ஏற்படாததால் இது இப்போது என்னைக் கொல்லக் காத்திருக்கிறது என்று நினைக்கச் செய்கிறது. உண்மை என்னவெனில், நண்பர் ஆயினும் எதிரி ஆயினும் பார்த்த மாத்திரத்தில் மனதில் ஏற்படும் வேண்டியவர், வேண்டாதவர் என்ற உணர்வினால் அவர்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. தீயவன்தான் மற்றவர்களின் சிறப்பைக் கண்டு பொறாமை கொண்டவனாக தீங்கு விளைவிக்க முயல்கிறான். துறவியாகிய நான் எவருக்கும், எவற்றுக்கும் எவ்விதத் தீங்கும் விளைவிக்கக் கூடாது. ஆனாலும் இந்த சந்தர்ப்பத்தில் அச்சமுறத் தேவை இல்லை என்றவகையில் ஏதும் செய்யாமல் வாளாக இருந்துவிட முடியாது. கருமையான இறுகிப்

போன மேகம் போன்ற இந்தக் காட்டுப் பன்றி தன்னுடைய தாக்குதலால் மலை முழுவதையும் நடுங்க வைக்கிறது.

எந்த ஒரு காட்டு விலங்குக்கும் இத்தகைய வலிமையும் சக்தியும் இருக்க முடியாது. நிச்சயம் இது மாற்று உருவில் வரும் அரக்கனாகத்தான் இருக்க வேண்டும். புலனடக்கம் கொண்டு நான் அமைதியுடன் இருக்கிறேன். ஆனால் தன் *தந்திரத்தால்* இந்த இடத்தைத் தன்னுடைய வேட்டைக் காடாக்கி, படை அணி கொண்டு கலக்கியது போல, மற்ற விலங்குகள் அனைத்தையும் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடச் செய்கிறது. அல்லது துரியோதன னிடமிருந்து மரியாதை, சன்மானம் பெற்ற யாரோ ஒருவராகவும் இருக்கலாம். நன்றி விசுவாசம் காரணமாக, திருப்பிச் செலுத்தும் பொருட்டு பன்றி உரு எடுத்து என்னைக் கொல்ல வந்திருக்கலாம். அல்லது காண்டவனம் எரிக்கப்பட்டபோது, தன்னுடைய உற்றாரும், உறவினர்களும் தீயில் இறந்த காரணத்தால், பழிதீர்க்க எண்ணிய அஸ்வசேனனாகவும் இருக்கலாமோ? அல்லது பீமனால் இம்சிக்கப்பட்டுக் கோபம் கொண்டவனாக இருக்குமோ? எப்படியாயினும், மெய்யாகவே காட்டுப் பன்றியாக இருந்தாலும் சரி, இல்லை தந்திரமாக உருமாறி வந்திருந்தாலும் சரி, அது குறித்து இப்போது சிந்திப்பதில் பயன் இல்லை. தன்னுடைய வலிமையை எண்ணி இது செருக்குடன் இருக்கிறது. ஆகவே நான் இதைக் கொன்றாக வேண்டும். விரோதியை அழிப்பது என்பது வெகுவான விவேகமான செயல். தவத்தை மேற்கொள், எந்தவிதமான இடையூறு வந்தாலும், தயங்காதே என்று வியாசர் சொல்லி இருக்கிறார். அப்படி இருக்க, இந்த விலங்கைக் கொலை செய்யாமல், என்னால் மேற்கொண்டு தவம் செய்ய இயலாது.''

அர்ஜுனனும் பரமசிவனும் காட்டுப் பன்றியைத் தாக்குகிறார்கள்

இவ்விதமான நீண்ட சிந்தனைக்குப் பிறகு அர்ஜுனன் வில்லையும் அம்பையும் எடுத்தான். அம்பு பூட்டப் பெற்று விடப்பட்டபோது, வில்லிலிருந்து எழுந்த ஒலி மலைக் குகைகளில் புகுந்து அவற்றைத் தகர்த்தது. அவனுடைய ஊக்கத்துடன் கூடிய நடவடிக்கையால், தான் நிலைத்து நிற்போமா என்று அஞ்சி மலை நடுங்கியது. அச்சமயம் பரமசிவன் வியப்புடன் அர்ஜுனனைப் பார்த்தார். தன்னுடைய வில்லில் அம்பைப் பூட்டி இழுத்து, ஸ்திரமாகக் கால்களை ஊன்றி, சஞ்சலமற்று அவர் நின்றிருந்த அந்தக் காட்சி, முன்பு திரிபுரத்தை எரித்த நிலையைக் கவனப்படுத்துவதாக இருந்தது.

நாணை இழுத்து அவர் பாணத்தை விட்டு காலடியில் நிலத்தை அழுத்திய போது, அந்தப் பெரிய மலையே அவருடைய பாதத்தின் கீழ் சென்று விட்டாற்போலத் தோன்றியது. அவர்கள் இருவருமே அப்பன்றியைக் கொல்வதற்கு இருக்கும்போது, அப்பன்றி தன்னைத் தானே அழித்துக் கொள்வதாக துள்ளி மேலெழுந்து விழுந்தது. அம்பு மிக வேகமாக விசையுடன் வந்தது. கருத்துக் கிடக்கும் மேகத்திலிருந்து எழுந்த மின்னல் கீற்றாக அந்த அம்பு விண்வெளி எங்கும் பிரகாசப்படுத்தியபடி, பயங்கரமாகப் பாய்ந்து சென்றது. அப்படிச் செய்கையில் ஏற்படுத்திய பெருத்த ஓசை பெரிய யானைகளின் இதயங்களையும் நடுங்கவைப்பதாக இருந்தது. கனவேகத்துடன் செல்லும் அம்பின் பின் பகுதியில் இணைக்கப்பட்டிருந்த பறவை இறகுகள் ஒரு உரத்த ஓசையை உண்டாக்க, பெரிய பெரிய பாம்புகள் எல்லாம் கருடன் வந்து விட்டதோ என பயத்தால் வசம் இழந்தன. பரமசிவனின் சினத்துடன் கூடிய சிவந்த கண்களிலிருந்து புறப்பட்டதோ என ஐயுற வைக்கும்படியாக, மின்னல் கீற்றின் பொன் வண்ணத்துடன் கிளம்பிய அந்தப் பறக்கும் அம்பானது தான் செல்லும் வழியில் ஒளிமயமான பாதை ஒன்றை அமைத்தது.

காட்டுப் பன்றியின் உடல் பனிக்கட்டி போன்று உறுதியாக இருந்தது. ஆனாலும் அம்பானது அதன் உடலில் எவ்வித இடையூறும் இன்றி ஊடுருவிச் சென்றது. காண்பவர் அனைவரும் ஸ்தம்பித்து நின்றனர். சுறாமீன் எவ்விதம் நீரில் நழுவிச் செல்லுமோ, அது போன்று அந்த பாணமானது பன்றியின் உடலுள் சென்று மீண்டு நிலத்தில் குத்தி நின்றது.

அதே சமயம் அழகாக வடிவமைக்கப்பட்டிருந்த அர்ஜுனனின் அம்பானது இரும்பால் ஆனமுனை கொண்டு விரல் நகம் போன்று கூரானதாக, உலகிலுள்ள விலங்குகள் அனைத்தையும் நடுங்க வைத்தபடி, அவனுடைய வில்லிலிருந்து எழுந்து, யமதர்மன் உயர்த்திய ஆள் காட்டி விரல் போன்று வானில் கிளம்பிச் சென்றது. காடு முழுதும் ஒளிமயமாக்குவதான எரி நட்சத்திரம் போல, அது ஆயிரம் பறவைகளின் கூச்சலுடன் தரையை நோக்கிப் பாய்ந்தது. மிக வேகமான ஆற்றல் கொண்டிருந்ததால், அந்த அம்பு புறப்பட்ட துல்லியமான நேரத்தையும், அது பன்றியை ஊடுருவியதையும் கணக்கிட முடியவில்லை. ஆகவே குறிக்கோள் இல்லாமலே பன்றியை அம்பு அடித்து வீழ்த்தி விட்டதாகத் தோன்றியது. ஊழ்வினையால் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது போல, முயற்சி ஏதுமின்றி ஏற்கெனவே பரமசிவனின் அம்பால் துளைத்து வீழ்த்தப்பட்ட பன்றியை அர்ஜுனனின் அம்பு மீண்டும் துளைத்தது.

திட்டமிடப்படாமல் மேற்கொண்ட செயல்கள் செல்வத்தைக் கரைத்து விடுவது போலவும், முதலீடு குறைந்து விட்டதால் கொடுக்கப்படும் ஊதியம் குறைய, ஊழியர்களின் விசுவாசம் தேய்வதைப் போலவும், ஊழல் பெருக, ஊழலுக்குக் காரணமான குற்றவாளிகள் வெற்றி வாகை சூடியவர்களை நாசப்படுத்தி விடுவது போலவும், பரமசிவனிடமிருந்தும், அர்ஜுனனிடமிருந்தும் புறப்பட்ட இரு அம்புகளும் பெருத்த அந்தக் காட்டுப் பன்றியை முழுதுமாக வெற்றி கொண்டன.

பிறகு காரிருளில் மறைவதுபோல அப்பன்றியின் வேகம் குறைய, அது தன்னையே சுற்றிச் சுழன்றது. சூரியக் கோளம் பூமியில் விழுந்து விட்டதாகவும், மரங்கள் சுற்றிச் சுழல்வதாகவும் அதற்குத் தோன்றியது. நிலத்தில் அது ரத்தவெள்ளத்தில் மிதந்தது. அதன் குளம்புகளாலும், கொம்புகளாலும் பாறைகள் உடைபட்டன. கணநேரம் அர்ஜுனனை நோக்கிவிட்டு, பெருத்த உறுமலுடன் அது உயிரை விட்டது.

தன்னுடைய அம்பைத் திரும்பப் பெற முயன்ற அர்ஜுனன் தடுக்கப்படுகிறான்

அவனிடம் அம்புகளுக்குப் பஞ்சம் இல்லாத போதிலும், தன்னுடைய கடமையைச் செவ்வையாக முடித்த அந்த அம்பை அர்ஜுனன் திரும்பப் பெற விரும்பினான். எவ்வாறு எனில், தன்னுடைய திறமையை நிரூபித்த ஒருவருக்கும், தன் திறமையை நிரூபிக்க இருக்கும் ஒருவருக்கும் இடையே நிரூபித்தவரே மதிப்புப் பெறுகிறார். தன் அம்பை அவன் பற்றி இழுத்தபோது, ஒரு கிராதன் அங்கு வந்து வணக்கம் தெரிவித்துவிட்டு, தன் தலைவன் சொல்லி அனுப்பி இருந்த தகவலைத் தரக் காத்திருந்தான். அவன் பணிவுடன் அர்ஜுனனிடம் சொன்னான்:

''தாங்கள் அகந்தை உடையவர் அல்லர் என்பதைத் தங்கள் நடவடிக்கைகள் காட்டுகின்றன. தாங்கள் உன்னத அறிவாற்றலைப் பெற்றுள்ளீர்கள் என்பதைத் தாங்கள் இயற்றும் தவம் தெரிவிக்கிறது. தங்களுடைய உயர்ந்த வம்சாவளியை தெய்வீகமான தங்களுடைய உடல்வாகு விளக்குகிறது. முற்றும் துறந்த முனிவரான தாங்கள் தங்களுடைய ஆத்ம சக்தியால் மன்னர்கள் அனைவரையும் வென்றவர் போன்று இருக்கின்றீர்கள். இந்திரனைப் போல பெருமை மிகுந்தவராக இந்த மலையைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தி இருக்கிறீர்கள். தனிமையில் இருந்த போதிலும், பரிவாரங்களால் சூழப்பட்டு இருப்பவராக மாட்சிமையுடன் தெரிகிறீர்கள். தங்களை வெற்றி பின் தொடர்வது அப்படி ஒன்றும் வியப்புக்கு உரியது அல்ல.

ராஜஸ, தாமஸ குணங்களை வெற்றி கொண்ட தங்களுக்கு முக்தி பெறுவது என்பது வெகு எளிதான சமாச்சாரம். தங்கள் காந்தி சூரியனையும் வெட்கச் செய்யும்படியாக உயர்ந்துள்ளது. தங்களுடைய வீரதீர சாகசங்கள் அனைவரும் அறிந்தவைதாம். ஆகவே, பன்றியின் உயிரைப் பறித்த அம்பை அதனிலிருந்து மீட்க வேண்டாம் என நான் மிகப் பணிவுடன் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நன்னடத்தைக்காக ஒரு மனிதன் உயர்ந்தோரால் கொண்டாடப்பட்டு கௌரவிக்கப்படுகிறான். ஆகவே தங்களைப் போன்ற ஒருவர் நேர் வழியிலிருந்து ஏன் வழுவ வேண்டும்?

தாங்கள் துறவி மட்டுமல்லாது, உயர்ந்த பண்பாளர். தாங்கள் இன்னொருவருடைய சொத்துக்கு விருப்பப்படக்கூடாது. மற்றொருவரால் கொல்லப்பட்ட விலங்கை மீண்டும் அடித்து வீழ்த்தியதற்காகத் தாங்கள் நாணமுற வேண்டும். எங்கள் தலைவரால் வீழ்த்தப்பட்டிருக்காவிடில், இப்பன்றி தங்களுக்கு எவ்விதமான துயரத்தை அளித்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்காமல் இருப்பதே நலன் விளைவிப்பதாக இருக்கும். தங்களுக்குத் துயரம் ஏதும் சம்பவிக்கக் கூடாது. வானிலிருந்து விழும் இடிபோல, தங்களை நோக்கி வரும் பன்றி கண்களுக்குப் புலப்படாமல் இருந்தது. எங்கள் தலைவர் தங்கள் உயிரைக் காப்பாற்றி தங்களுக்கு நண்பராகி விட்டார். அந்த நன்றியை மறந்து, அவருடன் பகைமை பாராட்டாதீர்கள். செல்வம் என்பது தேடக் கடினமானது; அதைப் பாதுகாப்பது என்பது அதைவிட இடர்ப்பாடு உடையது. முடிவில் அச்செல்வம் பயனற்றுப் போவது மட்டுமல்லாது, துயரத்தையும் தருவதாக இருக்கிறது. ஆனால் நட்பை எளிதில் பெறலாம்; ஒரு சிறு சாடையால் பெற்றுவிட முடியும். ஆபத்துக்களிலிருந்து அது ஒருவரைக் காப்பாற்றுகிறது என்பது மட்டுமல்லாமல், வாழ்நாள் முழுதும் நலன் அளிப்பதாக இருக்கிறது. ஆகவே அந்த நட்பைப் புறக்கணிக்காதீர்கள். செல்வம் நிலையற்றது; விரோதிகள் இந்த உலகையே கவர்ந்து சென்றுவிடுவர். ஆனால் கற்பாறை போன்றது நட்பு. தானாகவே தங்களை நோக்கி வரும் நட்பை உதறித் தள்ளிவிடாதீர்கள்.

தாங்கள் ஆயுதபாணியாக இருப்பதால், லோகாயுதமான ஆதாயம் பெறும் பொருட்டுத் தாங்கள் தவம் இயற்றுகிறீர்கள் என்பது புரிகிறது. நட்புக்கரம் நீட்டினீர்களானால், தாங்கள் வேண்டுவன வற்றை எல்லாம் பெறமுடியும். எங்கள் தலைவரிடம் அருமையான புரவிகளுக்கும், யானைகளுக்கும் பஞ்சமில்லை. ஏராளமான செல்வம் இருக்கிறது. ஒரு சாதாரண அம்புக்காக அவருடன் கிலேசம் கொள்ளத் தேவை இல்லை. அகௌரவமாக நடத்தப்படுவதை அவர் தாங்கமாட்டார். வன்முறையில் அவரிடமிருந்து எதையாவது,

தூசியைக் கூட, ஒருவர் கைப்பற்ற நினைத்தால், தன் பொறுமையை இழந்து சினம் கொள்பவர் அவர். ஆனால் எவராவது அவரிடம் யாசித்தால் மிக்க மகிழ்ச்சியோடு தன் செல்வம், சொத்து மட்டுமல்லாது, தன் உயிரையும் தரக் கூடியவர். ஆகவே தாங்கள் அம்பைத் திரும்பக் கொடுத்தாக வேண்டும். ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட நட்பு போல, நல்விதிப் பயனாக உங்களிடையே ஏற்படும் இந்த நட்பு என்றும் தொடரட்டும்.

நாங்கள் உண்மைக்கு மாறாகத் தங்களைக் குற்றம் சொல்லவில்லை. ஒரு தபசியின் அம்பைப் பெறுவதற்கு நாங்கள் ஏன் முயல வேண்டும்? உண்மையில் எங்களிடம் ஏராளமான உயர்வகை அம்புகள் இருக்கின்றன. தேவர்களின் வேந்தனான இந்திரனும் விரும்பப்படுவதான அம்புகள் அவை. தங்களுக்கு ஓர் அம்பு தேவை என்றால், எங்கள் தலைவரைக் கேட்டு ஏன் தாங்கள் பெற முயலக்கூடாது? தங்களைப் போன்ற உயர்ந்தவர் அவரிடம் யாசித்தால், தான் வென்ற உலகத்தையும் தங்கள் காலடிகளில் சமர்ப்பிக்க அவர் தயங்கமாட்டார். தங்கள் வேண்டுகோளை நிச்சயமாக அவர் தள்ளமாட்டார். ஒருவருடைய கோரிக்கை நிராகரிக்கப்படுமாகில், அதனால் அவர் படும் அவமானம், அவஸ்தை குறித்து எங்கள் தலைவருக்குத் தெரியும். ஒருவரிடம் தக்க வலிமை இருக்குமாகில், அல்லது இருவரிடையே நேசம் இருக்குமாகில், ஒருவரிடமிருந்து மற்றவர் அவருடைய பொருளைப் பெறுவதில் அர்த்தம் உண்டு. அப்படி இரண்டும் இல்லாத போது, சொத்தை அபகரிக்கும் செயல் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும். உண்மையில் தவசிகளிடம் உள்ள அஸ்திரங்களை எடுத்துக் கொண்டால், பரசுராமருடையவை மட்டுமே நிச்சயமான பயனை அளிக்கக் கூடியனவாக உள்ளன; வெற்றி கொள்ள முடியாதவை அவை. மற்ற எவரின் அஸ்திரங்களும் அப்படியானவை அல்ல.

எங்கள் தலைவரால் அடிக்கப்பட்ட விலங்கைத் தாங்கள் முன்பின் சிந்தியாது கொன்றீர்கள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை. ஆனாலும் அவர் தங்களை மன்னித்து விட்டார். தவறான பாதையில் செல்லாதீர்கள். படுநாசமுற முனைய வேண்டாம். பன்றியைக் கொன்றதால் தாங்கள் பெறப் போவது என்ன? அதன் மீது அம்பு தொடுப்பதை விட்டு அதைத் தாங்கள் செல்ல அனுமதித்திருக்கலாம். தாங்கள் உன்னதமான மனிதர். அப்படி இருக்க, சிந்தியாமல் செயல்படாதீர்கள். ஊழிகாலத்துக் காற்று மாபெரும் சமுத்திரத்தையும் கொந்தளிக்கச் செய்வது போல, சிந்திக்கத் திறனற்ற ஒருவர் மிகப் பொறுமைசாலியான ஒருவரின் பொறுமையையும் கைவிடச் செய்கிறார். கிராதர்களின் தலைவரான எங்கள் யஜமானர்

ஆயுதங்களைக் கையாளுவதில் மிகத் தேர்ந்தவர். சாதாரண மலைவாசியாக அவரைக் கருதாதீர்கள். அவரிடம் கெஞ்சி, உலகம் முழுதையும் காப்பதன் பொருட்டு, இந்திரன் அவரை இம்மலையை உறைவிடமாகக் கொள்ளக் கேட்டுக் கொண்டான்.

ஆகவே வணக்கத்துக்கு உரிய எங்கள் பிரபுவிடம் அந்த அம்பைத் திரும்பக் கொடுத்து விடுங்கள் என கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்து விடுவதால், தங்களுக்கு நேர இருக்கும் தொல்லைகள் அனைத்தும் தீரும். தங்கள் விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகும். ஏன், உயர்ந்தோரின் நட்பு என்றுமே விரும்பத்தக்கது. அதோ பாருங்கள், கிராதர்களின் தலைவர் அந்த மரங்களின் பின்னே ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார். அவரிடம் செல்லுக; அவருடைய நம்பிக்கையைப் பெறுக; நட்பை ஏற்க; இவை அனைத்தும் தங்களுக்கு நன்மை விளைவிப்பன.''

கிராத தூதுவனுக்கு அர்ஜுனன் விடை அளிக்கிறான்

கடலின் பேரலைகள் கற்பாறைமீது மோதினாற் போல, கிராதனின் ஆணவமான சொற்கள் அர்ஜுனனின் மனதில் கோபத்தை வெகுவாகத் தூண்டின. அவன் சினமுற்றான். இருந்தாலும் அவன் பொறுமையைக் கைவிடவில்லை. சினத்தால் ஏற்பட்ட வெறுப்பைக் காட்டிக் கொள்ளாமல், பேச முற்பட்டான். அர்ஜுனன் சொன்னதாவது:

''உன்னுடைய அழகான பேச்சு விரோதிகளின் மனதையும் இளகச் செய்யும் என்பதில் ஐயமில்லை. ஓர் ஆயிரம் தானதர்மங்கள் செய்திருந்தால் அல்லாது அதிசயப்படும்படியான இத்தகைய, உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்தும் பேச்சாற்றல் ஒருவருக்குக் கிட்டுவது அரிது. தங்கள் எண்ணங்களை முழுமையாக மொழி வடிவில் திறனுடன் வெளியிடுபவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். சொற்களின் பொருள் தெரிந்து, வகை அறிந்து, ஆழ்ந்து சிந்தித்துப் பேசும் நற்பேறு பெற்ற சிலருக்கு அறிஞர்கள் கூடிய அவையில் மதிப்பும் மரியாதையும் காத்துக் கிடக்கின்றன. சொற்பொழிவு ஒன்றின் சிந்தனை வீச்சை சிலர் பாராட்டுகின்றனர்; மற்றவர்கள் சிந்தனைகளை வெளியிடும் திறனை வெகுவாகப் பாராட்டுகின்றனர். மக்களின் ருசி வெவ்வேறாக இருப்பதால், அனைவரையும் திருப்திப்படுத்தும் பேச்சு அரிதாக இருக்கிறது.

ஒரு கடமையை நிறைவேற்றும் பொருட்டு அனுப்பப்பட்டவன் நீ. காட்டுவாசியாக இருந்தாலும், உயர்தரப் பேச்சாளன் என்று உன்னை நிருபித்திருக்கிறாய். மனதைக் குளிர்வித்துப் பேசி, காரியத்தைச்

சாதித்துக் கொள்ளும் மகத்தான கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் நீ என்னிடம் ஆசையை வளர்க்க முயன்றிருக்கிறாய். மேலும், நிதானமாகச் சிந்தித்துப் பார்த்து முடிவு எடுக்க வேண்டிய விஷயத்தில், குழப்பத்தை ஏற்படுத்தும்படியாக அச்சுறுத்தவும் செய்திருக்கிறாய். அம்பைப் பெற, மெச்சும்படியாகப் பேசினாய். உன் சொற்கள் அறிவு சார்ந்திராவிட்டாலும், மனதைக் கவர்வதாக இருந்து நம்ப வைக்கின்றன. ஆனால் தேறாத செயலில் ஈடுபட வேண்டாம் என்று நீ ஏன் உன் தலைவரைக் கேட்டுக் கொள்ளக் கூடாது?

தன் யஜமானன் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொள்ளும் ஒரு நம்பிக்கையுள்ள ஊழியன் அவருக்கு சரியான அறிவுரை வழங்கக் கடமைப்பட்டுள்ளவன். வில்லிலிருந்து விடுபடும் அம்பு காணாமற்போக வாய்ப்பு உண்டு; தவிர்க்க முடியாதது. அதைத் திரும்பப் பெற வேண்டும் என்றால், சரியான இடங்களில் தேடிப்பார்க்க வேண்டும். அதை விடுத்து கௌரவமான மனிதர்களின் சொத்து உரிமையில் கைவைக்கக் கூடாது. ஏனெனில் அத்தகைய செயல் மோசமான அபாயங்களை விளைவிக்கும். காண்டவனத்தை எரிப்பதன் பொருட்டு அக்னி என்னிடம் ஏராளமான அஸ்திரங்களைத் தந்திருக்கிறார். தேவர்களே விரும்பும்படியான அந்த அம்புகள் இருக்க, எனக்கு வேறு அம்புகள் எவையும் தேவையில்லை. ஒரு கிராதனுக்குச் சொந்தமான அம்பின் பேரில் நான் ஆசை வைப்பேன் என எப்படி நீ நினைப்பாய்? அவசியமற்று என்மீது பொய்க்குற்றம் சாட்டுவது தகாது. முன்பின் தெரியாதவர்களைக் குறித்து ஒரு நல்ல மனிதன் தவறாகப் பேசுவதில்லை. பொய்யான தீயகுற்றங்களைச் சுமத்தி ஓர் ஆத்மாவை அகௌரவப்படுத்துபவன் மிகத் தீயவன். காட்டில் விலங்குகள் சுதந்திரமாகத் திரிகின்றன. யாரோ ஒருவருக்கு மட்டுமே அவை உரியன என்று எவ்விதம் சொந்தம் கொண்டாட முடியும்? வன்முறையால் கவர்ந்து கொள்ளப்பட்டவருக்கே அவை உரியதாகின்றன. இந்தக் காட்டுப்பன்றி அவருடையது என்ற எண்ணத்தை உன் யஜமானன் கைவிட வேண்டும். என் பாதையில் குறுக்கிட எவரையும் அனுமதிக்கக்கூடாது என்று வியாசர் என்னிடம் அறிவுறுத்தி இருக்கிறார். அப்படிக் குறுக்கிட்டு என்னைத் தாக்க வந்த விலங்கை நான் கொன்றேன். கொடுத்த வாக்கைக் காப்பது என்பது குறை சொல்லப்படக்கூடியது அல்ல; மாறாகப் பாராட்டப்பட வேண்டியதாகும்.

தன் உபயோகத்துக்காக ஒரு வேடன் விலங்குகளைக் கொல்கிறான். துறவிகளைப் பாதுகாக்க அவன் உதவுகிறான் என்பதை எங்ஙனம் ஏற்றுக்கொள்ள முடியும்? அத்துடன் அல்லாது, இந்தப் பன்றியை இரு அம்புகளும் ஒரே சமயத்தில் தாக்கிக் கொன்றன.

ஆகவே இது உன் யஜமானனால் கொல்லப்பட்டது, என்னால் அல்ல என்று எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? உதவி ஏதும் அற்று, ஆயுதம் எதுவும் இன்றி இருக்கும் ஒரு தபசியை ஒரு விலங்கு தாக்க வந்தால், ஒருவர் அவருக்குக் கருணை உள்ளத்துடன் உதவலாம். ஆனால் என்னைக் காணும் ஒருவர் நான் வில், அம்புகளுடன் இருப்பதை எளிதாகத் தெரிந்து கொள்வர். எனக்கு ஏன் உன் யஜமானர் உதவி செய்ய வேண்டும்? என் பொருட்டு அவர் பன்றி மீது அம்பு எய்தார் என்று வைத்துக் கொண்டால்கூட, ஓர் உதவியைச் செய்தார் என்பதை ஏற்பதாக இருந்தாலும், ஒரு துறவியைக் காப்பாற்றினோம், ஓர் எதிரியை அழித்தோம் என்கிற இரு வேறு பலனை எதற்காக எதிர்பார்க்க வேண்டும்? என் நன்மைக்காக நான் உன் யஜமானனிடம் கெஞ்சவேண்டும் என்கிற உன் அறிவுரை என்னைப் பொறுத்தமட்டில் பயனற்றது. ஏனெனில், எவன் ஒருவனால் தன் வலிமை கொண்டு தன்னைக் காத்துக் கொள்ள முடியுமோ, அவன் அவமானகரமான கெஞ்சலில் ஈடுபடுவதில்லை. பொய்யான காரணம் காட்டி உன் யஜமானர் தனக்கு உரியது அல்லாததைக் கைப்பற்ற முயற்சிக்கிறார். கண்ணியமற்ற செயல்களின் முடிவு எப்படி அமையும் என்பது அவருக்குத் தெரியாது இருக்க முடியாது. ஆனால் அழிவது என்பதைத் தீர்மானித்த பிறகு ஒருவர் நிதானித்துச் செயலாற்றும் சக்தியை இழந்தவர் ஆகிறார். தேவையானால் உன் யஜமானனுக்கு ஒரு வாளோ ஓர் அம்போ, ஓர் அம்புறாத் தூணியோ அல்லது ஒரு சிறந்த வில்லோ நான் தருகிறேன். அவருடைய விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன். அல்லது அவர் வலிமை கொண்டவராக இருந்தால், கெஞ்சவேண்டாம், வன்முறையைப் பயன்படுத்தி இந்த அம்பைப் பெற்றுக் கொள்ளட்டும்.

உன் யஜமானர் நிகரற்ற நண்பராக இருப்பார் என்று சொல்கிறாயே, ஒரு துறவியின் சொத்துக்கு ஆசைப்படுபவர் எப்படி நண்பராக இருக்க இயலும்? எனக்கு உரிமையுள்ள பாதையில் நடப்பதை அவர் தடை செய்யும்போது, அவர் உண்மையில் எதிரியாகத்தான் இருக்கிறார். நான் மன்னர் மரபில் வந்த க்ஷத்திரியன். உயிர் வாழ்வனவற்றைக் காப்பது என்பது என் அனுஷ்டானம். உன் யஜமானன் ஒரு வேடர். உயிர் வாழ்வனவற்றைத் துன்புறுத்துவது அவருடைய பிழைப்பு. நான் உயர்ந்தவன்; அவர் தாழ்ந்தவர். எங்களின் இருவரிடையே நட்பு எவ்வாறு வளரமுடியும்? யானை நரியுடன் நட்பு கொள்ளாது. உயர்ந்த மனிதன் தாழ்ந்தவரோடு விரோதம் கொண்டால், அவனுடைய நற்பெயர் க்ஷீணமடைகிறது; அது அன்றி நட்புப் பாராட்டினால், அவனுடைய பண்பு கெடுகிறது. இவ்விதம் நட்பு, விரோதம் இரண்டுமே ஏற்கத்தக்கது அல்ல. ஆய்ந்து

உணர்ந்து தாழ்ந்தவனை அலட்சியப்படுத்தி தள்ளி வைக்க வேண்டும். கேவலமானவனும், தாழ்மையானவனும், அறியாமையால் பார்வை இழந்தவனும் ஆன ஒருவன் செய்யும் அவமதிப்பு ஒரு பண்பாடுள்ளவனின் பெயரைக் களங்கப்படுத்தாது. அதனால்தான் உன் யஜமானனின் ஆணவமான, கடுமையான சொற்களை உன் மூலமாகக் கேட்டும், நான் சகித்துக் கொள்பவனாக இருக்கிறேன். வன்முறை கைக்கொண்டாவது உன் யஜமானன் இந்த அம்பைக் கைப்பற்ற முயல்வாராகில், தன் முடி மீதுள்ள மாணிக்கக் கல்லை கவர வரும் ஒருவர் மீது நாகப்பாம்பானது தன் கண்களாலேயே விஷத்தைக் கக்கி அவரை அழிப்பது போன்ற அவலத்தைத் தான் தேடிக் கொள்வதில் முடியும்.''

கிராதர் படை கிளம்புகிறது

அர்ஜுனனின் இந்த உறுதியான நிலையை உணர்ந்த கிராதன் திரும்பிச் சென்று பரமசிவனிடம் அனைத்தையும் தெரிவித்தான்.

பிறகு அதன் தலைவரின் கட்டளையைத் தொடர்ந்து கிராத வீரர்களின் படை பயங்கரமாகக் கூச்சலிட்டுக் கொண்டு ஊழி காலத்து சூறாவளிக் காற்றால் கொந்தளித்த சமுத்திரத்தின் பெரும் அலையாக அர்ஜுனனை எதிர்த்துச் சென்றது. வேகவேகமாக முன்னேற ஊக்குவிப்பதுபோல, நீர்த்துளிகளைத் தன்னுள் கொண்டிருந்த காற்று படை வீரர்கள் பிடித்திருந்த கொடிகளை அலைபோல வீசச் செய்தபடி நறுமணத்துடன் அவர்கள் முன் சென்று வீசியது. படைவீரர்களின் வெற்றிக்கான முழக்கங்களுடனும், கூச்சல்களுடனும்கூடிய வில்களின் நாண் அதிர்வு ஒலிகளும் கேடயங்களின் மோதல் சப்தமும் மலைக்குகைகளினுள் புக முடியாத அளவுக்கு நிறைந்திருந்தன. ஆகவே அனைத்து ஓசைகளும் நான்கு திக்குகளிலும் சிதறுண்டு பூவுலகை நடுங்கவைத்தபடி சென்றன. கூரியதாகவும், பயங்கரமானதாகவும் உள்ள ஆயுதங்களைக் கதிரவனின் ஒளிகதிர்கள் பிரதிபலித்து மேலும் நீண்டு உலகின் மூலை முடுக்குகளை அடைந்தன. பிரமதர்களால் எளிதாகவும், வரிசையாகவும், சமயத்தில் வரிசைகளை உடைத்துக் கொண்டும் நடக்க முடிந்தது. படைவீரர்கள் ஒவ்வொரு வரும் முன் செல்ல முயல, அணிவகுப்பு கும்பலாகி, முன்னேறுவது தடைப்பட்டது. அடர்ந்த மனிதக் கூட்டத்தால் காடுகள் நிறைந்து, மூச்சுவிட முடியாது திக்குமுக்காடியது. பள்ளங்கள், மேடுகள், சோலைகள், சரிவுகள் எங்கும் கிராத வீரர்கள் நிறைந்து, நிலமானது திடீரென்று மேலெழுந்தாற் போலவும், வீரர்கள் சென்ற பிறகு உடனடியாகத் தாழ்ந்து விட்டது போலவும் தோன்றியது.

அவர்களுடைய பருத்த துடைகளுடன் கூடிய கால்களால் மிதிபட்டு செடிகொடிகள் சிதைந்தன. வேகமாக அவர்கள் நடந்ததால் எழுந்த காற்றின் வீச்சு சாலமரங்கள், சந்தன மரங்கள் ஆகியவற்றை சுழன்றாட வைத்தது. இவ்விதமாக அந்த கிராதர்கள் காடுகளால் குழப்பத்தை விளைவித்தார்கள்.

இந்தப் பக்கத்தில், அர்ஜுனன் தன் தவம் காரணமாக மெலிந்திருந்தான். ஆனால் உடலுள் வலிமை இருந்தது. வல்லமை கொண்ட யானை தன் மத்தக நீரைக் கசிய விட்டதால், மெலிந்ததாகக் காணப்படுவதுபோல், அவன் தனித்து நின்றான். நான்கு திசைகளையும் எரித்துவிடும்படியான ஜ்வாலையுடன் கூடிய தீயாக அச்சுறுத்தும் வகையில் காணப்பட்டான். தன் அம்புறாத் தூணியிலிருந்து ஓர் அம்பை உருவினான். நல்லதொரு நண்பனைத் தேடுவதுபோல வெற்றியைக் காண முனைந்தான். அம்பைப் பெறமுடியவில்லை என்பதை ஓர் அவமானமாகக் கருதி படை எடுத்துவரும் அணிவகுப்பை ஆர்வமின்றி நோக்கினான். தன்னைப் பிடித்திருப்பவனை அனைத்துவகை அபாயங்களிலிருந்தும், தீங்குகளிலிருந்தும் காக்கும் காண்டீபம் என்னும் வில்லை தடுமாற்றம் ஏதும் இன்றி பொறுமையுடன் கையில் கொண்டிருந்தான். எவ்வித எதிர்ப்பையும் அவன் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் எதிரியைத் துச்சமாக அவன் எண்ணவில்லை. காற்றால் அலக்கழிக்கப்படாத, அலைகளற்ற, இருந்தாலும் ஆழம் காண முடியாத சமுத்திரம் போல அவன் இருந்தான்.

அரக்கனான அந்தக் காட்டுப் பன்றி எதிரே விழுந்து செத்துக் கிடந்தது. அதைக் கொன்ற அர்ஜுனன் அதன்முன் யமன் போல உயர்ந்து நின்றான். அல்லது பலிகொடுக்கப்பட்ட விலங்குகளின் முன் நிற்கும் மகாருத்திரனைப் போலக் காணப்பட்டான் என்றும் சொல்லலாம். தன்னுடைய நிகரற்ற பொறுமை காரணமாக அவன் சுற்றுப்புறமிருந்த அனைத்தையும் விட உயர்ந்திருந்தான். அடர்ந்த காடுகளுடனும், பின்னிப் பிணைந்து படர்ந்த கொடிகள் கொண்டதும் ஆன மாமலை போலவும் காணப்பட்டான். பருத்த காளைமாட்டின் தடித்த திமில்கள் போல இருந்தன அவனுடைய தோள்கள். கழுத்து உறுதியாகத் தென்பட்டது. கற்பாறை போன்று உறுதியாகத் தெரிந்தது மார்பு. அனைத்துவகைக் கொடுமைகளிலிருந்தும் உலகைக் காக்க முற்பட்டவன் போலக் காணப்பட்டான். ஆகவே, பிரபஞ்சம் அழியக்கூடிய நிலையில் கொந்தளிக்கும் கடலிலிருந்து பூமியைத் தூக்கி உயர்த்தி எடுத்துவரும் வராக அவதாரமூர்த்தி போலவும் தோன்றினான். உடல் மரகதப் பச்சையாகக் கருத்திருந்தது. அனைவரது உடல் காந்தியையும் குறைத்து அவனுடைய உயர்தர

உடல்வாகு ஜோதிமயமாக மிளிர்ந்தது. தெளிந்த நீர் பிரகாசமான சூரியனைப் பிரதிபலிப்பது போல, ஆதிப்பரம்பொருள் (விஷ்ணு) போன்று காணப்பட்டான். எடுத்த செயலை முடிப்பவனாக இருந்தான். அவனுள் உலகத்தையே எரித்து சாம்பலாக்கி விடுவதற்கான தீ ஜ்வாலை கொழுந்துவிட்டு எரிந்தது.

போர் துவங்கியது

முடிவாக, ஒரு மாமலையை அடைந்த நீண்ட வரிசையால் ஆன மழைகால மேகக் கூட்டம் போன்று கிராதர்களின் படை அர்ஜுனனை நெருங்கியது. அவ்விதம் நெருங்கும்போது, படை வீரர்களில் ஒவ்வொருவனும் விரோதியை அழிக்கத் தான் ஒருவனே போதும் என்று பிதற்றிக் கொண்டிருந்தான். ஆனால் துறவு நிலையில் உள்ள அர்ஜுனனை அவர்கள் இப்போது பார்த்ததும், தங்கள் சக்தியையும், அவதானிக்கும் திறமையையும் இழந்துவிட்டதாக உணர்ந்தனர். கிராதர்கள் ஒன்று கூடி அம்புகளைப் பெய்து அவனைத் தாக்கத் தொடங்கினார்கள். வெற்றி ஒன்றே குறிக்கோளாகக் கொண்ட போரில் எவ்வகையான நடவடிக்கையும் குறை கூறப்படக் கூடியது அல்ல. படைவீரர்களின் எண்ணிறைந்த அம்புகள் பெருங் காட்டிலிருந்து எழுந்து பறந்து செல்லும் பறவைகளின் கூட்டங்கள் போல, அனைத்து திசைகளிலிருந்தும் கிளம்பின. காடு முழுதும் கிடுகிடுக்கச் செய்து கொண்டு, விண்வெளியில் பரவிச் சென்று, திசைகளை அனைத்தையும் அடைந்து, புயற்காற்றோடு சேர்ந்து மழை பொழிவது போன்ற ஓசையை உண்டாக்கின.

காற்றை மட்டுமே சுவாசித்துக் கொண்டிருந்த அர்ஜுனன் இயல்பாக மெலிந்திருந்தான். இருந்தாலும் போர் புரிவதற்கான இந்த வாய்ப்பு அவனை மகிழ்விப்பதாக இருந்தது. உடல் ஊட்டம் பெற்றது போல, உடலில் கட்டப்பட்டு தளர்ந்து தொங்கிக் கொண்டிருந்த ஆயுத உறைகள் சட்டென்று இறுக்கமாயின. தரை எங்கும் அம்புகள் மழையாகப் பொழிந்தன. அர்ஜுனனும் தன் வில்லின் வல்லமையைக் காட்ட ஆர்வம் கொண்டவன் ஆனான். அவனுடைய அச்சம் தரத்தக்க, பழிவாங்கும் எண்ணம் கொண்ட பார்வை எரிநட்சத்திரம் போன்று அச்சுறுத்தியபடி பிரமதர்களின் மீது விழுந்தது. கதிரவனின் ஒளியை தன் அம்புகளால் மறைத்தவனாக, கடலையும் காற்றையும் தன் வலிமையால் கிளர்ச்சிக்கு உள்ளாக்கி, மலைகளுடன் கூடிய இந்த பூமி முழுதையும் நடுங்கவைத்தபடி, அண்ட சராசரங்களின் ஊழி நேரம் போல, அர்ஜுனன் புறப்பட்டான். கிராதர்கள் கூட்டமாகப் பொழிந்த அம்புகள் நடுவழியிலேயே, இலக்கை அடைவதற்கு முன்பாகவே

உடைத்து எறியப்பட்டன. ஒரு வேந்தன் நிதானத்துடனும், யுக்தியுடனும் செயல்பட்டு, வெல்ல முடியாதவனாக உயர்வது போல, தன்னுடைய அம்புகளைப் பொழிந்த அர்ஜுனன் வெல்ல மாட்டாதவனாக ஆனான். எதிரிகளால் வெற்றி கொள்ள முடியாதவையும், அபாயங்களை அப்புறப்படுத்துபவையும், தங்களுடைய நீண்ட கூர்மையான முனைகளுடன் தொலைதூரம் செல்பவையுமானவை அந்த அம்புகள்.

கிராதர்கள் குழப்பம் அடைந்தனர். ''இந்த அம்புகள் வானுலகத்திலிருந்து வருகின்றனவா, தரையிலிருந்து கிளம்பு கின்றனவா, சூரிய கோளத்திலிருந்து புறப்படுகின்றனவா, அல்லது ஒரே சமயத்தில் வில்லில் பூட்டி விடுபட்டவனவா, இல்லை, அத்துறவியின் ஒவ்வொரு உடல் உறுப்புகளிலிருந்தும் ஜனித்தனவா? அர்ஜுனன் எய்த அம்புகள் பிரமதர்களிடையே வலியுடன் கூடிய பெருத்த காயங்களை ஏற்படுத்துவதாக இருந்தாலும், அவர்களுடைய உயிரைப் போக்கவில்லை. ஆகவே தங்கள் பணியில் தோல்வி கண்டவர்களான அவர்கள் மலையைக் கடந்து குற்றஉணர்வுடன் மறைந்து போயினர். துன்பம் அடைந்தவனை மீண்டும் துன்புறுத்துவது தகாது என்பதாக, அர்ஜுனன் அதன் பிறகு செலுத்திய அம்புகள் அவர்களின் உடல்களில் ஒரே இடத்தில் தைக்காமல், வெவ்வேறு புதிய காயங்களை ஏற்படுத்தின. எத்தனை விரோதிகள் அங்கு இருந்தார்களோ, அத்தனை அம்புகள் அர்ஜுனனின் வில்லில் இருந்து பிறந்தன. நிலவின் பரவும் கதிர்கள் சுற்றிலும் உள்ள தாமரை மலர்களின் இதழ்களைக் கூம்பச் செய்வதுபோல, பரமசிவனின் படைவீரர்களின் ஆயுளை அவனுடைய அம்புகள் குறைத்தன. அந்த அம்புகள் நேர்த்தியானவை; வீர்யமுள்ளவை. தோல்வி காணாதவை, சோர்வு அடையாதவை; பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபடுபவை. அவற்றால் ஊடுருவப்பட்ட படை வீரர்களால் களத்தில் நிற்கவே முடியவில்லை. வெவ்வேறு இடங்களில் மக்கள் நின்றிருந்தாலும், ஒவ்வொருவரும் தங்கள் முன் அர்ஜுனன் நிற்பதாகக் கண்டனர். பரமசிவனின் படைவீரர்களும் வேகமாக வரும் அம்புகளைக் கண்டு பிரமை சூழப்பட்ட அர்ஜுனன் ஒரே சமயத்தில் தங்கள் எதிரே நிற்பதாக நினைத்தனர். கோடைகாலத்து வறண்ட புழுதியை சுழற்காற்று அள்ளிச் சேர்த்து திசை அனைத்திலும் பரவவிடுவது போல, அர்ஜுனனின் விரைவான அம்புகள் பிரமதர்களைக் குழப்பம் அடையச் செய்து நானாதிசைகளிலும் சிதறி ஓடச் செய்தன.

தன் தவ வலிமையால் கண்களுக்குப் புலப்படாத வகையில் தன்னைப் போன்ற அத்தனை உருவங்களைப் படைத்துக் கொண்டு

ஒரே நேரத்தில் அத்தனை அம்புகளைப் பொழியும் சக்தி பெற்றிருக்கிறாரோ? அல்லது அவர்கள் எய்யும் அம்புகளே மந்திரசக்தியால் திருப்பப்பட்டு அவர்களைத் தாக்கிக் கொல்கிறதோ? அவனுடைய வல்லமையைக் கண்டு, அவனுடைய பண்பாடுகளை உணர்ந்து அச்சமுற்ற தேவர்களே அவன் பக்கம் சாய்ந்து, கண்களுக்குப் புலப்படாமல் இருந்து கொண்டு அம்புகளை எய்பவர்களாக இருக்கலாம். அப்படி இல்லாவிடில் சமுத்திர அலைகள் எழுவது போல அவை எவ்விதம் தொடர்ந்து பொழிந்து கொண்டிருக்க முடியும்? அவர்கள் தங்களுக்குள் எண்ணிக் கொண்டனர். ''இந்தத் துறவி நம்மை வெற்றி கண்ட பிறகுதான் போரை நிறுத்துவாரா? இந்த உலகில் இனி அமைதியும் சாந்தமும் நிலைத்திருக்குமோ?'' பழிவாங்கும் எண்ணம் மன்னிக்கும் இயல்பை வெற்றி கொள்வது போல, ஆணவம் தெளிந்த அறிவை மறைப்பதைப் போல, ஊழ்வினை மனித முயற்சிகளைத் தோல்விகாணச் செய்வது போல, பிரமதர் படைவீரர்களின் வல்லமை அர்ஜுனனால் அழிக்கப்பட்டது. அர்ஜுனனின் அச்சுறுத்தும்படியான உருவைக்கண்டு பயந்த வெற்றிவாகை பரமசிவனின் படைவீரர்களை விட்டு அகன்றது.

போர் நடந்து கொண்டிருக்கும் போது, அனைத்து விலங்குகளிடையிலும் கிலிபிடித்தது. பரமசிவனின் படைவீரர்கள் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடினர். பரமசிவன் தங்களிடையே இருப்பதைக் கண்டு கொள்ளாதவர்கள் போல, பிரமதர்கள் சென்று விட்டனர். ஏனெனில் துயரமான அந்த வேளையில் அவர்கள் குழப்பம் அடைந்து இருந்தார்கள். வெற்றிக்கான நம்பிக்கையை பரமசிவனின் படைவீரர்கள் இழந்து ஓடுவது அர்ஜுனனின் மனதில் கருணை உணர்வை எழுப்பியது. பரமசிவனின் மகனும், வாளும், வில்லும், அம்புகளும் தரித்தவனும், படைவீரர்கள் ஓடிய பிறகு தனித்து விடப்பட்டவனுமான கார்த்திகேயன் மட்டும் நிற்கும் இடமாக போர்களம் இருந்தது. அர்ஜுனனும், அவனும் ரதங்கள் இன்றி தரையில் நின்றனர். கார்த்திகேயனை எவரால் வெல்ல முடியும்? பயத்தால் ஆடிப் போய்விட்ட பிரமதர்களை அவன் மெள்ள தொடர்ந்து சென்றான். விரைவாகச் செயல்படக்கூடிய தருணம் அல்ல அது. துன்பப்பட்டவர்களை மேலும் துன்புறுத்துதல் தகாது.

ஓடும் பிரமதர்களை கார்த்திகேயன் ஊக்குவிக்கிறான்

இச்சமயத்தில் தனது படைவீரர்களின் செயலாற்றாமையைக் கண்ட கார்த்திகேயன் புன்னகையுடன் அவர்களிடம் சொன்னான்:

''ஓ பிரமதர்களே! போர்க்களத்தில் ஆகட்டும், விளையாட்டுப் போட்டிகளில் ஆகட்டும், நீங்கள் ஒரே விதமான மகிழ்ச்சியுடன் ஈடுபடுவது வழக்கம். தேவர்களைக்கூட வெற்றிகொள்ளும் திறன் படைத்தவர்கள் நீங்கள். போர்க்களத்திலிருந்து இவ்விதம் பின்வாங்கிச் சென்று உங்களுடைய புகழை ஏன் களங்கப்படுத்திக் கொள்கிறீர்கள்? உங்கள் நீண்ட வாள்கள் கதிரவனின் ஒளிக்கதிரால் தகதகத்ததாக மேலும் நீண்டது போன்று — போரில் பின்வாங்கி ஓடுபவர்களுக்கு எதற்கு வாள் என்பதாகப் பரிகசிப்பது போல — காணப்படுகின்றன. உங்களுடைய மதிப்பையும், வர இருக்கும் புகழையும் லட்சியம் செய்யாமல், எந்த அபாயத்தை உணர்ந்து நீங்கள் ஓடுகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இத்துறவி அரக்கர் அல்லர், பாம்புகளின் தலைவன் நாகராஜனும் இல்லை; மலைபோன்ற தோற்றம் கொண்ட பூதமும் கிடையாது. ரஜஸ் என்னும் குணம் ஒன்றினால் மட்டுமே உயர்ந்த சாதாரண மனிதன் இவன். இவனை எளிதில் வென்றுவிட முடியும். உங்கள் பேரில் பரிதாபப்பட்டு அத்துறவி உங்களை மெல்லத் தாக்குகிறார். மரக்கிளை ஒன்றை ஒடித்து மந்தைகளான கால்நடைகளை முதுகில் அடித்து விரட்டுவது போல அவர் உங்களை ஓடச் செய்கிறார். தாழ்ந்தவனால் தோற்கடிக்கப் பட்டவனும், தாழ்ந்தவனைத் தோல்வியுறச் செய்பவனும் மனிதன் என்னும் சொல்லுக்கு அருகதை ஆகாதவன். உங்களைப் பற்றிச் சொல்வதென்றால், தாழ்ந்த ஒருவனால் நீங்கள் தோற்கடிக்கப்பட்டது மட்டுமல்லாது, பின்வாங்கி ஓடுகிறீர்கள்.

இதோ கவனியுங்கள், தோல்வி கண்டவர்களாக உங்களை நீங்கள் கருதக்கூடாது. ஏனெனில் உங்களுடைய யஜமானர் தோல்வி அடையவில்லை. பண்புகள் இருந்தும் அவற்றைத் துறந்தவனைவிட பண்பு அற்ற மனிதன் உயர்ந்தவன். எவ்வாறு எனில் ரத்தினக் கற்கள் பதித்த ஆபரணம், அந்த ரத்தினக் கற்களை இழந்ததால், ரத்தினக் கற்கள் பதிப்பிக்காத ஆபரணத்தைவிட தாழ்ந்ததாகி விடுகிறது. இத்துறவியிடம் விரைந்து ஓடும் ரதங்கள் இல்லை; பாய்ந்து செல்லும் புரவிகள் இல்லை; உரத்துப் பிளிரிடும் யானைகள் கிடையாது; பதாதிகளான படைவீரர்களைக் கொண்டவரும் இவர் இல்லை. ஆகவே இவரைக் கண்டு அச்சம் அடைவது ஏன்? சூரிய வெப்பத்தால் நீர் வரண்டபிறகு, முற்றிலும் சேறாக ஆன வற்றிய குளம் போல நீங்கள் சக்தி முழுதும் இழந்து இகழ்ச்சிக்கு ஆளாகி விட்டீர்கள். வானுலகில் போரிட்டு வெல்ல முடியாத விரோதிகளையும் வென்றவர்கள் நீங்கள். மிக்க வல்லமை கொண்ட அரக்கர்களுடனும் போரிட்டு வெற்றி பெற்றிருக்கிறீர்கள். ஆனால் இப்போது ஊர் பேர் தெரியாத ஒரு சாதாரண மனிதனிடம் தோற்று ஓடுகிறீர்கள். அறத்திலிருந்து வழுவும்

மனைவியை அவளுடைய கணவன் காப்பாற்றி வழிக்குக் கொண்டு வருவதுபோல, எதிரியால் தாக்கப்பட்டுத் தோல்வி கண்டு ஓடும் உங்களைக் காக்க பரமசிவன் இருக்கிறார். ஆகவே அச்சம் அடையாதீர்கள். விரோதிகளில் மிக மோசமானவர்களையும் உங்களால் வெற்றிகொள்ள முடியும். நீங்கள் உலகத்தைக் காப்பவர்கள்; தீயவர்களிடம் கொடுமையாக நடந்து கொள் பவர்களாக, எதிரிகளை அச்சுறுத்துபவர்களாக இருக்கிறீர்கள். தலைநிமிர்ந்து அணிவகுத்துச் செல்லுங்கள்.

படைவீரர்கள் என்ற கௌரவத்தையும், செருக்கையும் நீங்கள் எவ்வாறு கைவிட முடியும்? நம்முடைய எதிரியானவன் வசீகரமாக இருக்கிறான்; ஜோதியுடன் காணப்படுகிறான். ஊக்கம் உடையவன். கூர்மையாகத் தீட்டப்பட்ட வாளைக் கொண்டிருக்கிறான். மீண்டும் அவனால் போரிட முடியும். மிக வல்லமை கொண்ட விரோதியிடமும் அவன் அச்சம் அடைவது இல்லை. ஆகவே அவனை எதிர்த்து நிற்கவேண்டும்; ஓடக்கூடாது. இப்போரில் புரவிகள் அடிபட்டு விழுந்து, அவற்றின் உயிரற்ற உடல்கள் ரதங்களின் நடமாட்டத்துக்கு இடையூறாக இருக்கின்றன. பெரும் யானைகள் இறந்து வீழ்ந்து அவற்றினின்றும் பெருகும் குருதி மலைகளிலிருந்து பெருகும் அருவிகள் போன்று காணப்படுகின்றது. தலைகளற்ற முண்டங்கள் ஆடும் ஆட்டத்தைக் காணும் புரவிகள் அச்சமடைந்து எகிறி, தங்கள் மீது அமர்ந்திருப்பவர்களைத் தூரத் தள்ளிவிடுகின்றன. காலியான அம்புறாத் தூணிகளுள் காற்றுப் புகுந்து கூச்சலைக் கிளப்பி, அதனால் காதுகளின் பாறைகள் கிழிந்துவிடுவன போல ஆகின்றன. இத்தகைய போர்களில் தீரர்கள் களிப்பு அடைகிறார்கள். கோழைகள் துவண்டு போகின்றனர். முன்பெல்லாம் அரக்கர்களுடன் போரிட்டபோது, கடுமையான சண்டையில் நீங்கள் உற்சாகத்துடன் ஈடுபட்டீர்கள். ஆனால் அதே போன்ற இந்தச் சண்டையில் உங்கள் பேராண்மையும், தீரமும் அழிக்கப்பட்டுவிட்டன. நீங்கள் பின்வாங்கி ஓடுகிறீர்கள்.''

அர்ஜுனனுக்கும் பரமசிவனுக்கும் இடையே அஸ்திரப் போர்

திசையெங்கும் சிதறி ஓடும் பிரமதர்களைப் பிடித்து இழுத்து நிறுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர கார்த்திகேயன் முயன்று கொண்டிருக்கும் வேளையில் பரமசிவன் அங்கு வந்தார். வந்து ஒரு புன்னகையால் அவர் அவர்களை ஓடாமல் நிறுத்தினார். அர்ஜுனனுடைய அம்புகளால் துன்புறுத்தப்பட்ட அவர்கள் போர்முனைக்கு அவமானத்துடன் திரும்ப முயன்றபோது,

'அச்சமுறாதீர்' என்கிற பரமசிவனின் இதமான சொற்கள் அவர்களைக் களைப்படையச் செய்தன. அச்சமுற்று, தாழ்ந்த நிலையடைந்து விட்டதான எண்ணத்தால், உற்சாகம் பொங்கும் கூச்சல் அற்று அந்த பிரமதர்கள் சங்கரனை (பரமசிவனை) சங்கரன் (நன்மை செய்பவன்) என மனமாற உணர்ந்தனர். விரோதியின் எண்ணிறந்த கொடிய அம்புகளான தவிர்க்க முடியாத சமுத்திரத்தில் உதவி ஏதுமின்றி மிதந்து கொண்டிருந்த படை வீரர்களுக்கு பரமசிவனைப் பார்த்ததும் அக்கரையை அடைந்தாற் போல விடுதலை உணர்வு பிறந்தது. சுற்றிப் பருத்து வளர்ந்திருந்த மரம் சூரியனைப் பார்த்தபடி நின்று பின்புறம் ஆழ்ந்த நிழலை உண்டாக்குவதுபோல, பரமசிவன் முன்னேற, ஓடிய படை அவர் பின்னால் திரண்டது. அர்ஜுனனை நோக்கி பரமசிவன் அம்பை விடுத்ததும், வில்லில் இருந்து எழுந்த நாண் ஒலி நான்கு திக்கிலும் எதிரொலித்து, இந்திரகீல மலையை ஏறக்குறைய இரண்டாகப் பிளந்தது. பிரமதர்களின் படை அச்சத்துடன் அசையாமல் நின்று, திரைச்சீலையில் எழுதப்படும் பெரிய போர் நிகழ்ச்சியைக் காண இருப்பது போலக் காத்திருந்தது.

தேனீக்களின் கூட்டம்போல அர்ஜுனன் செலுத்திய அம்புகள் பரமசிவனால் வெட்டப்பட்டன. அதேபோல பரமசிவனின் கணைகளையும் செயலிழக்கச் செய்த அர்ஜுனன் தீது இன்றி நகர்ந்து கொண்டிருந்தான். கபில நிறத்துடன் கூடியதும், மின்னுவதுமான நாணை உடைய பருத்த வில்லை அச்சமின்றி உயர்த்தி ஆட்டியபடி அர்ஜுனன் பிரகாசமான எரிநட்சத்திரத்துடன் கூடிய சூரியன் போல ஜோதியுடன் விளங்கினான். அடர்ந்த மேகங்கள் சூரியனின் ஒளிக்கதிர்களைத் தடுப்பதுபோல, அர்ஜுனனின் அம்புகள் பரமசிவனின் அம்புகளைத் தடுத்து நிறுத்தின. பரமசிவனும் அர்ஜுனனின் கணைகளைத் தன் கணைகளால் தடுத்து, கதிரவனின் பாதையை அடைத்தார். பரமசிவனால் செலுத்தப்பட்ட எண்ணிறைந்த பொன்னிற அம்புகள் விண்ணிலும் விண்ணுலகத்திலும் சென்று காதுகளைச் செவிடாக்குவதாக, மின்னல் வெட்டுக்களைத் தொடர்ந்து தோற்றுவித்தன. அர்ஜுனனின் அம்புகள் திருப்பிவிடப்பட்டன. அவனும் பரமசிவனின் அம்புகளால் துளைக்கப்பட்டான். தன்னுடைய வல்லமையாலும், தீர சாகசத்தாலும் மேன்பட்டு இருந்ததால், அவன் சோர்வு அடையவில்லை. கருத்த நிறம் கொண்டவனும், சிங்கம் போன்று கம்பீரமானவனும், வெற்றி பெற ஆர்வமுடையவனும், பரமசிவனுடன் லாகவமாகப் போர் புரிபவனும் ஆன அர்ஜுனன், பூவுலகைக் காப்பதற்காக பிரம்மனால் படைக்கப்பட்டதும், பயன்படக்கூடிய பல பொருள்களைத் தருவதும், அரக்கர்களாலும்,

மகரிஷிகளாலும் ஒரே சமயத்தில் போற்றப்படுவதுமான மலைகளுக்குள் அரசனான இமயமலை போல உயர்ந்து நின்றான்.

பூவுலகத்தைக் காப்பதற்காகவும், இந்திரனுக்குப் பிரிய மானவனும், போரில் வெற்றியை வேண்டுபவனுமான அர்ஜுனன், பூவுலகைக் கொடுமைப்படுத்தும் அரக்கர்களுடன் போரிட்டு வெல்லக்கூடிய வலிமை படைத்ததும், இந்திரனுக்குப் பிரியமானதும், அமிர்தம் போன்று வெண்மை நிறம் கொண்டதும், மத்தக நீரைப் பொழியும் யானையான ஐராவதம் போன்று இருந்தான். கொடுமைப்படுத்துபவர்களிடமிருந்து பூவுலகைக் காக்க வந்தவனும், அரக்கர்கள், மகரிஷிகள், செல்வத் திருமகள் ஆகியோரால் போற்றப்பட்டவனும் ஆன கிருஷ்ணனுக்குப் பிரியனான அர்ஜுனன், பூவுலகைக் காப்பதற்காக அமர்த்தப்பட்டதும், மகாவிஷ்ணுவுக்குப் பிரியமானதும், அமிர்தத்தை விரும்பி உண்டதும், அனைவராலும் போற்றப்படுவதுமான அனந்தநாகம் போன்று காணப்பட்டான்.

அவனுடைய பாணங்கள் பரமசிவனால் வெட்டப்பட்டன. உடலின் மயிர்த் துளைகள் மூலம் ஓசையுடன் வெளிப்பட்ட அவனுடைய முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. பழுப்பு நிறமடைந்த சடைத்த முடியுடன் சினம் தழலாக எரிய, அவன் ஒளியிடும் காட்டு மூலிகைகளைக் கொண்டதும், காட்டுத்தீயைப் பரப்புவதாகவும் உள்ள இமயமலை போலக் காணப்பட்டான். வெறிகொண்டவன் போன்று இருந்த அர்ஜுனனிடம் தன் மேன்மையையும், புலப்படாத உருவையும் தெரிவிக்கும் பொருட்டு பரமசிவன், அவனை அடித்து வீழ்த்தும்படியான, ஆனால் மரணத்தை வரவழைக்காத கணை ஒன்றைச் செலுத்தினார். வளைந்த வில்லிலிருந்து கிளம்பிய அந்த அம்பு சூரியகோளத்திலிருந்து எழுந்த ஒரே ஒரு ஒளிக்கிரணம் போல எழுந்து சென்றது. அந்த அம்பைத் தடுத்து நிறுத்தும் காரணமாக அர்ஜுனன் பூவுலகம் முழுவதையும் தன் அம்புமாரியால் மறைத்தான். நாற்புறங்களிலிருந்தும், எண்திசை களிலிருந்தும் கடுவேகமாகப் புறப்பட்டு வரும் பரமசிவனின் அனைத்து பாணங்களையும் சந்தித்த அர்ஜுனன், தன் இருப்பிடங்களை மின்னல் வேகத்தில் மாற்றிக் கொள்பவனாக, அங்கிருந்த முனிவர்களுக்கு எண்ணிறைந்து தோன்றுபவனாகக் காணப்பட்டான்.

யுத்தம் தொடர்ந்து நடந்தது. இருவருடைய கணைகளும் சுற்றிலும் எங்கும் பறப்பதாக இருந்தன. அரக்கர்களை அழிக்கும் இயல்பு கொண்ட பிரமதர்கள் வியப்புடன் நோக்கினர். பரமசிவனின் பக்தர்குழாம், முனிபுங்கவர்கள், தேவதேவதைகள் ஆகியோர் வானில்

கூடினர். அர்ஜுனனுடைய வல்லமையையும், ஊக்கத்தையும் கண்ட ஒவ்வொருவருக்கும் அவன்பால் வியப்பு.

கிராதர் தளபதியின் பராக்கிரமம் குறித்து அர்ஜுனன் கவலையடைதல்

போரில் கிராதர் தளபதியின் அசாதாரணமான திறமை அர்ஜுனனை சினமூட்டியது. ஆனால் அதேசமயம் அத்தகைய பராக்கிரமம் அவனை சிந்திக்கச் செய்தது. தன்னுள் அவன் எண்ணியதாவது:

''நான் தோல்வியுறுவதற்கு என்ன காரணம்? இங்கே மலை போன்ற யானைப்படை எதிரே இல்லை. இங்கே இடியென முழக்கமிட்டுப் பறக்கும் பதாகைக் கொடிகளுடன் கூடிய ரதங்களின் அணிகளும் இல்லை. இங்கே மின்னும் வேல்கம்புகளுடன், யாக் என்னும் எருதுகளின் வால்களை அலங்காரமாக அணிந்து நாற்புறங்களிலிருந்தும் அணிவகுத்து வரும் காலாட்படைகளும் இல்லை. இங்கே உரத்த குரலில் கோஷமிட்டபடி, கதிரவனின் ஒளிக்கதிர்களைப் பிரதிபலித்துப் பளிச்சென்று காணப்படும் ஆயுதங்களை வானவெளியில் வீசிக் காட்டும் வீரர்களும் இல்லை. இங்கே யமதர்மனின் வருகையால் நேரும் அடர்ந்த புகை போன்றதும், புரவிகளின் காலடிகளாலும், ரதங்களின் சக்கரங்களாலும் எழுவதுமான புழுதி காற்றினால் அடித்துச் செல்லப்படுவதாகவும் இல்லை. இங்கே வீரம் மிகுந்த தீரர்களைப் பாராட்டும் நிமித்தம் வருகை தரும் தேவ கன்னிகையரின் தோற்றங்கள், கழுதையின் நிறத்தையொத்த புழுதி மேகத்தால் மறைக்கப்படுவதாகவும் இல்லை. இங்கே ரதங்களின் சக்கரங்கள் சுழல்வதால் எழும் கடகடவென்னும் ஓசையும், புரவிகளின் கனைப்பும், யானைகளில் பிளீறலும் கலந்து பெரும் முரசுகளின் அதிர்வு ஒலியை அடக்கி அமுத்தி மறைப்பதாகவும் தெரியவில்லை. இங்கே கிட்டாத புகழுக்கு ஆசைப்பட்ட தீரம் மிக்க வீரர்கள், எதிரிகளால் துன்புறுத்தப்பட்டு, தரையில் விழுந்து மயங்கிக் கிடக்க, அவர்களுடைய யானைகள் தங்கள் துதிக்கையால் நீர் எடுத்துவந்து அவர்கள் மீது தெளித்து மூர்ச்சை தெளிவிப்பதாகவும் இல்லை. இங்கே தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் ரத்த ஆறு இல்லாதது மட்டுமல்லாமல், அந்த ரத்த ஆறு ஏற்படுத்தும் சேற்றினால் ஆன மடுவும், அவ்வித மடுக்களால் நடமாட முடியாத தடங்கல் ஏற்படுவதும் இல்லை. இங்கே தேவலோகத்திலிருந்து வந்ததும், அன்புடைய ஒருவரின் மடி போன்று மென்மையானதும், மந்தார மலர்களினால் ஆனதுமான மாலைகள்

யானைகளின் தந்தத்தால் குத்தப்பட்டு சிராய்த்த மார்புகளை உடைய தீரர்களின் உள்ளத்தை அமைதிப்படுத்துவதாகவும் இல்லை. இங்கே இறக்கைகளைக் கொண்ட மலைகளை போன்ற பெரிய காதுகளை உடையனவும், கொந்தளிக்கும் கடலாகக் கர்ஜிப்பனவும் ஆன பெருத்த யானைகள் படைவீரர்களின் அணிவகுப்பை உடைத்துக் குலைத்துக் குழப்பம் விளைவிப்பனவாகவும் இல்லை. இங்கே துதிக்கைகளை இழந்த யானைகள் கோபமுற்று, எதிரியைத் தாக்க முற்படும் தீரர்களின் பாதையை தடைசெய்வதாகவும் இல்லை. ஊழிக்காலத்தில் உயிர்கள் படைப்பிப்பது நின்று, மூன்று உலகங்களையும் தனது அகண்ட வாயால் விழுங்க விரைந்து வரும் யமதர்மனுக்கு அனுகூலமாக ஆயிரக்கணக்கில் படைவீரர்கள் செத்து விழுவதாகவும் இல்லை. திறமைமிக்க பல வீரர்களை எனது வல்லமை அழித்திருக்கிறது. ஆனால் இந்த அற்பமான சண்டையில் அவ்வல்லமை தோல்வி காண்கிறது. நிலவின் ஒளிக்கதிர்களால் கதிரவனின் ஒளிக்கதிர்கள் தரம் இழப்பதுபோல. இப்படியும் ஒருவகைத் தந்திரம் இருக்கிறதோ? என் உள்ளம் பேதலித்து விட்டதோ? என் சக்தி அனைத்தையும் இழந்து விட்டேனோ? நான் நான்தானா அல்லது வேறு ஒருவனா? அதே எனது பழைய வில்லிலிருந்து செலுத்தப்படும் இந்த அம்புகளிடம் முன்பு போல சக்தியைக் காணோம்.

தன் வில்லிலிருந்து எழும் ஓசையால் இந்த கிராதன் ஆகாயத்தைப் பிளப்பதாக இருக்கிறான். பூண்டுள்ள ஆடை அணிகள் தெரிவிப்பது போல இயல்பு உடையவன் அல்லன் இவன். மறைக்கப்பட்டாலும் ஒருவருடைய உண்மையான அடையாளம் அவருடைய நடத்தையால் வெளிப்பட்டு விடுகிறது. கோபமுற்றது போல அவனுடைய வில் அடிக்கும் கர்ஜனை புரிகிறது. ஒரு தடவை இழுத்த நாண் இழுத்ததாகவே இருக்கிறது. அம்புறாத் தூணியிலிருந்து எடுக்கப்படாமலே அம்புகள் வில்லிலிருந்து செலுத்தப்படுகின்றன. அம்புகளை வில்லில் பூட்டும்போது, அவனுடைய கைவிரல்கள் குவிந்து பிடிப்பதாகவும் இல்லை. இவனுடைய இரு தோள்களும் சற்றே முன்தள்ளி நிலைத்து நிற்கின்றன. கழுத்து சிறிதும் அசையக் காணோம். இவன் முயற்சியெடுத்து ஏதும் செய்வதாகத் தெரியவில்லை. உணர்ச்சிகள் அற்ற முகம் பாறை போலக் காணப்படுகிறது. சில சமயங்களில் சரிப்படுத்துவதற்காகப் பாதங்களை நகர்த்தினாலும், உடல் அதே நிலையில் நிற்கிறது. மிகத் திறமையுடன் நகர்ந்தும் நகராமலும் குறி வைத்துத் தாக்குகிறான். எதிரியின் தவறுகளைப் புரிந்துகொண்டு தன் தவறுகளைத் திருத்திக் கொள்கிறான். இத்தகைய பேராற்றல் பீஷ்மருக்கும், துரோண ருக்கும்கூட வாய்க்கவில்லை. ஒரு கிராதனிடம் இத் திறமைகள்

இருப்பது நம்ப முடியாததாக இருக்கிறது. சாதாரண அஸ்திரங்கள் இவனை ஏதும் செய்யா. தெய்வீக அஸ்திரம் ஒன்றைக் கொண்டுதான் இவனை வீழ்த்த முடியும். உள்ளூர வளரும் நோய்போல, சிறிய, ஆனால் வல்லமை பெற்ற விரோதி பெருத்த தீங்கை விளைவிப்பவன்.''

இருவரும் மந்திர சக்தியால் ஆன அஸ்திரங்களுடன் போரிடுகின்றனர்

இவ்விதம் எண்ணியவனாக அர்ஜுனன், மேகங்கள் சூழ்ந்த இரவில் காரிருள் கவிவதான, விரோதியின் வல்லமையையும், சக்தியையும் அழிக்கும் காரணமாக, 'நீண்ட உறக்கம்' என்னும் பாணத்தை எடுத்தான். காலம் காலமாக எரிந்து கொண்டிருக்கும் காட்டுத் தீயின் அடர்ந்த புகை சூரியனையும் சுற்றிச் சூழ்வதுபோல, ஆழ்ந்த கருத்த நிழல் ஒன்று பரமசிவனின் படைவீரர்கள் இடையே பரவியது. உடனேயே மிகச் சக்தி வாய்ந்த உறக்கம் பிரமதர்களை வெற்றி கொண்டது. கற்றோர் அவையில் நுழைந்த சாதாரண மனிதர்கள் பேசும் சக்தி இழந்துவிடுவது போல, அவர்கள் தங்கள் உணர்வை இழந்தனர். வெகுநாட்கள் நட்பு கொண்ட நம்பிக்கையான தோழனை நம்புவது போல, நாண்களுடன் கூடிய தங்கள் வில்களின் மீது சாய்ந்து சில படைவீரர்கள் அசையாது நின்றனர். ஊழ்வினை காரணமாக, முயற்சித்தும் பலன் கிட்டாதது போல, சிலரது ஆயுதங்கள் முழுதுமாகப் பயனற்று, அவர்களுடைய கைகளிலிருந்து நழுவின. மத்தக நீர் பெருக்கத்தால் செயல் இழந்த யானைகள் போல, கண்களை மூடி, மரங்கள் மீது சாய்ந்து, ஏதும் அறியாதவர்களாக மற்றவர்கள் நின்றனர்.

பிறகு, பரமசிவனின் நெற்றியிலிருந்து சிவந்த ஒளிக்கதிர் கற்றைகள் எழுந்தன. அதை, சுமேரு மலைச் சிகரத்திலிருந்து எழும் காலை நேரத்து சூரியன் என்று முனிவர்கள் எண்ணி தலைதாழ்த்தி வணங்கினர். பேதைமையை, அழிக்கும் புலமைபோல பிரமதர்களின் ஆழ்ந்த உறக்கத்தை அது விரட்டியது. அது அதிகாலையின் அருணோதயமாக, சுற்றிலும் ஒளியை பரப்பியபடி, காலை நேரத்தில் தாமரை மலர்களின் மடல்களை சூரியன் திறப்பதுபோல, பிரமதர்களின் கண்களைத் திறந்தது. மேகங்கள் அற்ற வானில் நான்கு திசைகளும் நட்சத்திரங்களுடன் கூடி ஜ்வலிப்பதைப் போல, தங்கள் உணர்வை மீண்டும் பெற்ற பிரமதர்கள் அவர்களுடைய இயல்பான பெருமையுடன் எழுந்தனர். பிறகு இரவுக்கு விடை கொடுத்து அனுப்புவதுபோல, வானம் உயர்ந்தது. திக்குகள் தெளிவடைந்தன;

கதிரவனின் ஒளிக்கதிர்கள் மேன்மேலும் தொலைதூரம் நீண்டன; பகல் தன் இயல்பான கம்பீரம் பெற்றது.

தன்னுடைய முயற்சி தோல்வி கண்டது கண்டு, அர்ஜுனன் 'நாகபாசம்' என்னும் பாணத்தைச் செலுத்தினான். மின்னல் ஒளிபோன்று வானத்தை ஜோதிமயமாக்குவதும், நாக்குகளை நீட்டி நச்சுத் தீயை உமிழ்வதும், ஒருவர் மிச்சமில்லாது அனைவரது நெஞ்சங்களிலும் அச்சத்தை ஊட்டுவதும், ஆன ஆயிரக்கணக்கான பாம்புகள் விண்வெளியை ஆக்கிரமித்தன. நான்கு திசைகளையும் பாதுகாத்து நிற்கும் யானைகளின் துதிக்கைகளைப் போன்று நீண்டனவும், நீலரத்தினக் கற்கள் போன்று மின்னுவனவும் ஆன பாம்புகள் சமுத்திரத்தின் அலைவரிசைகள் போல நீலவானில் தோன்றின. பார்த்த மாத்திரத்திலேயே மரணம் விளைவிக்கும்படியான திறன் படைத்திருந்த பாம்புகளின் கண்களிலிருந்து அச்சுறுத்தக்கூடிய எரிநட்சத்திரங்களைப் போன்று நான்கு திக்குகளையும் பிரகாசிக்கச் செய்யும்படியான உருக்கப்பட்ட பொன்னிறம் கொண்ட தீ வாரிக் கொட்டியது. பாம்புகள் பலவற்றால் வானம் நிறைந்து, தேவலோகத்து மாந்தர்கள் செல்லும் நடைபாதையில் தடை ஏற்பட்டது. சுற்றி அனைத்தும் எரிந்து சாம்பலானது போல, வானம் அதனுடைய வசீகரத்தை இழந்தது. உயிரினங்கள் புகைமூட்டத்தால் மூச்சுவிட முடியாது தவித்தன. முற்றுகையிடப்பட்ட நகரம்போல ஆயிற்று வானம்.

ஆனால், அதன்பிறகு, விரோதிகளால் விளைவிக்கப்பட்ட கலகத்தை அடக்க, நிர்வாகம் தக்கதான நடவடிக்கைகளை மேற்கொள்வது போல, பாம்புகளின் படையை விரட்டும் பொருட்டு கருடன்கள் கொண்ட படையை வரவழைக்கப் பரமசிவனானவர் கருட மந்திரத்தை உடனடியாக உச்சாடனம் செய்தார். தேவர்களின் இயல்பான இமைக்காத கண்களைக் கொண்டவையும், மின்னலைப்போல ஒளிபடைத்தவையும் ஆன கருடன்கள் அகண்ட வானில் நிரம்பின. அவற்றின் பெரிய இறக்கைகளின் அசைவால் பெரும் சுழல்காற்று ஒன்று எழுந்து, பெரிய பெரிய மரங்களையும் வேரோடு சாய்த்து, வானத்துக்குத் தூக்கிச் சென்றது. வானத்தினூடே கருடன்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்தபோது, அவற்றின் பெருத்த மார்புகளின் மோதலால், அவ்வானம் பின்னுக்குத் தள்ளப்பட்டது போலத் தோன்றியது. அதன் பள்ளத்தாக்குகள் அப்பறவைகளின் வேகத்தால் காற்றுச் சுழலில் அகப்பட, இமயமலை அவற்றின் பொன்னிற இறக்கைகளின் ஒளியால் செந்நிறமாகி, ஒரு குடிகாரனின் நிலை போலக் காணப்பட்டது. அந்திப்பொழுது வந்தது போன்றும், நிலம் செங்கடலானது போன்றும், மாற்றம் ஏற்பட, சூரியனின் ஒளி

மறைக்கப்பட்டது. ஆனால் இறக்கைகளின் ஒளியால் அவற்றின் நிழல் நிலத்தில் விழவில்லை. யாகம் நடைபெறும்போது ஏற்பட்ட ஒரு குறைபாட்டை சக்திவாய்ந்த மந்திரம் ஒன்று பரிகாரம் செய்ய, குறைபாடு நீங்குவதுபோல, பாம்புகளின் படை கருடப்படையால் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டது.

'நாகபாசம்' என்னும் பாணம் சக்தி இழந்தது கண்டு அர்ஜுனன் வெகுவாகச் சினம் கொண்டான். ஆகவே, எரிபொருள் எதுவும் தேவையற்ற, தானாகவே நெருப்பைப் பொழிவிக்கும் 'அக்னி யாஸ்திரம்' என்னும் பாணத்தை எடுத்தான். உடனேயே உயிர் இனங்கள் அனைத்தையும் அழித்துவிடும்படியான கொடிய தீ ஜ்வாலை எழுந்தது. பெயருக்குத் தக்கபடி அஸ்திரத்தின் தழல்கள் நாற்புறமும் எழுந்தன. தன் இரையை நோக்கிப் பாய இருக்கும் கொடிய சிங்கம் போல அந்த அம்பு காணப்பட்டது. சூரியனின் ஒளியையும் மங்கச் செய்வதாக, பெரும் தீப்பொறிகளை வாரி இறைத்து, பெரிய பெரிய கற்பாறைகளையும் பிளக்கும்படியான கர்ஜனையுடன், அக்னி ஜ்வாலையுடன் எரிந்தது. பொன்னால் ஆன உயர்ந்த மதில் சுவரோ, உன்னதச் சிகரங்களைக் கொண்ட மலையோ அல்லது பலாச மரங்களுடன் கூடிய மரங்களைக் கொண்ட அடர்ந்த காடோ என்பதாகத் தீ காற்றுடன் கூடியதாகக் காணப்பட்டது. கண்களில் இடும் மையாக நீர் அடர்ந்த வான்மேகங்கள் கருத்து, தரையிலிருந்து மேலே எழும் தீ தழல்களால் அவை தீண்டப்பட, அதனால் அம்மேகங்களின் அடிப்புறம் நீர் அற்றுப்போக, அவை முத்துக்கள் போல வெண்மையாக ஆயின.

கொடிய அந்த செந்தழல்களால் மூன்று உலகங்களும் விழுங்கப்பட்டுவிடும் நிலையில், அழிவைத் தவிர்க்க பரமசிவன் வருணாஸ்திரத்தைப் பிரயோகித்தார். உடனேயே பெரிய உயர்ந்த மலைகள் போன்ற கருத்து அடர்ந்த மேகங்கள் தொடர்ந்து விடாமல் ஆற்றுப் பெருக்காக நீரை மழையாகப் பொழிந்தன. தீ அணைந்தது. வெப்பம் தணிந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தகட்டின் மீது குளிர்ந்த நீரைத் தெளித்தாற்போல, ஒருவித ஓசை எழுந்தது. துணுக்குகளான மேகங்கள் அந்த அகண்ட தீயில் நுழைய, நீருடன் கூடிய ஆறுகள் உடனடியாகக் கொதிநிலை கண்டு, பெருத்த புகை விண்வெளி எங்கும் பரவியது. மஞ்சளாகவும், கருத்த நீலநிறத்துடனும், வெளிர் சிவப்பாகவும் காணப்பட்ட தீ ஜ்வாலை அதன் புகையுடன், உயர்த்திய பதாகைக் கொடிகள் போன்று, பட்டுத்துணிகள் காற்றில் ஆடுவது போல வீசிப் பறந்தது. நீர் நிறைந்த ஆறுகள் மேகங்களிலிருந்து மழையாகப் பொழிந்து எரியும் நெருப்புக் கோளங்களில் புகுந்தபோது, அது மேன்மேலும் கர்ஜனை

போன்றதொரு ஓசையை எழுப்பியது. மின்னல் வெட்டுக்களோடு கலந்த தீயின் ஒளி மேலும் பிரகாசம் அடைந்தது. பெரும்புகை மண்டலங்கள் எழுந்து அணையும் நிலையில் இருந்தாலும், தீ பளிச்செனத் தெரிந்தது. வேரைக் கெல்லினால், பெரிய மரங்களும் வீழ்ந்துவிடும். அதுபோல, கொட்டித் தீர்க்கும் நீரால் அந்த பயங்கரத் தீயும் முடிவில் தணிந்து மறைந்தது. தங்களுடைய பணி முடிவடைந்தது என்று மேகங்களும் மறைந்தன. தீயால் தூய்மையாக்கப்பட்ட வானும் தெளிவடைந்து பிரகாசித்தது.

அர்ஜுனன் தனது ஆயுதங்களையும் கவசங்களையும் இழக்கிறான்

ஐயத்துக்கு இடமின்றி அர்ஜுனன் தேர்ந்த வீரன்தான். இருந்தாலும், எந்த ஒரு நேர்மையாளரின் இடைவிடாத முயற்சிகளும் ஊழ்வினையால் பயனற்றுப் போவது போல, எதிரியை நோக்கி எந்த ஒரு கணையை விடுத்தாலும் அது பயனற்றுப் போயிற்று. இருந்தாலும் அவன் மனம் தளர்ந்து விடவில்லை. 'என்னிடம் வீர்யம் இருக்கிறது. என்னுடைய வில் இது' என்று எண்ணிய அவன், 'என்னை எவரால் தோல்வியுறச் செய்ய முடியும்?' என இறுமாந்தான். எதிர்த்து நிற்க முடியாத எதிரியுடன் சண்டையிட இத்தகைய வாய்ப்பு கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைந்தாலும், அந்த எதிரி தன்னை விட வலிமை மிக்கவனாக இருப்பது கண்டு சோர்வு அடைந்தான். கரியபுகையை விடுவதாக இருந்தாலும், பிரகாசமான நெருப்புடன் கூடிய மலைத்தீ போல அவன் காணப்பட்டான். தன் வம்சாவளியை நினைத்துப் பார்த்து செருக்குற்றான். அவனிடம் தன் மானம் குடி கொண்டிருந்தது. தன் புகழ் இவ்விதம் களங்கப்படுவது கண்டு அவன் மனக்கிலேசம் அடைந்தான். தன்னுடைய மனைவி கடத்திச் சென்று விட்டாற்போன்ற கவலைக்கு உள்ளானான். ஆகவே மீண்டும் ஒருமுறை போராட அவன் முடிவு செய்தான். வேறு எந்த ஒரு போரும் இந்த அளவுக்கு அவனுடைய சக்தியை விரயப்படுத்தவில்லை. இருந்தாலும் அவனுடைய ஆர்வம் வளர்ந்து ஓங்கியது. பெரிய நாகப்பாம்பு தன்னுடைய கண்களின் மூலமாக நஞ்சைக் கக்குவதுபோல, அவனுடைய கண்களிலிருந்து சினத்தால் கண்ணீர் பெருகியது. போரில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டதால், அவனுடைய தலைமுடி கலைந்திருந்தது. சினத்தால் அவன் கண்கள் சிவந்தன. அவனைக் குளிர்வித்து சாந்தப்படுத்துவது போல, அவனுடைய முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் தோன்றின. ஒரு யானையானது தன் துதிக்கையால் ஒரு மலையின் மேல்தளத்தைத் தூக்குவதுபோல,

அர்ஜுனன் தன் கையால் வில்லை உயர்த்தி நாணை இழுத்தான். அப்போது அதனிலிருந்து பெருத்த ஓசை எழுந்தது. மனதில் கௌவி இருக்கும் வேண்டாத எண்ணம் போல, அவ்வோசை கிராதர்களின் மனதைப் பாதித்தது.

அர்ஜுனன் பார்க்கும் இடமெங்கும் அம்புகளை மிக விரைவுடன் பொழியத் தொடங்கினான். கிராதப் படைவீரர்கள் எதையும் பார்க்க இயலாமல், ஓசையை மட்டும் கேட்டனர். உயிரினங்கள் தங்கள் இயல்பினால் தொடர்ந்து துன்பம் அனுபவிப்பது போல, கிராதர் சேனை தோல்வி காண்பதாகவே இருந்தது. ஆனால், பொறாமை நடுநிலையாளரிடம் செல்வாக்குப் பெற முடியாதது போல, சொல்வளம் பிரம்மத்தை விளக்க முடியாதது போல, இலையுதிர்காலத்து சூரியகிரணம் பனித்திவலைகளால் நிரம்பிய இமயமலைப் பள்ளத்தாக்குகளை வெப்பமுறச் செய்ய முடியாதது போல, அர்ஜுனனுடைய அம்புகள் பரமசிவன் மீது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. போராடும் திறன் முற்றிலும் அழிந்த நிலையில் தன்னுடைய சேனையின் மோசமான நிலைமையைக் கண்டு அவர், திருப்பித் தாக்குவதன் பொருட்டு, சுட்டெரிக்கும் சூரியன் நீரை வற்றவைப்பதுபோல, அர்ஜுனனின் அம்புகளை நொடிப்பொழுதில் அழித்தார்.

தன் அம்புறாத் தூணியில் அர்ஜுனன் கையை வைத்தான். அது காலியாகக் கிடந்தது. எப்படியெனில், தாகத்துடன் உள்ள ஒரு யானை நீருக்காக மலைத்துளை ஒன்றில் தன் துதிக்கையை விட, அங்கு இருந்த நீர் ஏற்கெனவே வேறொரு யானையால் அருந்திவிட்டாற் போல. (இப்படியும் சொல்லலாம்) செல்வந்தராக இருந்த ஒருவர் திடீரென வறுமை எய்துவிட, அவரிடம் வந்து ஒருவன் யாசிப்பது போல. ஊழிகாலத்தின் முடிவில் கிழக்கு மேற்கத்திய கடல்கள் முற்றிலுமாக வற்றிவிட்ட உலகத்தைப் போன்று உடைந்த நெஞ்சத்துடன் அவன் தன் காலியான இரு அம்புறாத் தூணிகளுடன் நின்றான். இதுகாறும் நட்புடன் பழகிய நண்பன் பிரிந்து செல்வதுபோல, ஆழ்ந்த துயரத்துடன் ஏதும் செய்ய மாட்டாதவனாக அந்த அம்புறாத் தூணிகளிடமிருந்து தன் கையை விலக்கினான். வாதத்தில் உள்ள மோசமான ஓட்டைகளை எடுத்துக் காட்டுவதன் மூலம் எதிராளியை முற்றிலுமாகத் திணற அடிக்கும் திறமை வாய்ந்த தர்க்கவாதிபோல, எண்ணிறைந்த இரும்புக் கணைகளால் பரமசிவன் அர்ஜுனனின் மார்பில் அடித்தார். புயல்காற்றானது சூரியனது முகத்தை மறைத்திருக்கும் கருத்த மேகத்தை எவ்விதம் விலக்கி எடுத்துச் செல்லுமோ அது போன்று அவருடைய அம்புகள் அர்ஜுனனின் ஆயுத உறைகளைக் கிழித்தெறிந்தன. ஆயுதக் கவசங்கள் அற்ற

அர்ஜுனன் அப்போதுகூட, உறையிலிருந்து உருவிய வாள்போல - ஒளியுடன் பிரகாசிப்பவனாக, சட்டையை உரித்த பாம்பு போலவும், மேகங்களின் இடிமுழக்கத்தால் குகையில் உறக்கம் கலைந்த சிங்கம் போலவும், காரிருளில் தென்படும் புகையற்ற நெருப்புப் போலவும் காணப்பட்டான். சினத்தின் மிகுதியால் அம்புகள் தன்னை அடிப்பதைக்கூட அவனால் உணர முடியவில்லை. சினம் அவ்விதம் கவசமாகப் பயன்பட்டது. உடல் முழுதும் ரத்தம் பெருகுபவனாக தன் அழுத்தமான காலடிகளால் நிலத்தை நடுங்க வைப்பவனாக, பரமசிவனை அணுகுபவனாக, இந்திரனின் வஜ்ராயுதம் போன்றதும், பிறைநிலவைக் கவனப்படுத்துவதுமான வில்லை அவர்மீது வீசினான். ஜஹ்னு மகரிஷியானவர் ஓடைகளினால் பெருகும் கங்கை நதியை முழுதுமாக அருந்தியதுபோல, தன்னை நோக்கிவரும் அந்த வில்லை பரமசிவன் தன்னுள் ஏற்றுக் கொண்டார். பிறகு அவர் அர்ஜுனனை மேலும் அம்புகளால் அடித்தார். அர்ஜுனன் இதனால் தொலைவில் போய் விழுந்தான். ஆனாலும் அவன் தன் ஒரே ஆயுதமான வாளை உருவிச் சண்டையிட்டான். பராக்கிரமத்துடன் அவன் வாளைச் சுழற்றியதில், இறைவனின் கணைகளும் துண்டித்து விழுந்தன. ஆனாலும், சரமாரியான அம்புகளால் வாள் உடைபட்டு, கைப்பிடி மட்டுமே கையிலிருக்க, உடைபட்ட வாள் மின்னலைப் போல ஒளிப்பொறிகளை உண்டாக்கியபடி, தரையில் விழுந்தது.

அர்ஜுனனும் பரமசிவனும் கட்டிப்பிடித்து மற்போர் புரிதல்

அர்ஜுனன் முழுதுமாகச் செயல் இழந்தான். தன் ஆயுத உறைகள், வில், அம்புகள் அனைத்தையும் பறிகொடுத்திருந்தான். அறிவை மழுங்க அடிக்கும் சினம் அவனிடம் எழுந்தது. ஆனால் போர் புரிவதற்கு வெறுங்கைகள் இன்றி வேறு ஆயுதம் ஏதும் இல்லை. ஆகவே அவன் பெரும் பாறைகளைத் தூக்கி இறைவன் பேரில் வீசி எறிந்தான். அவை உடனடியாக பரமசிவனின் அம்புகளால் தடுக்கப்பட்டன. அடுத்து பெரும் மரங்களைப் பெயர்த்து எடுத்து வீசினான். ஆனால் அவை ஆகாயவெளியில் துண்டிக்கப்பட்டு, மரப்பட்டைகளும், கிளைகளும், இலைகளுமாகப் பிரிந்து பலவர்ணங்களோடு தரை எங்கும் சிதறி விழுந்தன. யுத்த தேவதைக்கு ஆராதனை நடக்க இருப்பதுபோல அந்த இடம் காணப்பட்டது. பித்துப் பிடித்தவன்போல அர்ஜுனன் முன்னேறி ஓட, பரமசிவன் அவன் அருகில் எதிரே பொன்னிறப் பாறை போன்று நின்றார். தன் இரு முஷ்டிகளைக் கொண்டு அவன் இறைவனின் மார்பில் ஓங்கி அடித்தான். ஆனால், வாத்சல்யத்துடன் கூடிய ஒரு தந்தை தனது

துஷ்டத்தனமான ஒரே குழந்தையின் செய்கையாக அந்த அடிகளை அவர் ஏற்றார்.

பிறகு பரமசிவன் தனது வில்லையும் அம்புகளையும் வைத்துவிட்டு, இரும்புச் சுத்தியால் அடிப்பது போல, தன் முஷ்டியால் அர்ஜுனனின் மார்பில் குத்தினார். அவர்கள் ஈடுபட்ட சண்டையால் எழுந்த ஓசை கற்பாறைகளைப் பிளக்க வல்லதாய், மலைக்குகைகளுள் புகுந்து எதிரொலித்தது. அவருடைய அகண்ட மார்பில் கீறல் காயங்களிலிருந்துது ரத்தம் பெருக்கெடுக்க, மாலைநேரத்து மறையும் கதிரவனால் சிவந்து, கனத்த மேகங்கள் போல, பரமசிவன் விளங்கினார். உயர்ந்த சாஹ்யமலை மீது சமுத்திரத்தின் ஆக்ரோஷமான அலைகள் மோதுவது போன்று, அர்ஜுனன் மீண்டும் மீண்டும் தன் முஷ்டிகளால், பயன் ஏதும் இல்லாவிடினும், பரமசிவனின் மார்பில் அடித்தான். பிறகு இறைவன் தன் இரு முஷ்டிகளால் ஒரே சமயத்தில் அர்ஜுனனின் இரு தோள்கள் மீதும் மிகுந்த வேகத்துடன் அடிக்க, அர்ஜுனன் சில அடிகள் பின்சென்று, மதிமயங்கியவனாக, விழிகள் சுழலத் தள்ளாடினான். இத்தாக்குதலால் கோபமூட்டப்பட்ட அவன் முன் வந்து தன் இரு கைகளாலும் இறைவனின் இரு கைகளையும் பலவந்தமாகப் பற்றிக் கொண்டான். அவ்விரு பேராற்றல் படைத்த வீரர்களின் கோர்த்துக் கொள்ளப்பட்ட கைகள் பிரிக்க மாட்டாத சங்கிலி போலக் காணப்பட்டது. இதனால் அந்த மலையே குலுங்கியது. இருவருமே இணையான திறமையுடனும், வேகத்துடனும் சண்டையிட, யார் எவரைக் கீழே தள்ளி மேலே இருக்கிறார் என்பது எவராலும் அவதானித்துப் பார்த்து முடிவு காண முடியாததாக இருந்தது. அந்த மலையும் இந்தத் தகராறைத் தாங்க மாட்டாததாக, தனக்குக் கேடு நேருமோ என அச்சமடையத் தொடங்கியது. அவர்கள் நகர்ந்தபோது அதுவும் நகர்ந்தது; அவர்கள் அசையாமல் நின்றபோது, அதுவும் அசைவற்றதாக ஆயிற்று; அவர்கள் குனிந்தபோது அதுவும் குனிந்தது. அவர்கள் எழுந்து நின்றபோது, அதுவும் எழுந்து நிற்பதாகத் தோன்றியது. அவ்வப்போது அந்த மல்யுத்த வீரர்கள் தங்களை ஒருவரிடமிருந்து ஒருவர் விடுவித்துக் கொண்டனர். மீண்டும் அவர்களுடைய கைகள் மோதிக் கொண்டபோது, பெருத்த ஓசை உண்டாகியது. அவர்களுடைய கனமான காலடி மிதிப்பால், ஓடையின் கரைகள் உடைந்து நீர் பெருகியது. பரமசிவன் விரைந்து ஆகாயத்தில் எழுந்தபோது, அர்ஜுனன் மிக வேகத்துடன் உடன் எழுந்து, அவர் மீண்டும் தரையைத் தொடுவதற்குள், அவருடைய பாதங்களைப் பற்றிக் கொண்டான். இதனால் இறைவன் வியப்புக்குள்ளானார். அதே கணத்தில் அர்ஜுனனை அவர் தரையில் வீசியெறிய நினைத்தாலும்,

அவ்விதம் செய்யாமல், அவனைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார். ஏனெனில், அவனுடைய தவத்தைவிட, சூரத்தனமும், சாகசமும் அவரை வெகுவாகக் கவர்ந்து மகிழ்ச்சிக்கு உள்ளாக்கின.

பரமசிவன் சுயஉருவில் தோன்றல்

அதன்பிறகு பரமசிவன் தன்னுடைய வசீகரமான உருவில், பனி போன்ற வெண்மையான திருநீற்றை நெற்றியில் பூசியவராகவும், தலையில் பிறை அணிந்தும் தோன்றினார். மிகுந்த திகைப்பு அடைந்தவனான அர்ஜுனன் பயபக்தியுடன் தலை வணங்கினான். அவனுடைய அம்புறாத் தூணியும், வில்லும் மீண்டும் அவனை அடைந்தன; ஆயுதக் கவசம் உடலில் முன்போல அணிகொண்டது; கையில் வாள் பிடிபட்டது; ஏதுமே நடவாதது போல அவனுடைய உடல் வீர்யம் பெற்று சீர் அடைந்தது. மேகங்கள் லேசாகத் தூறின; தேவலோகத்திலிருந்து பாரிஜாத மலர்கள் சொரிந்தன. எவரும் தட்டாமலே, மத்தளங்கள் தானாகவே கொட்ட, தெளிந்த வான் எங்கும் அந்த ஓசை பரந்து விரிந்தது. பிரகாசமான ரத்தினக் கற்களாலும், ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வானவூர்திகளில் பயணம் செய்யும் நாற்திசைக் காவலர்கள் புடைசூழ இந்திரன் வருகைதர, புதியதாக எழுந்த நட்சத்திரங்களுடன் வானம் முழுமையாகக் காட்சி அளித்தது. வானவூர்திகளை இழுத்துச் செல்லும் பெரும் அன்னங்கள், அவற்றின் கழுத்துக்களில் பொற்சதங்கைகள் ஜல்ஜல் என இனிமையாக ஒலிக்க, தங்கள் இறக்கைகளை அழகாக அசைத்துப் பறப்பதான அக்காட்சி, அவை ஆகாயத்தை தழுவிப் பிரியத்தோடு அணைத்துக் கொள்வதாகத் தோன்றியது. மந்தார மலர்களின் மாலைகளைக் கொண்டு அமைந்த விதானம் தேனீக்களின் கூட்டத்தைக் கவர்ந்து மகிழ்விக்க, வெண்மையான பெரிய மேகம் போன்று இருந்த காளை மாட்டின் மீது அமர்ந்திருந்த பரமசிவனை மாருதம் சமாதானப்படுத்தியது.

அர்ஜுனன் இறைவனைப் போற்றுதல்

தன் முன் பேராற்றல் படைத்த இறைவனை நேரில் காணும் பாக்கியம் பெற்ற அர்ஜுனன் அவரை ஸ்தோத்திரம் செய்யும் காரணமாகக் கூறலானான்:

''தங்களிடம் தஞ்சம் அடையும் ஒருவர் மரணத்தை வெல்லமுடியும்; அதன் பின் இந்த உலகம் முழுதுமே அவரை அடைக்கலம் அடையும். எவர் ஒருவர் எல்லாம் வல்ல தங்களை வணங்காது இருக்கிறாரோ, அவருக்குத் துயரங்கள் சம்பவிப்பதாக

இருக்கின்றன; அவருடைய விருப்பம் எதுவும் நிறைவேறுவதில்லை; மக்கள் அவருக்கு மரியாதை செலுத்துவது இல்லை. உலகத்தின் இடர்பாடுகளால் பீடிக்கப்பட்ட அறிவாளிகள் முக்திபெற விரும்பு கிறார்கள். அவர்கள் தங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களிடமிருந்து பிரதிபலன் எதையும் எதிர்பாராது தாங்கள் அவர்களுடைய கருமத்துக்கு ஏற்ற பலனை நல்குகிறீர்கள். வெகுதூரம் பயணம் செய்ய அவசியமில்லாததும், ஒவ்வொரு பிறவியிலும் அவ்வப்போது பலன் அளிப்பதும், துயரக் கடலை எளிதாகக் கடக்க வழிவகுப்பதும், விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவதுமான தர்ம ஸ்தாபனமாகத் தாங்கள் இருக்கிறீர்கள். தங்களுடைய உண்மையான இயல்பை அறியாது இருந்தாலும், பக்தியுடன் தங்கள் உருவை சாதாரணமாக தியானம் செய்தால், ஒருவர் நிச்சயமாக முக்தி பெறலாம். ஜீவன் முக்தி பெறும் பாதையில் எவ்வாறு செல்வது என்பதை ரிஷி ஸ்ரேஷ்டர்கள் மக்களுக்கு உபதேசிக்கிறார்கள். ஆனால் அவர்களும் விடு பெறுவதற்காகக் கடைசியில் தங்களையே தஞ்சம் அடைய வேண்டியதாக இருக்கிறது. ஏனெனில் தாங்களே அவர்கள் செய்த பாபச் செயல்களை அழிக்கிறீர்கள். உண்மையில் தங்களுக்கு உருவம் கிடையாது. ஆனால் பரிதாபம் காரணமாக, அவர்களின் அன்றாட நடத்தைகளாலேயே துயரங்களைச் சம்பாதித்துக் கொள்ளும் மக்களின் விடுதலைக்காகத் தாங்கள் ஆனந்தமயமான உருவத்தைக் கொண்டிருக்கிறீர்கள். தாங்கள் பந்தம் அனைத்தையும் துறந்தவர். இருந்தாலும் தாங்கள் பல திருவிளையாடல்களில் ஈடுபடுபவர். (உதாரணமாக, தாங்கள் என்னுடன் போர் புரிந்தீர்கள்.)

தாங்கள் தங்கள் துணைவியாரை தங்களுடைய உடலிலேயே வைத்திருக்கிறீர்கள். (அர்த்தநாரீஸ்வர உருவில்) இருந்தாலும், தாங்கள் காமவிகாரத்திலிருந்து விடுபட்டவர். உலகினரால் பக்தியுடன் பூஜிக்கத் தக்கவர் தாங்கள்; இருந்தாலும் தாங்கள் படைத்தாளும் பிரம்மாவை காலைநேரத்தில் வணங்குகிறீர்கள். தங்கள் நடத்தைகள் உண்மையில் விளங்காதவை. தங்கள் ஆடை யானைத் தோல். தங்கள் அரைக் கச்சை ரத்தினக் கற்களைக் கொண்ட நாகசர்ப்பம்; மண்டையோடுகளே தங்கள் மாலை. நெற்றியில் பூசுவதோ சாம்பல் அன்றி வேறில்லை. ஆனால் இவை அனைத்துமே, தாங்கள் தலையில் தரித்திருக்கும் பிறையைப் போல அழகாகவே இருக்கின்றன. உண்மையைக் கூறுமிடத்து, தங்களுக்கு உடல் இல்லை; ஆனால் என்ன காரணத்தாலோ, தாங்கள் பாதி ஆண், பாதிப் பெண் என்ற வகையில் ஒரு அசாதாரண உடலைக் கொண்டிருக்கிறீர்கள்.

யதார்த்தத்தில் தாங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இத்தகைய முரண்பாடுகள் வசீகரத்தையும் அழகையும் அளிப்பதாக உள்ளது.

தாங்கள் அபூர்வமானவர். சாதாரண உயிர்களைப் போல அல்லாமல், தங்களுக்குப் பிறவியோ மரணமோ கிடையாது. தங்களோடு இணைத்துப் பேச எதுவும் இல்லை. எத்துடனும் தங்களை இணைத்துப் பேச முடியாது. ஜங்கம, ஸ்தாவர பொருள்கள் அனைத்துமே தங்களால் அழிக்கப்படக்கூடியது. தங்களால்தான் உலகம் முழுதுமுள்ள உயிர்களால் மூச்சுவிட முடிகிறது. ஒவ்வொருவரின் கருமத்தின்படி தாங்கள் நியாயமான பலனை அளிக்கிறீர்கள். காரணங்களுக்கு எல்லாம் மூலகாரண கர்த்தாவாக இருக்கிறீர்கள். இந்த உலகில் தேவனோ, மனிதனோ அல்லது அரக்கனோ யாராக இருந்தாலும், எந்த ஒரு காரியத்திலும் வெற்றி அடையலாம். ஆனால் அந்த வெற்றி தங்களை ஆராதிப்பதால் மட்டுமே அடையக்கூடியதாக இருக்கிறது.

வாயு உருவில் தாங்கள் இந்த உலகைக் கட்டி ஆள்கிறீர்கள்; அந்த வாயுவே மூன்று உலகங்களையும் தன் வீச்சின் வேகத்தால் நிலைக்கச் செய்கிறது; பாபங்கள், அழுக்குகள் அனைத்தையும் அழிப்பதான புனிதமான பிரம்மன் தெளிந்த சொல்லாற்றல் கொண்டு மேன்மை அடைய வாயு உருவில் தாங்களே உதவுகிறீர்கள்; அத்தகைய வாயுவை வணங்குகிறேன். எண்ணற்ற ஜ்வாலைகளுடன் கூடிய எரியும் அக்னியின் உருவத்தில் தாங்கள் இந்த உலகைக் கட்டி ஆள்கிறீர்கள். கடுந்தவம் இயற்றும் முனிவர்களுக்கு இந்த அக்னி மிக அவசியமானது. துயரங்கள் வளர்வதற்குக் காரணமான வித்துக்கள் அனைத்தையும் இந்த அக்னி எரித்து விடுகிறது; இத்தகைய அக்னியை வணங்குகிறேன். நீர் உருவத்தில் தாங்கள் இந்த உலகத்தைக் கட்டி ஆள்கிறீர்கள்; உலகத்தில் நிலைத்து வாழவேண்டும் என்ற எண்ணங்கொண்டுள்ள அனைத்து உயிர்களின் வேட்கையை நீராக இருந்து தாங்கள் தணிக்கிறீர்கள்; இத்தகைய செயல், முடிவில் உலகுக்கு சமாதானத்தையும், சாந்தியையும் தருகிறது. இத்தகைய நீரை வணங்குகிறேன். எங்கும் வியாபித்துள்ள ஆகாய உருவத்தில் தாங்கள் இந்த உலகத்தைக் கட்டி ஆள்கிறீர்கள். அனைத்துப் பொருள்களுமே ஆகாயத்துள் அடங்குகின்றன. ஆனால் ஆகாயம் எதனுள்ளும் அடங்குவதில்லை. ஆதியும் அந்தமும் இல்லாத ஆகாயம் புலனால் உணரப்பட மாட்டாதது. அத்தகைய ஆகாயத்தை வணங்குகிறேன். அணுவிலும் பரமாணு தாங்கள். ஆயினும் தங்களுள் உலகை அடக்கியுள்ளீர்கள். தங்களை நான் வணங்குகிறேன்.

அருகாமையில் இருப்பவர் தாங்கள். (எங்களுள் இருப்பதால்). தொலைவில் இருப்பவரும் தாங்கள்; (புலன்களுக்கு அகப்படாமையால்). தங்களை நான் வணங்குகிறேன். எங்களுடைய சொற்களுக்கும், எண்ணங்களுக்கும் தாங்களே ஆதிகர்த்தா. தங்களை நான் வணங்குகிறேன். அறியாமையால் தங்களை நோக்கி நான் அஸ்திரங்களைச் செலுத்தினேன். என் குற்றங்களைத் தாங்கள் மன்னிக்க வேண்டும். ஏனெனில் தாங்கள் கருணை உள்ளம் கொண்டவர். மன்னிக்கும் இயல்பு உடையவர். அஸ்திரங்களில் ஒப்பற்ற அஸ்திரம் ஒன்றை எனக்குத் தந்து அருளும்படியாக நான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். தர்மத்தை உயர்த்தி நிலைநிறுத்தச் செய்பவரான யுதிஷ்டிரரின் விரோதிகளை அந்த அஸ்திரம் கொண்டு நான் ஒழித்துக் கட்டுவேன்.

அர்ஜுனன் வெற்றிவாகை சூடுகிறான்

இவ்விதம் அர்ஜுனனின் ஸ்தோத்திரங்களைக் கேட்டதும், பரமசிவன் அவனை சமாதானம் செய்து, பாசுபதாஸ்திரத்தைக் கொடுப்பதற்கு முன்பாக, தொடக்கமாக தனுர்வேதத்தை அவனுக்குக் கற்பித்து, முடிவாக அந்த அஸ்திரத்தையும் கொடுத்தார். இந்திரனும், மற்ற தேவர்களும் தங்களிடம் இருந்த பல அஸ்திரங்களையும் தந்து அருளி அவனை வாழ்த்தினர். 'செல், எதிரியை வெல்' என்றார் பரமசிவன். அவன் அவருடைய காலடிகளில் விழுந்து வணங்கி எழுந்தான்.

காரியசித்தி பெற்ற அர்ஜுனன் (துரியோதனனை எதிர்த்து) ஏற்கெனவே வெற்றிவாகை சூடியவன் போல உற்சாகத்துடன் திரும்பிச் சென்று யுதிஷ்டிரருடன் சேர்ந்து கொண்டான்.

4

பாரவியின் கவிதை நயம்

ஐயத்துக்கு இடமின்றி சம்ஸ்கிருதக் கவிதை காளிதாசரிடம் அதன் உன்னதத்தைப் பெற்றது. அவருக்குப் பிறகு தோன்றியவர் பாரவி. மகாகாவியம் படைப்பதில் வெற்றி கண்டவர்களில் காலத்தால் முந்தியவர் மட்டுமல்லாது, அவர் சிறந்தவரும் ஆவார். ஆகவே வெளிப்படையாகவே இந்த இரு கவிகளையும் ஒப்பிட்டுப் பார்க்க எவருக்கும் தோன்றும். ஆனால் அவ்விதம் ஒப்பிட்டுப் பார்ப்பது அவ்வளவாக புத்திசாலித்தனமான செயல் அல்ல. ஏனெனில் எண்ணிக்கையிலும், தரத்திலும் பாரவியை விட காளிதாசர் மிக உயர்ந்து நிற்கிறார். அனைவரும் அறிந்திருக்கும் மூன்று நாடகங்களையும், நான்கு கவிதைகளையும் ஆக்கியவர் காளிதாசர். ஆனால் ஏற்கெனவே தெரிவித்தபடி, **கிராதார்ஜுனீயம்** ஒன்றையே படைத்தவர் பாரவி. இது குறித்து ஆர்.சி. டட் சுருக்கமாகக் குறிப்பிடுவதாவது: ''ஒரு கவிஞனை மகாகவியாகவும், உன்னதக் கவியாகவும் சுட்டிக் காட்டுவதான தரம், பண்பு ஆகியவை காளிதாசரைவிட பாரவி வெகுவாகத் தாழ்ந்தவர் என்றே எடுத்துக் காட்டுவதாக இருக்கின்றன. கவித்துவப் பாணியிலும், மென்மை, அவலம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதிலும், இனிமை, த்வனி ஆகியவற்றிலும்கூட வேறு எந்த ஒரு கவியுடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்தவர் காளிதாசர்.''

இருந்தாலும், மேலே சொல்லப்பட்ட உண்மை நிலையையும், நியாயக் கூறுபாட்டையும் மறுக்காமலேயே பாரவியின் தீர்மானமான சாதனையை நாம் தெளிவாகக் காணமுடியும். ஒரு விவகாரத்தை குறைத்து மதிப்பிடுவதானது மிகையாக மதிப்பிடுவதைப் போல விரும்பத்தகாததுதான்.

சம்ஸ்கிருத மொழியில் வெவ்வேறு கால கட்டங்களுக்குச் சொந்தமான நான்கு உயர்ந்த கவிகளின் தனிப்பட்ட திறமை குறித்து ஆராயும்போது, மரபாகக் குறிப்பிடப்படுவது என்னவென்றால், உபமானத்தில் காளிதாசன் உயர்ந்தும், **அர்த்த கௌரவத்தில்** பாரவியும், இனிமையான சொல் வெளிப்பாட்டில் தண்டியும், இந்த மூன்று திறனும் கொண்டவராக மாகனும் சொல்லப்படுகின்றனர்.

அர்த்த கௌரவம் என்ற சொல்லின் பொருள் கொஞ்சம் வெவ்வேறு விதமான கருத்துக்களுக்கு இடம் அளிப்பதாக உள்ளது.

'பொருள் ஆழம்' என்பதாக இச்சொல்லைச் சிலர் புரிந்து கொள்கிறார்கள். பாரவியின் எழுத்தில் முழுமையான கருத்துக்கள் காணக் கிடைக்கின்றன. இக் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவது மட்டுமல்லாது, உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டும் உள்ளன. அரசியல் அமைப்பு, காமக் கேளிக்கை, இயற்கை அழகு அல்லது போர் நிகழ்ச்சி எவை பற்றியும், எந்த விளக்கம் கொடுப்பதாக இருந்தாலும், ஒவ்வொரு சர்க்கத்திலும், பலவாறான வியாக்கியானங்கள், குறிப்புகள் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். கவிக்கு உள்ள அறிவாற்றல், மனித இயல்பு குறித்த ஆழ்ந்த அனுபவம், உலக விவகாரங்கள் குறித்து வழிகாட்டும் திறன், பிரபஞ்சம் முழுதுக்கும் ஏற்ற வகையிலான சத்தியவாக்கு ஆகியவற்றை இவை எடுத்து இயம்புவதாக இருக்கின்றன. இந்த நோக்கங்களை உணர்த்துவதற்காக கவிகள் பொதுவாகப் பயன்படுத்தும் உபாயம்தான் **அர்த்தாந்தர நியாசம்** என்ற அணி. **கிராதார்ஜுனீயம்** குறித்து எழுதிய பல ஆசிரியர்களில் ஒருவர் எடுத்துக் காட்டுவது போல மகாகவிகளில் சிலரின் படைப்புக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த அணியைக் கையாளுவதில் பாரவி உயர்ந்து நிற்கிறார்.

அர்த்த கௌரவம் என்பதை விளக்க முற்படும்போது, மற்றவர்கள் வெவ்வேறு வகையான கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். கவிதையின் இரு சிறப்பான பகுதிகள் **சப்தம், அர்த்தம்** எனப்படும் சொல், பொருள் அல்லது வெளிப்பாடு, உணர்ச்சி ஆகியவைதான். இவ்விதமான இந்த இரண்டு கோட்பாடுகளில் எதற்கு சிறப்பான இடம் தருவது என்பது பற்றி யோசிக்கும்போது, கவிதையானது சப்தப் பிரதானம் என்றும் அர்த்தப் பிரதானம் என்றும் முறையே சொல், பொருள் இரண்டில் எதற்கு முக்யத்வம் கொடுப்பது என்பதைப் பிரித்து பார்க்கச் செய்கிறது. **அர்த்த கௌரவம்** என்ற வகையில் பாரவி விவர முக்கியத்துவத்தைச் சிறப்பாகக் கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அவருடைய

பாக்களில் விவரம் முதலிலும், அந்த விவரத்தைத் தெரிவிக்கும் சொல் அணி அதைத் தொடர்ந்து, விவரத்தின் இயல்புக்குத் தக்கவாறும் வருகின்றன. இதனாலேயே ஒலிநயம், இனிமை ஆகியவை பற்றி அவர் கவலையற்று இருக்கிறார். 'பாரவி எடுத்தாளும் சமாச்சாரம் மேலோட்டமாகக் காணக்கூடியது அல்ல. நயத்தோடு, கம்பீரமான சொல்லாக்கத்துடன் கூடி மொழி மீது அவர் கொண்டிருந்த ஆதிக்கம் அவரைக் கடினமான, உயர்தரமான சங்கதிகளையும் எளிதாகச் சொல்ல வைத்தது.'

கவியும் தன் காவியத்தில் **அர்த்த கௌரவம்** என்னும் சொல்லைக் கையாண்டிருக்கிறார் என்பதை இங்கு சொல்லியாக வேண்டும். இரண்டாவது சர்க்கத்தில் பீமனுடைய ஆக்ரோஷமான பேச்சுக்குப் பிறகு, அவனை சமாதானப்படுத்தும் காரணமாக யுதிஷ்டிரர், 'உன்னுடைய சொற்கள் **அர்த்த கௌரவம்** அற்று இல்லை' என்று அவனிடம் சொல்கிறார். சம்ஸ்கிருதக் கவிதைகளைத் தீர ஆய்ந்து விளக்கம் அளிக்கும் மல்லிநாதர் அதை **அர்த்த பூயஸ்த்வம்** அதாவது பொருள் மிகுந்தது, பலதரப்பட்ட கருத்துக்கள் உள்ளது என்பதாக விளக்குகிறார். இந்த விளக்கம் தெரிவிப்பது யாதெனில், பாரவியின் சொற்கள் சாதாரணமான, மேலோட்டமான பொருளைத் தருவது மட்டுமல்லாது, மேலும் உள்ளார்ந்த கருத்துக்களையும் தன்னுள் கொண்டிருக்கிறது என்பதாக இருக்கலாம். இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காணப்படும் ஒரு சொல் அல்லது வெளிப்பாடு பார்த்த மாத்திரத்தில் சிறப்பாகத் தோன்றாவிடினும், மிக அவசியம் கருதி, சாதாரணமான பொருளை மீறிய கருத்தைத் தெரிவிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே **அர்த்த கௌரவம்** என்பதற்குப் பொருள், ஆழ்ந்த கருத்து ஒன்றை அழுத்தமாகச் சொல்வதில் உள்ள ஆற்றல் என்பதாகக் கொள்ளப்படலாம். காவியத்தின் முதல் அதிகாரத்திலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்து ஆய்ந்து இந்த விவரத்தை உணரலாம்.

துரியோதனின் நிர்வாகம் பற்றியும், உள்நாட்டு விவகாரங்கள் குறித்தும் அறிந்துவர யுதிஷ்டிரரால் நியமிக்கப்பட்ட ஒற்றன், துரியோதனின் அமைதியான அரசாட்சி பற்றிய (பாண்டவர்களுக்கு) மகிழ்ச்சி ஊட்டாத செய்திகளோடு வருகிறான். உண்மையாக நடந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் குறித்துப் பேசும்போது, அவன், யஜமானன் ஊழியர்களால் ஏமாற்றப்பட்டு விடக்கூடாது என்று கூறுகிறான். நிதர்சனமாக இதன் பொருள் தெளிவாகவும், அறிவு பூர்வமானதாகவும், சத்திய வாக்காகவும் இருக்கிறது. ஆனாலும் ஊழியன் என்பதைக் குறிக்க **அனுஜீவன்** என்னும் சொல்லை அவர் பயன்படுத்தும் போது, வெகு எச்சரிக்கையுடன் கவி அச்சொல்லை

கருத்தோடு எடுத்தாண்டிருக்கிறார் என்பதாகத் தெரிகிறது. யதார்த்தமாக அச்சொல்லுக்குப் பின் தொடர்ந்து வாழ்பவர்' என்பது பொருள். அதாவது ஓர் ஊழியர் என்பவர் தன் யஜமானனைத் தொடர்ந்து தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர். அவ்வூழியருக்கு என்று தனியாக வாழ்க்கை இல்லை. யஜமானர் சிறப்பாக வாழும்வரை அவருக்கும் நிலையான வாழ்வு உண்டு. யஜமானர் அழிய நேர்ந்தால், அவரும் அழிகிறார். ஊழியர் யஜமானரை ஏமாற்றக்கூடாது என்பதற்கு இதுதான் பொருள். அப்படி ஏமாற்றுவாராகில், அவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதில் சென்று முடியும். யஜமானருக்காக மட்டுமல்லாது, தனக்காகவும் ஒருவர் யோக்கியமாகவும், உண்மையுடனும் இருந்தாக வேண்டும்.

தன் விரிவுரையின் முன்னுரையில் மல்லிநாதர் பாரவியின் கவிதை குறித்துக் கருத்துள்ள விளக்கம் ஒன்றைத் தருகிறார். **நாரிகேல பலசம்மிதம் வகோ பாரவேஹே;** 'பாரவியின் வசனங்கள் தேங்காய் போல உள்ளது' இதன் மூலம் விரிவுரையாளர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் பார்ப்போம்.

சிலர் இந்த விளக்கத்தை மேலோட்டமாகப் புரிந்து கொள்கின்றனர். தேங்காய் என்பது ஒருவகைக் கனி; வெளிப்புறம் கடினமான ஓடு இருக்கிறது; உள்ளே பால் போன்ற பருப்பு உள்ளது. தேங்காயை எளிதில் எடுத்துப் புசித்துவிட முடியாது. அதைப் பயன்படுத்த சற்று முயற்சி தேவை. அதே போன்று தான் பாரவியின் கவிதை. அதன் வசீகரமும், அழகும் அதைப் படித்த மாத்திரத்திலேயே அல்லது காதால் கேட்பதாலேயே அறியக் கூடியதில்லை. அதை அனுபவிப்பதற்கு ஒருவர் தன் அறிவுச் சுடரைத் தூண்டிவிட்டுக் கொண்டாக வேண்டும்; கேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட சொல்லின் பொருள், ஒலி, இயல்பு (சொல் இயல்) குறித்து விவாதிக்கப்படும் போது அல்லது சிலேடையாகக் கூடி வருகையில் குழப்பமான உபமானம் எடுத்தாளப் படும்போது அல்லது தத்துவார்த்தமான கருத்துக்கள் தெளிவாக விளக்கப்படும்போது மட்டுமே பாரவியின் கவித்துவ மேன்மையை ஒருவர் பாராட்ட முடியும்.

ஆனால், பாரவியின் கவிதை கடினமாகவும், தெளிவற்றதாகவும் இருக்கிறது எனக் கூறுவது அவருக்கு நியாயம் செய்தது ஆகா என்றும் சிலர் கருதுகின்றனர். தேங்காய் பற்றிய உபமானம் உள்ளார்ந்த பொருள் கொண்டதாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பது இவர்கள் வாதம். கடினமான பாக்கள் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தாலும் அத்தகைய பாக்கள் மிகச் சிலவே தவிர, காவியம் முழுதும் இல்லை.

கவிகள் அனைவருக்குமே சந்தர்ப்பவச தெளிவின்மை என்பது பொதுவான விதி. பாரவியின் கருத்துக்களுடைய மேன்மையை அறியாமல் கண்களை மூடிக்கொண்டு விடக்கூடாது. தெளிவின்மை என்பதற்கு எதிர்ச்சொல்லான பிரசாதம் என்னும் தெளிவு என்பதான சொல்லின் பெருமை குறித்து பாரவி அவ்வப்போது புகழ்ந்து (தன் கதாநாயகர்களின் சொற்கள் மூலமாகப்) பேசுகிறார். அவர் சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று என்பதாகக் கொள்ளக் காரணம் இல்லை. மொத்தத்தில் அவருடைய கவிதை தெளிவாகவும், கவர்ந்து வசீகரிப்பதான வெளிப்பாடுகளைக் கொண்டும், கருத்துக்கள் பல கொண்டும் காணக் கிடக்கிறது.

இவ்விதமாக ஆராயும்போது, மல்லிநாதரின் விளக்கத்தினுடைய பொருள் வேறுவிதமாக இருப்பதாகப் படுகிறது. தேங்காயின் பருப்பை சுவைக்கும்போது, மேன்மேலும் இனிமையான பால் போன்ற ரஸம் கிடைப்பது போல, நிதானமாக பாரவியின் சொற்களை ஆழ்ந்து படிப்பதால், அவை மேன்மேலும் ரசிக்கப்படக் கூடியதக இருக்கிறது. இந்த விளக்கம் தெளிவாகவே உள்ளது; எளிய பொருள் கொண்டதாகவும் இருக்கிறது. மனதுள் நிறுத்தி, திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்துக் கொள்ளும் போது, அதன் ஆழ்ந்த கருத்து புரிவதாகவும் உள்ளது.

வேறு ஒருவகையிலும் இந்த தேங்காய் உவமை விளக்கிக் கொள்ளும்படியாகவும் இருக்கிறது. பசியையும், தாகத்தையும் ஒரே நேரத்தில் தீர்க்கவல்லது தேங்காய். அறிவுப் பசியைப் போக்குவதிலும், ரசித்து ஆனந்தமாக அனுபவிப்பதற்கு ஏற்ற வகையிலும் பாரவியின் கவிதை மனநிறைவைத் தருவதாக இருக்கிறது. கவிதை என்பது வெறும் செய்யுளாக இருக்கக்கூடாது என்பது பாரவியின் எண்ணம். நல்லதொரு கவிதை வாசிப்பவருக்கு ரசனையுடன் கூடிய ஆனந்தத்தைத் தருவது மட்டுமல்லாது, வெவ்வேறு வகையான அறிவுத் திறனையும், சித்தாந்த விளக்கங் களையும், கலாஞானத்தையும், அறிவியல் போதனைகளையும் கொடுப்பதாக இருக்கவேண்டும்.

ஏற்கெனவே சொல்லியபடி, காளிதாசர் ஒப்புவமை அல்லது **உபமானம்** எனப்படும் அணியைக் கையாள்வதில் மிகத் தேர்ந்து இருக்கிறார் என்பது மரபு வழியாகக் கூறப்படும் உண்மை. **உபமானம்** என்பது கவிதையை அலங்கரிக்கும் அடிப்படையான அணியாகும். இவ்விதமான அணியைக் கையாள்வதில் ஓரளவாவது திறமை இருந்தால்தான், சம்ஸ்கிருத இலக்கியத்தில் ஒருவர் 'கவி' என்பதாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். கவிதைக் கலையில் ஒரு நூலாசிரியனின்

உன்னதத்தை நிர்ணயிப்பது அவர் சிறப்பான ஒப்புவமையைக் கையாள்வதில் இருக்கிறது. மேலும் அவரவர்கள் தனிப்பட்ட விதத்தில் உவமைகளைக் கையாள்வதைக் கொண்டு, கவிகளுக்குப் பட்டப்பெயர்கள் சூட்டப்பட்டன. **தீபசிகா காளிதாசர்** என்று காளிதாசரையும், **ஆதபத்ர பாரவி** என பாரவியையும், **கண்டாமாகன்** என்று மாகனையும் குறிப்பிடுகிறார்கள். காளிதாசருடன் ஒப்பிடுவது நியாயமில்லை என்றாலும், பாரவி ஏராளமான ஒப்புவமைகளை நமக்கு வாரி வாரி வழங்கி இருக்கிறார் என்பது மறுக்கமுடியாதது. இந்த உவமைகள் அழகாகவும், வசீகரமாகவும் இருப்பது அல்லாமல், அவருடைய கற்பனைவளம் குறித்து ஐயத்துக்கு இடமின்றி உரைப்பதாக உள்ளது. சாதாரணமாகவும், பொதுப்படையாகவும் சம்ஸ்கிருத இலக்கியத்தில் ஏற்கப்பட்ட ஒப்புவமை தவிர, அவருடைய மேதாவிலாசத்தைத் தெரிவிப்பதான அவருடைய சொந்த சில ஒப்புவமைகளையும் அவர் நமக்குத் தருகிறார்.

நல்ல உணவை அளித்துக் காத்து, அவளைச் சார்ந்து இருக்கச் செய்யும் ஒரு மனைவி போன்று, விலை மதிப்பற்ற சொத்தான கைத்தடியைச் சார்ந்து ஊன்றிவரும் வயோதிகர் என்பதாக ஒப்பிட்டு இந்திரனைப் பற்றிக் கூறும் இடம் இந்த மேதாவிலாசத்தை உணர்த்துவதாக இருக்கிறது. (அதி.6 - பா.5) அவனுடைய உடலின் அங்கங்கள் தளர்ந்திருந்தாலும், அவன் கனமான பளுவைத் தூக்கியவனாகக் காணப்பட்டான். உண்டு கொழுத்திருக்கும் ஒருவன் தன் குணவதியான மனைவியை நம்பி வாழ்வதைப் போல, அவன் தன் கைத்தடியை நம்பி நின்றான். சிதறி எழுந்து பறக்கும் தேனீக்களை உடைந்த சங்கிலிக்கு உவமையாக்குவதை எடுத்துக் கொள்வோம். (அதி. - பா.31) 'நறுமண மத்தக நீர் பெருக்கெடுக்க, அதே தரையில் படுத்துப் பயணத்தால் உண்டான களைப்புடன் கூடிய உறக்கத்திலிருந்து யானை எழ முயற்சித்தபோது, சட்டென்ற அந்த எழுச்சியின் பாதிப்பால் அறுந்த சங்கிலி போன்று மத்தக நீரை அருந்திக் கொண்டிருந்த தேனீக்கள் கூட்டம் சிதறியது.'

உயிருள்ளவற்றை ஜடப்பொருள்களுடன் ஒப்புநோக்குவதான சில உவமைகளும் காணக் கிடக்கின்றன. இந்திரகீல மலையில் இருக்கும் துறவியான அர்ஜுனனை உயர்ந்து வளர்ந்த தமாள மரத்துக்கு உவமையாகக் கூறுவது இதற்கு உதாரணம். (அதி.6 - பா.23) 'யாகச் சடங்குகள் காரணமாக அடிக்கடி நீரில் இறங்கிக் குளிப்பதால், சிவந்து போன சடைத்த முடியைத் தலையில் கொண்டிருப்பவன், தமாள மரத்தின் உச்சி காலை நேரத்துக் கதிரவன் ஒளிக்கதிர்களால் குளிப்பாட்டப்பட்டது போன்று விளங்கினான்.'

மாறுவேடத்தில் இருக்கும் இந்திரன் குளத்துக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டதையும் உதாரணமாகக் கொள்ளத்தகும். (அதி.6 - பா.4) 'வயதானதால் நரை கண்ட அடர்ந்த புருவங்களால் மறைக்கப் பட்டதும், இடுங்கியதுமான கண்களுடன் அவன் ஆலங்கட்டி மழையால் சிதைந்து, இதழ்களை இழந்த தாமரை மலர்கள் நிறைந்த குளம்போலத் தோன்றினான்.'

இதற்கு எதிர்மறையான ஜடப்பொருள்களை உயிருள்ளவற்றோடு ஒப்பிட்டு நோக்குவதும் உள்ளன. இலையுதிர்காலத்து க்ஷீணித்த நாணல் ஏமாற்றமடைந்த காதலன் என்பதாக. (அதி.4 - பா.34) 'நாணல் தலைசாய்த்து இருக்கிறது; ஆனால் பிரியம் இல்லாத காரணத்தால் அதை தாமரை மங்கை சட்டை செய்யவில்லை. ஆகவே அது துவண்டு மஞ்சள் நிறத்துடன் நிறைவேறாத காதலால் வேதனைப்பட்டு, தன் தோழனான நீருடன் காணப்பட்டது.' பெரிய மலை மது அருந்தியதால் மயக்கமுற்றவனைப் போலக் காணப்படுகிறது. (அதி.9 - பா.46)' (கருடன்களின்) விரைந்த வருகையால் காற்று புயலாக எழுந்து பள்ளத்தாக்குகள் முழுதையும் ஆட்டிப்படைக்க, இமயமலையானது, திராட்சை மது போன்று சிவந்தும், பொன்னிறமானதுமான பறவைகளைத் தன் மலைகுகைகளால் விழுங்கி, மதிமயங்கித் தள்ளாடுவது போலக் காணப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில் ஸ்தூலப் பொருள்கள் மானசீகமான வற்றுடன் ஒப்பிடப்படுகின்றன. மகரிஷி வியாசர் முன் மன்னர் யுதிஷ்டிரர் அமர்ந்திருக்கிறார். (அதி.2 - பா.58) 'தக்கவாறு ரிஷிஸ்ரேஷ்டருக்குத் தனது மரியாதையைச் செலுத்தியபடி, கவனத்துடன் கூடிய மனம் உள்ளவராக, மகரிஷியால் அனுமதிக்கப்பட்டவராக, வேத சாஸ்திரங்களைக் கற்ற அறிவு தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது போல, தன் இருப்பிடத்தில் அமர்ந்தார்.' பரமசிவனோடு அர்ஜுனன் போரிடுவதைக் குறிக்கும் வரிகள் நமக்கு நல்ல உதாரணமாக அமைகின்றன. (அதி.17 - பா.49) 'அந்தத் துறவி அர்ஜுனன் மிகுந்த சினம் கொண்டவனாக, தன் வலி உணர்வை மறந்தான். அவனுடைய உடலுறுப்புக்கள் அனைத்தும் உணர்ச்சி இழந்தன. அவனிடம் வரும் எண்ணற்ற கணைகளை அவன் சட்டை செய்யவில்லை. அவனுடைய சினமே அவனுக்கு அந்நேரக் கவசமாகப் போர்த்தி இருந்தது.'

சில உவமைகள் லௌகீகமான விஷயங்களைக் கொண்ட அனுபவங்களைப் பற்றிப் பேசுகின்றன. போரிலிருந்து பின்வாங்கி ஓடும் கிராதர் சேனையைத் திரும்பக் களத்துக்கு அழைக்கும்

பொருட்டு கார்த்திகேயன் சொல்கிறான் (அதி .15 - பா.19) 'நீங்கள் முழுதுமாகச் சோர்ந்து எதிரிக்குப் புறம்காட்டி விட்டீர்கள். இருந்தாலும் நம் பிரபு (பரமசிவன்) தவறான வழியில் சென்ற மனைவியை அவள் கணவன் காப்பது போல, உங்களுக்குப் பாதுகாப்புத்தர காத்திருக்கிறார்.' அர்ஜுனன் அவருடைய மார்பில் அடித்தபோது, பரமசிவன் அவனுடைய கோபத்தைப் பொறுத்துக் கொள்ளும் காட்சியை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். (அதி.17 - பா.64). 'பாசமிக்க தந்தை தன்னுடைய பிரியமான ஒரே குழந்தையின் தவறை மன்னித்துவிடுவது போல, மன்மதனை அழித்த இறைவன் பாண்டுவின் மகனுடைய குற்றத்தைத் தாங்கிக் கொண்டார்.'

சில உவமைகள் புராணக் கதைகளைச் சார்ந்து இருக்கின்றன. இரவு விரியும் காட்சி பின்வருமாறு விவரிக்கப்படுகிறது. 'வராக அவதாரம் எடுத்த மகாவிஷ்ணு (ஊழிகாலத்தில் கடலிலிருந்து) பூமியைத் தன்னுடைய பொன்னிறம் கொண்ட மண்வெட்டி போன்ற சிவந்த கொம்பினால் தாங்கி வந்து ஆகாயவெளியில் எறிவதுபோல, நிலவானது தனது பவளம் போன்ற செக்கச் சிவந்த ஒளிக்கோளத்தால் ஆழ்ந்த அந்த இருளை வீசி எறிந்தது.' அர்ஜுனனும் இவ்விதம் விவரிக்கப்படுகிறான். (அதி.14 - பா.41) 'அவன் மரகதப் பச்சை நிறத்தில் இருந்தான். மற்றவர்களின் உடல் காந்தியைக் குறைப்பதான பிரகாசத்துடன் கூடிய உயர்தர உடல்வாகுடன் அவன் காணப் பட்டான். தெளிந்த நீர் ஒளிமிக்க சூரியனைப் பிரதிபலிப்பது போல, புருஷார்த்தத்தை மனித உருவில் எடுத்துக்காட்டுபவனாக இருந்தான்.'

மேலும் சில உவமைகள் பாரத நாட்டின் பழமையான சித்தாந்தங்கள்பால் கவிக்கு இருக்கும் அறிவாற்றலை எடுத்துச் சொல்வதாக இருக்கின்றன. உதாரணமாக இமயமலையைப் பற்றிய வர்ணனைகளை எடுத்துக் கொள்ளலாம். (அதி.5 பா.22). 'சக்கரமாகச் சுற்றிவரும் பிறப்பு, இறப்பு ஆகியவற்றிலிருந்து விலக்கி வைப்பதும், தூய்மையானதும், உயர்வகையானதுமான பிரம்ம லோகத்தை அடைய விருப்பம் உள்ளவர்களுக்கு வேத சாஸ்திர ஆகமங்களுடன் ஒப்பிடக்கூடியதான இந்த மலையிலிருந்து, உலக விவகாரங் களிலிருந்து கிட்டும் அறியாமை என்னும் இருளை விலக்கி வைக்கும்படியான மெய்யான அறிவு கிட்ட வாய்ப்பு உண்டு.' 'அர்ஜுனனின் நீண்ட உறக்கம் தரும் கணையை பரமசிவன் பயனற்றுப் போகச் செய்வதான விவரமும் உதாரணமாக உதவுகிறது. (அதி.16 - பா.32). 'அறியாமையை எப்படி பலதரப்பட்ட மெய்யான அறிவு அழிக்கிறதோ, அதே போல பிரமதர் சேனையின் உறக்கத்தை பரமசிவனின் தேஜஸ் விரட்டி, இருளிலிருந்து வெளிச்சத்துக்கு அவர்களை அழைத்து வந்தது.'

காளிதாசரைப் போல இந்த நம் கவியும் இலக்கண வகையில் ஒப்புவமையைக் கையாளுகிறார். 'பரமசிவனும், அர்ஜுனனும் ஒரே சமயத்தில் அந்தக் காட்டுப்பன்றியை அடிக்கும் நேரத்தில், முடிவில் விட்டுவிடக் கூடியதும், **பிரகிருதி, பிரத்யயம்** ஆகியவற்றுக்கு நடுவில் வரக்கூடியதும் ஆன **அனுபந்தம்** போன்று அது தன் அழிவுக்காகவே அவ்விருவர் இடையே வந்தது.

இருந்தாலும் அவருக்குக் கிடைக்கக்கூடிய பெருமைகளை மறுக்காமல், சில ஒப்புவமைகள் எப்படி நம் மனதுக்கு ஒவ்வாததாக இருக்கின்றன என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும். சில உவமைகள் புரிந்து கொள்ள முடியாது இருக்கின்றன. (உ-ம் அதி.1 - பா.24, அதி.2 - பா.3 முதலியன). சில ஒப்புவமைகள் ரசிக்கத்தக்கனவாகவும் இல்லை. எடுத்துக்காட்டாகச் சொல்வது என்றால், காடுகளில் வசித்துக் கொண்டு கள்ளமற்ற உள்ளத்தினரான மாடு மேய்க்கும் குடிமக்களின் பெண்பாலர்களைச் செயற்கையாகச் சித்தரித்து, அரங்குகளில் சதிராடும் தாசிகளுக்கு இணையாக நியாயமின்றி ஒப்பிடுகிறார். (அதி.4 - பா.17) மேலும் இந்திரகீல மலைமீது அர்ஜுனன் ஏறிச் செல்லும் போது, அன்னப்பறவை கூட்டங்கள் கங்கை நதி என்னும் அணங்கின் ஸ்தனங்களை மறைத்த ஆடை போன்று காணப்பட்டன என்கிறார். (அதி.6 - பா.6) அர்ஜுனன் தவம் செய்யச் செல்கிறானே அல்லாது, காமக் களியாட்டத்துக்குச் செல்லவில்லை. ஆகவே இந்த வர்ணனை அனுசிதமாகப் படுகிறது. இதுமட்டுமல்ல. அர்ஜுனனுடைய தவத்தின் தீவிரத்தைத் தாங்காது முனிவர்கள் தாங்கள் அனுபவிக்கும் இன்னலைக் கூற பரமசிவனை அடைந்த போது, சந்தனக்குழம்பு பூசிய உமையின் இரண்டு ஸ்தனங்களைப் போன்ற அவருடைய காளை மாட்டின் உருண்டு திரண்ட திமிலை அவர் தடவியபடி ஆனந்தப்பட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். (அதி.12 - பா.20)!

இவ்விதம் இருந்தாலும், பாரவி ஒரு சக்தி வாய்ந்த கவி என்பதில் ஐயமே இல்லை. அவருடைய கவிதையின் தரத்தை பாராட்டத் திறனற்று எவரும் இருக்கலாகாது. மகாபாரதத்தின் அனைவரும் அறிந்த ஒரு நிகழ்ச்சியை மகாகாவியமாக ஆக்க அவர் எடுத்த முயற்சி அவருடைய ஆற்றலையும், ஆழ்ந்த நோக்கத்தையும் உணர்த்துவதாக இருக்கிறது. இந்தக் கருப்பொருளை பாரவி தெளிந்த விரிவான கலாஞானத்துடன் சித்தரிக்க முற்பட்டிருக்கிறார். கலைஞனின் திறமை எடுத்த எடுப்பில் தெரிகிறது. சகோதரர்கள் அனுபவிக்கும் கொடுமையான இடர்பாடுகளிலிருந்து விவாதம் எழுவதாக இதிகாசத்தில் உள்ளது. அதற்கு மாறாக சுயோதனனின் —

தன்னை அவன் அவ்விதம் கூறிக் கொள்கிறான் — செய்கைகளை அறிந்துவர அனுப்பப்பட்ட ஒற்றன் திரும்பி வந்து தான் கண்டவற்றைக் கூறும்முகமாக பாரவி தொடங்குகிறார். உதாரணமாக, 'பரமசிவனின் சேனை குறித்தும், கந்தவேளின் தலைமையின் கீழ் அச்சேனை கதாநாயகனுடன் போர் புரிவதும், மந்திர அஸ்திரங்களைக் கொண்டு சண்டையிடும் நிகழ்ச்சிகளும் கவியின் கற்பனை வளத்துக்கு உரிய பலனைத் தருகின்றன.

சுருக்கமாக இருந்தாலும், மிகச் சரியாகவே பாரவியின் உன்னதத்தை கீத் சுட்டிக்காட்டுகிறார். 'விரித்து உரைத்தல் என்பதில் பாரவியின் ஆற்றல் குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை. அவருடைய நடை ஒப்பற்றதாக இருக்கும் அதே நேரத்தில், ஒரு வசீகர அமைதியான பண்பையும் கொண்டிருக்கிறது. பார்த்து உணர்வது மட்டுமின்றி, இயற்கையின் எழிலையும், மகளிரின் அழகையும் பதிவு செய்வதில் ஈடற்றவராக இருக்கிறார். முதல் அதிகாரத்தில் நடையழகு அடிக்கடி உணரப்படும் நேரத்தில், காவியத்தின் முதல் வரியே கவிதையின் உயர்ந்த கோட்பாட்டுக்கான உண்மையான தன்மையைக் குறிப்பிடுவதாக உள்ளது.' 'மாலை மலர்ந்தது, கதிரவன் மறைந்தது, நிலவு `எழுந்தது' போன்ற பழைய பாணி வர்ணனைகள் கவியின் திறமை மூலம் புதிய விளைவை ஏற்படுத்துகின்றன. முதல், இரண்டாம் அதிகாரங்களில் பலதரப்பட்ட நபர்களின் பேச்சுக்கள் மூலம் 'அமைதிப் பண்பு' குறித்து ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் காணலாம். நான்காவது அதிகாரத்தில் இலையுதிர்காலம் பற்றியும், ஐந்தாவது அதிகாரத்தில் இமயமலை பற்றிய வர்ணனையும் இயற்கையின் எழிலை மிகச் சிறப்பாகச் சித்தரிப்பதான அவருடைய ஆற்றலைத் தெரிவிக்கின்றன. எட்டாவது, ஒன்பதாவது அதிகாரங்களில் காதலின் ஒவ்வொரு கட்டத்தையும் சிறப்பாக விவரிப்பதன் மூலம், அழகிய கன்னிகையர், அவர்களுடைய காதலர்கள் ஆகியோரின் பெருமை, பேரழகு விரிவாகச் சித்தரிக்கப்படுகின்றன.

கூடவே கவியின் குறைபாடுகளையும் சொல்லித்தான் ஆகவேண்டும். பின்வருமாறு கீத் குறைகளை வரிசைப்படுத்துகிறார். 'ரசனையைப் பொறுத்தவரை பாரவி செய்துள்ள தவறுகளை காளிதாசர் செய்தவர் இல்லை. முக்கியமாக 15-வது அதிகாரத்தில் முன் யோசனை சற்றும் இன்றி தன் முழுத் திறமையை வெளிக் காட்டும் பொருட்டு முயற்சி செய்து பார்க்கிறார்.... ஒரு பாவில் முதல்வரியும் மூன்றாம் வரியும், இரண்டாம் வரியும் நான்காம் வரியும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இன்னொன்றில் நான்கு வரிகளும் ஒரே விதமாக உள்ளன. ஒரு வரி யதார்த்தமாக ஒரு 'ச' ஒரு

'ர'வையும், மற்றொரு வரி ச, ஸ, வ, ல ஆகிய எழுத்துக்களையும் கொண்டிருக்கின்றன. சில பாக்கள் திருப்பிப் பின்புறமிருந்து முன்புறமாகப் படித்தால், அடுத்த வரியைத் தருவதாக இருக்கிறது. முழுப்பாவும் பின்புறமிருந்து முன்புறமாகப் படித்தால் அடுத்த பாவைத் தருவதாகவும் உள்ளது. ஒரு பா மூன்று அர்த்தங்களைத் தருவதாக இருக்கிறது. இரண்டு பாக்கள் உதடுகள் ஒட்டாத வகையில் ஆக்கப்பட்டிருக்கின்றன. முன்பின்னதாகப் படித்தால் ஒரேவிதமாக உள்ள பாக்களும் உண்டு. மேலும், இலக்கணத்தில் தன் திறமையைக் காட்டவேண்டும் என்பதிலும் பாரவி மிக மோசமான உதாரணமாகத் திகழ்கிறார். பல வழிகளில் அவர் தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பிற்காலக் கவிகளுக்குத் தவறான வழிகாட்டியாக இருக்கிறார். தான் என்னும் வேர்ச் சொல்லை அபத்தமாகப் பயன்படுத்தி, தொடங்கி வைப்பவராகவும் இருக்கிறார். செயற்பாட்டுத் தீர்மான வினைச் சொற்களை (பாஸிவ் பெர்ஃபெக்ட்)ப் பயன்படுத்துவதையும், படர்க்கையில் அவ்விதமான சொற்கள் பயனாவதையும் விரும்புகிறார். வேற்றுமை விகுதிச் சேர்க்கைகளை வினையெச்சத்துக்குப் பயன்படுத்துவது அவருக்குக் கைவந்த கலையாக இருக்கிறது. பாணினியின் இலக்கண விதிகளில் அபூர்வமானவற்றை அவர் படம்பிடித்தாற் போலக் காட்டுகிறார்....'

நிச்சயமாக ஒவ்வொரு விமர்சனமும் கருத்தில்லாமல் சொல்லப்படவில்லை. 'அவருடைய காலத்திய இலக்கியக் கழைக் கூத்துக்களைக் கையாண்டதில் பாரவிக்கு வெகுவான பங்கு உண்டு. ரசனை பற்றிய விஷயத்தில் இதனால் தவறுகள் நேர்கின்றன. ஆகவே அவருடைய கவிதை குறித்துத் திறனாய்வு செய்யும் இலக்கிய ஆசிரியர்கள் குற்றம் காண நேர்வது குறித்து வருந்தவேண்டியது இல்லை....' பாரவி மட்டுமே இவ்விதக் குற்றங்களுக்கு ஆதிகர்த்தா என்பதாக நாம் உறுதியாகக் கூறமுடியாது. இடைக்காலத்தில் இத்தகைய வருந்தத்தக்க ரசனைக் குறை பரவி இருந்திருக்கலாம். இவை அக்காலத்திய கவிகளிடம் காணப்படும் கண்கூடான களங்கங்கள். பாரவிக்கும் இதில் பங்கு உண்டு. ஆனால் அவருடைய களங்கங்கள் குறைந்தவை. கவிஞர், கலைஞர் என்ற வகையில் இக்களங்கங்கள் அவருடைய மதிப்பைக் குறைத்துவிடா!

அவர் காலத்தில் பாரவி மக்கள் மத்தியில் எந்த அளவுக்குப் புகழ் பெற்றிருந்தார் என்பது அறியக் கூடவில்லை. அவருடைய கவிதையின் உள்ளார்ந்த சான்றுகளின் அடித்தளம் கொண்டு, மக்களில் ஒரு பகுதியினரின் மதிப்பை அவர் பெற்றிருக்கவில்லை என்று சிலர் வாதம் செய்கின்றனர். ஒரு பாவில் (அதி.14 - பா.5) கவியே சொல்வதாவது: 'அர்த்தம் என்னும் பொருள் உன்னதத்தை சில மக்கள்

உயர்வாகப் போற்றுகிறார்கள்; சொல்லின் தூய்மையை மற்றவர்கள் சிறந்தது என்று சொல்கின்றனர். இவ்விதம் ஒவ்வொருவரின் ரசனையும் வெவ்வேறாக இருக்கையில், உலகளாவிய மனநிறைவை அளிப்பது என்பது வெகுவாக அரிது! ஆனால் பிற்காலத்தில் அவர் போற்றப்பட்டார் என்பதில் ஐயத்துக்கு இடமில்லை. பிற்காலத்தில் மரபாகத் தொடர்ந்து அவருடைய கவிதை சிறப்பாகப் புகழப்பட்டு, வல்லுநர்களான வாமனர், அனந்தவர்த்தமானர், மஹிமாபட்டர், மமதாபட்டர், ருயகர், போஜன் முதலானவர்களால் அவரவர்களின் படைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளார். பிற்கால மகாகாவிய நூலாசிரியர்களிடையே அவருடைய செல்வாக்கு வெகுவாக இருந்திருந்திருக்கிறது. **சிசு பாலவதம்** என்னும் காவியத்தைப் படைத்தவரும் பரந்து அறியப்பட்டவரும், மேதையும் ஆன மாகன் மிகுந்த அக்கரையுடன் இவருடைய காவியத்தை மாதிரியாகக் கொண்டும், அனுசரித்தும் தனது காவியத்தை ஆக்கியுள்ளார்.

பாரவி குறித்து சுமார் இருபது விளக்க உரையாளர்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால் பெரும்பான்மையோரின் விளக்கங்கள் முழுமையாக இல்லை. இரண்டு மூன்று விளக்கவுரைகள் பகுதிகளாகக் கிடைக்கின்றன. கிடைக்கும் முழுமையானதும், பரந்து அறிந்ததும் ஆன ஒரே விளக்கவுரை கண்டாபதர் என்று அழைக்கப்படும் மல்லிநாதருடையது.

உதவிய நூல்களின் அட்டவணை

பண்டார்கார் : *ஜர்னல் ஆஃப் தி ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால் (பம்பாய் கிளை)* XIV, 24.

கோபெல்லர், சி : *கிராதார்ஜுனீயம். ஜெர்மன் முழு மொழிபெயர்ப்பு, ஹார்வர்ட் ஓரியன்டல் செரீஸ்,* எண் XV, 1912

டாஜிபாவ் : *ஜர்னல் ஆஃப் தி ஏஷியாடிக் சொஸைட்டி ஆஃப் பெங்கால் (பம்பாய் கிளை)* IX, 315.

டே, எஸ்.கே. : *எ ஹிஸ்டரி ஆஃப் சான்ஸ்கிரிட் லிடரேச்சர், உன்னத காலம், கல்கத்தா, 1962.*

டட், ஆர்.சி. : *சிவிலிசேஷன் இன் ஏன்ஷியன்ட் இண்டியா, பகுதி* II.

ஜகோபி, எச். : *வீனர் செய்ட்ஷிரிஃப்ட் ஃபர் டீ குண்டே டே மார்ஜெண்டே,* III, 1889.

கீத், ஏ.பி. : *எ ஹிஸ்டரி ஆஃப் சான்ஸ்கிரிட் லிடரேச்சர், லண்டன், 1961.*

கிருஷ்ணமாச் சாரியார், எம். : *ஹிஸ்டரி ஆஃப் கிலாசிகல் சான்ஸ்கிரிட் லிடரேச்சர், டெல்லி, 1974.*

பீட்டர்சன் (பதி) *சுபாஷிதாவலி ஆஃப் வல்லபதேவா.*

சாஸ்திரி, ஜி.எச். : *இண்டியன் ஹிஸ்டாரிகல் குவார்டர்லி,* III, 1927.

சராவஸ்தி, ஏ.ஆர்.: *ஜர்னல் ஆஃப் மிதிக் சொஸைட்டி, பெங்களூர்,* XIII, - 670 - 88.

விண்டர்நிட்ஸ், எம். *ஹிஸ்டரி ஆஃப் இண்டியன் லிடரேச்சர், பகுதி 3, பாகம் 1, டெல்லி 1977.*

மற்றும் கிராதார்ஜுனீயம் குறித்துப் பின்வரும் நூல்கள் :

(i) சாக்கி, ஜே.பி., சம்ஸ்கிருத சாஹித்திய சம்பாரா (பகுதி 3), கல்கத்தா 1978; (ii)சட்டோபாத்யாயா, கே.சி., முதலாவது அதிகாரம் மட்டும், கல்கத்தா, 1934; (iii) காலே, எம்.ஆர்., முதல் மூன்று அதிகாரம் மட்டும், டெல்லி 1966; (iv) சாஸ்திரி, ஜி., திருவனந்தபுரம் சம்ஸ்கிருத வரிசைகள், 1918; (v) சென், எஸ்.என் : இரண்டாம் அதிகாரம் மட்டும், கல்கத்தா, 1972; (vi) வித்தியா நிதி, ஜி., கல்கத்தா.

சம்ஸ்கிருத மொழியின் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான கிராதார்ஜுனீயம் என்னும் நூலின் ஆசிரியர் பாரவி. இவருடைய காலம் கி.பி. 6-வது நூற்றாண்டு என்று அறிஞர்களால் பொதுவாகக் கணிக்கப்பட்டுள்ளது. சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசியின் கி.பி. 634-ம் ஆண்டில் பொறிக்கப்பட்ட அய்ஹோலே கல்வெட்டில் இவர் காளிதாசனுடன் சேர்த்துத் தெரிவிக்கப் பட்டிருக்கிறார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதற்கும், நடை ஆழத்துக்கும் (அர்த்த கௌரவம்) பாரவி பெயர் பெற்றவர். மரபு வழிவந்த வரலாற்றின்படி, சாத்துவ பாரவி என்ற பட்டப்பெயர் பெற்றார். மலர்களின் மகரந்தங்கள் காற்றினால் சுழன்று எழுந்து பொன் வண்ணக் குடையாகக் கவிவதை கவித்வ நயத்துடன் கூறுவதால் இப்படி ஒரு பட்டப்பெயர் கிட்டியதாகத் தெரிகிறது. 18 அதிகாரங்கள் உள்ள அவருடைய கிராதார்ஜுனீயம் அர்ஜுனன் தவம் மேற்கொண்டதற்கான காரணத்தையும், அத் தவத்தின் உன்னதத்தையும், பரமசிவனிடமிருந்து அவன் பெறும் அஸ்திரம் குறித்தும் விவரித்துச் சொல்கிறது. வீர ரஸத்தை உணர்த்துவது இந்நூலின் நோக்கம். இந்நூலை குறிப்பிட்டுச் சொல்லும் ஏ.பி. கீத், ''வர்ணனைகளில் பாரவியின் ஆற்றல் குறித்து ஐயத்துக்கு இடமில்லை; அலாதியான அவருடைய நடையில் பண்பு அமைதி காணக் கிடக்கிறது; இந்த அமைதி கவர்ந்து வசீகரிப்பதாக உள்ளது; பார்த்தவற்றை அழுத்தமாகச் சொல்வதிலும், இயற்கையின் எழில், வனிதையர் அழகு ஆகியவற்றைக் கூறுவதிலும் தன் ஆற்றலை வெளியிடுகிறார்.'

சிறந்த சம்ஸ்கிருத அறிஞரான பேராசிரியர் மிருணாள் காந்தி கங்கோபாத்தியாயா அவர்கள் பாரவி குறித்து அனைத்து விளக்க உரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து தன்னுடைய விரிவுரையை எழுதியுள்ளார். மேலும் காவியத்தில் பாரவியின் நிச்சயமான வெற்றியைத் தான் உணர்ந்த வகையில் கோடிட்டு வழங்கியுள்ளார்.

BHARAVI *(TAMIL)*
ISBN 81–7201–752–9

Rs. 15